சமூக அரசியல்
ஆரம்ப நூல் வரிசை

இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்றால் என்ன?

வி. கிரபிவின்



முன்னேற்றப் பதிப்பகம்

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

வி. கிரபிவின்

இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்றால் என்ன?

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன் எம்.ஏ.

நூல் வரிசையின் பதிப்பாசிரியர் குழு:
எஃப். எம். வோல்கவ் (தலைமைப் பதிப்பாசிரியர்),
ஈ. எஃப். குப்ஸ்கி (துணைப் பதிப்பாசிரியர்),
எஃப். எம். புர்லாட்ஸ்கி, வி.டி. ஸோதவ், வி.வி.கிர
பிவின், யூ. என். பொபோவ், வி. வி.ஸோபலெவ்,
எஃப். என். யூர்லொவ்

АВС СОЦИАЛЬНО-ПОЛИТИЧЕСКИХ ЗНАНИЙ

Крапивин В.
ЧТО ТАКОЕ ДИАЛЕКТИЧЕСКИЙ МАТЕРИАЛИЗМ?

на тамильском языке

ABC OF SOCIAL AND POLITICAL KNOWLEDGE

Krapivin V.
WHAT IS DIALECTICAL MATERIALISM?

in Tamil

© Progress Publishers, 1985

© தமிழ் மொழிபெயர்ப்பு,
முன்னேற்றப் பதிப்பகம், **1987**

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

K $\frac{0302000000-650}{014(01)-87}$ 322—87

பொருளடக்கம்

முன்னுரை 9

அத்தியாயம் ஒன்று

தத்துவஞானம், அதன் ஆராய்ச்சிப் பொருள், சமுதாயத்தில் அதன் பாத்திரம் . 17

விஞ்ஞானம் என்ற வகையில் தத்துவஞானம் 17

தத்துவஞானத்தின் அடிப்படைக் கேள்வி . . 22

முறையின் கருத்தமைவு. எதிர்மறையான தத்துவஞான முறைகள்: இயக்கவியலும் இயக்க மறுப்பியலும் 27

மார்க்சிய - லெனினிய தத்துவஞானத்தின் ஆராய்ச்சிப் பொருள் 31

தத்துவஞானத்தின் சார்புநிலை இயல்பு . . 34

அத்தியாயம் இரண்டு

பொருள்முதல்வாதத்திற்கும் கருத்து முதல்வாதத்திற்கும் இடையிலான போராட்ட வரலாறு என்ற முறையில் தத்துவஞானத்தின் வரலாறு 39

பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதத்தின் தோற்றுவாய், அவற்றின் தொடர்ச்சியான போராட்டம் 39
அடிமை உடைமை சமுதாயத்தில் பொருள் முதல்வாதத்துக்கும் கருத்துமுதல்வாதத்துக்கும் இடையிலான போராட்டம் 43
மத்தியகாலத் தத்துவஞானத்தில் பொருள் முதல்வாதத்துக்கும் கருத்துமுதல்வாதத்துக்கும் இடையிலான போராட்டம் 55
முதலாளித்துவ வளர்ச்சி சகாப்தத்தில் பொருள் முதல்வாதமும் மதம் மற்றும் கருத்துமுதல் வாதத்தை எதிர்த்து அதன் போராட்டமும் . . 69
18ஆம் நூற்றாண்டின் கடைசியிலும் 19ஆம் நூற்றாண்டின் முற்பாதியிலும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானம் 79
19ஆம் நூற்றாண்டின் ருஷ்யப் புரட்சிகர ஜன நாயகவாதிகளின் தத்துவஞானம் 86

அத்தியாயம் மூன்று

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் தோற்றமும் அதன் வளர்ச்சியின் முக்கியக் கட்டங்களும் 89
மார்க்சியத் தத்துவஞானத்தின் முன்தேவைகள் 89
மார்க்சும் எங்கெல்சும் நிறைவேற்றிய தத்துவ ஞானப் புரட்சியின் சாராம்சம் 99
மார்க்சியத் தத்துவஞானத்தின் படைப்பாற்றல் இயல்பு 103

அத்தியாயம் நான்கு

பருப்பொருளும் அதன் வாழ்நிலையின் வடிவங்களும் 109

பருப்பொருள் என்றால் என்ன? 109
இயக்கம் — பருப்பொருளின் வாழ்நிலையின் முறை 116
பருப்பொருளின் வாழ்நிலையின் வடிவங்கள் என்ற முறையில் விசும்பும் காலமும் . . . 121
உலகத்தின் பொருளாயத ஒருமை 125

அத்தியாயம் ஐந்து

உணர்வு, அதன் தோற்றுவாயும் சாராம்சமும் 129

உணர்வைப் பற்றி மார்க்சியத்துக்கு முந்திய கருதுகோள்கள் 129
பிரதிபலிப்பின் உயர்ந்த வடிவம் என்ற முறையில் உணர்வு 131
உணர்வின் தோற்றம் 137
உணர்வின் சாராம்சம் 144
உணர்வு மற்றும் மொழியின் ஒற்றுமை . . 149

அத்தியாயம் ஆறு

சர்வப்பொதுத் தொடர்பு மற்றும் வளர்ச்சியின் போதனை என்ற முறையில் இயக்கவியல் 154

பொருள்முதல்வாத இயக்கவியல்—ஒரு விஞ்ஞானம் 154

இயக்கவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் 161
யதார்த்தத்தை அறிதல் மற்றும் மாற்றியமைத்தலின் சர்வப்பொது முறை என்ற வகையில் பொருள்முதல்வாத இயக்கவியல் . . . 170

அத்தியாயம் ஏழு

பொருள்முதல்வாத இயக்கவியலின் விதிகள் 182
எதிர்நிலைகளின் ஒற்றுமை மற்றும் போராட்டத்தின் விதி 182
அளவு மாற்றங்கள் பண்பு மாற்றங்களாகப் பரிணமித்தலைப் பற்றிய விதி 195
நிலைமறுப்பின் நிலைமறுப்பைப் பற்றிய விதி 205

அத்தியாயம் எட்டு

பொருள்முதல்வாத இயக்கவியலின் கருத்தினங்கள் 217
தனியானதும் சிறப்பானதும் பொதுவானதும் 218
உள்ளடக்கமும் வடிவமும் 223
சாராம்சமும் தோற்றமும் 231
காரணமும் விளைவும் 237
இன்றியமையாமையும் தற்செயலும் 242
சாத்தியமும் யதார்த்தமும் 249

அத்தியாயம் ஒன்பது

இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் அறிவுத் தத்துவம் 254

மனிதனுடைய உணர்வில் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்ற நிகழ்வுப் போக்கு என்ற முறையில் அறிதல் 254
அறிதலின் இயக்கவியல் 256
உண்மையைப் பற்றிய மார்க்சிய-லெனினியக் கோட்பாடு 266
அறிதலில் செய்முறையின் பாத்திரம் 272

அத்தியாயம் பத்து

விஞ்ஞான அறிதலின் முறைகள் 276
விஞ்ஞான அறிதல் முறைகளின் அமைப்பு . . 276
அறிதலின் அனுபவ ரீதியான முறைகள் . . 282
அறிதலின் தத்துவார்த்த முறைகள் . . . 289

முடிவுரை 312

சொற்றொடர் விளக்கம் 316

முன்னுரை

கால வெள்ளத்தின் ஓட்டத்தில் மனிதகுலத்தின் தலை சிறந்த மேதைகள் இந்த பூமியைப் புரிந்து கொள்வதற்கும் இயற்கை மற்றும் சமூக நிகழ்வுகளின் பின்னாலுள்ள இயக்குச் சக்திகளைக் கண்டுபிடிப்பதற்கும் பல நூற்றாண்டுகளாகவே முயன்று வந்தனர்.

மனிதகுலம் உலகத்தை விஞ்ஞான ரீதியாகப் புரிந்து கொள்ளத் தொடங்கிய பாதை மிகவும் நீளமான, கரடு முரடான பாதையாகும். அறியாமை, மூடநம்பிக்கை, பல நூற்றாண்டுகளாக நிலவி வந்த மத நம்பிக்கையின் வறட்டுக் கோட்பாடுகள், கருத்துமுதல்வாதக் கருத்தோட்டங்கள் ஆகியவற்றுக்கு எதிராக நடந்த தீவிரமான போராட்டத்தில் மனிதகுலம் படிப்படியாக மெய்யான அறிவைச் சேகரித்துக் கொண்டு தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றியும் இயற்கை, சமூகம் மற்றும் அறிதலைப் பற்றியும், மனிதனின் உட்பொருள் மற்றும் உலகத்தில் அவனது இடத்தைப் பற்றியும் உண்மையான விஞ்ஞான விளக்கத்தை மேன்மேலும் நெருங்கி வந்தது. மனிதகுலத்தின் தேடல் சுமாராக ஒரு நூற்றாண்டுக்கு முன்னர்தான் வெற்றியடைந்தது.

கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் கடந்த காலத்தின் விஞ்ஞான, நடைமுறைச் சாதனைகளை விமர்சன ரீதியில் படைப்பாற்றலுடன் பகுத்தாராய்ந்து ஒருங்கிணைந்த, முரணில்லாத ஒரு விஞ்ஞான போதனையை வகுத்தளித்தார்கள். இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத் தத்துவஞானம் இதன் தத்துவ அடிப்படையாகும். மார்க்சும் எங்கெல்சும் உருவாக்கிய இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் முக்கியத்துவத்தைக் கணிக்கும் போது லெனின் பின்வருமாறு எழுதினார்: ''மார்க்சின் தத்துவஞானம் ஒரு முழு நிறைவான தத்துவஞானப் பொருள்முதல்வாதமாகும். அது மனிதகுலத்திற்கு, குறிப்பாக தொழிலாளி வர்க்கத்துக்கு அறிவாற்றலின் சக்தி மிக்க ஆயுதங்களை வழங்கியுள்ளது.''*

மனிதகுலத்தின் ஆன்மீக வளர்ச்சி வரலாற்றில் முதன் முறையாக மார்க்சும் எங்கெல்சும் தத்துவஞானத்தை ஒரு விஞ்ஞானமாக மாற்றினார்கள்; பொதுவாக உலகத்தையும் குறிப்பாக சமுதாயத்தையும் புரட்சிகரமாக மாற்றுவதற்கு மிகச் சிறந்த வழிமுறையை உருவாக்கினார்கள். அதன் மூலம் தத்துவஞானம் புதிய சமுதாயப் பாத்திரத்தையும் பெற்றது.

இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் மூலவர்கள் இந்தப் பொதுப்படையான முடிவுகளோடு நின்று விடவில்லை. முதலாளித்துவ அமைப்பின் கீழ் விஞ்ஞான உலகக் கண்ணோட்டம் தொழிலாளி வர்க்கத்தின், இதர அனைத்துச் சுரண்டப்பட்ட மக்கள் திரளினரின் நலன்களையும் வரலாற்றுப் பணியையும் ஒத்

* V. I. Lenin, *Collected Works*, Moscow, Progress Publishers, Vol. 19, p. 25.

திருக்கிறது என்பதையும் தொழிலாளி வர்க்கத்தினரும் சுரண்டப்பட்ட மக்களும்தான் சமுதாயத்தைப் புரட்சிகரமாக மாற்றுவதற்கு, எனவே இயக்கவியல் பொருள் முதல்வாதத் தத்துவஞானத்தின் பால் ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதையும் இத்தத்துவஞானம் ''அதன் சாரத்தில் விமர்சனத் தன்மையுடையது, புரட்சிகரமானது''* என்பதையும் ஆணித்தரமாக நிரூபித்தனர். எனவேதான் பாட்டாளி வர்க்கத்துக்கு ஒரு பொருளாயத ஆயுதமாக மார்க்சியத் தத்துவஞானம் கருதப்பட்டது, பாட்டாளி வர்க்கம் அந்தத் தத்துவஞானத்தைத் தனது ஆன்மீக ஆயுதமாகக் கொண்டது.

வி. இ. லெனின் அவர்களால் ஆக்கபூர்வமாக வளர்க்கப்பட்டு வரலாற்றில் முதன்முறையாக மார்க்சியத் தத்துவஞானம் உழைக்கும் மக்கள் திரளினரின் உலகக் கண்ணோட்டமாகவும் உலகைப் புரட்சிகரமான முறையில் புனரமைப்பதற்குரிய சித்தாந்தக் கருவியாகவும் பரிணமித்தது.

இன்று உலகத்தைப் புரட்சிகரமான முறையில் புனரமைக்கும் பணி உள்ளபடியே உலகம் தழுவிய தன்மையைப் பெறுகிறது. சமுதாய வாழ்க்கையிலும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியிலும் ஏற்பட்டுள்ள மகத்தான புரட்சிகர மாற்றங்கள் அனைத்துக் கண்டங்களைச் சார்ந்த மக்களினங்களின் சமூக வளர்ச்சி மீதும் தாக்கம் செலுத்தியிருக்கின்றன. கடைசிச் சுரண்டல் அமைப்பான முதலாளித்துவம் அதன் தவிர்க்க முடியாத முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. சமுதாய நீதியையும் சமத்துவத்தையும் கொண்ட ஒரு சமூக அமைப்பு என்று கடந்த

---

* Karl Marx, *Capital*, Moscow, Progress Publishers, Vol. 1, 1974, p. 29.

தலைமுறை மக்களால் எதிர்நோக்கப்பட்ட சோஷலிசம் இன்று உண்மையானதொரு சக்தியாகி விட்டது; இது உலக வளர்ச்சியின் முழுமையான போக்கிலும் மேன் மேலும் தீர்மானமான தாக்கத்தைக் கொண்டு திகழ்கிறது.

ருஷ்ய நாட்டின் மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றி உலக வரலாற்றில் ஒரு புதிய சகாப் தத்தை, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நோக்கிய மாற்றம் ஏற்படும் சகாப் தத்தைத் தொடக்கி விட்டது. திரும்பத் திரும்ப நிகழ்ந்த ஏகாதிபத்தியத் தலையீடுகள், உள்நாட்டு எதிர்ப்புரட்சி ஆகியவற்றை எதிர்த்த கடுமையான போராட்டத்தில் உலக நாடுகளின் உழைக்கும் மக்களின் ஆதரவோடு சோவியத் உழைக்கும் மக்கள் உலகின் முதல் சோஷலிச அரசை அமைத்தார்கள். இரண்டாவது உலக யுத்தத் தின் போது ஜெர்மானிய பாசிஸமும் ஜப்பானிய ராணுவ வெறி ஆட்சிமுறையும் தோற்கடிக்கப்பட்டதன் விளை வாகவும் (இதில் சோவியத் யூனியன் தீர்மானமான பாத் திரத்தை வகித்தது), தொழிலாளர் மற்றும் தேசிய விடு தலை இயக்கங்களின் வளர்ச்சியினாலும் உழைக்கும் மக் கள் அளப்பரிய வெற்றிகளை ஈட்டினார்கள். சோஷலிச நாடுகளின் ஒரு உலக அமைப்பு உருப்பெற்று உலகளாவிய முறையில் ஒரு புரட்சிகர உத்வேகத்தை ஊட்டி ஒவ் வொரு ஆண்டும் வலுப்பெற்று வளர்ந்தோங்கியிருக்கிறது. வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளின் தொழி லாளர் இயக்கம் மேன்மேலும் வளர்கிறது. முதலாளித்துவத் தின் உலக காலனியாதிக்க அமைப்பு தகர்ந்து நொறுங்கி அதன் அழிவில் டஜன் கணக்கான சுதந்திர நாடுகள் தோன்றி விட்டன. மேலும் மேலும் இத்தகைய நாடுகள் பல முதலாளித்துவத்தை நிராகரித்து விட்டு சோஷலிசத் திசைப்பாதையை விழைகின்றன. கூட்டுச் சேரா இயக்கத்

தினுள்ளிருக்கும் புதிதாக விடுதலை பெற்ற நாடுகள் என்றுமில்லாதபடி உலக அரசியலில் மகத்தான பாத்திரத்தை வகிக்கின்றன.

இன்றுள்ள சோஷலிசத்தின் வெற்றிகள், தேசிய மற்றும் சமூக விடுதலைக்கான மக்களின இயக்கங்களின் வெற்றிகள் எவராலும் மறுக்க முடியாதவையே. ஆனால் அவை ஏகாதிபத்தியம், நவீன காலனியாதிக்கம் மற்றும் இனவெறிச் சக்திகளை எதிர்த்து நடத்திய தீவிரமான போராட்டத்தில்தான் கிட்டின. ஏகாதிபத்தியம் பல போர் முனைகளிலிருந்து பின்வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அது தன்னுடைய நிலைகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக யுத்தம் ஏற்படக் கூடிய அபாயகரமான நிலைமைகளை ஏற்படுத்துகிறது; மிக மோசமான ''கெடுபிடி யுத்த'' நாட்களின் பதட்ட நிலையை மறுபடியும் ஏற்படுத்த முயல்கிறது. ஏகாதிபத்திய சித்தாந்திகள் தங்களுடைய நாடுகளில் வளர்ந்து கொண்டிருக்கின்ற பிற்போக்கையும் மற்ற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் அப்பட்டமாகத் தலையிடுதலையும் நியாயப்படுத்துவதற்காக சோஷலிச நாடுகளில் ''மானுட உரிமைகள்'' மற்றும் ''சர்வதேச பயங்கரவாதத்தை'' எதிர்த்துப் போராட்டம் என்ற கோஷங்களை எழுப்புகிறார்கள். 1980க்களில் முதலாளித்துவம் தனது மனித விரோதக் காரியங்களுக்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சாதனைகளைப் பயன்படுத்துவதைத் தீவிரப்படுத்தியது; மிகவும் நுட்பமான, இழிவான பேரழிவு ஆயுதங்களின் உற்பத்தியை அதிகப்படுத்தியது; சுற்றுப்புறச் சூழலின் நிலை மற்றும் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதைப் பற்றிய பிரச்சினைகள் தீவிரமடைந்தன.

சமாதானத்திற்காகவும் மக்களினங்களின் பாதுகாப்புக்காகவும் நடக்கும் போராட்டத்தில், மனிதகுலம்

எதிர்நோக்கியுள்ள அடிப்படையான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சோஷலிசம்தான் முக்கிய சக்தி என்பதை வரலாறு எடுத்துக்காட்டுகிறது. எனவே விஞ்ஞான சோஷலிசக் கருத்துக்கள் உலகத்தின் மூலைமுடுக்கெல்லாம் பரவி வருவது தற்செயலானது அல்ல. எனவேதான் முற்போக்கு சக்திகளனைத்தும், கோடானுகோடி மக்களும் விஞ்ஞான சோஷலிசத்தின் சித்தாந்தத்தை, மார்க்சிய-லெனினியத்தை, அதன் உலகக் கண்ணோட்ட மற்றும் முறையியல் அடிப்படையான இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தைப் பற்றி மேலும் மேலும் அதிகமாகத் தெரிந்து கொள்ள விழைகிறார்கள்.

மார்க்சிய-லெனினியத் தத்துவஞான அமைப்பின் மையமே இயக்கவியல் பொருள்முதல்வாதம்தான். தத்துவஞானப் பொதுமைப்படுத்தலின் மிக உயர்ந்த மட்டத்தை அது பிரதிபலிக்கிறது. இயற்கை, சமுதாயம் மற்றும் அறிதலின் சர்வப்பொது விதிகளையும் குணாம்சங்களையும் அது தழுவுகிறது.

பொருள்முதல்வாத இயக்கவியல் பற்றிய பிரச்சினை 19ஆம் நூற்றாண்டின் முற்பாதியின் கடைசியில் கோட்பாட்டு ரீதியில் முக்கியமானதாயிற்று. அந்தக் காலகட்டத்தில்தான் மார்க்சும் எங்கெல்சும் அதன் அடிப்படைக் கோட்பாடுகளை வகுத்தளித்தனர். நமது நூற்றாண்டின் துவக்கத்தில், கருத்துமுதல்வாதிகள் பொருள்முதல்வாத இயக்கவியலுக்கு எதிராக பரவலான தாக்குதல் தொடுக்கத் துவங்கியவுடன் இந்தப் பிரச்சினை பற்றிய விவாதமும் சூடு பிடித்தது. ''மார்க்சியத் தத்துவஞானம் இயக்கவியல் பொருள்முதல்வாதம்தான் என்பதை இந்தச் சொற்பொழிவாளர் ஒப்புக்கொள்கிறாரா?'' என்று கேட்க வேண்டும் என்று ஜினீவாவில் ஒரு சொற்பொழிவு

விவாதிக்கப்பட்ட போது 1908இல் லெனின் எழுதினார்.* மார்க்சியத் தத்துவஞானம் அகவயக் கருத்துமுதல்வாதம் என்று முன்வைப்பதே அந்தச் சொற்பொழிவின் நோக்கம். நவீன விஞ்ஞானத்துக்கும், மனிதகுலம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கும் கம்யூனிசத்திற்கும் மாறுகின்ற போக்கில் எல்லா சமூக அரசியல் நடைமுறை நடவடிக்கைகளுக்கும், விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சியின் வளர்ச்சிக்கும், இறுதியாக உலகில் நிகழும் சித்தாந்தப் போராட்டத்திற்கும் பொருள்முதல்வாத இயக்கவியல் பிரச்சினை ஒரு அச்சாணியாகி விட்டது.

இன்று எல்லாவிதப் போக்குகளையும் சேர்ந்த விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள், சித்தாந்திகள் ஆகியோரும், நவீன வாழ்க்கையின் அனைத்துத் துறையினரும் விஞ்ஞான உலகக் கண்ணோட்டத்தின் உட்கரு என்ற வகையில் பொருள்முதல்வாத இயக்கவியலின் பால் திரும்புகிறார்கள். அறிவாற்றலைப் பெறுவதற்கு அது ஒரு நம்பற்குரிய வழிமுறை; இன்றைய உண்மைகளையும் நிகழ்வுகளையும் புரிந்து கொண்டு, விஞ்ஞானமும் நடைமுறையும் முன்வைக்கின்ற வினாக்களுக்குச் சரியான விடை காண்பதற்கு அது உதவி செய்கிறது எனச் சிலர் கருதுகிறார்கள். மற்றவர்கள் பொருள்முதல்வாத இயக்கவியலின் அடிப்படைகளை அழித்தொழிப்பதற்காகவும், அதை அடிப்படையாகக் கொண்ட போதனையும் சமூக இலட்சியங்களும், இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகளும் சாதனங்களும் ஆதாரமற்றவை என்று காட்டுவதற்காகவும் பொருள்முதல்வாத இயக்கவியலை அணுகுகிறார்கள். இன்னும் சிலர் தங்களது சொந்தக் கருத்தமைவுகளை ஆதாரப்படுத்துவதற்காக, அவற்றிற்கு விஞ்ஞான முலாம்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 14, p. 15.

பூசுவதற்காக, அவற்றை மேலும் கவர்ச்சிகரமாக்குவதற்காகப் பொருள்முதல்வாத இயக்கவியலின் தனிப்பட்ட கருத்துநிலைகளைப் பயன்படுத்த முயல்கிறார்கள்.

இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்றால் என்ன என்பதை சுருக்கமாக, எளிய முறையில் காட்டுவதும், பொருள்முதல்வாத இயக்கவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், விதிகள், கருத்தினங்கள் ஆகியவற்றை விளக்குவதும், விவாதிக்கப்படும் பிரச்சினைகளுக்கான இயக்கவியல் பொருள்முதல்வாதத் தீர்வின் சித்தாந்த மற்றும் முறையியல் முக்கியத்துவத்தைக் காட்டுவதுமே இந்தப் புத்தகத்தின் நோக்கம்.

அத்தியாயம் ஒன்று

தத்துவஞானம், அதன் ஆராய்ச்சிப் பொருள், சமுதாயத்தில் அதன் பாத்திரம்

விஞ்ஞானம் என்ற வகையில் தத்துவஞானம்

மிகவும் தொன்மையான விஞ்ஞானங்களில் ஒன்று தத்துவஞானம். நம்மைச் சுற்றியுள்ள உலகத்தை ஆராய்வதில் அது இதர எல்லா விஞ்ஞானங்களையும் ஒத்திருக்கிறது· ஆனால் உலகத்தை ஆராய்வதை அணுகுவதில், அதன் ஆராய்ச்சிப் பொருளில், அதன் வழிமுறையில்தான் அது இதர விஞ்ஞானங்களிலிருந்து வேறுபடுகிறது.

ஒவ்வொரு குறிப்பிட்ட விஞ்ஞானமும் நம்மைச் சுற்றியுள்ள உலகின் திட்டவட்டமான ஒரு பகுதியையோ அல்லது துறையையோ, உலகில் உள்ள குறிப்பிட்ட தொடர்புகளையோ அல்லது உறவுமுறைகளையோ ஆராய்கிறது. இவ்வாறாக உயிரியல் விஞ்ஞானங்கள் வாழ்க்கையை, அதன் நியதிகளை, தாவர மற்றும் விலங்குலகத்தின் விசேஷத் தன்மைகளைஆராய்ந்துஅறிகின்றன. பொருளாதார விஞ்ஞானங்கள் உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சித் தன்மைகள், உற்பத்தி மற்றும் வினியோகத்தின் வடிவங்கள் ஆகியவற்றை ஆராய்கின்றன. கல்வி இயல் குழந்தைகளை வளர்ப்பது, அவர்களுக்குக் கல்வி அளிப்பதைப் பற்றிய விஞ்ஞானம், இதரவை.

தத்துவஞானத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால், அது உலகத்தை முழுமையாகக் கொண்டு விளக்கவும் அதன் சாரத்தையும் நிலையையும் விளக்கவும் எப்போதுமே முயல்கிறது என்பதாகும்.

தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி ஒவ்வொரு தனி மனிதனும் தன் சொந்தக் கருத்தோட்டத்தைக் கொண்டிருப்பான். பல சமயங்களில் இக்கருத்தோட்டம் பல்வேறு முரண்பட்ட கருத்துக்களின் துணுக்குகளைக் கொண்டதாக இருக்கும். ஆனால் தத்துவஞானமோ வெறுமனே கருத்துக்களின் ஒட்டுமொத்தம் அல்ல; அது இயற்கை, சமுதாயம், மனிதன், உலகத்தில் அவனது இடம் ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்களையும் எண்ணங்களையும் கோட்பாடுகளையும் கொண்ட ஒரு அமைப்பாகும். அதாவது தத்துவஞானம் என்பது ஒரு உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படையாகும்.

உலகக் கண்ணோட்டம் என்பது யதார்த்தத்தைப் பற்றியும் தன்னைப் பற்றியும் மனிதன் கொண்ட உறவையும், ஒவ்வொரு தனி மனிதனும், சமூகக் குழு, வர்க்கம் அல்லது ஒட்டுமொத்தமாக சமுதாயம் ஆகியவற்றின் நடவடிக்கையின் திசைவழியையும் நிர்ணயிக்கும் கோட்பாடுகள், கருத்துக்கள் மற்றும் நம்பிக்கைகளின் கூட்டு மொத்தமேயாகும். விஞ்ஞான உலகக் கண்ணோட்டம் என்பது மார்க்சிய-லெனினிய அடிப்படையைக் கொண்ட யதார்த்தம் பற்றிய கருத்துக்களின் ஒரு அமைப்பாகும். இது தனி மனிதன் யதார்த்தத்தைப் பற்றி சரியான உறவைக் கொள்வதற்கு வகை செய்கிறது. விஞ்ஞான உலகக் கண்ணோட்டம் ஒரு தனி மனிதனின் அறிவை ஒருங்கிணைந்த, ஒருமித்த அமைப்பாக உருவாக்கி, சமூக வளர்ச்சியின் தேவைகளுக்கு ஏற்ப அறிதல் மற்றும் நடைமுறை நடவடிக்கையின் ஒரு விஞ்ஞான முறையை அவனுக்குத் தரு

கிறது. இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் விஞ்ஞான உலகக் கண்ணோட்டம், விஞ்ஞான முறையியலின் அடிப்படையாக விளங்குகிறது. உலகக் கண்ணோட்டம் என்ற முறையில் அதன் கோட்பாடுகளும் கருத்துநிலைகளும் கோரிக்கைகளும் எல்லாம் முறையியல் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. முறையியல் என்பது யதார்த்தத்தை அறியும் மற்றும் மாற்றியமைக்கும் முறைகளைப் பற்றிய தத்துவஞானப் போதனையாகும், உலகக் கண்ணோட்டத்தின் கோட்பாடுகளை அறிதல் நிகழ்ச்சிப் போக்கிற்கும் பொதுவாக ஆன்மீக படைப்பாற்றல் நடவடிக்கைகளுக்கும் நடைமுறை நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்துவதாகும். அடிப்படையான நடைமுறை மற்றும் விஞ்ஞானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் பயன்படுத்தும் இயக்கவியல் பொருள்முதல்வாத உலகக் கண்ணோட்டம்தான் விஞ்ஞான ரீதியான முறையியல் ஆகும். தன் பங்கிற்கு மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் அனைத்து முறையியல் கோட்பாடுகளும் கருத்துநிலைகளும் உலகக் கண்ணோட்டத் தன்மை கொண்டவையேயாகும்.

தத்துவஞான உலகக் கண்ணோட்டம் தத்துவார்த்தத் தன்மையைக் கொண்டதாகும். இதன் முக்கிய முன்மொழிவுகளும் கருத்துக்களும் எண்ணங்களும் வாழ்க்கை உண்மைகளையும் மானுட அனுபவத்தையும் திட்டவட்டமான விஞ்ஞானங்களினால் தரப்பட்ட விவரங்களையும் ஆதாரமாகக் கொண்டு நிறுவப்பட்டவை என்பதே இதன் பொருளாகும்.

விஞ்ஞான உலகக் கண்ணோட்டத்திற்கு எதிராக விஞ்ஞானம் அல்லாத உலகக் கண்ணோட்டம் நிற்கிறது. இது உலகத்தைப் பற்றி தன்னிச்சையாக எழும் உணர்வை (அன்றாட உலகக் கண்ணோட்டம் என்றழைக்கப்படுவது)

அல்லது தவறான கருத்தமைப்புகளை (பல்வேறு கருத்து முதல்வாதக் கருத்துக்கள்) அல்லது யதார்த்தத்தைப் பற்றிய மத மற்றும் புராணங்களைச் சார்ந்த நோக்கை (மத வழியிலான உலகக் கண்ணோட்டம்) ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.

பொருளாதார, அரசியல் மற்றும் ஆன்மீக வாழ்க்கையின் சிக்கலான பிரச்சினைகளைச் சரியான முறையில் தீர்ப்பதற்கு, தங்கள் சொந்த நிலைபாட்டை வகுத்துக் கொள்வதற்கு, சமுதாய வளர்ச்சியின் முழுமையான போக்கை விஞ்ஞான ரீதியில் ஆராய்வதற்கு திறமை படைத்தவர்களாக இருக்க வேண்டும் என்பது அனைத்து முற்போக்கு எண்ணம் கொண்ட மக்களுக்கும் எப்பொழுதும் முக்கியமாகும். விஞ்ஞான ரீதியிலான கருத்துக்கள், உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை மட்டுமின்றி, அன்றாட மனித வாழ்க்கையின் பிரச்சினைகளையும் தழுவுவதாக இருக்க வேண்டும். உதாரணமாக, பல்வேறு வகையான மூடநம்பிக்கைகள், தப்பெண்ணங்கள், பழையதாகிப் போன சில பாரம்பரிய பழக்கவழக்கங்கள் தீங்கற்றவை அல்ல. திட்டவட்டமான சந்தர்ப்பங்களில் இவை செயலற்ற நிலைக்கும் தன் சக்திகளின் மீது நம்பிக்கையின்மைக்கும் அதிர்ஷ்டம் ஏற்படும் என்ற வீண் நம்பிக்கைக்கும் இட்டுச் செல்வதோடு கூட தவறான கருத்துக்களையும் கண்ணோட்டங்களையும் ஏற்படுத்தலாம்.

மார்க்சிய-லெனினியத் தத்துவத்தில் ஆழ்ந்த ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட உலகக் கண்ணோட்டம் மட்டுமே மனிதனுக்குத் தொடர்ச்சியாக மாற்றமடைந்து கொண்டிருக்கின்ற உலகத்தில் சரியான திசைவழியைச் சுட்டிக்காட்ட முடியும். மார்க்சிய வழியைப் பின்பற்றுவதன் மூலம் மட்டுமே நாம் புறவய உண்மையை மேன்

மேலும் நெருங்கிச் செல்ல முடியும், வேறு எந்த வழியும் பொய்யுரைகளுக்கும் குழப்பத்துக்கும் இட்டுச் செல்லும் வழியே ஆகும் என்று லெனின் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு தனி மனிதனின் உள்ளுணர்வில் உலகக் கண்ணோட்டம்தான் கேந்திரமான அம்சமாகும். எனவேதான் அது கல்வி நிகழ்வுப் போக்கில் தீர்மானமான பாத்திரத்தை வகிக்கிறது. தனி மனிதனின் ஆன்மீகச் செழுமையை, அரசியல் துடிப்பை, சமூக சுறுசுறுப்பைத் தீர்மானிப்பதும் உலகக் கண்ணோட்டமே. தனி மனிதன் சுற்றுப்புற யதார்த்தங்கள் அனைத்தையும் தன்னுள் கிரகித்துக் கொண்டு அவற்றைப் பிரதிபலிக்கும் முப்பட்டைக் கண்ணாடியாகும் இது.

உலகக் கண்ணோட்டம் மனிதனின் ஆன்மீகக் கட்டமைப்பை ஒன்றுசேர்த்து, யதார்த்தம், அரசியல், ஆன்மீக மற்றும் அன்றாட வாழ்க்கையின் பிரச்சினைகள் பால் அவனது அணுகுமுறையில் தத்துவார்த்த மற்றும் முறையியல் கோட்பாடுகளைக் கொடுத்துதவுகிறது.

உலகக் கண்ணோட்டத்தின் உருவாக்கம் மனிதனின் ஆன்மீகக் கட்டமைப்பின் மீது ஆழ்ந்த தாக்கத்தைச் செலுத்துகிறது. மனிதனின் அரசியல் உணர்வும் சமூக சுறுசுறுப்பும் அவனது சமூக அந்தஸ்து மற்றும் நிகழ்வுகளின் போக்கைச் சார்ந்து இருந்தாலும் அவன் விஞ்ஞான உலகக் கண்ணோட்டத்தைத் தேர்ந்து தெளிந்த பின்னர் தான் முழுநிறைவான அடிப்படையைக் கொண்டிருக்கின்றன. ஏனென்றால் இத்தகைய ஒரு கண்ணோட்டம் மட்டுமே சமுதாயப் போராட்டத்தின் இலக்குகளையும் அதன் இறுதி லட்சியங்களையும் அதன் வழிகள் மற்றும் வழிமுறைகளையும் பற்றிய அறிவை வழங்குகிறது.

விஞ்ஞான உலகக் கண்ணோட்டம் முதலாவதாக, தத்துவஞானத்தின் அடிப்படையான கேள்விக்குப் பொருள்

முதல்வாத விடையையும் இரண்டாவதாக, இயக்கவியல் முறையையும் அடிப்படையாக கொண்டுள்ளது. எப்பொழுதுமே அது பொருள்முதல்வாத மற்றும் இயக்கவியல் தன்மையைக் கொண்டிருக்கிறது.

தத்துவஞானத்தின் அடிப்படைக் கேள்வி

நம்மைச் சுற்றியுள்ள உலகத்தின் பல்வேறு பொருட்கள், நிகழ்வுப் போக்குகள், புலப்பாடுகளைக் கவனமாக ஆராய்ந்தால் அவை அனைத்தும் பொருளாயதமாக அல்லது கருத்தியலாக (ஆன்மீகமாக) இருக்கும் என்பது தெரியும். புறநிலையில் இருப்பவைதான் பொருளாயதம் எனப்படுபவை; இவை மனித உணர்வுக்கு வெளியில் சுயேச்சையாக இருப்பவை (உதாரணமாக, பிரபஞ்சம், பூமி, பல்வேறுவிதமான உயிரியல், பௌதிக, சமூக நிகழ்வுகள், இதரவை). மனித உணர்வில் இருந்து அவனுடைய உளவியல் நடவடிக்கையுடன் தொடர்பு கொண்டவை (சிந்தனைகள், மெய்ப்பாடுகள், உணர்ச்சிகள், இதரவை) கருத்தியல் அல்லது ஆன்மீகமாகும்.

உலகில் பொருளாயத அல்லது கருத்தியலான தன்மை இல்லாத ஒரு பொருள், நிகழ்வுப் போக்கு அல்லது புலப்பாடு இல்லை, அதாவது பொருளாயதம் அல்லது கருத்தியல் (ஆன்மீகம்) இவ்விரண்டிலிருந்தும் மாறுபட்ட ஒன்று உலகில் கிடையாது. பொருளாயதமும் கருத்தியலும் (ஆன்மீகம்) வேறுபட்ட யதார்த்தங்கள்.

ஆனால் இவற்றுக்கிடையே வேறுபாடுகள் இருப்பினும் திட்டவட்டமான ஒரு தொடர்பு, திட்டவட்டமான உறவு இந்த யதார்த்தங்களுக்கிடையே உள்ளது. பருப்பொருளுக்கும் உணர்வுக்குமிடையே, பொருளாயதத்துக்கும் கருத்தியலுக்குமிடையேயுள்ள உறவு, தொடர்பு என்ன

என்ற கேள்வியே தத்துவஞானத்தின் அடிப்படையான கேள்வியாகும். இந்தக் கேள்விக்கான விடையைச் சார்ந்தே இதர அனைத்து தத்துவஞான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும்.

தத்துவஞானத்தின் அடிப்படைக் கேள்வி இரண்டு பக்கங்களை அல்லது இரண்டு அம்சங்களைக் கொண்டது. முதலாவது, உலகத்தின் அடிப்படைத் தன்மை, சாரத்தைப் பற்றியது; முதன்மையானது எது, பருப்பொருளா அல்லது உணர்வா, பருப்பொருள் உணர்வைத் தோற்றுவிக்கிறதா அல்லது உணர்வு பருப்பொருளைச் சிருஷ்டிக்கிறதா என்பது. இரண்டாவது, உலகத்தை அறிய முடியுமா? மனித மனம் சுற்றியுள்ள உலகைக் கிரகித்து அதன் வளர்ச்சி விதிகளைக் கண்டுபிடிக்க முடியுமா என்பதாகும்.

தத்துவஞானத்தின் அடிப்படைக் கேள்வியின் முதல் அம்சத்தைப் பரிசீலிப்போம்.

பல நூற்றாண்டுகளாகத் தலைசிறந்த சிந்தனையாளர்கள் உலகத்தின் சாரத்தைப் புரிந்து கொள்ள முயன்றனர், எண்ணற்ற கொள்கைகளையும் சிந்தனை மரபுகளையும் வகுத்தளித்தனர். பல்வேறு மரபுகளைச் சேர்ந்தவர்களுக்கிடையே எப்பொழுதுமே கடுமையான போராட்டம் நடந்தது, இப்போதும் நடந்து வருகிறது. ஆனால் அவர்களுக்குள் எத்தனையோ வேறுபாடுகள் இருப்பினும் அடிப்படையில் அவர்கள் பொருள்முதல்வாத முகாம், கருத்துமுதல்வாத முகாம் என்ற இரண்டு பெரும் முகாம்களாகப் பிரிந்து நிற்கிறார்கள்.

பருப்பொருள், இயற்கைதான் முதன்மையானது என்றும் உணர்வு என்பது இரண்டாம் பட்சமானது, பொருளாயத வாழ்நிலையைச் சார்ந்தது என்றும் நம்புகின்ற தத்துவஞானிகள் பொருள்முதல்வாதிகளின் முகாமை அமைத்துள்ளனர்.

அவர்களது நிலைபாட்டின்படி பருப்பொருள் நிரந்தரமானது. அது எப்போதும் எவராலும் படைக்கப்படவில்லை. உலகத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட, தெய்வீக சக்திகள் எதுவும் கிடையாது. உணர்வைப் பொறுத்தமட்டில் அது பருப்பொருளின் வரலாற்று வளர்ச்சியின் ஒரு விளைபொருளாகும். மனிதனின் தோற்றத்தோடு அதுவும் தோன்றி வளர்ச்சி பெறுகிறது.

உணர்வும் ஆன்மீக வாழ்க்கையும்தான் முதன்மையானது என்று கருதிய தத்துவஞானிகள் கருத்துமுதல்வாத முகாமை அமைத்துள்ளனர். அவர்களது கண்ணோட்டத்தின்படி உணர்வு பருப்பொருளைச் சாராமல் நிலவிபொருளாயத உலகை ''உருவாக்கி'' அதைக் கட்டுப்படுத்தி நிர்வகிக்கிறது. இந்த உணர்வு எப்படி உலகத்தை ''உருவாக்குகிறது'' என்பதில் கருத்துமுதல்வாதிகள் வேறுபடுகிறார்கள். அகநிலைக் கருத்துமுதல்வாதிகள் தனிநபரின் உணர்வு உலகத்தை உருவாக்குகிறது என்று கருதுகிறார்கள். புறநிலைக் கருத்துமுதல்வாதிகளோ, உலகத்திற்கும் மனிதனுக்கும் அப்பாற்பட்டு நிலவுகிற ஓர் ஆன்மீக சக்தியின் புறவய உணர்வினால்தான் உலகம் ''படைக்கப்பட்டது'' என்று கருதுகிறார்கள்.

எனவே தத்துவஞானத்தின் அடிப்படைக் கேள்வியின் முதல் அம்சத்திற்கான விடையைத் தேடும் பொழுது அனைத்துத் தத்துவஞானிகளும் பொருள்முதல்வாதிகள், கருத்துமுதல்வாதிகள் என்று இரண்டு முகாம்களாகப் பிரிந்து போகிறார்கள். இவர்களுக்கிடையே தத்துவஞானத்தின் எல்லாப் பிரச்சினைகளிலும் சமரசம் காண முடியாதபடி எப்பொழுதுமே போராட்டம் நடந்தது, நடந்து வருகிறது. தத்துவஞானத்தின் அடிப்படைக் கேள்விக்கு விடை காண்பதில் நழுவிச் செல்கின்ற எந்த முயற்சியும் தோல்வியைத்தான் அடையும். அதைப் போல் பொருள்

முதல்வாதத்திற்கும் கருத்துமுதல்வாதத்திற்கும் அப்பால் செல்கிற எந்த முயற்சியும் அல்லது அவற்றை சமரசப் படுத்தும் எந்த முயற்சியும் தோல்வியையே தழுவும். இயற்கையைப் பற்றி, சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி பொருள் முதல்வாதம் ஒரு சரியான விஞ்ஞான விளக்கத்தைத் தருகிறது. கருத்துமுதல்வாதமோ, ஒரு பொய்யான, விஞ்ஞானத்துக்குப் புறம்பான விளக்கத்தைத் தருகிறது. எனவேதான் இத்தகைய எந்த முயற்சியும் ''பொய்யான அருவருக்கத் தக்க நழுவுதல்'' என்று லெனின் எழுது கிறார்.*

பொருள்முதல்வாதம் எப்பொழுதுமே முற்போக்கான விஞ்ஞான உலகக் கண்ணோட்டமாகவே இருந்து வரு கிறது. அது உலகத்தைப் பற்றி ஒரு சரியான சித்திரத்தை முன்வைக்கிறது; உலகம் யதார்த்தமாக எப்படி இருக் கிறதோ அப்படியே அதைக் காட்டுகிறது. சமுதாயத்தின் முற்போக்கு வர்க்கங்கள் மனிதகுலத்தின் முன்னேற்றத் துக்காக, பொருளாதார, விஞ்ஞான, கலாசார வளர்ச்சி யின் நலன்களுக்காக அதைப் பயன்படுத்தின.

கருத்துமுதல்வாதம் எப்பொழுதுமே சமுதாயத்தின் பிற்போக்குச் சக்திகளால்தான் பயன்படுத்தப்பட்டது. இன்றும் கூட சுரண்டும் வர்க்கத்தினர் தங்களது சொந்த ஆட்சியை நியாயப்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற் கும் ஒரு சாதனமாக, உழைக்கும் மக்களை ஆன்மீக ரீதியில் அடிமைப்படுத்துவதற்கு ஒரு கருவியாகத்தான் அது விளங்குகிறது.

காலனியாதிக்கவாதிகள் பல நூற்றாண்டுகளாகக் கருத்துமுதல்வாதத்தை ஆதரித்து வந்தார்கள். மக்களை ஆன்மீக ரீதியில் அடிமைப்படுத்துவதற்கும் குழப்புவதற்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 29, p. 505.

கும் இது அவர்களுக்குத் தேவைப்பட்டது. நாடுகள் விடுதலை பெற்றதும், தேசிய விடுதலைப் போராட்டங்கள் சமூக விடுதலைப் போராட்டங்களாக வளர்ச்சி பெற்றதும், சமுதாயத்தின் முன்னணிச் சக்திகள் முற்போக்கான, ஜனநாயக மாற்றங்களுக்காகவும் தம் சுதந்திரத்தைப் பலப்படுத்துவதற்காகவும், குறிப்பாக சோஷலிசத் திசையமைவிற்காகவும் போராடியதும் பரவலான மக்கள் திரளினரிடையே ஒரு சுதந்திரமான, விஞ்ஞான ரீதியான, பொருள்முதல்வாத உலகக் கண்ணோட்டம் உருவாவதற்கான உண்மையான வாய்ப்புகளை ஏற்படுத்தின.

தத்துவஞானத்தின் அடிப்படைக் கேள்வியின் இரண்டாவது அம்சத்திற்கு விடை காண்கின்ற பொழுதும் தத்துவஞானிகள் இரண்டு முகாம்களாகப் பிரிந்து நிற்கிறார்கள். உலகம் அறியப்படக் கூடியதே என்று முரணில்லாத பொருள்முதல்வாதிகள் வாதிடுகிறார்கள்; தங்கள் வாதத்தை நிரூபிக்கிறார்கள். தங்களைச் சுற்றியுள்ள பொருட்கள், நிகழ்வுப் போக்குகள், புலப்பாடுகள் ஆகியவற்றின் சாராம்சத்தை மனித அறிவினால் அறிந்து கொள்ள முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள். மனிதகுலம் உலகத்தைப் பற்றிச் சரியான அறிவைப் பெற்று வருகிறது, அந்த அறிவைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை உலகத்தை நடைமுறையில் மாற்றியமைப்பதில் மனிதகுலத்தின் சாதனைகள் மிகவும் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன.

இயக்க மறுப்பியல் போக்குடைய பொருள்முதல்வாதிகள் மற்றும் கருத்துமுதல்வாதிகளில் பலர் உலகத்தை அறிந்து கொள்ள முடியும் என்பதை மறுக்கிறார்கள், அல்லது அறிவாற்றல் ஒரு வரையறைக்கு உட்பட்டது என்று நம்புகிறார்கள். இவர்கள் அறியொணாவாதிகள் என்றழைக்கப்படுகிறார்கள். இதர கருத்துமுதல்வாதிகள்

உலகத்தை அறிந்து கொள்ள முடியும் என்பதை மறுக்க வில்லை; ஆனால் இது உதட்டளவில்தான். சுற்றியுள்ள உலகத்தை அறிந்து கொள்ள முயற்சிக்காமல் அகநிலைக் கருத்துமுதல்வாதிகள் ஒருவனது சொந்த எண்ணங்களை யும் உணர்வுகளையும் அறிந்து கொள்வதை நோக்கிச் செல்கிறார்கள். புறநிலைக் கருத்துமுதல்வாதிகளோ கற்பனையான ஒரு ''உலக ஆன்மா'', ஒரு மாயாஜாலமான ''தனிமுதல் கருத்து'' இதரவற்றை அறிந்து கொள்வதை நோக்கிச் செல்கிறார்கள். இன்றைய பூர்ஷ்வா தத்துவ ஞானத்தில் முழுவதுமே ஒரளவு அறியொணாவாதம் நிலவும். சுரண்டுகிற சமுதாய அமைப்பை ஆதரிப்பவர்களின் கையில் அறியொணாவாதம் ஒரு ஆயுதமாகப் பயன்படுகிறது. ஏனென்றால் உலகத்தை அறிந்து கொள்ள முடியாது என்றால் அதன் வளர்ச்சியின் விதிகளைக் கண்டு பிடிக்க முயல்வதில் அர்த்தமில்லை அல்லவா? ஆக இந்த விதிகளைப் பற்றிய அறியாமை உலகத்தின் நடைமுறை புரட்சிகர மாற்றங்களைச் சுரண்டும் வர்க்கங்களுக்குச் சாதகமான முறையில் தடை செய்கிறது.

முறையின் கருத்தமைவு.
எதிர்மறையான தத்துவஞான முறைகள்:
இயக்கவியலும் இயக்க மறுப்பியலும்

விஞ்ஞானிகள் தத்துவஞானத்தின் அடிப்படைக் கேள்வியோடு மற்றொரு கேள்விக்கும் விடை காண எப்பொழுதுமே முயன்று கொண்டிருக்கிறார்கள். உலகத்தில் என்ன நடக்கிறது, அது இன்று போல்தான் என்றும் இருக்கிறதா, அல்லது அது எப்படியோ தோன்றி மாறுகிறதா, புதுப்பித்துக் கொண்டு வளர்கிறதா? வரலாற்றில் என்றுமே இந்தக் கேள்விக்குத் தரப்பட்ட பதில்கள் இரண்டு எதிர்

அணிகளாகவே உள்ளன; இவை இயக்கவியல் மற்றும் இயக்க மறுப்பியல் முறைகளுக்குப் பொருந்தும்.

முறை என்றால் என்ன? அறிவைத் தேடலிலும் நடைமுறைச் செயல்பாட்டிலும் மக்கள் குறிப்பிட்ட இலட்சியங்களை முன்வைத்துக் கொண்டு பல்வேறு கடமைகளை வகுத்துக் கொள்கிறார்கள். இந்த இலட்சியங்களை ஈடேற்றுவதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்குமான வழிகளும், தத்துவார்த்த ஆராய்ச்சி மற்றும் செய்முறை நடவடிக்கையின் குறிப்பிட்ட கோட்பாடுகளும் சாதனங்களும் ஒன்று சேர்ந்தால் ஒரு முறை உருவாகிறது.

ஒரு தீர்க்கமான முறையின் பயன்படுத்தலின்றி எந்த ஒரு விஞ்ஞான அல்லது நடைமுறைப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது. இங்கு முறை என்பது எந்த நிலைமைக்கும் ஏற்புடைய சில வழிகள் மற்றும் சாதனங்களின் மூட்டை அல்ல. முறையின் சாரம் பெருமளவுக்கு பரிசீலனைக்குரிய பொருட்கள் அல்லது நிகழ்வுகளின் இயல்பு, அவற்றிற்குரிய நியதிகள் ஆகியவற்றைச் சார்ந்தே இருக்கிறது.

ஒரு தத்துவஞான முறையை வேறுபடுத்திக் காட்டுவது எது? யதார்த்தத்தின் சில குறிப்பிட்ட பிரச்சினைகள் அல்லது அம்சங்களோடு நிற்காமல் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இயற்கை, சமுதாயம், சிந்தனை ஆகிய எல்லாவற்றுக்கும் விதிவிலக்கின்றி அது பொருந்தி வருகிறது.

உலகத்தைப் பற்றி விளக்கம் தரும் பொழுது இயக்கவியலுக்காகப் பரிந்து பேசுகிறவர்கள் முதன்முதலாக, அனைத்துப் பொருட்களும் நிகழ்வுப் போக்குகளும் புலப்பாடுகளும் ஒன்றோடொன்று இடை உறவு கொண்டு, ஒன்றோடொன்று இடை செயல்பாடு கொண்டு பரஸ்பரம் ஒன்றுக்கொன்று தகவமைத்துக் கொண்டவை என்றும்

இரண்டாவதாக, அவை தொடர்ச்சியான இயக்கத்தையும் வளர்ச்சியையும் கொண்டிருக்கின்றன என்றும் கருதுகிறார்கள். இத்தகைய சர்வப்பொது இடை உறவுகளில், இயக்கம் மற்றும் வளர்ச்சியில் அன்றி உலகில் எதுவும் இருக்க முடியாது. அவர்கள் வளர்ச்சியை, அளவு ரீதியான மாற்றங்களின் திரட்சியும் விளைவும் என்றும், அம்மாற்றங்கள் பண்பு ரீதியானவையாக மாறுவது என்றும் பார்க்கிறார்கள்; சில பொருட்களும் நிகழ்வுகளும் பண்பு ரீதியில் மற்றவையாக உருப்பெறுவது எனவும் பத்தாம் பசலித்தனமானவை, காலாவதியானவை அழிக்கப்படுதல், புதிய ஒன்றின் தோற்றம், எழுச்சி, வலிமைப்படுதல் எனவும் பார்க்கிறார்கள். இயக்கவியல்வாதிகளுக்கு வளர்ச்சியின் தோற்றுவாய் உள் முரண்பாடுகள், ஒவ்வொரு பொருளுக்கும் நிகழ்வுக்கும் உரித்தான இரண்டு எதிர்பக்கங்களுக்கிடையே அல்லது போக்குகளுக்கிடையேயான ஒரு போராட்டம் என்பதாகும். இயற்கை மற்றும் சமுதாயத்தின் வளர்ச்சியின் தோற்றுவாய்க்குக் காரணம் அவற்றிற்குள்ளேயே இருக்கிறது, அது வெளியில் இருந்து புகுத்தப்படவில்லை என்று இயக்கவியல் கூறுகிறது.

இதற்கு மாறாக இயக்க மறுப்பியலை ஆதரிப்பவர்கள் முதலாவதாக, சாராம்சத்தில் உலகத்தை அசைக்க முடியாது, இயற்கை எப்பொழுதுமே மாறாதது எனவும் இரண்டாவதாக, பொருட்களும் நிகழ்வுகளும் ஒன்றோடொன்று எந்தத் தொடர்புகளும் இல்லாமல் இருக்கின்றன, அவை தனித்து வாழ்கின்றன என்றும் ஊகித்துக் கொள்கிறார்கள். அவர்கள் மாற்றத்தையும் வளர்ச்சியையும் சாதாரணமாக ஏற்கெனவே இருக்கின்றவற்றின் அதிகரிப்பு அல்லது குறைவு என்பதை மட்டுமே பார்க்கிறார்கள். அவர்களுக்கு வளர்ச்சியின் மூலாதாரம் பல்வேறு பொருட்களின் வெளிப்புற மோதல்களில்

அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வீக சக்தியில் இருக்கிறது என்பதாகும்.

உலகம் யதார்த்தத்தில் எப்படி இருக்கிறதோ அப்படியே அதைப் பார்க்கிறது இயக்கவியல். வளர்ச்சியின் நிகழ்வுப் போக்குகளையும் அவற்றின் காரணங்களையும் வடிவங்களையும் விளக்கும் போது, தவிர்க்க முடியாதபடி புதியன வெற்றிக் கொடியை நாட்டும் என்று காட்டும் பொழுது இயக்கவியல் சமுதாயத்தின் முன்னேற்றகரமான வளர்ச்சிக்கு, பழமையை எதிர்த்து முற்போக்குப் புரட்சிகர சக்திகள் நடத்துகின்ற போராட்டத்தில் உதவி செய்கிறது.

இதற்கு மாறாக இயக்க மறுப்பியல்வாதம் வளர்ச்சியின் முற்போக்கான இயல்பை, புதியவற்றின் தவிர்க்க முடியாத வெற்றியை அங்கீகரிக்க மறுக்கிறது, முன்னேற்றத்தை எதிர்க்கும் போராட்டத்தில் பழமை விரும்பிகள் மற்றும் பிற்போக்குச் சக்திகளுக்குத் தொண்டூழியம் புரிகிறது. அது திருத்தல்வாதத்திற்கும் வறட்டுச் சூத்திரவாதத்திற்கும் ஒரு தத்துவார்த்த அடிப்படையை வழங்குகிறது.

அன்றாட வாழ்க்கை, விஞ்ஞானம், சமூக நடைமுறை ஆகியவை இயக்கவியலின் உண்மையையும் அறிவாற்றலுக்கும் நடைமுறைக்கும் ஒரு விஞ்ஞான முறை என்று அதைப் பயன்படுத்தலின் தேவையையும் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகின்றன. இன்றைய சமூக வளர்ச்சியின் மூலம் இயக்கவியலின் அவசியம் மிகச் சிறந்த முறையில் புலப்படுத்தப்பட்டது. மக்களினங்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றியடைகின்றன; தேசிய வளர்ச்சியின் கடமைகளை நிறைவேற்றி ஆன்மீக வாழ்வில் ஆழமான மாற்றங்களைக் காண்கின்றன; ஏராளமான மக்கள் யுகயுகாந்திரமான பிற்பட்ட தன்மை

யிலிருந்து சுதந்திர மற்றும் முற்போக்கான வளர்ச்சியின் நவீன வடிவங்களை நோக்கி முன்னேறுகிறார்கள்; இவை யனைத்தும் இயக்கவியலின் செல்தகைமைக்குச் சீரிய உதாரணங்கள் ஆகும்.

மார்க்சிய-லெனினிய தத்துவஞானத்தின் ஆராய்ச்சிப் பொருள்

விஞ்ஞானம் என்ற முறையில் தத்துவஞானத்தின் ஆராய்ச்சிப் பொருள் பல நூற்றாண்டுகளாக மாறிக் கொண்டு வருகிறது. முதலில் அது உலகத்தைப் பற்றி அனைத்து அறிவையும் கொண்டிருந்தது. பண்டைக் காலத் தத்துவஞானிகள் இயற்கை விஞ்ஞானிகளாக, புதிய திட்டவட்டமான விஞ்ஞானங்களில் வல்லுநர் களாக இருந்தார்கள் என்று எங்கெல்ஸ் கூறினார்.

உலகத்தையும் அதன் பல்வேறு துறைகளையும் படிப் படியாக அறிந்ததன் விளைவாக வானவியல், இயந்திர வியல், பௌதிகம், இரசாயனம், உயிரியல் மற்றும் இதர சிறப்பு விஞ்ஞானங்கள் தோன்றின. அதே சமயத்தில் தத்துவஞானம் இவற்றுக்கு அப்பால் நின்று தனது செயல் பாடுகளையும் அறிவியல் விஷய ஞானத்தின் அமைப்பில் தனது இடத்தையும் பிரத்யேகப்படுத்திக் கொண்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்க காலம் வரை ‘‘விஞ்ஞானங்கள் அனைத்துக்குமான விஞ்ஞானம்’’ என்று தத்துவஞானம் கருதப்பட்டது. இதர விஞ்ஞானங் களுக்குத் தனது முன்மொழிவுகளையும் முடிவுகளையும் கட்டளையிடும் உரிமை பெற்றதாக அங்கீகரிக்கப்பட்டிருந் தது. தத்துவஞானத்தின் ஆராய்ச்சிப் பொருள், இதர விஞ்ஞானங்களுக்குள் அதன் இடம், சமுதாயத்தில் அதன்

பாத்திரம் ஆகியவை பற்றி நீண்ட நெடுங்காலமாக நிலவி வந்த சண்டை சச்சரவுகளுக்கு மார்க்சும் எங்கெல்சும் விஞ்ஞான ரீதியாகத் தீர்வு கண்டனர். அவர்கள் இயக்க வியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத் தத்துவஞானத்தை உருவாக்கினார்கள்.

சுற்றியுள்ள உலகத்தை அறிதலே தத்துவஞானம் மற்றும் திட்டவட்டமான விஞ்ஞானங்களின் நோக்கம் என்று இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தின் மூலவர்கள் கருதினார்கள். தத்துவஞானமும் திட்டவட்டமான விஞ்ஞானங்களும் ஒரே உலகத்தைப் பற்றியே ஆராய்ந்தன. ஆனால் அவற்றின் ஆராய்ச்சிப் பொருளில் ஒரு வேறுபாடு உண்டு. ஒரே புலப்பாடுகளுக் குள்ளாக, நிகழ்வுப் போக்குகளுக்குள்ளாக ஏக காலத்தில் செயல்படுகின்ற பொது விதிகள், பிரத்யேகமான விதிகள் ஆகிய இரண்டும் உலகத்தில் இருக்கின்றன என்ற உண்மை யிலிருந்தே இந்த வேறுபாடு தோன்றுகிறது. இயற்கை மற்றும் சமுதாயத்தின் தனித்தனித் துறைகள் சம்பந்தப் பட்ட பிரத்யேக விதிகள் திட்டவட்டமான விஞ்ஞானங் களினால் ஆராயப்படுகின்றன. பிரபஞ்சம் முழுவதிற்கு மான விதிகள் இயக்கவியல் பொருள்முதல்வாதத் தத்துவ ஞானத்தின் ஆராய்ச்சிப் பொருளாக இருக்கின்றன.

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் விஞ்ஞான ரீதியான உலகக் கண்ணோட்டத்தின் பொதுவான தத்து வார்த்த அடிப்படையாகும். இயற்கை, சமுதாயம் மற்றும் சிந்தனையின் விதிகளது அறிவை அது மக்களுக்கு வழங்கு கிறது. உலகத்தின் நடைமுறை புரட்சிகர மாற்றத்திற்கு இது அவசியமாகும். எனவே தத்துவஞானத்தின் அடிப் படைக் கேள்விக்கு ஒரு பொருள்முதல்வாத விடை அளிக் கும் விஞ்ஞானமாகிய மார்க்சிய-லெனினியத் தத்துவஞா னம் பொருளாயத உலகத்தின் வளர்ச்சியின் மிகவும் பொது

வான, இயக்கவியல் விதிகளையும் அதன் அறிவாற்றல் மற்றும் புரட்சிகர மாற்றத்திற்கான வழிமுறைகளையும் ஆராய்கிறது.

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் பிரத்யேக அம்சங்களில் ஒன்று திட்டவட்டமான விஞ்ஞானங்கள் மற்றும் சமூக நடைமுறையுடன் அது கொண்டுள்ள உட்தொடர்பு ஆகும். ஒரு புறம் திட்டவட்டமான விஞ்ஞானங்களுக்கும் சமூக நடைமுறைக்கும் சுற்றியுள்ள உலகத்தின் வளர்ச்சியினது விதிகள், வாழ்நிலையின் அடிப்படைக் கோட்பாடுகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவை அது வழங்குகிறது. சரியான ஒரே வழியில் அது திட்டவட்டமான விஞ்ஞான ஆராய்ச்சிகளையும், மனிதர்களது நடைமுறைச் செயல்பாடுகளையும் வழிநடத்திச் செல்கிறது. மறுபுறம் அது திட்டவட்டமான விஞ்ஞானங்களின் தேர்ந்துதெளிந்த முடிவுகளினாலும் சமூக நடைமுறையினாலும் செழுமைப்படுத்தப்பட்டு ஸ்தூலமாக்கப்படுகிறது. மாபெரும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களையும் ஆழமான சமூக மாற்றங்களையும் கொண்ட இந்த சகாப்தத்தில் மார்க்சிய-லெனினியத் தத்துவஞானப் பயிற்சியின்றி முரணில்லாத விஞ்ஞான, புரட்சிகர நிலை எடுப்பதென்பது அசாத்தியமானதொன்றாகும். எனவேதான் மார்க்சிய-லெனினியக் கட்சிகள் உழைக்கும் மக்களுக்கு சித்தாந்த அரசியல் கல்வியை அளிப்பதற்கும், அக்கட்சிகளின் ஊழியர்களுக்கு இயக்கவியல் பொருள்முதல்வாதப் பயிற்சியை அளிப்பதற்கும் இத்தகைய விசேஷ கவனத்தைச் செலுத்துகின்றன. உலகக் கண்ணோட்ட மற்றும் முறையியல் பயிற்சி மார்க்சிய-லெனினியம், அதன் தத்துவார்த்த அடிப்படையான இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தைக் கற்றறிதலைச் சார்ந்தே உள்ளது. உலக வளர்ச்சியை நிர்ணயிக்கின்ற விதிகள், சமூக

வளர்ச்சியின் விதிகளை அறிதல் தொழிலாளி வர்க்கம், விவசாயி வர்க்கம், அனைத்து உழைக்கும் மக்களின் நலன்களுக்காக எழும் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான தீர்வை உறுதிப்படுத்தும்.

தத்துவஞானத்தின் சார்புநிலை இயல்பு

புராதன காலம் தொட்டு உலகில் எத்தனை எத்தனையோ தத்துவஞானக் கொள்கைகள் இருந்து வந்துள்ளன, தொடர்ந்து இருந்து வருகின்றன. இந்தக் கொள்கைகள் ஒவ்வொன்றும் சாரத்திலும் உள்ளடக்கத்திலும் பொருள்முதல்வாதம் அல்லது கருத்துமுதல்வாதத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட வர்க்கம் அல்லது சமூகக் குழுவினது நலன்களோடு தொடர்பு கொண்டவையாகும். இங்குதான் அவற்றின் சார்புநிலை, வர்க்க இயல்பு உள்ளது.

தத்துவஞானக் கோட்பாடுகளின் மூலம் பல்வேறு வர்க்கங்களும் சமூகக் குழுக்களும் சமுதாயத்தில் தமது அந்தஸ்தையும், சுற்றியுள்ள யதார்த்தத்திற்கும் அதனுள்ளேயான நிகழ்வுப் போக்குகளுக்கும் அவற்றின் அணுகுமுறையையும் தத்துவ ரீதியான வழியில் உறுதிப்படுத்த முயல்கின்றன. இந்த அல்லது அந்த வர்க்கத்தினது உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படையான தத்துவஞானம் அந்த வர்க்கத்தின் மனோபாவம், நடத்தை மற்றும் இலட்சியங்களை வகுத்தளிக்கிறது.

எப்பொழுதுமே பொருள்முதல்வாதம் முற்போக்கு வர்க்கங்களின், கருத்துமுதல்வாதம் பிற்போக்கு வர்க்கங்களின் உலகக் கண்ணோட்டமாக இருந்து வருகின்றன. சமுதாயத்தில் முற்போக்கு மற்றும் பிற்போக்கு வர்க்கங்கள், சக்திகள் ஆகியவற்றிற்கிடையேயான போராட்டம்

எப்பொழுதுமே தத்துவஞானத்தில் பொருள்முதல்வாதம் மற்றும் கருத்துமுதல்வாதம், இயக்கவியல் மற்றும் இயக்க மறுப்பியல் ஆகியவற்றுக்கு இடையில் போராட்டத்தின் மூலம் பிரதிபலிக்கப்பட்டு வருகிறது. கடந்த காலத்தைப் போலவே இப்பொழுதும் பொருள்முதல்வாதமும் கருத்து முதல்வாதமும் தத்துவஞானத்தில் இரண்டு ஆதாரமான, எதிரெதிரான கட்சிகளாக இருக்கின்றன. ''இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தத்துவஞானம் இருந்ததைப் போலவே அண்மைக் காலத் தத்துவஞானம் சார்புநிலையானதாக இருக்கிறது'' என்று லெனின் எழுதினார்.*

இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தின் மூலவர்கள் தத்துவஞானத்தில் சார்புநிலைக் கோட்பாட்டை நியாயப்படுத்தியது இன்றைய விஞ்ஞானச் சிந்தனையின் தலைசிறந்த சாதனைகளில் ஒன்றாகும். ஏனென்றால் அந்தக் கோட்பாடுதான் சமூக வாழ்க்கையில் பல்வேறு தத்துவஞானக் கொள்கைகளின் இடத்தையும் வரலாற்றுப் பாத்திரத்தையும் தீர்மானிப்பதைச் சாத்தியமாக்கியிருக்கிறது; கருத்துமுதல்வாதத்தின் பலவீனத்தையும் பிற்போக்குச் சாரத்தையும் அம்பலப்படுத்தி வரலாற்று ரீதியாக அழிந்து வருகின்ற வர்க்கங்கள் மற்றும் சமூக சக்திகளின் தேவைகளையும் நலன்களையுமே கருத்துமுதல்வாதம் தாங்கிப் பிடிக்கிறது என்ற உண்மையையும் வெளிப்படுத்துகிறது.

இன்றைய பூர்ஷ்வா தத்துவஞானம் அதன் சார்புநிலை இயல்பை மறுக்கிறது. மார்க்சிய-லெனினியத்தை மறுப்பதற்காக அது ''சார்புநிலையற்றது'', ''எந்த வர்க்கத்தையும் சாராதது'', ''சித்தாந்தச் சார்பற்றது'' என்ற ஆய்வுரையை முன்வைக்கிறது. சார்புநிலைக்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 14, p. 358.

கோட்பாடு விஞ்ஞான ரீதியான நேர்மைக்கு விரோத மானது என்று அதன் பிரதிநிதிகள் வாதிடுகிறார்கள்.

முதலாளித்துவ சமுதாயத்திலிருக்கும் சார்புநிலை யற்ற அணுகுமுறை என்ற கருத்து பொய்யானது, போலித் தனமானது, பூர்ஷ்வா சார்புநிலையை மூடிமறைப்பதற் காக ஏற்பட்டது என்பதை லெனின் ஆணித்தரமாக எடுத்துக் காட்டினார். இந்தத் திரை மறைவில் பூர்ஷ்வா சித்தாந்தம் மக்களிடையே பரப்பப்படுகிறது, இதன் நோக்கம் மக்களை ஏமாற்றுவது, சுரண்டலையும் ஒடுக்கு முறையையும் வலுப்படுத்தி நிலைநிறுத்துவதே.

ஏகாதிபத்தியம், காலனி ஆதிக்கம் மற்றும் இன வெறிக்குத் தொண்டாற்றும் பூர்ஷ்வா சித்தாந்திகள் அவர்களது தத்துவஞானக் கருதுகோள்களின் சார்புநிலை இயல்பை மூடிமறைக்கக் கடமைப்பட்டுள்ளனர். அவர் களது சார்புநிலைக்கு உண்மையை மறைக்கும் அவசியம் நேரிடுகிறது. முதலாளித்துவம், நவீன காலனி ஆதிக்கம் ஆகியவற்றைப் பாதுகாக்க விரும்பிய சுரண்டும் வர்க்கங் களின் நலன்களைப் பிரதிபலிக்கின்ற பூர்ஷ்வா சார்பு நிலை விஞ்ஞான நேர்மையை நிராகரிக்கிறது. பூர்ஷ்வா சார்புநிலை, உலகத்தையும் சமூக வளர்ச்சியையும் சுரண் டல் கூட்டத்தினருக்கு ஒத்த வகையில் முன்வைப்பதை நோக்கி விஞ்ஞான ஆராய்ச்சிகளைப் பயன்படுத்துகிறது. எனவே தான் பூர்ஷ்வா சித்தாந்திகள், சார்புநிலைக் கோட் பாடு அல்லது விஞ்ஞான நேர்மை என்ற இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும்.

ஆனால் ஒரு புறம், சுரண்டுகிற, ஒடுக்குமுறைகளைமேற் கொள்கிற ஒரு அமைப்போடு தங்களுக்குரிய பிணைப்பை அவர்களால் பகிரங்கமாக ஒத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் இது அனைத்து உழைக்கும் மக்கள், நாட்டு விடுதலைக்கும் சமூக விடுதலைக்கும் போராடுகின்ற மக்

களினங்களிடமிருந்து இவர்களைத் தனித்தொதுக்கி விடும். மறுபுறம், தங்களது தத்துவங்கள் எல்லாம் விஞ்ஞான ரீதியாக இல்லாதவை என்றும் அவர்களால் கூற முடியாது. ஏனென்றால் இத்தகைய அணுகுமுறையின் மூலம் அவர்கள் தங்கள் பக்கத்திற்கு யாரையும் வென்றெடுக்க முடியாது.

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தில் சார்புநிலைக் கோட்பாடு முற்றிலும் மாறுபட்ட முறையில் பார்க்கப்படுகிறது. தொழிலாளி வர்க்கம் தனது நிலைகளை மூடிமறைக்க வேண்டிய அவசியத்தில் இல்லை. அனைத்துவகைச் சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் அகற்றி சோஷலிசத்தைக் கட்டுவதே அதன் இலட்சியம். இந்த இலட்சியம் மனிதகுலத்தின் சமூக வளர்ச்சிப் போக்கை ஒத்ததாகும். தொழிலாளி வர்க்கம், உழைக்கும் விவசாயிகள், புரட்சிகர அறிவுஜீவிகள் ஆகியோர் முன்பாக உள்ள பிரச்சினைகளுக்கான தீர்வு, யதார்த்தத்தைப் பற்றிய அவர்களது விஞ்ஞான அறிவின் ஆழம், யதார்த்தத்தின் விதிகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு அவற்றைப் பயன்படுத்தும் திறமை ஆகியவற்றைச் சார்ந்தே இருக்கிறது. எனவேதான் தொழிலாளி வர்க்க சித்தாந்தத்தின் தத்துவார்த்த அடிப்படையான மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தில் சார்புநிலைக் கோட்பாடும் விஞ்ஞான நேர்மையும் ஒத்துப்போகின்றன, ஒன்றையொன்று தகவமைத்துக் கொள்கின்றன.

முதலாளித்துவத்தை மாற்றி சோஷலிச சமுதாயத்தை அமைப்பதின் அவசியத்தை மார்க்சிய-லெனினியம் விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தியிருப்பது சுரண்டும் வர்க்கங்களுக்கிடையே பீதியையும் வெறுப்பையும் தோற்றுவித்துள்ளது. மாறாக, தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், புரட்சிகர அறிவுஜீவிகள், இதர உழைக்கும் மக்களுக்

குமோ எனில் இந்த அவசியம் அவர்களிடையே எதிர் காலம் பற்றிய ஒரு நம்பிக்கையையும் உலகத்தைப் புரட்சிகரமான முறையில் மாற்றுவதற்குப் பாடுபடுவதற்கான ஒரு உத்வேகத்தையும் ஏற்படுத்துகிறது. எனவேதான் மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் ஆழ்ந்த விஞ்ஞான ரீதியிலானதாயுள்ளது, பகிரங்கமாகவே சார்புநிலையைக் கொண்டுள்ளது, பூர்ஷ்வா சித்தாந்தம் மற்றும் மதவழி, கருத்துமுதல்வாத உலகக் கண்ணோட்டம், பழமையின் எச்சங்கள் போன்றவற்றோடு ஒத்துப் போக முடியாததாயுள்ளது.

அத்தியாயம் இரண்டு

பொருள்முதல்வாதத்திற்கும் கருத்துமுதல்வாதத்திற்கும் இடையிலான போராட்ட வரலாறு என்ற முறையில் தத்துவஞானத்தின் வரலாறு

பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதத்தின் தோற்றுவாய், அவற்றின் தொடர்ச்சியான போராட்டம்

உலகக் கண்ணோட்டம் என்ற முறையில் தத்துவஞானம் அடிமைச் சமுதாயத்தில் உருப்பெற்றது. பூர்விக கூட்டு வாழ்க்கைச் சமுதாய அமைப்பில் தத்துவஞான சிந்தனை கருப் பொருளாகவே இருந்தது. இவ்வாறாக, அந்தச் சமுதாய அமைப்பில் மக்கள், மனித உடலின் அமைப்பு, மரணத்தின் காரணங்கள், கனவுகள், இன்ன பிறவற்றைப் பற்றி விஞ்ஞான ரீதியான கருத்தைக் கொண்டிருக்கவில்லை. சிந்திப்பதும் உணர்வு கொள்வதும் ஆன்மாவிலிருந்து உற்பத்தியாகின்றவை; மனித உடம்பை இயக்கும் விசேஷ உறுப்புத்தான் ஆன்மா; மனிதன் சாகும் போது ஆன்மா அவனை விட்டுப் போய்விடுகிறது என்று மக்கள் நம்பத் தொடங்கினார்கள். எங்கெல்ஸ் எழுதியதாவது: ‘‘சிந்தனைக்கும் வாழ்நிலைக்கும், ஆன்மாவுக்கும் இயற்கைக்கும் இடையேயான உறவு என்ற பிரச்சினை—தத்துவ ஞானம் முழுவதற்குமான தலையாய பிரச்சினை—அனைத்து மதங்களைப் போலவே காட்டுமிராண்டித்தனத்

தின் குறுகிய மனோபாவம், அறியாமையின் பால் பட்ட நம்பிக்கைகளிலிருந்து வேரூன்றியவை.''*

எனவே கருத்துமுதல்வாதக் கண்ணோட்டங்களும் மத நம்பிக்கைகளைப் போன்றே, எண்ணங்களும் கருத்துக்களும் பருப்பொருளிலிருந்து தனித்துச் சுயேச்சையாக வாழ்கின்றன என்ற பார்வையை அடிப்படையாகக் கொண்டவையே. உலகத்தைப் பற்றிய பொதுவான கருத்தின் ஆரம்ப வடிவம் மதவழி உலகக் கண்ணோட்டமாக இருந்தது. ஆரம்ப கால மனிதனால் இயற்கையை எதிர்த்துப் போரிட இயலாமை, கண்ணுக்குப் புலப்படாத மாயச் சக்திகளைக் கண்டு பயம் ஆகியவற்றினால் இந்தக் கண்ணோட்டம் ஏற்பட்டது. ஆரம்ப கால மனிதன் இயற்கையைச் சார்ந்து வாழ்வது பற்றி குழப்பமான, உருச்சிதைவான கருத்தைக் கொண்டிருந்தான். இயற்கையின் எதிரே பயங்கரமான கற்பனைகளோடு தனது பலவீனத்தை வெளிப்படுத்தினான்.

அடிமைகள், அடிமைகளின் சொந்தக்காரர்கள் என்று சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிந்ததும் இயற்கைச் சக்திகளைப் போன்றே அளப்பரிய முறையில் இருந்த, ஆளுமை கொள்ள முடியாத சமூகச் சக்திகளை மனிதன் சார்ந்து நின்றதின் காரணமாக மதவழி, கருத்துமுதல்வாதக் கண்ணோட்டங்களும் வளரத் தொடங்கின.

ஆனால் பூர்விக கூட்டு வாழ்க்கைச் சமுதாயத்திலும் கூட மனிதன் உலகத்தைப் பற்றி அப்பாவித்தனமான ஒரு யதார்த்தக் கண்ணோட்டத்தைக் கொள்ளத் தொடங்கினான். அன்றாட அனுபவங்கள், நடைமுறைப் பணிகள்,

---

* K. Marx and F. Engels, *Selected Works*, in three volumes, Moscow, Progress Publishers, Vol. 3, 1976, p. 346.

தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் ஆகியவை தவிர்க்க முடியாதபடி அப்பாவித்தனமான முறையில் வெளிப்பட்டாலும் கூட மக்களிடையே உலகத்தின் புற நிலையான யதார்த்தத்தைப் பற்றி முற்றிலும் இயல்பான தொரு கருத்து ஏற்பட்டது. இதர ஜீவராசிகள், தாவரங் கள், மிருகங்கள் போன்றவை புறநிலையான யதார்த் தம், மனிதனைச் சார்ந்திராமல் தனித்து உயிர் வாழ்பவை என்பதை அன்றாடம் அவன் பார்ப்பவை மனிதனுக்கு எடுத்துக்காட்டின. இப்படித்தான் முதன் முதலான அப் பாவித்தனமான பொருள்முதல்வாதப் பார்வைகள் தோன் றின, தானாகக் கிளம்பிய பொருள்முதல்வாத உலகக் கண்ணோட்டம் முகிழ்த்தது.

ஆரம்ப கால மனிதனின் உணர்வில் உழைப்பு மற்றும் நடைமுறையோடு பின்னிப் பிணைக்கப்பட்டிருந்த தானாக முகிழ்த்த பொருள்முதல்வாதப் போக்குகளுக்கும், இயற் கையை எதிர்த்து மனிதனால் போரிட இயலாத தன் மையைப் பிரதிபலித்த மதவழிக் கருத்துமுதல்வாதப் போக்குகளுக்கும் இடையே ஒரு போராட்டம் நிகழ்ந்தது.

அடிமைகளைக் கொண்டிருக்கும் சமுதாயத்தில் பொருள் முதல்வாதமும் கருத்துமுதல்வாதமும் குறைந்தோ கூடுதலாகவோ ஒருங்கிணைந்த உலகக் கண்ணோட்டங் களாகத் தோன்றி உருப்பெற்றன. அடிமை முறையின் வளர்ச்சியோடு மூளை உழைப்பு உடல் உழைப்பிலிருந்து பிரிக்கப்பட்டது, அரசு தோன்றியது. அவற்றிற்கேற்ப மானுடத்தின் பார்வைகளும் மாறுபட்டன. இயற்கைச் சக்திகளை உருவகப்படுத்திக் காட்டுவதற்காகப் பெருமள வுக்குப் பயன்படுத்தப்பட்ட தெய்வங்கள் சமூகப் பழக் கங்களைக் கொள்ளத்தலைப்பட்டு, இயற்கையின் தன் னிச்சையான சக்திகளைப் போன்றே ஆபத்து நிறைந்த வையாகவும் புரிந்து கொள்ள முடியாதவையாகவும்

விளங்கிய சமூகச் சக்திகளையும் உருவகப்படுத்திக் காட்ட லாயின. புதிய இறையியல் தத்துவங்கள் முடிமன்னர்களின் அதிகாரங்களையும் அடிமைச் சொந்தக்காரர்களான மேற்குடியினரையும் போற்றிப் புகழ்ந்து, அடிமை முறைக்கு ஆலவட்டம் வீசத் தொடங்கின. இதர தத்துவங் கள் ''தெய்விக சித்தத்தின்'' ஒரு உருவமே உலகம் என்று விளக்கமளித்தன. தெய்வங்கள்தான் உலகத்தை உண் டாக்கின; உலகத்திலிருப்பவை அனைத்தும் தற்காலிக மானவை, ''ஆன்மா'' மட்டும் நிரந்தரமானது, அழிவற்றது என்று பிரசாரம் செய்தன. அதே சமயத்தில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி—தொன்மையான கீழ்த்திசை நாடுகளின் விவசாய, நீர்ப்பாசனங்களின் முன்னேற்றம், கட்டிடங்கள் கட்டும் நடவடிக்கைகள், உற்பத்தியில் இதர பிரிவுகளின் தோற்றம் போன்றவை முறையான கணித வியல், வானவியல் அறிவாற்றலையும் இயந்திரவியல், இரசாயனம், பல தொழில்நுட்பங்களிலான சாதனைகளை யும் காண்பதற்கு உதவி செய்தன. ஆரம்ப நிலை விஞ்ஞான அறிவாற்றலோடு பொருள்முதல்வாத உலகக் கண்ணோட் டம் உருவெடுக்கத் தொடங்கியது. அடிமை உடைமை சமுதாயத்தில் கைவினைத் தொழில், வியாபாரம், விஞ்ஞானம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகவும், சமுதாயத் தேக்கத்திற்கு ஒரு ஊன்றுகோலாக விளங்கிய, பழமை வாத, குல அமைப்பைச் சேர்ந்த அடிமைச் சொந்தக்கார மேற்குடியினர்களின் அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கத்தை எதிர்த்தும் முற்போக்குச் சக்திகள் நடத்திய போராட்டத்தில் இது நிலைபெற்றது.

பொருள்முதல்வாதத்தை எதிர்த்த அவர்களது போராட்டத்தில் பிற்போக்கு அடிமைச் சொந்தக்காரமேற் குடியினரின் பிரதிநிதிகள், உலகத்தில் ஏற்படும் நிகழ்வுப் போக்குகளின் தெளிவைப் புலப்படுத்தும் பொருள்

முதல்வாதத்திற்கு மாறாக மதத்தை நியாயப்படுத்தும் கருத்துமுதல்வாதக் கருதுகோள்களை விரிவுபடுத்த ஆரம்பித்தனர். இவ்வாறாக அவற்றின் தோற்றுவாய்க் காலத்திலேயே பொருள்முதல்வாதத்துக்கும் கருத்துமுதல்வாதத்திற்கும் இடையே முடிவில்லாத போராட்டம் ஆரம்பமாகிவிட்டது.

அடிமை உடைமை சமுதாயத்தில் பொருள்முதல்வாதத்துக்கும் கருத்துமுதல்வாதத்துக்கும் இடையிலான போராட்டம்

உலகத்தைப் பற்றிய பொருள்முதல்வாதக் கண்ணோட்டம் புராதன காலத்திலேயே தோன்றி வேரூன்றி விட்டதாகும். அது எகிப்து நாட்டிலும் பாபிலோனியாவிலும் கி. மு. மூவாயிரம் ஆண்டின் முடிவிலும் இரண்டாயிரம் ஆண்டின் துவக்கத்திலும் உருப்பெற்றது.

சாவுக்குப் பின்னரும் வாழ்க்கை என்ற மதவழியிலான வறட்டுச் சூத்திரம், அன்று நிலவிய அநீதியான சமுதாய அமைப்பு ஆகியவற்றை எதிர்த்து அடிமை சொந்தக்காரர்களின் உலகக் கண்ணோட்டத்திற்கு முற்போக்குச் சிந்தனை முதல் தாக்குதல்களைத் தொடுத்தது. முன்னரே சில சிந்தனையாளர்கள் இயற்கையின் நிகழ்வுகளது பொருளாயத தோற்றுவாய்களை அனுமானிக்கத் துவங்கிவிட்டனர் என்பதை தொன்மையான எகிப்தியக் கலாசாரத்தின் நினைவுச் சின்னங்கள் காட்டுகின்றன. இவ்வாறாக, சிலர் ஜீவராசிகள் மற்றும் இதர பொருட்களின் மூலம் குளிர்ந்த நீர்தான் என்றனர். மற்றவர்கள் விசும்பும் அனைத்துப் பொருட்களும் காற்றால் நிரப்பப்பட்டவை என்றனர்.

ஏற்கெனவே எகிப்திலும் பாபிலோனியாவிலும் ஆரம்ப காலத்தில் தானாகவே தோன்றிய பொருள்முதல்வாத,

நாத்திகக் கருத்துக்கள், உருப்பெற்று ஆதிக்கம் செலுத்திய மதவழிக் கருத்துமுதல்வாதக் கண்ணோட்டங்களால் நசுக்கப்பட்டன என்றபோதிலும் புராதன உலகத்தில் விஞ்ஞான வளர்ச்சியிலும் பொருள்முதல்வாதச் சிந்தனை ஓட்டத்திலும் அவை பெற்ற பயனுள்ள செல்வாக்கு மிக முக்கியமானது என்பதில் சந்தேகம் கிடையாது.

புராதன இந்தியாவிலும் சீன நாட்டிலும் தத்துவ ஞானத்தில் நிலவிய பொருள்முதல்வாத, கருத்துமுதல் வாதப் போக்குகள் மேலும் ஒருங்கிணைந்த வடிவத்தைப் பெற்றன.

புராதன இந்தியாவில் சுமார் கி.மு. ஆயிரமாவது ஆண்டின் மத்தியில் தத்துவஞானம் தோன்றியது. வேதங்களிலும் உபநிடதங்களிலும் பிரதிபலிக்கப்பட்ட மதவழி, மாயாவாதக் கருத்துக்கள் ஆதிக்கம் செலுத்திய காலத்திலேயே தத்துவஞான உணர்வின் முதல் கூறுகள் முகிழத் தொடங்கின. ஆரம்ப காலப் பொருள்முதல் வாத, கருத்துமுதல்வாதப் போதனைகள் உருப்பெறத் துவங்கின.

இந்தியாவின் மிகப் புராதனமான பொருள்முதல் வாதத் தத்துவஞானப் போக்கு லோகாயதம் (அல்லது சார்வாகர்களின் சிந்தனை மரபு) ஆகும். இதன் ஸ்தாபகர் பிருகஸ்பதி. உலகம் பொருளாயதத் தன்மையைக் கொண்டுள்ளது, நெருப்பு, நீர், காற்று, பூமி ஆகிய நான்கு முக்கிய பொருளாயதக் கூறுகளைக் கொண்டது என்று சார்வாகர்கள் நம்பினார்கள். மனிதன் உள்ளிட்ட அனைத்து ஜீவராசிகளும் இந்த நான்கு கூறுகளையும் கொண்டவைதான் என்றும் அவற்றின் மரணத்திற்குப் பின் உயிர் உறுப்புக்கள் இந்தக் கூறுகளாக மீண்டும் சிதைகின்றன என்றும் அவர்கள் நம்பினார்கள். கடவுள் மற்றும் ஆன்மாவைப் பற்றிய மத நம்பிக்கை, மரணத்திற்குப்

பின் மற்றோர் உலகம் உண்டு போன்ற கூற்றுக்களை சார்வாகர்கள் விமர்சித்தனர். உடம்பு செத்துப் போன தும் உணர்வும் மறைந்து விடுகிறது என்பதை நிரூபிக்க அவர்கள் முயன்றனர். எனவேதான் அவர்கள் மறுபிறவிக் கோட்பாட்டையும் நிராகரித்தனர்.

சார்வாகர்களது பொருள்முதல்வாதம் அவர்களது நாத்திகவாதத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந் தது. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை அவர்கள் மறுத்தனர். பொருளாயத உலகம் தெய்விக சக்தி யிலிருந்து சுதந்திரமாக இயங்குகிறது, உள்ளார்ந்த மூலத் தொடர்புகளுக்கு ஏற்ப வளர்ச்சியடைகிறது என்று நம்பினார்கள். இம்மைக்கு அப்பால் சொர்க்கத்தையும் நரகத்தையும் கொண்ட ஒரு மறுமை உள்ளது என்பதை அவர்கள் மறுத்தனர்; சொர்க்கம் இன்ப மயமானது, நரகம் துன்பதுயரம்தான் என்பது அவர்களின் கூற்று. அவர்களது அறநெறிக் கோட்பாட்டில் சார்வாகர்கள், துன்பதுயரங்களை முழுமையாக அகற்ற முடியாது, மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை முடிந்த அளவு அதி கரித்துத் துன்பதுயரங்களை அதிகபட்சமாகக் குறைத்து விடலாம் எனக் கருதினர். எனினும் அவர்களது அறநெறிக் கோட்பாடு புலனின்ப மகிழ்ச்சியைத் தேடுவதைத் தூண்ட வில்லை; அனைவருக்கும் இன்பம் நிறைந்த வாழ்க்கையே விவேகமானதென்று வலியுறுத்தியது.

புராதன இந்தியாவில் பொருள்முதல்வாத மனோபா வங்கள் வேறு பலவகையான சிந்தனை மரபுகளிலும் போக்குகளிலும் ஓரளவுக்குக் காணப்பட்டன. இவ்வாறாக, கி.மு. 600வது ஆண்டு வாக்கில் கபிலரால் தோற்றுவிக்கப் பட்ட சாங்கியத் தத்துவஞானக் கோட்பாடு உலகத்தைப் பொருளாயதத் தோற்றுவாயைக் கொண்டு விளக்க மளித்தது. அதன் பிரதிநிதிகள் உலகத்தை ஒரு பருப்

பொருளாக, ஒரு ஆதாரப் பொருளிலிருந்து (பிராகிருதி) படிப்படியாக வளர்ச்சி பெற்றதாகக் கருதினார்கள். இயக்கம், விசும்பு, காலம் ஆகியவை பருப்பொருளின் கூறுகள், பருப்பொருளிலிருந்து பிரிக்கப்பட முடியாதவை என்ற பிரேரணையை சாங்கியச் சிந்தனை மரபு மொழிந்தது. இது புராதன இந்தியத் தத்துவஞானத்தின் ஒரு மூலச் சிறப்புள்ள சாதனையாகும். எனினும் நமது சகாப்தத்தின் துவக்கத்தில், கருத்துமுதல்வாதத்தை எதிர்த்த போராட்டத்தில் அந்தச் சிந்தனை மரபு ஒடுங்கிவிட்டது. இவ்வாறாக சமரச வழியில், பருப்பொருளிலிருந்து வேறுபட்டு ஆன்மாக்கள் தனித்தியங்குவதை (புருஷ) அது ஒப்புக்கொண்டது.

புராதன இந்தியத் தத்துவஞானத்தின் வளர்ச்சிப் போக்கில், நெருப்பு, காற்று, நீர், பூமி ஆகிய கூறுகளின் கலவைதான் பருப்பொருள் என்ற துவக்க கால கருத்துக்களுக்குப் பதிலாக உலகம் ஒரு அணுத்திரள் கட்டமைப்பைக் கொண்டது என்ற இன்னும் வளர்ச்சி பெற்ற பொருள்முதல்வாதக் கண்ணோட்டங்கள் ஏற்பட்டன.

நீர், காற்று, நெருப்பு, பூமி ஆகியவற்றின் குணாம்ச ரீதியில் மாறுபட்ட அணுக்களைக் கொண்டிருக்கின்ற ஈதர், விசும்பு, காலம் ஆகியவற்றால் ஆனது உலகம் என்ற கருத்துக்களை நியாயம் மற்றும் வைசேஷிகம் ஆகிய தத்துவஞானச் சிந்தனை மரபுகள் வளர்த்துச் சென்றன. அணு நிரந்தரமானது, உற்பத்தி செய்யவும் அழியவும் முடியாதது; ஆனால் அணுக்களால் உருவாகின்ற பொருட்கள் மாற்றப்படக் கூடியவை, நிரந்தரமில்லாதவை, அழியக் கூடியவை என்று அவை கூறின.

வைதீக சமய மற்றும் கருத்துமுதல்வாதச் சிந்தனை மரபுகளில் கூட (மீமாம்சை, ஜைன மதம், பௌத்த மதம் இன்ன பிற) பொருள்முதல்வாதக் கருத்துக்கள் வலுவான

செல்வாக்கைப் பெற்றிருந்தன. இவ்வாறாக வேதத்தின் பாற்பட்ட சடங்குகள், மதவழித் திருவிழாக்கள், ஆன்மாவின் அழியாமை போன்றவற்றைத் தாங்கிப் பிடித்த மீமாம்சை கருத்துமுதல்வாத மதவழிச் சிந்தனை மரபு உலகத்தின் யதார்த்தத்தை, உலகம் இயங்க ஒரு படைப்பவனைத் தேவையாகக் கொண்டிருக்கவில்லை என்பதை, கருமத்தின் தன்னாட்சிச் சட்டங்களின் ஆளுமைக்குட்பட்ட அணுக்களைக் கொண்டு உலகம் எப்பொழுதுமே இருந்து வருகிறது என்பதை அங்கீகரித்தது.

இந்தியாவில் அடிமை உடைமை சமுதாய அமைப்பின் வீழ்ச்சியும் மாயாவாதக் கருத்துமுதல்வாதத்தின் தீவிர வடிவங்களின் விஸ்தரிப்பும் இணைந்து நடைபெற்றன.

இந்தியாவைப் போன்றே பண்டைக் காலச் சீனாவிலும் அடிமை உடைமை சமுதாய அமைப்பின் எழுச்சியும் வளர்ச்சியும் பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதம் என்ற இரண்டு உலகக் கண்ணோட்டங்களின் தோற்றத்தைக் கண்டன.

கன்பூசியஸ் (கி. மு. 551—479) சீனக் கலாசாரத்தின் வளர்ச்சிக்குக் குறிப்பிடத் தக்க பங்களிப்பை வழங்கினார். அறநெறி அரசியல் ஸ்தாபகர் என அவர் புகழ் பெற்றவர். அவரது சித்தாந்தம் ''ஜென்'' (மனிதநேயம்) என்ற அறநெறிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. இக்கோட்பாடு சமுதாயத்திலும் குடும்பத்திலும் மக்களுக்குமிடையே உள்ள உறவுகளைத் தீர்மானித்தது, வயதிலும் சமூக அந்தஸ்திலும் மூத்தவர்களிடம் அன்பும் மரியாதையும் செலுத்த வேண்டுமெனக் கூறியது. ஒவ்வொரு மனிதனும் அவனது அந்தஸ்துக்கேற்ற முறையில் செயல்பட வேண்டுமென்று கன்பூசியஸ் கூறினார். ஒவ்வொரு மனிதனும் பரஸ்பரம் பெருந்தன்மையுடனும் கல்வியின் மூலமும் கற்றறிதலின் மூலமும்

சுய பரிபூரணத்துடனும் நடந்து கொள்ள வேண்டுமென்று அறைகூவினார்.

ஒழுக்கம் பற்றிய கல்வி, துண்டு துக்காணியாகச் சிதறிக் கிடந்த சீனத்தை ஒன்றுபடுத்துதல், அறிவாற்றலைப் பயன்படுத்துவது போன்றவை பற்றிய அவரது விவேகமுள்ள கருத்துக்கள் ஆக்க பூர்வமான பாத்திரத்தை வகித்தன. ஆனால் முற்போக்கான கருத்துக்களுடனேயே அவர் அளவிற்கு மிஞ்சிய மூதாதையர்களின் வழிபாட்டைப் போதித்தார், பாரம்பரிய மதச் சடங்குகளுக்கு வக்காலத்து வாங்கினார், மனிதனின் எதிர்காலம் முன்னதாகவே தீர்மானிக்கப்பட்டுவிட்டது (விதி) என்பதை நம்பினார்.

மோ ட்ஸே (கி. மு. 479—381) புராதனச் சீனத்தின் மற்றுமொரு மகத்தான சிந்தனையாளர். கன்பூசியசைப் பின்பற்றுகிறவர்களின் கூற்றுக்கு மாறாக அவர் விதி என்று எதுவும் கிடையாது எனக் கூறினார். நாடுபிடிப்பதற்காக நடத்தப்படும் போர்களை மறுத்த அவர் அரசுகளுக்கிடையே சமாதானம் நிலவ வேண்டுமென்று போதித்தார்.

மோ ட்ஸேயின் அறிவுத் தத்துவம் ஏற்கெனவே பொருள்முதல்வாதக் கூறுகளைக் கொண்டிருந்தது. அவரது சீடர்கள் அவற்றை வளர்த்துச் சென்றனர்.

தொடர்ந்து லாவோ ட்ஸே (கி.மு. 6—5ம் நூற்றாண்டுகள்) ஸ்தாபித்த டாவோயிசத் தத்துவஞானம் பொருள்முதல்வாத உலகக் கண்ணோட்டத்தை வளர்த்தது. லாவோ ட்ஸேயும் அவரது சீடர்களும் உலகத்தை நிரந்தரமானது எனப் பார்த்தார்கள். அது தொடர்ச்சியான இயக்கம் உடையது, மாறும் தன்மை கொண்டது என்றும், இந்த இயக்கம் ''டாவோ'' என்னும் இயற்கை விதியினால் வழிநடத்தப்படுகிறது என்றும் அவர்கள் நம்பினார்கள்.

வெகுளித்தனமான பொருள்முதல்வாதக் கருத்துக்கள் கன்பூசியசைப் பின்பற்றியவர்களில் சிறந்தவரான ஸுன் ட்ஸேயின் (கி.மு. 298—238) போதனையில் விரிவாக்கம் பெற்றன. இதர கன்பூசியவாதிகளுக்கு மாறாக அவர், விண்ணுலகத்திற்கு உணர்வு ஏதும் கிடையாது, இது இயற்கையின் ஒரு பகுதிதான் என்று நம்பினார். இதைத் தவிர சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பருவங்கள், வெளிச்சம், இருட்டு, காற்று, மழை ஆகிய அனைத்தும் இயற்கையின் பகுதிதான் என்றும் கூறினார். விண்ணுலக நிகழ்வுகள் திட்டவட்டமான இயற்கை விதிகளுக்கு ஏற்ப நடைபெறுகின்றன, மனிதர்களின் விதிகளைத் தீர்மானிப்பதில் விண்ணுலகத்திற்கு எந்த விதமான ''அதிகாரமும்'' கிடையாது என்று அவர் நம்பினார். மிருகங்களைப் போல் அல்லாமல் மனிதர்கள் தங்கள் முயற்சிகளை ஒன்று சேர்த்து சமுதாய வாழ்க்கையை நடத்த முடியும் என்று கூறினார். மக்கள் எல்லோரும் தன்னகங்காரம் கொண்டவர்களாகவே பிறந்தனர். எனவே கன்பூசியசின் அறநெறிப் பாதையில் ஒவ்வொரு மனிதனையும் பயிற்றுவிப்பது ஞானிகளின் கடமை என்றார். மனிதன் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி அறிய முடியும், தனது சொந்த நலன்களுக்காக அறிவாற்றலைப் பயன்படுத்த முடியும் என்பது மற்றொரு முக்கிய கருத்தாகும். புலன் உணர்ச்சிகளிலிருந்துதான் அறிதல் தோன்றுகிறது, ஆனால் இயற்கை விதிகளுக்கு ஏற்ப செயல்படுகின்ற சிந்தனையின் மூலம் அது கட்டுப்படுத்தப்படுகிறது.

நமது சகாப்தத்தின் துவக்கத்தில் புராதன சீன சமுதாயம் ஒரு ஆழமான நெருக்கடிக்கு உட்பட்டது. அந்த நெருக்கடி மதம், மாயாவாதம், மந்திரதந்திரம், ஆரூடம் கூறுதல் ஆகியவற்றின் நிலைகளை வலுப்படுத்தியது. மதத்தையும் மாயையையும் எதிர்த்த போராட்டத்தில்

பொருள்முதல்வாதமும் வளர்ச்சி அடைந்தது. உலகம் நிரந்தரமாக இயங்கிக் கொண்டிருக்கும் பொருளாயத சாரமான ''ட்ச்சி'' என்பதைக் கொண்டிருக்கிறது, ''டாவோ'' என்பது இயற்கை நெறி என்று அக்காலத்தின் தலைசிறந்த பொருள்முதல்வாதியான வாங் சுங் (கி.பி. 27—97) கூறினார். எல்லாப் பொருட்களும் விண்ணுலகத்தில் அடர்த்தியற்ற, பூமியில் பல்வேறு பொருட்களின் வடிவங்களில் கெட்டிப்படுத்தப்பட்ட இரண்டு ட்ச்சிக்களின் இடைச் செயல்களின் விளைவுகளாகவே தோன்றி வளர்ச்சியடைந்தன. பொருளாயதப் பொருளினால் உருவாக்கப்பட்ட இயற்கையான உயிர்தான் மனிதன் என்று அவர் கருதினார். உடலில் ரத்த ஓட்டத்தின் ஒரு ஜீவ சக்தி அல்லது ஆன்மா உருவாக்கப்படுகிறது, மனிதன் இறந்ததும் இது அழிந்து விடுகிறது. வாங் சுங்கின் பொருள்முதல்வாதம் வெகுளித்தனமானது, இயக்க மறுப்பியல் தன்மையுடையது.

ஆக எகிப்து, பாபிலோனியா, இந்தியா, சீனா ஆகிய புராதனக் கீழை நாடுகளில் மானுட வரலாற்றில் முதன் முதலாகத் தத்துவஞானம் பிறந்தது. துவக்க காலத்திலிருந்தே இது பொருள்முதல்வாத, கருத்துமுதல்வாதப் போக்குகளினால் பிரிக்கப்பட்டு இருந்தது. புராதன தத்துவஞானிகளின் தன்னிச்சையாகவே வளர்ந்த பொருள்முதல்வாதக் கண்ணோட்டங்கள் ஆரம்ப கால மனிதனின் ''வெகுளித்தனமான யதார்த்தவாதத்திலிருந்து'' பிறந்தவையாகும். புராதனக் கீழை நாடுகளின் கருத்துமுதல்வாதச் சித்தாந்தங்கள் உள் முரண்பாடுகளைக் கொண்டிருந்தன, தன்னிச்சையாக எழுந்த இயக்கவியல் சிந்தனையின் கூறுகளை அநேகமாகக் கொண்டிருந்தன.

புராதன கிரேக்க நாட்டில் கி.மு. 6ஆம் நூற்றாண்டிலிருந்து தத்துவஞானம் வெகு வேகமாக வளரத் தொடங்

கியது. அங்கும் மதத்தை எதிர்த்த ஒரு போராட்டத்தில் பொருள்முதல்வாதக் கண்ணோட்டம் முகிழ்த்து அடிமை உடைமை சமுதாயத்தின் முற்போக்குப் பிரிவினரது நலன் களைப் பிரதிபலித்தது. புராதன கிரேக்கப் பொருள்முதல் வாதத் தத்துவஞானம் மிலேஷியன் சிந்தனை மரபின் பிரதிநிதிகளால் தோற்றுவிக்கப்பட்டது: ஃபாலெஸ் மிலேடஸ் (கி. மு. சுமார் 624—547), அனாக்சிமான்டர் (கி. மு. சுமார் 610—546), அனாக்சிமெனஸ் (கி. மு. சுமார் 585—525).

முழுமையான பிரபஞ்சத்தின் அடித்தளத்தில் நீர் ஒரு தனிப் பொருளாக இருக்கிறது என்பது ஃபாலெசின் கூற்று. எல்லாப் பொருட்களுக்கும் நீரே தோற்றுவாய், அனைத்துப் பொருட்களும் இறுதியில் நீராக மாறுகின்றன.

உலகம் ''அபெய்ரோன்''இலிருந்து தோன்றியதென்று அனாக்சிமான்டர் கூறினார். அது திட்டவட்டமில்லாத பொருள். இயக்கத்தினாலும் ஈரம், ஈரமின்மை, சூடு, குளிர்ச்சி போன்ற மாறுபட்ட குணாம்சங்களைச் சுரத்த லின் மூலமும் அது பொருட்களையும் நிகழ்வுகளையும் ஏற் படுத்தியது. பொருட்கள் தோன்றி சிறிது காலம் இருந்த பிறகு அதே காரணத்திற்காகப் பிரிந்து மறைகின்றன; மீண்டும் அபெய்ரோனாக மாறுகின்றன. அனாக்சிமான் டரின் கருத்துப்படி உலகத்தில் ஒரு நிரந்தரமான சுழற்சி இருந்தது, அதன் ஓட்டத்தில் சில பொருட்கள் அபெய் ரோனிலிருந்து தோன்றின, மற்றும் சில சிதைவுற்று மீண் டும் அதே பொருளாகவே ஆயின. அனாக்சிமான்டர் பொருள்முதல்வாத வழியைப் பின்பற்றி இந்த உலகத்தை இயக்கவியல் ஒளியில், இயக்கத்தில் முன்வைக்க முயன் றார்.

புலனுணர்ச்சி உறுப்புக்களால் அறியப்பட்ட பொருட் களின் இயல்பைப் பற்றி அனாக்சிமெனஸ் இதே போன்ற

கருத்தையே கொண்டிருந்தார். உலகத்திலுள்ள எல்லாவற்றின் அடிப்படை காற்றே; காற்றின் வேகத்திலிருந்து தான் தனித்தனியான பொருட்களின் தோற்றமும் மறைவும் ஏற்படுகின்றன என்று அவர் நம்பினார்.

மற்றொரு புராதன கிரேக்க தத்துவஞானியான எபீஸ சின் ஹெராக்லிடஸ் (கி.மு. சுமார் 530—470) உலகத்தைப் பற்றிய பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தின் வளர்ச்சிக்குக் கணிசமானதொருபங்களிப்பை வழங்கினார். அவர் நெருப்பிலிருந்து உலகம் வந்தது என்று கூறினார். பொருட்களின் தோற்றத்திற்கும் மறைவிற்கும் நெருப்பே காரணம் என்றார். உலகம் எந்த ஒருவராலும் நிர்மாணிக்கப்பட்டதல்ல; அது இயற்கைக்கு அப்பாற்பட்ட மேலான எந்த சக்தியையும் சார்ந்திராமல் சுயேச்சையாக இயங்குகிறது என்று அவர் கூறினார். உலகம் எந்தக் கடவுளாலும் அல்லது எந்த மனிதனாலும் உருவாக்கப்படவில்லை; அது முன்னதாகவே இருந்து வந்தது, ''என்றைக்கும் அழியாத நெருப்பாக, முறையாக எரியும், அணையும், எரியும்'' நெருப்பாக இனியும் இருக்கும் என்றார்.

உலகம் தொடர்ச்சியான இயக்கத்தையும் மாற்றத்தையும் கொண்டிருக்கிறது, ''மோதல்'' என்பது இயக்கத்தின் தோற்றுவாய், எதிர்நிலைகள் ஒன்றுக்கொன்றாக மாற முடியும் என்ற கருத்தை ஹெராக்லிடஸ் இடைவிடாமல் வலியுறுத்தினார். இயக்கவியல் கோட்பாடுகளைப் போன்றவற்றை அவர் வகுத்தளித்தார். அவை விஞ்ஞான அறிவை அடிப்படையாகக் கொண்டிருக்காவிட்டாலும் ஓரளவுக்கு யதார்த்தத்தைப் பிரதிபலித்தன.

பின்னர் பொருள்முதல்வாதத் தத்துவஞானம் டெமாக்ரிடஸ் (கி.மு. 460—370) என்பவரால் மிகவும் ஆழமான முறையில் வளர்த்துச் செல்லப்பட்டது. அவர் பருப்பொருளின் கட்டமைப்பைப் பற்றிய அணுத் தத்துவத்தை வகுத்

தளித்தார். உலகம் அணுக்களையும் சூனியத்தையும் (அதன் வழியேதான் அணுக்கள் நகர்கின்றன) கொண்டது என்று அவர் கூறினார். சூனியத்தில் நகரும் பொழுது அணுக்கள் சந்தித்து ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு பல்வேறு பொருட்களாக வடிவமெடுக்கின்றன. அனைத்துப் பொருட்களும் அணுக்களினால் ஆனவையே. மனித ஆன்மா அணுத் துகள்களின் ஒரு கூட்டு அமைப்புத்தான். உடம்பு மரணத்தைத் தழுவும் போது ஆன்மாவும் மறைந்து விடுகிறது. உடம்பும் ஆன்மாவும் மரிக்கும் போது ஒரே அமைப்பாக இருந்த அணுக்கள் பிரிந்துவிடுகின்றன.

டெமாக்ரிடஸ், இதர தத்துவஞானிகளது பொருள் முதல்வாதக் கருத்துக்களைப் புராதன கிரேக்க கருத்து முதல்வாதத் தத்துவஞானியான பிளேட்டோ (கி.மு. 427—347) எதிர்த்துப் பேசினார்.

அவரது தத்துவம் இருத்தலை, தனிமுதலான கருத்துக் களைக் கொண்ட ஒரு மெய்யான உலகம் என்றும் தனித் தனியான புலன் உணர்ச்சிப் பொருட்களை உள்ளடக் கிய பொய்மையான உலகம் (இது கருத்துக்களின் மெய் யான உலகத்தின் நிழல் மட்டுமே) என்றும் பிரித்துக் காட்டியது.

கருத்துக்களின் உலகம் ''தலையாய நன்மை'' என்ற முழுமையான கருத்தாக ஒருங்கிணைக்கப்படுகிறது, அது நிரந்தரமானது; தனித்தனிப் பொருட்களும் நிகழ்வுகளும் மாறக் கூடியவை, தற்காலிகமானவை என அவர் நம் பினார். உருவமற்ற, குறிப்பிட முடியாத பருப்பொருளி லிருந்து அவை தோன்றுகின்றன. இது கருத்துக்களுடனான கலவையினால் ஏற்படும் விளைவேயாகும். அந்தக் கருத் துக்கள் தாம் அமைத்துக் கொண்ட பொருட்களிலிருந்து விலகிய மறு கணமே அவையும் மறைந்து விடுகின்றன. மெய்யான பொருட்களும் நிகழ்வுகளும் கருத்துக்களினால்

உருவாக்கப்பட்டவை, கருத்துக்களின் மூல முதலாக இருப்பது கடவுள் என்பது பிளேட்டோவின் கருத்து, அவருடைய தத்துவஞானத்திற்கும் மதத்திற்கும் இடையேயுள்ள உறவு, அதன் கருத்துமுதல்வாதத் தன்மை தெட்டத் தெளிவானவை.

அரிஸ்டாட்டிலின் (கி.மு. 384—322) படைப்புக்களில் புராதன கிரேக்கத் தத்துவஞானம் அதன் சிகரத்தை எட்டியது. தனக்கு முந்திய சிந்தனையாளர்கள் அனைவரும் படைத்தளித்த அனைத்தையும் அவர் தொகுத்து வளர்த்தார். அவரது படைப்புக்கள் இயற்கை, சமுதாயம், அறிதல் போன்ற யதார்த்தத்தின் அனைத்து அம்சங்களையும் கொண்டிருந்தன.

ஒரு பொருளாயத வஸ்துவின் அடித்தளத்திலிருந்து தான் அனைத்துப் பொருட்களும் எழுகின்றன; அது உருவமற்றது, துல்லியம் இல்லாதது, இருத்தலின் உருவரையைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று அரிஸ்டாட்டில் நம்பினார். பருப்பொருள் ஏதாவதொரு வடிவத்தோடு இணைந்து குறிப்பிட்ட வரையறை அடையும் பொழுது தான் அந்த உருவரை ஒரு பிண்டமான புலன் உணர்ச்சிப் பொருளாக மாறுகிறது.

இக்கருத்தோட்டம் சாராம்சத்தில் பொருள்முதல் வாதமே; ஆனால் இதில் முக்கியமான குறைகள் இருக்கின்றன. அரிஸ்டாட்டில் பொருளாயத வஸ்துவை அதன் வடிவத்தினால் வெளியிலிருந்து செலுத்தப்படுகின்ற இயக்கத்திலிருந்து பிரித்து விட்டார். பருப்பொருள் திட்டவட்டமில்லாத நிலையிலிருந்து திட்டவட்டமான நிலைக்கு மாறுவதும் பிறகு ஒரு நிலையிலிருந்து மற்றொன்றாக மாறுவதும் இயக்கத்தின் முதல் காரணமான கடவுளினால் ஏற்படுகின்றன என்றார். இவை அனைத்தும் அரிஸ்டாட்டிலின் ஆய்வு முரணானது என்பதையும் அதில் இயக்க

வியல் மற்றும் பொருள்முதல்வாதக் கூறுகளுடன் இயக்க மறுப்பியல் மற்றும் கருத்துமுதல்வாதக் கூறுகளும் இருக்கின்றன என்பதையும் எடுத்துக்காட்டுகின்றன.

அரிஸ்டாட்டிலின் மரணத்திற்குப் பிறகு புராதன கிரேக்கத் தத்துவஞானத்தில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது. அடிமை உடைமை சமுதாயத்தில் ஏற்பட்ட ஒரு பொது வான நெருக்கடி இதற்குக் காரணமாகும். பொருள்முதல் வாதக் கருத்தோட்டம், கருத்துமுதல்வாதம் மற்றும் மாயாவாதத்துக்கு வழி விடும் போக்கு தோன்றியது.

மத்தியகாலத் தத்துவஞானத்தில் பொருள்முதல்வாதத்துக்கும் கருத்துமுதல்வாதத்துக்கும் இடையிலான போராட்டம்

மத்தியகாலத்தில் மதம் கொடி கட்டிக் கோலோச்சியது. சமுதாயத்தின் ஆன்மீக வாழ்க்கையின் ஒவ்வொரு துறை யிலும் தனது முத்திரையைப் பதித்தது. அந்தக் கால கட்டத்தில் தத்துவஞானம் சீரழிந்து இறையியலின் கைப் பொம்மையாக மாறியது. மதகுருமார்களின் வறட்டுக் கோட்பாடுகளை நியாயப்படுத்தி மெய்ப்பிப்பதற்கும் அவற்றின் மெய்மையையும் அழிக்க முடியாத தன்மை யையும் நிரூபிப்பதற்கும்தான் தத்துவஞானம் என்றாகி விட்டது. எனவேதான் தவிர்க்க முடியாதபடி அனைத்துத் தத்துவஞானப் பிரச்சினைகளும் ஒரு மதச் சாயம் பூசப்பட்டுக் காட்சியளித்தன.

பொதுவான கருத்துக்களுக்கும் புலன் உணர்வு உலகின் தனியான பொருட்களுக்கும் இடையே ஒரு உறவுப் பொருத்தத்தை ஏற்படுத்துவதில் மத்தியகாலத் தத்து வஞானிகள் குறிப்பிடத் தக்கக் கவனம் செலுத்தினார்கள். அந்தக் காலகட்டத்தில் தத்துவஞானத்தின் அடிப்படைக்

கேள்விக்கான விடை காணும் முயற்சிகளும் பொருள்முதல் வாதத்துக்கும் கருத்துமுதல்வாதத்துக்கும் இடையிலான போராட்டமும், பொதுவானவற்றுக்கும் தனியானவற்றுக் கும் இடையே, பொதுவான கருத்துக்களுக்கும் தனியான பொருட்களுக்கும் இடையே உள்ள உறவுகளைப் பற்றிய பிரச்சினையுடன் பிணைந்திருந்தன.

பொதுவானவை, தனியான பொருட்களிலிருந்து சுதந் திரமாகவும் இவற்றிற்கு முன்னாலும் இருந்தன, இவை கடவுளோடு சம்பந்தப்பட்டிருந்தன என்று கருத்துமுதல் வாதிகள் கூறினார்கள். பல்வேறு தனியான பொருட் களைப் பொறுத்த மட்டில் இவையனைத்தும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவையே. இந்தக் கருத்துநிலையை ஆதரிப்பவர்கள் யதார்த்தவாதிகள் என்று அழைக்கப் பட்டனர். ஏனென்றால் அவர்கள் பொதுவான கருத்தமைவு கள் உள்ளபடியே நின்று நிலவுவதாகக் கருதியதுடன் அதை மெய்ப்பிக்கவும் முயன்றனர்.

பொதுவானவை ஒரு யதார்த்தம் என இருக்க முடி யாது, அதற்கும் மேலாக தனியானவற்றுக்கு முன்னதாக இருந்திருக்க முடியாது என்று பொருள்முதல்வாதிகள் பிரகடனம் செய்தனர். உள்ளபடியே, தனியான பொருட் கள் மட்டுமே இருந்தன; பொதுவானவை பெயரளவில் இருந்ததைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது, அவை எதையும் பிரதிபலிக்கவில்லை, எனவே அவை யதார்த்தத் தில் இருக்கவில்லை. இந்தக் கருத்துநிலையை ஆதரித்த வர்கள் நாமினலிஸ்டுகள் என்று அழைக்கப்பட்டனர். ஏனென்றால் அவர்கள் பொதுவானவற்றின் உண்மையான இருப்பை மறுத்தனர், அது வெறும் பெயர்தானே ஒழிய வேறு ஒன்றும் இல்லை என்று பிரகடனம் செய்தனர்.

சில பதின்மூன்றாம் நூற்றாண்டு மதவழித் தத்துவ ஞானிகள் நாமினலிஸ்டுகளுக்கும் யதார்த்தவாதிகளுக்

கும் இடையில் ஒரு பாலம் அமைக்க முயன்றனர். இவ்வாறாக, மத்தியகாலத்தின் முன்னணிப் பண்டிதர்களில் ஒருவரான தாமஸ் அக்வினாஸ் (1225—1274), அனைத்துமாக இருத்தல்—உள்ளபடியே ஆன, நேரிடக் கூடியதான இரண்டும் — வெவ்வேறான, தனியான பொருட்களின் இருத்தலாகத்தான் இருக்க முடியும் என்று அவரது சித்தாந்தத்தில் வலியுறுத்தினார். இதை அவர் ''சாரப் பொருள்'' என்று அழைத்தார். அவரது போதனைப்படி வடிவத்திலிருந்து சுயேச்சையான பருப்பொருள் இருக்க முடியாது. ஆனால் வடிவம் பருப்பொருளிலிருந்து தன்னிச்சையாக இருக்கிறது. இயற்கையான உலகின் சடப்பொருட்களில் வடிவமும் பருப்பொருளும் ஒன்றிணைந்தவையே. எல்லாவற்றுக்கும் மேலான வடிவமான கடவுளிடமிருந்து எந்தப் பருப்பொருளும் சுயேச்சையாக இருக்க முடியாது.

கடவுள் இருக்கிறார் என்பதை ''புலப்படுத்திக் காட்டுவதற்காக'' தாமஸ் அக்வினாஸ் கடவுள் என்ற கருத்தமைவிலிருந்து துவங்கவில்லை, ஆனால் -வ்வொரு நிகழ்வும் ஒரு காரணத்தைக் கொண்டுள்ளது என்பதிலிருந்துதான் ஆரம்பித்தார். காரண காரியங்கள் என்ற ஏணியில் நாம் ஏற ஆரம்பித்தால் அனைத்து யதார்த்தமான புலப்பாடுகளுக்கும் நிகழ்வுகளுக்கும் முழுமுதல் காரணமான கடவுளின் அவசியத்தைப் புரிந்து கொள்ளும் நிலைமைக்கு நாம் வருவோம் என்று அவர் வலியுறுத்தினார்.

தாமஸ் அக்வினாசின் கூற்றுப்படி பகுத்தறிவு புலன் உணர்வுகளோடு தொடர்பு கொண்டது, ஆகவே வெறும் சடப்பொருளான உலகத்தை மட்டும் அறிந்து கொள்ளும் சாத்தியம் கிடைக்கிறது. சடப்பொருள் அல்லாத உலகம் மனித அறிவினால் தெரிந்து கொள்ள முடியாதது. பொருட்களின் சத்தும் சாரமும் மனிதன் புரிந்து கொள்

வதற்கு அப்பாற்பட்டவை. சிந்தனைக்கும் யதார்த்தத்திற்கும் இடையே பொருத்தமான தொடர்பு இருக்க முடியாது. பொதுவானவை என்பது நமது மனத்தின் ஒரு உற்பத்தியே. ஆனால் அது நமது மனத்திற்கு வெளியே இருக்கும் யதார்த்தத்தோடு தொடர்பு கொண்டது. ஆகவே பொதுவானவை தன்னிச்சையாகவே இருக்கின்றன என்று அவர் முடிக்கிறார்.

தாமஸ் அக்வினாஸ் மத போதனையைப் பொறுத்த மட்டில் தத்துவஞானத்தின் கீழ் நிலையான பாத்திரத்தைத் தத்துவ ரீதியாக மெய்ப்பிக்க முயன்றார். இறைமை வாதம் செய்கின்ற அதே கடமைகளைத்தான் தத்துவ ஞானமும் நிறைவேற்றுகிறது, அதாவது இறைமை வாதத்தைப் போலவே மதக் கோட்பாடுகளை நிறுவுகிறது, ஆனால் அதை வேறு வழியில் செய்கிறது என்று அவர் கருதினார். இறைமைவாதம் இக்கோட்பாடுகளை நேரடியாகக் கடவுளிடமிருந்து பெற்றது; தத்துவஞானம் இவற்றைக் கடவுளின் படைப்பிலிருந்து, பொருளாயத வஸ்துக்களிலிருந்து பெற்றது.

புதிய சகாப்தத்தின் ஆரம்பத்தில் பல கிழக்கு நாடுகளில் தோன்றிய ஆழமான நெருக்கடி கிழக்கு நாடுகளின் தத்துவஞான சிந்தனையின் வளர்ச்சியில் தன் முத்திரையைப் பதித்துச் சென்றது.

3, 4ஆம் நூற்றாண்டுகளில் சீனாவில் கன்பூசியஸ் தத்துவஞானத்தின் பாத்திரம் குறிப்பிடத் தக்க அளவுக்குக் குறைந்து, நாடு முழுவதும் டாவோயிசம் பரவியது. மேலும் இந்தியாவிலிருந்து பௌத்த மதம் அந்நாட்டுக்குள் அதிகமாக ஊடுருவியது. வாழ்வே மாயம், வாழ்நிலை இன்மை உண்மை என்று பௌத்தர்கள் போதித்தனர். ஆன்மா நிரந்தரமானது, கூடு விட்டுக் கூடு பாயக் கூடியது. ஒருவரது சொந்த உள்ளுணர்வை விருத்தி செய்து

கொள்வதன் மூலமே நிரந்தர ஆன்மீக அமைதியைப் பெற முடியும் என்று அவர்கள் நம்பினார்கள். அன்றைய முற்போக்குச் சிந்தனையாளர்கள் மாயை, கருத்துமுதல் வாதம் ஆகியவற்றை எதிர்த்துக் குரல் கொடுத்தனர். இவ்வாறாக ஃபான் சென் (5, 6ஆம் நூற்றாண்டுகள்), மறு உலகம் என ஒன்று கிடையாது; உயிர் வாழும் உடம்பின் ஒரு வடிவம்தான் மனித ஆன்மா; மனிதனின் மரணத்தோடு ஆன்மாவும் அழிந்து விடுகிறது என்று கூறினார்.

பௌத்தர்களை எதிர்த்த போராட்டத்தில் 7—9ஆம் நூற்றாண்டுகளின் கன்பூசியவாதிகள் சில பொருள்முதல் வாதக் கருதுகோள்களை முன்வைத்தனர். எனினும் பின்னர் அவர்கள் இந்தப் பொருள்முதல்வாதக் கூறுகளை நிராகரித்துவிட்டு கருத்துமுதல்வாதத்தை ஆதரித்தார்கள். சூ ஸீயின் (1130—1200) புதிய கன்பூசியஸ் கருத்து முதல்வாதத் தத்துவம் மக்கள் தங்கள் துன்பதுயரங்களை எந்தவித முணுமுணுப்புமின்றித் தாங்கிக் கொள்ளுமாறு கூறியது. ஆளும் வர்க்கத்திற்கு மக்கள் அடிபணிந்து நடக்க வேண்டும் எனப் போதனை செய்தது. அது ஒரு அதிகார பூர்வமான சித்தாந்தமாகி மத்தியகாலத்தில் சீனாவில் மட்டுமல்லாது கொரியா மற்றும் கிழக்காசியாவில் இதர நாடுகளிலும் பரவியது.

புதிய கன்பூசியஸ் தத்துவஞானிகளில் பொருள்முதல் வாதச் சிந்தனையுடன் கூடிய முக்கியமானவராகத் திகழ்ந்தவர் சாங் ட்ஸாய் (1020—1077). விண்ணுலகமும் பூமியும் அகநிலையான உணர்வுகளின் மொத்தமே என்ற கருத்துமுதல்வாத எண்ணத்தை அவர் நிராகரித்தார். யதார்த்தமான பிரபஞ்சம் வேறுபட்ட வடிவங்களை எடுத்துக் கொள்ளும் ஒரு திண்ணிய பருப்பொருளை அடிப்படையாகக் கொண்டது என்று அவரது தத்துவம் கூறியது. அதன் ஆரம்ப நிலையில் அந்தத் திண்ணிய பருப்பொருள்

கண்ணால் காண முடியாத துகள்களாகப் பிரிந்து எல்லையற்ற சூனியத்தில் நிலவியது. இந்தத் துகள்கள் இறுகும் பொழுது அவை ஒரு தெளிவற்ற திரளாக மாறுகின்றன. இது செயலற்ற மற்றும் சுறுசுறுப்பான துகள்களைக் கொண்ட ''மகத்தான சீரிசைவு'' என அழைக்கப்படுகிறது. இந்தத் துகள்களின் உட்செயல்பாடுகள்தான் அனைத்துப் பொருட்களையும் தோற்றுவிக்கின்றன. மாற்றம் மற்றும் வளர்ச்சியைப் பற்றிப் பேசும் பொழுது சாங் ட்ஸாய் இரண்டு வகையான விதிகளை விவரிக்கிறார்: அனைத்துப் பொருட்களையும் ஆளுமை கொள்ளும் பொதுவான விதிகள் மற்றும் தனியான பொருட்களுக்கு மட்டுமே விசேஷமாகவுள்ள குறிப்பான விதிகள். அனைத்துப் பொருட்களும் பரஸ்பரம் தகவமைக்கப்பட்டவை, உட்தொடர்பு கொண்டவை; அனைத்து நிகழ்வுகளின் வளர்ச்சியின் போக்குகளும் இரண்டு வடிவங்களைக் கொண்டவை—படிப்படியான வளர்ச்சி, திடீர் வளர்ச்சி; அனைத்து வளர்ச்சி நிகழ்வுப் போக்குகளும் சுறுசுறுப்பான மற்றும் செயலற்ற எதிர்ச் சக்திகளின் போராட்டத்தில் வெளிப்பாடு பெறுகின்றன என்று அவர் சுட்டிக் காட்டினார். எனினும் இந்த முக்கியமான இயக்கவியல் முன்மொழிவுகளிலிருந்து அவர் இயக்க மறுப்பியல் முடிவுகளுக்குத்தான் வருகிறார். எதிர்ச் சக்திகளின் போராட்டம் இறுதியில் ஒன்றோடொன்று சமரசத்தில் முடிகிறது, இதுவே அனைத்து இயக்கத்துக்கும் அடிப்படை என்று அவர் கூறுகிறார்.

17, 18ஆம் நூற்றாண்டுகளில் பொருள்முதல்வாதக் கருத்துக்களும் கருதுகோள்களும் மேலும் வளர்ச்சி பெற்றன, ஆழமான முறையில் மெய்ப்பிக்கப்பட்டன. இவ்வாறாக, இயற்கை தொடர்ச்சியான இயக்கத்தைக் கொண்டிருக்கிறது, இந்த இயக்கம் புதிய பொருட்களையும்

நிகழ்வுகளையும் படைக்கிறது என்று வாங் சுவாங் ஷா (1619—1692) கூறினார். அறிவாற்றல் கூறு என்பது முழுக்க முழுக்க மனிதனின் திறமையைப் பொறுத்தது; புலன் உணர்வு உறுப்புக்கள் வெளி உலகப் பொருட்களோடு தொடர்பு கொள்ளும் பொழுது மட்டுமே புலனறிவு நிகழ்கிறது என்று அவர் வலியுறுத்தினார். புலனுணர்வுகள் அறிதலின் தொடக்க நிலையும் அடிப்படையுமாகும்; அதன் சத்தும் சாரமும் சிந்தனையினால் புரிந்து கொள்ளப்படுகிறது என்று அவரது தத்துவம் கூறுகிறது.

இயற்கையின் பொருளாயதத் தன்மை மற்றும் வளர்ச்சி விதிகள் பற்றிய கருத்துக்களை வைதீகமான தத்துவஞானி டாய் சென் (1723—1777) விரிவுபடுத்தி மெய்ப்பித்தார். ஆனால் சமுதாய விஷயங்களில் மாபெரும் மேதையான இத்தத்துவஞானி 17ஆம் நூற்றாண்டின் தனது பொருள் முதல்வாத முன்னோடிகளைப் போலவே கருத்துமுதல் வாதச் சிந்தனைகளுக்கு அப்பால் போகவில்லை. மக்களின் சுயமான கல்விப் பயிற்சியின் வளர்ச்சியே சமுதாயக் கொடுமைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழி என்று அவர் கருதினார்.

இதர நாடுகளைப் போலவே இந்தியாவிலும் நிலப் பிரபுத்துவத்தை நோக்கிய மாற்றத்தின் போது மதம் பலமாகி கருத்துமுதல்வாதம் பரவியது.

ஆரம்ப மத்தியகாலத்தில் (9—11ஆம் நூற்றாண்டு) வைதீக அமைப்புக்களில் மிக அதிக செல்வாக்குடன் விளங்கியவை நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், மீமாம்சை, வேதாந்தம் ஆகியவையாகும். வைதீகம் அல்லாதவற்றில் சார்வாகம் (லோகாயதம்), ஜைன மதம், பௌத்த மதம் (இதில் வைபாஷிகம், சௌத்ராந்திகம், மத்யாஹிகம், யோகாசாரம் எனும் நான்கு சிந்தனை மரபுகள் இருந்தன) ஆகியவை செல்வாக்குப் பெற்று

விளங்கின. யோகமும் வேதாந்தமும் மத்யாஹிகம், யோகாசாரம் ஆகிய பௌத்த மதச் சிந்தனை மரபுகளும் முரணில்லாத கருத்துமுதல்வாதத்தைக் கொண்டிருந்தன. சார்வாகர்கள் மட்டுமே உறுதியான பொருள்முதல்வாத நிலையை எடுத்தனர். இதர அமைப்புக்கள் பொருள் முதல்வாதம், கருத்துமுதல்வாதம் ஆகிய இரண்டினது கூறுகளையும் கொண்டிருந்தன.

அந்தக் காலகட்டத்தில் அராபிய தத்துவஞானம் புராதன கிரேக்க மற்றும் கீழ்த்திசை நாடுகளின் தத்துவ ஞானங்களைக் கிரகித்து உருப்பெற்று உயர்ந்த அளவிலான வளர்ச்சியைப் பெற்றது. 10—13ஆம் நூற்றாண்டுகளில் இந்தத் தத்துவஞானம் கீழ்க்கண்ட போக்குகளினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது: 1) கிழக்கத்திய பெரிபடேடிக் வாதம் (அரிஸ்டாட்டில் வாதம்); 2) ''பரிசுத்த சகோதரர்கள்'' என்னும் சங்கம்; 3) சூபிசம்; 4) இஸ்லாமிய வைதீகத் தத்துவஞானம்.

10ஆம் நூற்றாண்டின் மத்தியில் தோன்றிய ஒரு ரகசிய மதவழித் தத்துவஞானச் சங்கத்தின் உறுப்பினர்களான ''பரிசுத்த சகோதரர்கள்'' தங்கள் தத்துவத்தில் தர்க்கவியல், பௌதிகம் ஆகியவற்றை அரிஸ்டாட்டிலிடமிருந்தும், மருத்துவம், உளவியல் ஆகியவற்றை கலேனிடமிருந்தும் வரித்துக் கொண்டனர். பொதுவான தத்துவ ஞானப் பிரச்சினைகளில் அவர்கள் புதிய பிளேட்டோ வாதிகளாகவும் புதிய பிதகோரியன்வாதிகளாகவும் விளங்கினர். மதத்தைத் தவறான கருத்தமைவுகளிலிருந்து களையும் விஞ்ஞானம் மற்றும் தத்துவஞானம் என்ற அடிப்படையில் அனைத்து மதங்களையும் தத்துவஞானப் போக்குகளையும் ஒன்றுபடுத்த ''பரிசுத்த சகோதரர்கள்'' விரும்பினர். பூர்ணத்துவ நிலையை அடைய கிரேக்கத் தத்துவஞானத்தையும் இஸ்லாமிய ஷாரியத்தையும்

(குரானை அடிப்படையாகக் கொண்ட மத, அன்றாட வாழ்க்கை மற்றும் சிவில் விதிகள்) ஒன்றுபடுத்த வேண்டியது அவசியம் என அவர்கள் விரும்பினர்.

கிழக்கத்திய பெரிபடேடிக் வாதம் (9—11ஆம் நூற்றாண்டுகள்) தத்துவஞான வாழ்க்கையில் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகித்தது. அரிஸ்டாட்டில்வாதத்துக்கு வழி வகுத்த முதலாவது அராபிய தத்துவஞானி அல்-கிண்டி (800—879) என்பார். தனது படைப்புக்களில் அவர் இயற்கை மற்றும் சமுதாய நிகழ்வுகளின் காரணகாரியங்கள், அவற்றின் முறையான இயல்பு தொடர்பான பிரச்சினைகளை விரிவுபடுத்தினார். அனைத்து நிகழ்வுகளுக்கும் ''வெகு தொலைவான காரணமாகத்தான்'' கடவுள் இருக்கிறார் என்று மட்டுமே அவர் அங்கீகரித்தார். ''உலகத்தின் உடல் அமைப்பு'' ஒரு எல்லைக்குட்பட்டது, கடவுளால் உருவாக்கப்பட்டது என்று வலியுறுத்திய அல்-கிண்டி அதைத் தர்க்கவியல் ரீதியாக நிரூபிக்க முயன்றார். ஆனால் அவர் குரான் பற்றியும் மற்றும் சில சமயக் கோட்பாடுகள் பற்றியும் நம்பிக்கை இல்லாதிருந்தார். அவர் அறிவை மூன்று கட்டங்களாகப் பிரித்தது குறிப்பிடத் தக்க முக்கியத்துவம் பெற்றதாக இருந்தது. அறிவாற்றலின் முதல் கட்டம் (தர்க்கவியல், கணிதவியல்) இரண்டாவது கட்டத்துக்கு (இயற்கை விஞ்ஞானங்கள்), பின்னர் மூன்றாவது கட்டத்துக்கு (இயக்க மறுப்பியல் பிரச்சினைகள்) இட்டுச் செல்கிறது.

சூபிசம் மற்றும் வைதீக மத மாயைத் தத்துவஞானம் ஆகியவை அந்தக் காலகட்டத்தில் பொருள்முதல்வாதம் மற்றும் பகுத்தறிவுவாதத்திற்கு எதிரான ஒரு செயல் வினையாகும். சூபிசம் என்பது புதிய பிளேட்டோவாதத்திற்கு நெருங்கிய ஒரு போதனையாகும். சூபிஸ்டுகள் புலன் உணர்ச்சி மற்றும் பகுத்தறிவு ஆற்றல் ஆகிய

வற்றின் உண்மைகளை மறுத்தனர். உலக மக்கள் கடும் நோன்பையும் துறவு நிலையையும் மேற்கொள்ள வேண்டு மெனப் போதித்தனர். மனித ஆன்மா கடவுளோடு சங்க மிக்கும் போது ஏற்படுகின்ற தெய்வீக ஜோதியின் விளை வுதான் உண்மையான மெய்யறிவு என்று அவர்கள் நம் பினார்கள். சூபிச மதப் போர்வையின் கீழ் கீழை நாட்டுச் சிந்தனையாளர்கள் அடிக்கடி மனிதத்துவ அல்லது மத எதிர்ப்புக் கருத்துக்களையும் கூட வெளிப்படுத்தினர்.

13ஆம் நூற்றாண்டில் அங்கீகரிக்கப்பட்ட இஸ்லாமிய வைதீகத் தத்துவஞானம் அல்-அஷாரியின் அமைப்பாகும். அவர் சமய வறட்டுக் கோட்பாடுகளைப் பகுத்தறிவு வாதங்களோடு ஒட்ட முயன்றார். பொருளாயத உலகம் ஒரு சூனியத்தினால் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்படும் சின்னஞ்சிறு அணுக்களைக் கொண்டது என அல்-அஷாரி கூறினார். விசும்பு, காலம், இயக்கம் ஆகியவையும் கூட ஒரு அணுக் கட்டுமானத்தைக் கொண்டவை. காலம் தனித் தனியான நொடிகளைக் கொண்டது, அவற்றிற்கு ஒன்றோ டொன்று தொடர்பேதும் கிடையாது: வரக்கூடிய ஒவ் வொரு நொடியும் முந்தியனவற்றால் கட்டுப்படுத்தப் படுவதில்லை. உலகத்தில் இருக்கின்ற அனைத்திற்கும் நிகழ்கின்ற அனைத்திற்கும் கடவுள் மட்டுமே காரணம் என்று அவர் நம்பினார். அல்-அஷாரியும் அவரது சீடர் களும் உலகம், அதன் நியதிகள் அழிவில்லாதவை என் பதை மறுத்தனர். கடவுளின் சித்தம் உலகத்தைப் படைத்ததுடன் இன்னும் வழி நடத்தக் கூடிய சக்தியாகத் திகழ்கிறது என்று அவர்கள் வலியுறுத்தினார்கள். பொருட்களுக்கு நிரந்தரமான குணாம்சங்கள் கிடை யாது, அவை அனைத்துமே கடவுளால் புதிதாக உருவாக்கப்பட்டவை.

11ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் பெரிபடேடிக்

வாதம் அல்-கசாலியால் (1059—1111) விமர்சிக்கப்பட்டது. உலகமும் அதன் சீரான தன்மைகளும் நிரந்தரமானவை என்ற கோட்பாட்டை அவர் நிராகரித்தார். உலகத்தைக் கடவுள் எப்பொருளும் இல்லாமல் படைத்தார்; நிகழ்ச்சிகளின் போக்குகளை தெய்விக சக்தி தொடர்ச்சியாகக் கட்டுப்படுத்துகிறது என அல்-கசாலி கருதினார். இயற்கையில் உள்ள காரணகாரியங்களை அவர் மறுத்தார்; காரணகாரியத் தொடர்பு எனக் கருதப்படுபவை குறிப்பிட்ட காலப் பகுதியில் வழக்கமாகத் தொடர்கின்ற நிகழ்ச்சியே என்று அவர் பிரகடனம் செய்தார்.

பெரிபடேடிக் வாதம் கீழ்க்கண்டவர்களால் மேலும் வளர்க்கப்பட்டது: இப்ன்-பஜ்ஜா (11ஆம் நூற்றாண்டின் இறுதி—1138), இப்ன்-டுபெயில் (சுமார் 1110—1185), இப்ன்-ருஷ்ட் (1126—1198).

இப்ன்-ருஷ்ட் அரிஸ்டாட்டிலின் கருத்துக்களை முழுமையாக மறு பரிசீலனை செய்தார். பொருளாயத உலகம் காலத்தில் நிரந்தரமானது, ஆனால் விசும்பில் ஒரு வரையறைக்குட்பட்டது. உலகம் ''எப்பொருளும் இல்லாமல்'' கடவுளால் படைக்கப்பட்டது என்ற மதவழித் தத்துவத்தை அவர் நிராகரித்தார். கடவுள் யதார்த்தத்தின் நிரந்தரத் தோற்றுவாய் என்றும் வாழ்நிலையின் ஒரே அடிப்படையான பருப்பொருள் செயல்படும் திறனின் நிரந்தரத் தோற்றுவாய் என்பதும் அவரது கோட்பாடாகும். பருப்பொருளும் வடிவமும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு இருக்கவில்லை. பருப்பொருள் இயக்கத்தின் நிரந்தரத் தோற்றுவாய் என்று அவர் கூறினார். இயக்கம் நிரந்தரமானது, தொடர்ச்சியானது, ஏனென்றால் ஒவ்வொரு புதிய இயக்கமும் இதற்கு முந்திய ஒன்றினால் ஈர்க்கப்படுகிறது. எனவே அவரது தத்துவஞானத்தில் பொருள் முதல்வாதக் கூறுகள் கருத்துமுதல்வாதத்துடன் கலந்

திருந்தன. இருக்கின்ற அனைத்தும் கடவுளை உச்சியில் கொண்டுள்ள படிநிலை அமைப்பே; அனைத்துக்கும் முழு முதல் காரணம் கடவுளே என்று அவர் வலியுறுத்தினார்.

''உண்மையின் இரட்டை இயல்பு'' பற்றிய இப்ன்-ருஷ்ட்டின் கோட்பாடு தத்துவஞானத்தின் மேற்கொண்ட வளர்ச்சியில் செல்வாக்குப் பெற்றிருந்தது. தத்துவஞான உண்மைகள் மதவழி உண்மைகளை மறுக்கவில்லை என்று அது கூறியது: மதம் மனிதனுக்குரிய செயல்களை விதிக்கிறது, தனிமுதலான உண்மையை அறிதலை நோக்கி தத்துவஞானம் அவனை வழி நடத்திச் செல்கிறது.

நிரந்தர உண்மைகள் அல்லது இன வழிக் கருதுகோள்கள் பற்றிய இப்ன்-ருஷ்ட்டின் கருத்துக்கள் தலையாய முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இந்த விஷயத்தில் அவரது கருத்துக்கள் பொருள்முதல்வாதத் தன்மை கொண்டவை. ஸ்தூலமான பொருட்கள் மட்டுமே உண்மையானவை, நிரந்தர உண்மைகள் எல்லாம் யதார்த்த அடிப்படையைக் கொண்ட பொருட்களின் பெயர்களே என்று அவர் கருதினார். நிரந்தர உண்மைகளைப் புரிந்து கொள்வதே அறிதலின் நோக்கம் என்று அவர் கூறினார். அறிதல் தர்க்கவியலின் உதவியோடு புலன் உணர்வு காட்டுவதிலிருந்து உண்மையை மனோரீதியாகப் புரிந்து கொள்வதற்கு இட்டுச் செல்கிறது. தனிமுதலான உண்மை அறியக் கூடியதே, ஆனால் அது படிப்படியாகத்தான் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

வட மேற்கு ஆசியா, மத்திய கிழக்கின் முற்போக்குச் சிந்தனையாளர்கள் மத்தியகாலத் தத்துவஞானத்தின் வளர்ச்சியில் முக்கியமான பங்கை வகித்தனர்: அல்-பராபி (சுமார் 870—950), அல்-பிரூனி (சுமார் 973—1048), இப்ன்-சினா (சுமார் 980—1037)—இவர் அவிஸென்னா என்றும் அழைக்கப்பட்டார், ஓமார் கய்யாம் (1040—

1123). இந்தத் தத்துவஞானிகள் அடிக்கடி கருத்துமுதல்வாத அடிப்படையிலிருந்து விலகி பொருள்முதல்வாதக் கருத்துக்களை வெளியிட்டனர். பொருளாயத உலகம் ஆறு இயற்கைக் கூறுகளைக் கொண்டது என அல்-பராபி கருதினார் (சாதாரண மூலகங்கள், தாதுப் பொருட்கள், தாவரங்கள், மிருகங்கள், மனிதன் மற்றும் விண்ணுலகப் பொருட்கள்). புலனுணர்ச்சி உறுப்புக்கள், மூளை, ஊகம் ஆகியவை அறிவாற்றலின் தோற்றுவாய்கள் எனக் கூறினார். இயற்கை, அதன் நியதிகளின் புறநிலையான தன்மையைப் பற்றி அல்-பிரூனிக்கும் எவ்விதமான சந்தேகமும் கிடையாது. இயற்கை தொடர்ச்சியாக மாறுகிறது, வளர்கிறது; பருப்பொருள் தானாகவே பொருட்களின் வடிவங்களை உருவாக்கி மாற்றுகிறது; ஆன்மா என்பது உடலின் ஒரு குணாம்சம் என்று அவர் கருதினார்.

தலைசிறந்த மேதையான இப்ன்-சினா, தத்துவஞானம் என்பது வாழ்நிலையின் முழுமையான விஞ்ஞானம் என்று கருதினார். அவர் தத்துவஞானத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்தார்: பௌதிகம் (இயற்கை பற்றிய போதனை), தர்க்கவியல் (இயற்கையையும் மனிதனையும் அறிதலைப் பற்றிய போதனை) மற்றும் இயக்க மறுப்பியல் (மொத்தமாக வாழ்நிலையை அறிதலைப் பற்றிய போதனை). பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தைப் பின்பற்றி அவர் இயற்கையின் புறநிலை இருத்தலை அங்கீகரித்தார், ஆராய்ச்சி விவரங்களிலும் பரிசோதனைகளிலும் நம்பிக்கை வைத்தார். இப்ன்-சினா தனது தர்க்கவியல் கோட்பாட்டில் அரிஸ்டாட்டிலை பெருமளவில் ஏற்றுக்கொண்டார். தர்க்கவியல் சிந்தனையின் விதிகளையும் வடிவங்களையும் வகுக்கும் பொழுது அவர் வாழ்நிலையின் தனித்தன்மைகளிலிருந்து இவற்றைப் பகுத்தறிந்து முடிவு காண விழைந்தார். தர்க்கவியல் கருத்தினங்

களும் கோட்பாடுகளும் பொருட்களுடன் அதாவது புற நிலையான உலகின் நியதிகளுடன் ஒத்திசைவாக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். இது மத்தியகால முஸ்லிம் அறிஞர்களின் கூற்றுக்கு மாறுபட்டதாகும்; அவர்கள் தர்க்கவியலை ஒரு கலை என்று மட்டுமே கருதினார்கள்.

யதார்த்தவாதிகளுக்கும் நாமினலிஸ்டுகளுக்கும் இடையே ஏற்பட்ட தகராறை முடிவுக்குக் கொண்டுவருவதில் இப்ன்-சினா மாபெரும் பங்களிப்பை வழங்கினார். பொதுமையானது தனிப் பொருட்களில் இருக்கிறது, அவற்றின் சாராம்சத்தில் அடங்கியிருக்கிறது என்று அவர் வாதிட்டார். சிந்தனையில் யதார்த்தமான தனிப் பொருட்களை ஆய்ந்து அறியும் பொழுது பொதுவானவை இருக்கின்றன. பொதுவானது சூக்குமக் கருத்தாக்கம், பிரபஞ்சம் தனித்தனிப் பொருட்களைக் கொண்டது என்று அவர் கூறினார். இப்ன்-சினா பௌதிகம், தர்க்கவியல், இயக்க மறுப்பியல் ஆகியவற்றுக்கு இடையே உட்தொடர்பை எடுத்துக் காட்டினார். பௌதிகம் காரணகாரியம் என்ற கருத்தைச் சேர்த்து தர்க்கவியலைச் செழுமைப்படுத்துகிறது, தர்க்கவியல் முறைகளைக் கொண்டு பௌதிகத்தை நிறைவு செய்கிறது என்று அவர் காட்டினார்.

இப்ன்-சினாவின் இயக்க மறுப்பியல் தெய்விக ஆற்றல் வெளிப்பாட்டுத் தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டது. உலகம் கடவுளால் படைக்கப்படவில்லை, ஆனால் அது கடவுளிடமிருந்து இயற்கையான வழியில், அதாவது கடவுளின் வரிசை வரிசையான ''மெய்யறிவுக் கதிர் வீச்சின்'' மூலம் தோன்றியது என்று அந்த வாதம் கூறியது. செயல்படும் திறன் இன்றி கடவுளால் எதையும் படைக்க முடியாது, இதன் மூலாதாரம் யாராலும் உற்பத்தி செய்யாத, நிரந்தரமான பருப்

பொருள்தான். எனவே கடவுள் நிரந்தரமானவர் என்றால் அதே போல் உலகமும் நிரந்தரமானதே. ஏனென்றால் காரணமும் விளைவும் எப்பொழுதும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவையாகும். ஒரு காரணம் இருந்தால் ஒரு விளைவும் இருக்கத்தான் செய்யும். நிரந்தரமான பொருளாயத உலகக் கருத்து சமயச் சார்புடைய உலகக் கண்ணோட்டத்தை அரித்தழித்தது. இப்ன்-சினாவின் பொருள்முதல்வாதக் கருத்துக்கள் கீழை நாடுகளிலும் மேலை நாடுகளிலும் விஞ்ஞான மற்றும் தத்துவஞான வளர்ச்சியின் மீது அதிகமான தாக்கத்தைச் செலுத்தின.

முதலாளித்துவ வளர்ச்சி சகாப்தத்தில்
பொருள்முதல்வாதமும் மதம் மற்றும்
கருத்துமுதல்வாதத்தை எதிர்த்து அதன் போராட்டமும்

உற்பத்தியில் முதலாளித்துவ உறவுகளின் தோற்றமும் வளர்ச்சியும் உற்பத்தி நடவடிக்கை முழுவதிலும் ஒரு உத்வேகத்தை ஊட்டின. தொழில்துறை மற்றும் வர்த்தகத்தின் வளர்ச்சியை அது ஊக்குவித்தது. அதற்கு சுற்றியுள்ள உலகத்தின் விதிகளைப் பற்றி ஸ்தூலமான அறிவு தேவையாக இருந்தது. இயற்கையை ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டியதை அது அவசியமாக்கியது. இவையனைத்தும் தன்னை ஒரு விஞ்ஞானம் என்று பிரகடனப் படுத்தி, மனிதனின் நடைமுறை வாழ்க்கையில் உண்மைகளை நிறுவி பொருளாயத மதிப்புக்களை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுவதிலே தனது நோக்கம் எனக் கூறிய தத்துவஞானத்தின் வளர்ச்சியில் ஒரு முத்திரையைப் பதித்தன.

மத்தியகாலத் தத்துவஞானத்தின் பொதுவான முன்மொழிவுகளும் அதன் முறையும் பொய்யானவை,

தவறான வழியில் இட்டுச் செல்வது என்று நிராகரிக்கப் பட்டன. ஆராய்ச்சியில் புதிய வழிகள், அறிதலில் புதிய முறைகள் முன்வைக்கப்பட்டன.

தத்துவஞானத்தில் இந்தப் போக்கைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர் பிரான்சிஸ் பேக்கன் (1561—1626). அவர் புராதன காலந்தொட்டு மத்தியகாலம் வரையிலான கருத்துமுதல்வாதத் தத்துவஞானத்தைக் கடுமையாக விமர்சித்தார். அது இறைமைவாதத்தின் கைப்பாவையாக மாறிவிட்டது, மதவழி வறட்டுக் கோட்பாடுகளுடன் தனது சொந்த முன்மொழிவுகளைப் பொருத்துகின்ற அளவுக்கு அதலபாதாளத்திற்கு வீழ்ச்சியடைந்தது என்று அவர் விமர்சித்தார். ஆராய்ச்சியில் ஊக முறையையும் அவர் விமர்சனம் செய்தார்; அத்தகைய முன்மொழிவுகள் சூனியமானவை, அர்த்தமில்லாதவை என்று வர்ணித்தார்.

அறிதலுக்கு அனுபவத்தை அடிப்படையாக முன்வைத்த பேக்கன், உண்மையைத் தேர்ந்து தெளியும் வழியில் தடைக் கற்களாக நின்ற பல்வேறு வகையான தப்பெண்ணங்களிலிருந்து மனித உணர்வை விடுவிக்க விழைந்தார். பொருளாயத உலகத்திற்கு ஆரம்பமும் இல்லை, முடிவும் இல்லை; அது இருந்தது, இருந்து வருகிறது, என்றைக்கும் இருக்கும் என்று அவர் கூறினார். அவர் இயக்கத்தை சில வடிவங்களின் எண்ணிக்கையாக வரையறுத்துக் கொண்டாலும் நிரந்தரமாக இருக்கும் பருப்பொருளின் முக்கிய குணாம்சங்களில் இயக்கம் ஒன்று என்று பறைசாற்றினார்.

பேக்கனின் அறிதல் முறை இயக்க மறுப்பியலாகவும் யாந்திரிகமானதாகவும் இருந்தது. பொருட்கள் சில நிரந்தரமான குணாம்சங்களின் யாந்திரிகமான கலவை மட்டுமல்ல, அவை அங்கக ரீதியான மொத்தம்; பல்வேறு

குணாம்சங்களும் பகுதிகளும் ஒன்றோடொன்று உள் தொடர்பு கொண்டவை, ஒன்று மற்றொன்றாக மாறும் தன்மை கொண்டவை; ஒரு பொருளின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய விவரங்களை யாந்திரிகமாக ஒன்று சேர்ப்பதன் மூலம் ஒரு பொருளைப் புரிந்து கொள்ள முடியாது என்ற உண்மையைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு அவர் முன்னேறிவிடவில்லை.

பேக்கனின் போதனையில் சில குறைபாடுகள் இருந்தாலும் கூட தத்துவஞானத்தின் வளர்ச்சியில் அது கணிசமான அளவுக்கு முன்னே சென்றது, தத்துவஞான பொருள்முதல்வாதத்தில் ஒரு புதிய வடிவம் தோன்றியிருப்பதை எடுத்துக் காட்டியது.

தாமஸ் ஹோப்ஸ் (1588—1679) என்ற ஆங்கில பூர்ஷ்வா தத்துவஞானியால் பொருள்முதல்வாதக் கண்ணோட்டம் மேலும் வளர்ச்சி பெற்றது. விரிவாக்கம், உருவ அமைப்பு என்ற இரண்டு அடிப்படையான குணங்களை தன்னகத்தே கொண்டுள்ள வஸ்துக்களின் மொத்த அமைப்புத்தான் இயற்கை என்று அவர் நம்பினார். அவர் இயக்கத்தின் அனைத்து வேறுபட்ட வடிவங்களையும் யாந்திரிக இயக்கம் என்ற ஒற்றை வடிவமாகச் சுருக்கினார். இத்தகைய இயக்கம் விசும்பில் இடத்தை மாற்றுவது மட்டுமே என்று அவர் கருதினார்.

அவரது தத்துவத்தின்படி அறிதலுக்கு ஒரே விஞ்ஞான முறை கணித செயல்பாடுகளான கூட்டலையும் கழித்தலையும் அடிப்படையாகக் கொண்ட முறையேயாகும்.

ஹோப்ஸ் உலகம் பற்றிய தனது பொருள்முதல்வாதத் தத்துவத்தை விரிவுபடுத்தும் பொழுது நாத்திகவாத முடிவுகளை வகுத்து அளித்தார். மனிதகுலத்தின் அறியாமை, தாங்கள் அறியாத எதிர்காலத்தைப் பற்றி அவர்கள்

கொண்டிருந்த பயம் ஆகியவற்றின் விளைவே மதம் என்று அவர் நம்பினார். மதம் விஞ்ஞானத்துடன் பொதுவான அம்சங்கள் எதையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் அது ஒரு அவசியத் தேவையாக இருந்தது. ஏனெனில் மக்களை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைப்பதற்கு மதம் உதவியது என்று அவர் கூறினார்.

ரெனே டெகார்ட் (1596—1650) உலகத்தைப் பற்றி இயன்ற அளவுக்கு ஒரு பொருள்முதல்வாதச் சித்திரத்தை வழங்கினார். அளவிலும் வடிவத்திலும் இயக்கத்தின் திசை வழியிலும் வேறுபடுகின்ற மிக நுணுக்கமான அணுக்களைக் கொண்டதுதான் இயற்கை என்று அவர் நம்பினார். முடிவற்ற பிரபஞ்சத்தின் தொடக்கத்தில் நெருப்பு போன்றவை, காற்று போன்றவை, பூமி போன்றவை என்னும் மூன்று வெவ்வேறான முதன்மை மூலகங்கள் இருந்தன. பொருட்களுக்கு இடையிலான வேறுபாடுகள் அனைத்தும் இவற்றிலிருந்து இயற்கையான வழியில் தோன்றின. இம்மூலகங்கள் அனைத்தும் இயங்கிக் கொண்டிருப்பதால் சூறாவளிக் காற்றுகளை ஏற்படுத்தின. முதல் ரகத்தைச் சேர்ந்த மூலகங்களின் சூறாவளி இயக்கம் சூரியனையும் நட்சத்திரங்களையும் தோற்றுவித்தது, இரண்டாவது ரக மூலகங்கள் வானத்தைப் படைத்தன, மூன்றாவது ரக மூலகங்கள் பூமியையும் இதர கிரகங்களையும் உருவாக்கின.

சூரிய மண்டலத்தின் தோற்றத்தைப் பற்றிய இந்த வெகுளித்தனமான பொருள்முதல்வாதத் தத்துவம் உலகம் கடவுளால் படைக்கப்பட்டது என்னும் மதக் கோட்பாட்டுக்கு எதிராக இருந்தது; எனவே அந்தக் காலத்தில் அது முற்போக்குத் தன்மையைக் கொண்டிருந்தது.

உலகத்தைப் பற்றிய அணுகுமுறையில் டெகார்ட் இயந்திரவியல், கணிதவியல் ஆகிய விஞ்ஞானங்களையே

நம்பினார். இது அவருடைய தத்துவத்தை இயல்பாகவே பாதித்து அதைப் பெரும்பாலும் யாந்திரிகத் தன்மையுள்ளதாக மாற்றியது. உயிரிகளுக்கும் உயிரற்ற பொருட்களுக்கும் இடையே அவர் குணாம்ச ரீதியான வித்தியாசம் எதையும் காணவில்லை. அவர் மிருகங்களையும் மனிதனையும் கூட வேறுபட்ட அமைப்புக்களைக் கொண்ட இயந்திரங்களாகவே பார்த்தார். அதே போல பருப் பொருளின் இயக்கத்தின் வெவ்வேறு வடிவங்களையும் அவர் விசும்பில் இயங்குதல் என்று சுருக்கினார்.

டெகார்ட் முரணில்லாத பொருள்முதல்வாதியாக இருக்கவில்லை. தனித்தனியான இயற்கை நிகழ்வுகளைப் பொறுத்தமட்டில் அவர் பொருள்முதல்வாதியாயிருந்தார். ஆனால் வாழ்நிலை மற்றும் அறிதலின் முக்கிய கோட்பாடுகளின் பக்கம் திரும்பும் பொழுது அவர் பொருள்முதல்வாதத்திலிருந்து விலகிச் சென்றார். வாழ்நிலையின் ஒரே மூலாதாரம் கடவுள், ஆன்மா என்ற ஊகத்தில் தத்துவஞானப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயன்றார். எனவே அவர் தத்துவஞானக் கருத்துக்களில் இரட்டை நிலையைக் கொண்டிருந்தார்.

அறிதலைப் பற்றி அவருடைய தத்துவமும் முறையும் கலப்பற்ற அறிவிலிருந்து வந்தவையாகும். ஏனென்றால் அறிதலின் நிகழ்வுப் போக்கில் அனுபவம் எத்தகைய முக்கியமான பாத்திரத்தையும் வகிக்கவில்லை என்று அவர் கருதினார். அறிவையும் அதிலிருந்து தோன்றிய கோட்பாடுகளையும் கருத்துக்களையும் மட்டுமே ஆதாரமாகக் கொள்ள வேண்டும் என்றார்.

டச்சுத் தத்துவஞானி பெனெடிக்ட் ஸ்பினோஸா (1632—1677) இன்னும் ஆழமானதொரு பொருள்முதல் வாதத் தத்துவத்தை விரித்துரைத்தார். உலகம் அடிப்படையிலேயே ஒருங்கிணைந்தது, அந்த அடிப்படையை

அவர் சாரப் பொருள் எனக் கருதினார். சிந்தனையைப் பொறுத்தமட்டில் அது விரிவாக்கம் போல பருப்பொருளின் பல குணாம்சங்களில் ஒன்றே. இயற்கை நிரந்தரமானது; அது எவராலும் ஒருபோதும் சிருஷ்டிக்கப்பட்டதல்ல; அதன் நிரந்தரத் தன்மைக்கும் அழியாத் தன்மைக்குமான காரணங்கள் இயற்கைக்குள்ளிருந்தேதான் அறியப்பட வேண்டும். நிரந்தரமான இயற்கை அதன் குணங்களிலிருந்தும் நிலைமைகளிலிருந்தும் வெளிப்படுகிறது, இவை கணக்கிலடங்காத எண்ணிக்கையிலானவை என்று அவர் கூறினார். இத்தகைய குணாம்சங்களில் ஒன்றான இயக்கம் எல்லையில்லாதது, அதாவது இயற்கையின் எல்லா நிலைமைகளுக்கும் குறியடையாளமாக இருக்கும்.

உலகம் அதன் சொந்தக் காரணத்தின் மூலம் தோன்றியது என்று பறைசாற்றியதன் மூலம் ஸ்பினோஸா பிரபஞ்சத்தைப் படைத்தவர் என்ற நிலையிலிருந்து கடவுளை அகற்றினார், இயற்கையில் அவரைக் கரைந்து போகுமாறு செய்தார். மானுடத்தின் அறியாமை, எதிர்காலத்தைப் பற்றிய பயம் ஆகியவற்றின் விளைவே மதம் என்று அவர் கருதினார்.

17ஆம் நூற்றாண்டின் பொருள்முதல்வாதத் தத்துவங்கள் இயக்க மறுப்பியல் பொருள்முதல்வாதத்தின் சில குறைகளைக் கொண்டிருந்தாலும் முற்போக்கானவையே. அவை முதலாளி வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலித்தன. 17ஆம் நூற்றாண்டில் அது வரலாற்று ரீதியில் முற்போக்கானதே. அந்த நூற்றாண்டில், சமுதாயத்தில் அரசியல் ஆதிக்கத்திற்காக நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்த முதலாளி வர்க்கத்தின் உலகக் கண்ணோட்டமாகப் பொருள்முதல்வாதம் இருந்தது. ஆனால் முதலாளி வர்க்கம் அதிகாரத்தைப் பிடித்து தனது சர்வாதிகாரத்தை நிறுவிய மறு கணமே பொருள்முதல்வாத நிலையிலிருந்து

விலகிக் கருத்துமுதல்வாதத்தை நெருங்கத் தொடங்கியது.

அக்காலத்திலேயே ஆங்கில பிஷப் ஜார்ஜ் பெர்க்லி (1684—1753) தனது அகநிலைக் கருத்துமுதல்வாதத்தை வளர்த்தார், ஆங்கில தத்துவஞானி டேவிட் ஹியூம் (1711—1776) அறியொணாவாதத்தை வளர்த்தார். இந்தத் தத்துவஞான அமைப்புக்கள் பொருள்முதல்வாதச் சிந்தனை இல்லாதவர்களிடம் மட்டுமல்லாது, இயக்க மறுப்பியலான, யாந்திரிகமான பொருள்முதல்வாதச் சிந்தனையாளர்களிடமும் ஓரளவு செல்வாக்கைப் பெற்றுத் திகழ்ந்தன.

ஆனால் பொருள்முதல்வாதக் கருத்துக்கள் வளர்ந்து பரவுவதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. பொருள் முதல்வாதம் வளர்ந்தோங்கிக் கொண்டே இருந்தது. கருத்துமுதல்வாதத்துக்கும் மதத்துக்கும் எதிரான அதன் போராட்டம் மேலும் தீவிரப்படுத்தப்பட்டு பிரெஞ்சுப் பொருள்முதல்வாதிகளின் (கோல்பாக், ஹெல்வெட்டியஸ், டிட்ரோ, லாமெட்ரீ மற்றும் பலர்) படைப்புக்களில் அதன் சிகரத்தை எட்டியது.

பிரெஞ்சுப் பொருள்முதல்வாதிகள் மதத்தையும் மத குருக்களையும் கடுமையாகவும் உறுதியாகவும் விமர்சித்தனர். அவர்களது நாத்திகவாத எழுத்துக்கள் இக்காலத்துக்கும் பொருந்தக் கூடியவையாக உள்ளன.

அவர்கள் தத்துவஞானத்தின் அடிப்படையான கேள்விக்குப் பெருமளவு சரியான பதிலைக் கொடுத்தனர். இயற்கை புறநிலையானது, நிரந்தரமானது, இயற்கைக்குக் கடவுள் அவசியமல்ல என்று அவர்கள் பிரகடனம் செய்தனர். பருப்பொருளின் மிகவும் நுணுக்கமான பாகங்களின் (அணுத் துகள்கள் அல்லது மூலக் கூறுகள்) மாறுபட்ட கலவைகளின் கூட்டு மொத்தமே இயற்கை; அவற்

றிற்கு விரிவாக்கம், எடை, கனபரிமாணம், இயக்கம் மற்றும் இதர குணாம்சங்கள் உண்டு என்று அவர்கள் கூறினார்கள். அவர்கள் இயக்கத்தைப் பருப்பொருளின் அடிப்படையான குணாம்சம் அல்லது பண்பு எனப் பார்த்தனர். ஆனால் இயக்கம் பருப்பொருளின் உள்ளார்ந்த இயல்பான குணாம்சம் என்று சரியாகக் கூறிய பிரெஞ்சு பொருள்முதல்வாதிகள் இயக்கத்தின் தோற்றுவாயையும் அதன் காரணத்தையும் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. இயக்கம் குணாம்சரீதியாக மாறுபட்ட வடிவங்களைக் கொண்டது, இயற்கை தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு வளர்கிறது என்பதையெல்லாம் அவர்கள் உணரவில்லை. தாவிக் குதிப்புகள் இதரவற்றை அவர்கள் மறுத்தனர்.

அறிதல் துறையில் பிரெஞ்சுப் பொருள்முதல்வாதிகள், அனுபவத்திலிருந்துதான் எல்லாக் கருத்துக்களும் எண்ணங்களும் தோன்றுகின்றன; அறிதல் நிகழ்வுப் போக்கில் அவை உருவாக்கமடைகின்றன என்று நம்பினார்கள். அவர்கள் புலனுணர்ச்சிகளின் மூலம் அறிதலை வலியுறுத்தினார்கள். அது ஒன்றுதான் மனிதனின் அறிதலுக்கு மூலாதாரம் என்று அவர்கள் கருதினார்கள். வெளியுலகத்தைப் பற்றி நாம் அறிவதற்குப் புலனுணர்ச்சிகள்தான் ஒரே தோற்றுவாய் என்று அவர்கள் கருதியது சரியானதே. எனினும் பிரெஞ்சுப் பொருள்முதல்வாதிகள் உண்மையை அறிந்து கொள்வதற்குச் சிந்தனை தேவை என்பதை ஒப்புக்கொண்டாலும் சிந்தனையின் பாத்திரத்தைக் குறைத்தே மதிப்பிட்டார்கள். எனவே அவர்களும் தங்களுக்கு முன்பிருந்தவர்களைப் போலவே புலனுணர்ச்சி அறிதலுக்கும் சிந்தனைக்கும் இடையே உள்ள உறவைப் பொறுத்தமட்டில் ஒருதலைப்பட்சமான கருத்தையே கொண்டிருந்தனர்.

பொருள்முதல்வாதம் பல்வேறு கருத்துமுதல்வாத, மதவழிச் சிந்தனை மரபுகளை எதிர்த்து நூற்றாண்டு களாக சமரசமில்லாத போராட்டத்தை நடத்த வேண்டி யிருந்தது. இருந்தபோதிலும் இந்த மரபுகளும் சில முற் போக்குக் கருத்துக்களைக் கொண்டிருந்தன. இந்தியாவில் 16—18ஆம் நூற்றாண்டுகளில் பரவிய பக்தி இயக்கத் தின் ஸ்தாபகரான இந்தியக் கவிஞர் துளசிதாசர் (1532—1624) சாதி அமைப்பு முறை, சமூக ஏற்றத்தாழ்வு, மதவெறி போன்றவற்றை எதிர்த்துக் குரல் கொடுத்தார். தலைசிறந்த இந்தியச் சிந்தனையாளர்களான ராம்மோகன் ராய் (1772—1833), தேபேந்திரநாத் தாகூர் (1817—1905) மதச் சார்பற்ற கல்வி முறைக்கு ஆதரவளிப்ப திலும் வளர்ப்பதிலும் இந்திய மக்களின் பாரம்பரியங் களை ஆய்ந்தறிந்து தொடர்வதிலும் பெரும் பங்காற்றி னர். அந்தக் காலகட்டத்தின் மிகவும் முன்னேறிய இந்திய அறிவாளிகள் ''இளம் வங்கம்'' என்ற ஒரு குழுவை அமைத் தனர். இதன் சித்தாந்தத் தலைவரான ஹென்ரி டிரோசியோ (1807—1831) பொருள்முதல்வாதக் கருத்துக் களை ஆதரித்தார். 19ம் நூற்றாண்டின் பிற்பாதியில் சமுதாயத்தையும் மதத்தையும் புனரமைக்க முனைந்த குழுக்களும் கழகங்களும் இந்திய நாடெங்கிலும் அமைக்கப்பட்டன.

ருஷ்யச் சிந்தனையாளர்கள், குறிப்பாக மிஹயீல் லொமனோசவ் (1711—1765), அலெக்சாண்டர் ராடிஷ் சேவ் (1749—1802) இன்னும் பலர், 18ஆம் நூற்றாண் டில் தத்துவஞானத்தில் பொருள்முதல்வாத நிலையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை வழங்கினர்.

லொமனோசவ் தத்துவஞானக் கருதுகோள்களுக்கு மிக ஆழமான மெய்ப்பித்தலை வழங்கினார். இவற்றை இயற்கை விஞ்ஞானப் புள்ளிவிவரங்களுடன் நிரூபித்தார்.

அனைத்து உருவ அமைப்புக்களும் நிகழ்வுகளும் ஒரு பொருளாயத இயல்பைக் கொண்டிருக்கின்றன என்று உறுதியாகக் கூறிய அவர் தத்துவஞானத்தின் அடிப்படைக் கேள்விக்குப் பொருள்முதல்வாத விடையை அளித்தார். பருப்பொருள் அணுத் துகள்களைக் கொண்டது, அவை ஒருங்கிணைந்து மூலக் கூறுகளின் வடிவத்தைஅடைகின்றன. இவையனைத்தும் அனைத்துப் ''புலன் உணர்ச்சிப் பொருட்கள்'' ஆகின்றன. பருப்பொருள் மற்றும் இயக்கத்தின் அழியாமை விதியைக் கண்டுபிடித்த லொமனோசவ் முதன்முறையாக இயற்கை விஞ்ஞானத்தின் உதவியோடு பருப்பொருள் மற்றும் இயக்கத்தின் நிரந்தரத் தன்மையையும் அழிக்க முடியாத் தன்மையையும் மெய்ப்பித்தார். பருப்பொருளுக்கும் இயக்கத்துக்கும் இடையே உள்ள தொடர்பு பிரிக்க முடியாதது, பருப்பொருள் எப்பொழுதுமே இயக்க நிலையைக் கொண்டிருக்கிறது என்பதை அவர் வலியுறுத்தினார். இதர அனைத்து யாந்திரிகப் பொருள்முதல்வாதிகளைப் போலவே அவரும் இயக்கத்தை விசும்பில் வஸ்துக்களின் இடப் பெயர்ச்சி என்று சுருக்கினார். ஆனால் அதை இரண்டு வகையாகப் பிரித்தார். ஒரு வஸ்து இதர வஸ்துக்களைப் பொறுத்தமட்டில் தனது நிலையை மாற்றும் பொழுது அதை வெளிப்புற இயக்கம் என்றும் ஒரு வஸ்துவின் அணுக்களில் மாற்றம் ஏற்படுகின்ற பொழுது அதை உட்புற இயக்கம் என்றும் பிரித்தார்.

அறிதல் தத்துவத்தைப் பொறுத்தமட்டில் உலகம் அறிந்து கொள்ளக் கூடியதே என்று லொமனோசவ் கருதினார். புலனுணர்ச்சி உறுப்புக்கள் பொருட்கள் மற்றும் நிகழ்வுகளை நேரடியாக அறிவதன் மூலமாகவும் புலனுணர்ச்சி மூலம் பெறுகின்ற தகவல்களை தத்துவார்த்தச் சிந்தனையில் முறைப்படுத்தும் வழியிலும் அறிதல் ஏற்

படுகிறது; அனுபவத்திற்கும் தத்துவார்த்தச் சிந்தனைக்கும் அவர் சம அளவுக்கு முக்கியமான பாத்திரத்தை அளித்தார்; ஏனென்றால் இவற்றிற்கு இடையிலுள்ள நெருங்கிய உள்தொடர்பின் மூலமாக மட்டுமே உண்மையை அறிவது சாத்தியம் என்று அவர் நம்பினார்.

ஆகவே 17, 18ஆம் நூற்றாண்டுகளின் சிந்தனையாளர்களது பொருள்முதல்வாதக் கருத்துக்கள் முற்போக்கானவை. ஆனால் இவை அனைத்துமே ஓரளவுக்கு இயக்க மறுப்பியல் தன்மையைக் கொண்டிருந்தன, வளர்ச்சியை, குணரீதியான வேறுபாடுகளை, இயற்கையில் முரண்பாடுகளை, இதரவற்றை மறுத்தன; ஒரு யாந்திரிகமான அணுகுமுறை அல்லது இயக்கத்தின் வெவ்வேறான வடிவங்களை யாந்திரிக வடிவத்துக்கு, விசும்பில் வஸ்துக்களின் இடப் பெயர்ச்சிக்குக் குறுக்குதல், குணரீதியான வேறுபாடுகளின் பன்முகத் தன்மையை யாந்திரிக இயக்கவியல் விதிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்க முயற்சித்தல் ஆகிய குறைபாடுகளைக் கொண்டிருந்தன. இயற்கை விஞ்ஞானத்தின் வளர்ச்சி நிலையே இதற்குக் காரணம் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் அந்தக் காலகட்டத்தில் வானவியலும் பௌதிகமும் மட்டுமே (பெரும்பாலும் யாந்திரிக இயக்கவியல் துறையில்தான்) ஓரளவுக்கு வளர்ச்சி அடைந்திருந்தன.

18ஆம் நூற்றாண்டின் கடைசியிலும் 19ஆம் நூற்றாண்டின் முற்பாதியிலும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானம்

மூலச் சிறப்புள்ள ஜெர்மானியத் தத்துவஞானத்தின் பிரதிநிதிகள் பொருள்முதல்வாதம் மற்றும் இயக்கவியல்

பிரச்சினைகளை இதற்கு முன் இல்லாத மிக ஆழமான முறையில் விரித்துக் கூறினார்கள்.

மூலச் சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தை இம் மானுவெல் கான்ட் (1724—1804) நிறுவினார். அவர் அறிதல் ஆராய்ச்சியில் பல பிரச்சினைகளை வகுத்துக் கொடுத்து, 17, 18ஆம் நூற்றாண்டுகளில் பெரும்பாலும் மறக்கப்பட்டுவிட்ட இயக்கவியலைப் பற்றி அக்கறையை மறுபடியும் தூண்டினார்.

அவர் முதலில் இயற்கை விஞ்ஞானத்தின் பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்தினார். அவர் சிதறிப் போன பருப்பொருளின் மூலக் கூறுகளிலிருந்து சூரிய மண்டலம் இயற்கையாகத் தோன்றியது என்னும் கருத்தைக் கூறினார். இக்கருத்து உலகத்தைப் பற்றிய இயக்க மறுப்பியல் கருத்தோட்டத்தில் ஒரு உடைப்பை ஏற்படுத்தியது என்று எங்கெல்ஸ் எழுதினார்.

பின்னர் கான்ட் முற்றிலும் தத்துவஞானப் பிரச்சினைகளை நோக்கித் திரும்பினார். அவருடைய தத்துவஞான அமைப்பு ''பொருள்முதல்வாதத்துக்கும் கருத்துமுதல்வாதத்துக்கும் இடையில் சரிப்படுத்துதலாக, இரண்டுக்கும் இடையில் சமரசமாக, வெவ்வேறான, ஒன்றுக்கொன்று எதிரான தத்துவஞானப் போக்குகளை ஒரே அமைப்பிற்குள் ஒன்றுசேர்ப்பதாகும்''*.

கான்ட் பருப்பொருள் புறநிலையாக இருப்பதை ஒப்புக்கொண்டார். ஆனால் உலகம் எந்த வித நியதிகளுமின்றி குழப்பமயமாக உள்ளது. இந்தக் குழப்பங்களுக்கு இடையில் மனிதன் தன்னுடைய அறிதலின் மூலம் காலத்திலும் விசும்பிலும் உள்ள அனைத்து நிகழ்வுகளையும் ஒழுங்குபடுத்தி, அவசியத்தோடும் நியதிகளோடும் காரண

* V. I. Lenin, *Collected Works*, Vol. 14, p. 198.

காரியத் தொடர்புகளோடும் அதை ஈடுபடுத்தி ஒரு ஒழுங்கை ஏற்படுத்தினான் என்று நம்பினார். நிகழ்வுகளின் உலகத்தையும் அவ்வுலகில் செயல்படுகிற விதிகளையும் மனிதன் தானாகவே படைத்தான் என்பது அவரது கருத்து. இங்கு அவர் பொருள்முதல்வாதத்திலிருந்து கருத்துமுதல்வாத நிலைகளுக்குச் செல்வதை நாம் பார்க்கிறோம். அறிவாற்றலின் ஒரே தோற்றுவாய் புலன் உணர்வுதான் என்பதை கான்ட் ஒப்புக்கொண்டார். ஆனால் பொருட்களின், நிகழ்வுகளின் சாரமான ''தன்னிலைப் பொருள்'' அறிந்து கொள்ள முடியாதது என்று அவர் நம்பினார். இங்குதான் கான்ட் அறியொணாவாத நிலையில் தடுமாறி விழுகிறார்.

ஜி. ஹெகல் (1770—1831) மூலச்சிறப்புள்ள ஜெர்மானியத் தத்துவஞானத்தின் தலைசிறந்த பிரதிநிதியாவார். அவர் உலகத்தைப் பற்றிய கருத்துமுதல்வாதக் கண்ணோட்டத்தை இயக்கவியல் முறையோடு இணைத்து ஒரு தத்துவஞான அமைப்பை விரித்துக் கூறினார். ஒரு ''தனிமுதல் கருத்து'' உலகத்தின் சாராம்சமாகும், அதன் அடிப்படையாகும்; இது மனிதனுக்கு வெளியே உள்ளது, மனிதனிடமிருந்து சுயேச்சையாக இயங்குவது என்று ஹெகல் கருதினார். ஹெகலின் தனிமுதல் கருத்து என்பது மனித உணர்வுதான், அது மனிதனிடமிருந்து பிரிக்கப்பட்டு, இயற்கையான அறிவுக்கு மேம்பட்டது எனப்படும்.

ஹெகல் தனிமுதல் கருத்தின் சுய வளர்ச்சியில் மூன்று கட்டங்களை வேறுபடுத்திக் காட்டுகிறார். முதல் கட்டத்தில், தனிமுதல் கருத்தை மனிதனோடு தொடர்பில்லாத சுய வளர்ச்சிக் கருதுகோள்களின் அமைப்பின் வடிவத்தில் சிந்தனை இருப்பதாகக் கருதினார். இரண்டாவது கட்டத்தில் தனிமுதல் கருத்து ''மற்றொரு வாழ்நிலையில்'' புகுந்து இயற்கையோடு கலந்து விடுகிறது. இயற்கை

தானாகவே வளர முடியாது, விசும்பில் மனத்தளவில் மட்டுமே புலப்படுகிறது என்பது ஹெகலின் கருத்தாகும். மூன்றாவது கட்டத்தில் இயற்கையில் உருவெடுத்துள்ள தனிமுதல் கருத்து மனித அறிவையும் சமூக வாழ்க்கையையும் தோற்றுவிக்கிறது.

ஹெகலின் அமைப்பு புறநிலையான கருத்துமுதல் வாதமாகும். அது சாமர்த்தியமான முறையில் மதத்தை ஆதரித்தது; பொருளாயத உலகத்தை இரண்டாம் நிலையானதாக, கருத்தியலிலிருந்து சுவீகரித்துக் கொண்டதாக விளக்கமளித்தது. ஆனால் விஞ்ஞானத்திற்குப் புறம்பான அந்தக் கட்டமைப்புக்குள்ளாகவே ஹெகல் ஒரு ஆழமான, முழுமையான வழியில், இதற்கு முன் எந்தத் தத்துவ ஞானியும் செய்திராத வகையில் இயக்கவியலை விரித்துரைத்தார்.

ஹெகலின் தத்துவஞானம் முழுவதிலும் வளர்ச்சி பற்றிய கருத்து விரவிக் கிடக்கிறது. எந்த நிகழ்வும் அதன் தோற்றம், மாற்றம், மறைவு ஆகியவற்றின் நிலையிலிருந்து பார்க்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார். அவர் இயக்கவியலின் அடிப்படையான விதிகளைக் கண்டுபிடித்து வகுத்துக் கொடுத்தார். வளர்ச்சியின் தோற்றுவாய் எதிர்மறைச் சக்திகளின் போராட்டம், பொருட்கள் மற்றும் நிகழ்வுகளில் உள்ளுறையான முரண்பாடுகள் தான் அனைத்து இயக்கத்துக்கும் வாழ்க்கைக்கும் மூலம் என்ற கருத்தை விரிவுபடுத்தினார். உண்மை என்பது ஒரு நிகழ்வுப் போக்கு என்று கூறி அவர் அறிதலைப் பற்றி ஒரு இயக்கவியல் நிலையைப் பின்பற்றினார்.

ஹெகலின் கருத்துமுதல்வாத அமைப்பும் பழமைவாத அரசியல் கருத்துக்களும் அவரது இயக்கவியல் முறையின் மேல் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தியது இயற்கையே.

ஹெகலின் முறையில் உள்ள தவறுகளை விஞ்ஞானத்தை நம்புகின்ற, உலகம் எப்படி உள்ளதோ அதை எந்தவிதப் புதிய சேர்க்கைகளும் இல்லாமல் அப்படியே சித்திரிக்கின்ற பொருள்முதல்வாத அடிப்படையில் மட்டுமே சரி செய்ய முடியும், அதை மேலும் வளர்ச்சி பெறச் செய்ய முடியும். எனவேதான் அந்தக் காலகட்டத்தில் தத்துவ ஞானிகளை எதிர்நோக்கிய புறவயமான கோரிக்கை, ஹெகலின் கருத்துமுதல்வாதத் தத்துவஞானத்தின் சாதனைகளைப் பொருள்முதல்வாத அடிப்படையில் விமர்சன ரீதியில் பரிசீலிக்க வேண்டும் என இருந்தது.

ஜெர்மன் தத்துவஞானி லுட்விக் ஃபாயர்பாஹ் (1804—1872) அந்த வரலாற்றுக் கடமையில் ஒரு பகுதியை நிறைவேற்றினார். பொருள்முதல்வாதத்திற்கு சாதகமாக அவர் ஓர் உறுதியான நிலையை மேற்கொண்டார். ஹெகலின் தனிமுதல் கருத்தில் மனித மனம் அதன் வாகனமான மனிதனிடமிருந்து பிரிக்கப்படுகிறது, வெளி உலகத்தின் ஒரு சுயேச்சையான படைப்பு மூலமாக ஆக்கப்படுகிறது என்பதைத் தவிர வேறு ஒன்றும் அல்ல என்பதை எடுத்துக் காட்டினார். ஹெகலின் தத்துவஞானத்தில் தனிமுதல் கருத்து வகிக்கின்ற பாத்திரம் இறையியலில் கடவுள் வகிக்கின்ற பாத்திரமே என்பதை அவர் சுட்டிக் காட்டினார். தனிமுதல் கருத்து என்பது கடவுளிலிருந்து வேறுபட்ட ஒன்றல்ல; ஹெகலின் தத்துவஞானம் மற்றொரு வகையான இறையியலே என்று அவர் கூறினார். ஃபாயர்பாஹின் கூற்றுப்படி சிந்தனை மனிதனுக்கு வெளியில், அவனிடமிருந்து சுயேச்சையாக இயங்க முடியாது. ஏனென்றால் அது மனித மூளையின் ஒரு குணாம்சம், அதன் நடவடிக்கைதான்; அதில் ஆன்மீக, பொருளாயத தன்மைகள் பின்னிப் பிணைந்திருக்கின்றன. எனவே ஹெகல் கருதியதைப் போல சிந்தனை (ஆன்மீகம்) முதன்மையான

தல்ல, ஆனால் பருப்பொருளிலிருந்து, இயற்கையிலிருந்து பிறந்த ஒன்றேயாகும்.

மனிதனையும் இயற்கையையும் (இயற்கையில் மனிதன் ஒரு பகுதி, இயற்கை மனிதனை உருவாக்கியது) மையமாகக் கொண்டே ஃபாயர்பாஹ் தனது தத்துவஞானத்தை உருவாக்கினார். மனித இன ஆராய்ச்சி அவருடைய பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தின் தலையான கோட்பாடாக, திருப்புமுனையாக இருந்தது. மனிதன் இயற்கையில் ஒரு பகுதி, அவனுடைய உணர்வு, சிந்தனை ஆகியவை இயற்கையின் குணாம்சம் என்பதை ஃபாயர்பாஹ் அக்கோட்பாட்டுக்கு ஏற்ப சரியாக வலியுறுத்திக் கூறினார். ஆனால் இயற்கையின் ஒரு பகுதியாக இருக்கின்ற மனிதன் அதே சமயத்தில் சமூக வாழ்க்கையின் உற்பத்திப் பொருளாகும், அவனுடைய உணர்வு உடலியல் நிகழ்வுப் போக்குகளால், குறிப்பாக அவனுடைய மூளையினால் மட்டும் தீர்மானிக்கப்படுவது அல்ல, சமூக உறவுகளினால், மனித வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகளினால் தீர்மானிக்கப்படும் என்ற உண்மையைப் பார்க்காமல் விட்டு விட்டார்.

எது முதன்மையானது, பருப்பொருளா அல்லது உணர்வா என்ற கேள்விக்குப் பொருள்முதல்வாத விடையை அளித்ததுடன் நில்லாமல், ஃபாயர்பாஹ் தத்துவஞானத்தின் அடிப்படைக் கேள்வியின் இரண்டாவது அம்சத்திற்கும் அதே அளவு சரியான விடையை அளித்தார். உலகம் அறியப்படக் கூடியதே என்று அவர் கருதினார்; கான்ட்டின் அறியொணாவாதத்தைக் கூர்மையாக விமர்சித்தார்.

அவர் புலனுணர்ச்சிகளை அறிதல் நிகழ்வுப் போக்கின் திருப்புமுனை என்று கருதினார். இவை புறநிலையான யதார்த்தத்தைப் பற்றி எல்லாத் தகவல்களையும் மனித

னுக்கு வழங்குகின்றன என்று அவர் நம்பினார். எனினும் சிந்தனையும் இந்த நிகழ்வுப் போக்கில் பங்கெடுக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், ஃபாயர்பாஹ் புலனுணர்வுக்கும் சிந்தனைக்கும் இடையில், புலனுணர்ச்சிக் காட்சிக்கும் அறிவுக் காட்சிக்கும் இடையில் உள்ள நெருங்கிய உள்தொடர்பைப் புரிந்து கொண்டார்.

ஃபாயர்பாஹ் மதத்தை மிக உறுதியுடன் எதிர்த்தார்; தீர்க்கமான வழியில் மதத்தை விமர்சித்தார். கடவுளைப் பற்றிக் கூறும் போது அதில் இயற்கைக்கு மேலாக எதுவுமே கிடையாது என்றார். மனிதர்கள் தங்களை முன் மாதிரியாகக் கொண்டு சிருஷ்டித்ததுதான் கடவுள் என்று அவர் காட்டினார். கடவுளுக்குத் தரப்பட்டுள்ள அனைத்து அடைமொழிகளும் முழுக்க முழுக்க மனிதனின் பால் பட்டவையே; அவை தனிநபர்களுக்கோ அல்லது ஒட்டு மொத்தமாக மனித இனத்திற்கோ சொந்தமானவை என்பதை எடுத்துக் காட்டியதன் மூலம் அவர் மதத்தின் மூலவேர்களை வெளிக்கொணர்ந்தார்; கடவுளை சொர்க்கத்திலிருந்து பூமிக்குக் கொண்டு வந்தார்.

ஆனால் ஃபாயர்பாஹ் மதத்தின் வர்க்க சாராம்சத்தைப் புரிந்து கொள்ளவில்லை. கடவுள் நம்பிக்கைக்கு மற்றும் மறு உலக நம்பிக்கைக்குப் பின்னால் உள்ள சமூகக் காரணங்களை எடுத்துக் காட்டவும் இல்லை. எனவேதான் மதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான உண்மையான வழிகளை அவர் சுட்டிக் காட்டவில்லை. மேலும் அவர் எல்லா மதங்களையும் எதிர்க்கவில்லை. கடவுளை இயற்கைக்கு மேலான சக்தியாக ஏற்றுக்கொண்ட மரபுவழிப்பட்ட மதத்தை மட்டுமே எதிர்த்தார். ஒரு புதிய மதம் தேவை என்று அவர் வற்புறுத்தினார். அந்த மதத்தில் கடவுளின் இடத்தில் மனிதன் இருப்பான்; ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடம் காட்டு

கின்ற அன்பு அதன் முக்கியமான கோட்பாடாக இருக்கும்.

பொருள்முதல்வாதக் கோட்பாடுகளை — இயக்கவியல் உள்பட ஹெகலின் கருத்துமுதல்வாதத்தையும் நிராகரித்து பழைய இயக்க மறுப்பியல் அடிப்படையில் என்றபோதிலும்—மீண்டும் கொண்டு வந்ததே ஃபாயர்பாஹின் தத்துவஞானத்தின் சாதனையாகும்.

19ஆம் நூற்றாண்டின் ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதிகளின் தத்துவஞானம்

இயக்க மறுப்பியல் பொருள்முதல்வாதத்தின் குறைகளில் பல 1840க்களின் துவக்கத்தில் தங்களது தத்துவஞானக் கருத்துக்களுடன் வந்த, அடுத்துவரும் சில பத்தாண்டுகளில் அவற்றை விரிவாக்கிய ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதிகளால் சரிசெய்யப்பட்டன. விஸ்ஸாரியன் பெலின்ஸ்கி (1811—1848), அலெக்சாண்டர் ஹெர்ஸென் (1812—1870), நிக்கலாய் செர்னிஷேவ்ஸ்கி (1828—1889), நிக்கலாய் டோப்ரலியூபவ் (1836—1861) அவர்களில் சிலர்.

தங்களது தத்துவஞானக் கருத்துக்களில் ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதிகள் ஒரு புறம் தங்களது ருஷ்ய நாட்டு முன்னோடிகளான லொமனோசவ், ராடிஷ்சேவ் ஆகியோரின் பொருள்முதல்வாதத்திலும் இன்னொரு புறம் ஹெகலின் இயக்கவியலிலும் ஃபாயர்பாஹின் பொருள்முதல்வாதத்திலும் நம்பிக்கை கொண்டிருந்தனர். அதே சமயம், தம் காலத்து இயற்கை விஞ்ஞானத்தின் சாதனைகளையும் அவர்கள் ஓரளவுக்குப் பொதுமைப்படுத்தினர்.

ஃபாயர்பாஹுக்கு மாறாக ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதிகள், ஹெகலினுடைய இயக்கவியலை நிரா

கரிக்காமல் ஹெகலை விமர்சித்தனர். அதற்கு ஒரு பொருள் முதல்வாத விளக்கத்தைத் தருவதற்காக அதனுடன் பொருள்முதல்வாதத்தை இணைக்க முயன்றனர்.

இவ்வாறாக ஹெர்ஸென் ஹெகலின் இயக்கவியலை மிக உயர்வாகப் புகழ்ந்து பாராட்டினார். அது பொது வான முறையில் இயக்கத்தின் விதிகளையும் இயற்கை மற்றும் சிந்தனையின் வளர்ச்சியையும் கிரகித்துக் கொண் டது. ஆனால் கருத்துமுதல்வாதம் காரணமாக, யதார்த் தம், வாழ்க்கை ஆகியவற்றோடு எந்த விதத் தொடர்பு மின்றி மிகவும் தனித்திருப்பதற்காக அதை விமர்சித் தார். ஹெர்ஸெனின் கூற்றுப்படி உள்ளபடியேயாக, உண் மையாக நின்று நிலவுவது வாழ்நிலை அல்ல, ஆனால் இயற்கையை உண்டாக்குகின்ற பொருளாயதப் பொருட் களே. ஆன்மீகம் மற்றும் சிந்தனையைப் பொறுத்தமட் டில் அவை இயற்கையினது வளர்ச்சியின் விளைவுகளே, வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடைந்த பொருளாயத பொருட்களின் ஒரு குணாம்சமே.

யதார்த்தம் குணாம்சங்களின் அளப்பரிய எண்ணிக் கையைக் கொண்டது, முடிவேயில்லாத இயக்கத்தையும் வளர்ச்சியையும் கொண்டது என்று ருஷ்யப் புரட்சிகர ஜன ாயகவாதிகள் கருதினார்கள். எதிர்நிலைகளின் போராட்டமும் பரஸ்பர மாற்றமும்தான் வளர்ச்சியின் தோற்றுவாய் என்று அவர்கள் நம்பினார்கள். இயக்கத் தின் போக்கிலும் இயற்கையின் வளர்ச்சியிலும், முன்னர் இருந்ததிலிருந்து மாறுபட்ட ஒரு புதியதன் மலர்ச்சியோடு அளவு மாற்றங்கள் பண்பு மாற்றங்களாகப் பரிணமிக் கின்றன என்பதையும் அவர்கள் உணர்ந்தனர். புரட்சிகர ஜனநாயகவாதிகள், குறிப்பாக செர்னிஷேவ்ஸ்கி, பல் வேறு கோணங்களிலிருந்தும் இயற்கை மற்றும் சமுதாயத் திலுள்ள நிலைமறுப்பின் நிலைமறுப்பு பற்றிய விதியின்

செயல்பாட்டைத் தெளிவுபடுத்திக் காட்டினார்கள். இது வடிவங்கள் தொடர்ச்சியாக மாற்றமடைதல், ஒரு உயர்ந்த தன்மையின் அடிப்படையில் கடந்து போனவற்றின் மீண்டும் மீண்டுமான அதே செயல்பாடு ஆகியவற்றின் பாற்பட்டதாகும்.

ஆக, ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதிகள் பெருமளவுக்கு யாந்திரிகமான மற்றும் இயக்க மறுப்பியல் அணுகுமுறையை நிராகரித்தனர். இயக்கவியலை பொருள்முதல்வாதத்தோடு ஒன்றுபடுத்துவதில், இயக்கவியலை பொருள்முதல்வாத நிலைபாட்டில் விளக்கி உறுதிப்படுத்துவதில் ஒரு படி முன்னேறினர்.

அறியொணாவாதத்தை எதிர்த்த அவர்களது உறுதி மிக்க போராட்டமும் ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதிகளின் மற்றொரு சாதனையாகும். செர்னிஷேவ்ஸ்கி மானுட வாழ்க்கையை, மனிதகுல நடைமுறைகளைக் குறிப்பிட்டு அறியொணாவாதத்தை நிராகரித்தார். உலகம் அறிந்து கொள்ளக் கூடியதே; நமது புலன் உணர்ச்சிப் பதிவுகள் யதார்த்தத்தின் சரியான பிரதிபலிப்பே என்று அவர் உறுதியாகக் கூறினார்.

தத்துவஞான ஆராய்ச்சிகளின் சிந்தனா இயல்பைச் சமாளிப்பதிலும் ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதிகள் குறிப்பிட்ட முன்னேற்றத்தைக் கண்டனர். அவர்கள் இந்த உலகத்தை மாற்றியமைக்க விழைந்தனர். உதாரணமாக, ஹெர்ஸென் இயக்கவியலை ''புரட்சியின் இயற்கணிதமாகப்'' பார்த்தார்.

அவர்களது சமுதாயக் கருத்துக்களைப் பொறுத்த மட்டில், ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதிகள் சில பொருள்முதல்வாதக் கூற்றுக்களை வெளியிட்டாலும் கருத்துமுதல்வாதிகளாகவே திகழ்ந்தனர்.

அத்தியாயம் மூன்று

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் தோற்றமும் அதன் வளர்ச்சியின் முக்கியக் கட்டங்களும்

மார்க்சியத் தத்துவஞானத்தின் முன்தேவைகள்

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் தோற்றமும் வளர்ச்சியும் விஞ்ஞானச் சிந்தனை மற்றும் மொத்தச் சமுதாய வளர்ச்சியின் அவசியமானதொரு விளைவே.

கார்ல் மார்க்ஸ் (1818—1883) மற்றும் பிரெடெரிக் எங்கெல்சினால் (1820—1895) உருவாக்கப்பட்ட இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத் தத்துவ ஞானம் ஒரு மகத்தான அறிவியல் சாதனையாகும். லெனின் குறிப்பிட்டபடி, புரட்சிகர உலகக் கண்ணோட்டத்தை உருவாக்கியதன் மூலம் மார்க்சும் எங்கெல்சும் ஒரு உண்மையான விஞ்ஞான தத்துவத்தைப் படைத்தளித்தனர்; தொழிலாளி வர்க்கம் அதன் வரலாற்று இலட்சியத்தைப் புரிந்து கொள்வதற்குப் பயிற்றுவித்து, சுரண்டும் சமுதாய அமைப்பை அகற்றி சோஷலிசத்தைக் கட்டுவதற்கான உண்மையான வழிகளைச் சுட்டிக் காட்டினர்.

மார்க்சியத் தத்துவஞானத்தின் தோற்றம் ஒரு தற்செயல் நிகழ்ச்சியல்ல; அது மனிதகுல முன்னேற்றத்தின் ஒரு விளைவாகும். முழுமையான மார்க்சியத்தைப் போன்றே, மார்க்சியத் தத்துவஞானமும் சமுதாயத்தின், தத்துவஞானத்தின், இயற்கை மற்றும் சமூக விஞ்ஞானங்களின் நெடுங்கால வளர்ச்சியின் விளைவாகத்தான் விரித்

துரைக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் அதற்கான ஸ்தூலமான சமூக, இயற்கை விஞ்ஞான மற்றும் தத்துவார்த்த முன்தேவைகள் உருப்பெற்றதினால்தான் மார்க்சும் எங்கெல்சும் அதை வகுத்தளிக்க முடிந்தது.

1. சமூக பொருளாதார நிலைமைகள். சமுதாயம் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையை நோக்கி மாறுவது விஞ்ஞான உலகக் கண்ணோட்டத்தின் தோற்றத்துக்குப் பொதுவான சமூக முன்தேவையாகும்.

19ஆம் நூற்றாண்டின் மத்தியில் முதலாளித்துவம் பல நாடுகளில் நிலப்பிரபுத்துவத்தை அகற்றியிருந்தது. அது முதலாளித்துவ அமைப்பின் இரண்டு முக்கிய வர்க்கங்களான முதலாளி, பாட்டாளி வர்க்கங்களை உருவாக்கியிருந்தது. முதலாளித்துவத்தின் வளர்ச்சியோடு வர்க்க உறவுகளும் கூர்மையான முறையில் வெடித்தன. முதலாளிகளால் சுரண்டப்பட்டு, மிகச் சாதாரணமான மனித உரிமைகளும் கூடப் பறிக்கப்பட்ட பாட்டாளி வர்க்கம் அன்றைய சமுதாய அமைப்பை எதிர்த்துப் போராடுவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தது.

ஆரம்பத்தில் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டம் தானாகவே ஏற்பட்டது, தனிப்பட்ட முதலாளிகளை எதிர்த்து அங்கும் இங்குமான சில நடவடிக்கைகளின் வடிவத்திலேயே இருந்தது. எனினும் அது படிப்படியாக மேன்மேலும் அதிகமாக ஸ்தாபனப்படுத்தப்பட்டு குறிக்கோள் உடையதாகத் திகழ்ந்தது. 1840க்களின் தொடக்கம் பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன் போன்ற நாடுகளில் எதிர்ப்பு அலைகளின் கடுமையான வீச்சையும் தொழிலாளர்களது தீவிர போராட்டங்களையும் கண்டது. அவர்கள் வேலை நிலைமைகளில் நல்ல வசதிகளும் குறைந்த

வேலை நேரமும் உயர்ந்த கூலி விகிதங்களும் வேண்டும் என்று கோரினார்கள்.

ஆனால் பாட்டாளிகள் ஒரு சுயேச்சையான வர்க்கம் என்ற முறையில் ஒரு வெற்றிகரமான போராட்டத்தை நடத்திச் செல்ல தங்கள் உடனடியான மற்றும் இறுதி இலட்சியங்களைப் பற்றி, பயனுள்ள வழிமுறைகள் மற்றும் சாதனங்களைப் பற்றி ஒரு வினைத்திட்பமான கருத்தைக் கொள்ள வேண்டியிருந்தது. ஒரு விஞ்ஞான ரீதியான உலகக் கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டால் மட்டுமே இது சாத்தியமாகும். எனவே சமுதாய வளர்ச்சி மற்றும் புரட்சிகர மாற்றங்களின் விதி களைப் புரிந்து கொள்வதற்கு ஏற்ப ஒரு விஞ்ஞான ரீதி யான தத்துவம் பாட்டாளி வர்க்கத்துக்கு உடனடித் தேவையாக இருந்தது.

எனவே வாழ்க்கை, முதலாளித்துவச் சுரண்டலை எதிர்த்து தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சி, சமூகம் மற்றும் விஞ்ஞானத்துக்கு முன்னால் ஒரு புதிய கடமையை நிறுத்தின. பாட்டாளி வர்க்கமும் உழைக் கின்ற எல்லா மக்களும் சமூக நீதிக்கும் சோஷலிசத்துக் கும் நடத்துகின்ற போராட்டத்துக்கு ஒரு சித்தாந்த ஆயுதத்தையும் புரட்சிகரமான தத்துவத்தையும் வகுத் தளிப்பதே அந்தக் கடமை.

அந்த வரலாற்றுத் தேவையை நிறைவேற்றுகின்ற முறையில் மார்க்சியம் தோன்றியது. அது மார்க்சியத் தத்துவஞானத்தை—இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம்—தன்னுடன் இணைந்த பகுதியாக வும் தத்துவ அடிப்படையாகவும் கொண்டிருந்தது.

2. இயற்கை விஞ்ஞான முன்தேவைகள். உலகத்தை விஞ்ஞான ரீதியாகப் புரிந்து கொள்ளல் என்ற பாட்டாளி வர்க்கத்

தின் தேவை இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் தோற்றத்திற்கு ஒரு சக்தி மிக்க ஊக்கு விப்பாகத் திகழ்ந்தது. ஆனால் அந்தத் தேவை மட்டுமே போதுமானதல்ல. ஒரு குறிப்பிட்ட அளவிலான விஞ்ஞான வளர்ச்சி, குறிப்பாக சமுதாய வாழ்க்கையையும், முழுமையாக உலகத்தையும் பொருள்முதல்வாத ரீதியில் புரிந்து கொள்வதற்கு ஏற்ற தெளிவான உண்மைகள், அவற்றின் விதிகளுக்கு ஏற்ப இயற்கை மற்றும் சமுதாயத் தின் தடையில்லாத வளர்ச்சியின் நிரூபணங்கள் ஆகிய வையும் அவசியமாக இருந்தன.

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் விஞ்ஞானம் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடைந்தது. அது உலகத்தைப் பொருள்முதல்வாத ரீதியில் புரிந்து கொள்வதன் ஒளியில் இயக்கவியலின் முக்கியமான கோட்பாடுகளைத் தத்துவ ரீதியில் நிறுவுவதற்கு உண்மையான வாய்ப்புக்களைத் தோற்றுவித்தது. விஞ்ஞான ரீதியான இயக்கவியல் பொருள்முதல்வாத உலகக் கண்ணோட்டத்தின் வளர்ச் சிக்குப் போதுமான தகவல்கள் அன்று சேகரிக்கப்பட்டிருந் தன.

அச்சமயத்தில் இயற்கை விஞ்ஞானம் ஆராயப்படு கின்ற பொருட்கள் மற்றும் புலப்பாடுகளைப் பற்றிய மெய்விவரங்களைச் சேகரித்தல், வர்ணித்தல், வகைபிரித் தல் ஆகியவற்றுக்கு மேல் அப்பொருட்கள் மற்றும் புலப்பாடுகளுக்குள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுப் போக்குகளைப் பகுப்பாய்வு செய்வதற்கும் அவற்றுக்கு இடையில் தொடர்புகளை நிறுவுவதற்கும் முன்னேறியிருந்தது. ஆகவே அவற்றின் சாராம்சத்தைப் புரிந்து கொள்வதற்கும் அவற்றின் மாற்றத்திலும் வளர்ச்சியிலும் உள்ள நியதிகளை எடுத்துக் காட்டு வதற்கும் தவிர்க்க முடியாதபடி உதவி செய்தது.

எங்கெல்ஸ் குறிப்பிட்டபடி பரிசோதனை நிலையி லிருந்த இயற்கை விஞ்ஞானம் ஒரு "தத்துவார்த்த விஞ் ஞானமாக, கிடைத்த சாதனைகளைப் பொதுமைப்படுத்தி இயற்கையைப் பற்றிய ஒரு பொருள்முதல்வாத அமைப் பாக"* மாறியது. இயந்திரவியல், வானவியல், பௌதி கம், இரசாயனம், உயிரியல் மற்றும் இதர இயற்கை விஞ்ஞானங்களின் வளர்ச்சி உலகத்தின் பொருளாயத ஒருமையை, இயற்கைப் பரிணாமங்களின் இயக்கவியல் குணாம்சத்தை மேன்மேலும் தெளிவாகப் புலப்படுத்திக் காட்டியது.

இயக்கவியல் பொருள்முதல்வாதக் கருத்துக்களின் உருவாக்கத்திற்கு 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஏற் பட்ட மூன்று மகத்தான கண்டுபிடிப்புக்கள் குறிப்பிடத் தக்க முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். 1842—1845ல் ஜெர்மானிய பௌதிக நிபுணர் ஜூலியஸ் ராபர்ட் மாயர் சக்தியின் அழியாமையையும் மாற்றத்தையும் பற்றிய விதி யைக் கண்டுபிடித்தார். மாயருடைய உதவியின்றியே இவ் விதியை பிரிட்டிஷ் பௌதிக விஞ்ஞானிகளான வில்லியம் ஆர். குரோவ், ஜேம்ஸ் பி. ஜூல், டேனிஷ் பொறியிய லாளர் லுட்விக் ஏ. கோல்டிங், ருஷ்ய விஞ்ஞானி ஹைன் ரிஹ் லென்ஸ் ஆகியோரும் கண்டுபிடித்தனர். இயக்கியல் சக்தி, வெப்பம், ஒளி, மின்சாரம், காந்தம், இரசாயன நிகழ்வுகள், அதாவது பருப்பொருளின் இயக்கத்தின் வெவ் வேறு வடிவங்கள் தனித்தனியானவை அல்ல, அவை உட் தொடர்பு கொண்டவை; அவை திட்டவட்டமான நிலை மைகளில் சக்தி இழப்பின்றி ஒன்று மற்றொன்றாக மாற்ற மடைகின்றன என்பதை இவ்விதியின் கண்டுபிடிப்பு எடுத்துக் காட்டியது. சக்திக்கு மூலமும் இல்லை, அழிவும்

* Frederick Engels, *Dialectics of Nature*, Moscow, Progress Publishers, 1974, p. 196.

இல்லை; ஆனால் சக்தியின் ஒரு வடிவம் மற்றொரு வடிவமாக மாற்றமடைவது மட்டும் தொடர்ச்சியாக நடைபெறுகிறது என்று இக்கண்டுபிடிப்பு நிரூபித்தது. இவ்விதியை இயற்கையின் தனிமுதலான விதி என்று எங்கெல்ஸ் குறிப்பிட்டார், இதுவே உலகத்தைப் பற்றிய இயக்கவியல் பார்வையின் இயற்கை விஞ்ஞான அடிப்படையாகும்.

தாவரங்கள் மற்றும் மிருகங்களின் உலகத்தைப் பற்றிய விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் இயக்க மறுப்பியல் கண்ணோட்டத்தை ஒழிக்கின்ற அளவுக்கு முன்னேறியது. 1830க்களில் ருஷ்ய இயற்கை ஆராய்ச்சியாளர் பாவெல் கோர்யானினோவ், செக் நாட்டு உயிரியல் வல்லுநர் யான் புர்க்கின், ஜெர்மானிய தாவரவியல் வல்லுநர்களான மாத்தியாஸ் ஜாக்கப் ஷ்லெய்டன், தியோடர் ஷ்வான் ஆகியோர் தாவரங்கள் மற்றும் மிருகங்களின் உயிரணுக் கட்டமைப்பைப் பற்றிய தத்துவத்தின் ஆய்வியலை முடித்தனர். இந்தத் தத்துவம் தாவரங்களுக்கும் மிருகங்களுக்கும் வேறுபட்ட உயிரினங்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையைக் காணத் தவறிய பழைய இயக்க மறுப்பியல் கருதுகோள்களை ஒழித்தது. அது தாவரங்களுக்கும் மிருகங்களுக்கும் உள்ள உறுப்புக்களின் ஒரே மாதிரியான கட்டமைப்பை நிலைநிறுத்திக் காட்டி, அவற்றின் வளர்ச்சியின் பரிணாமத்தை விளக்கி, உயிரியல் மேலும் வளர்ச்சியடைய வழிவகுத்தது.

இயற்கையின் இயக்கவியலை வெளிப்படுத்திக் காட்டுவதில் மாபெரும் பாத்திரத்தை வகித்த இயற்கை விஞ்ஞானத் துறையில் மூன்றாவது மகத்தான கண்டுபிடிப்பு பிரிட்டிஷ் விஞ்ஞானியான சார்ல்ஸ் டார்வினுடையது ஆகும். இயற்கை மற்றும் செயற்கைச் சூழல்களில் தாவரங்கள் மற்றும் மிருகங்களின் வாழ்க்கையை ஆராய்ந்து

பெற்ற எண்ணற்ற விவரங்களின் அடிப்படையில் டார் வின் உயிரினங்கள் நிலையான தன்மையுடையவை அல்ல, மாறும் தன்மை உடையன என்ற முடிவுக்கு வந்தார். வாழ் கின்ற அனைத்து உயிரினங்களும் முந்தைய உயிரினங்களி லிருந்து இயற்கையான வழியில் தோன்றியவையே என் பதை அவர் உறுதியாகப் புலப்படுத்திக் காட்டினார். டார் வின் கூற்றுப்படி தாவர, மிருக உயிரினங்கள் இயற்கை மற்றும் செயற்கையான தேர்வின் விளைவாக மாறியுள் ளன. ''மிருக மற்றும் தாவர உயிரினங்கள் தொடர்பில் லாதவை சந்தர்ப்ப வசத்தால் தோன்றியவை, 'கடவு ளால் உற்பத்தி செய்யப்பட்டவை', மாறாத் தன்மை படைத்தவை என்ற கருத்துக்கு டார்வின் முடிவு கட்டி னார். உயிரினங்களின் மாறும் தன்மையையும் அவற்றின் பரம்பரையான வளர்ச்சியையும் நிறுவி உயிரியலை முற்றிலும் விஞ்ஞான அடிப்படையில் நிறுவிய முதல்வர் அவரே.''*

எனவே சக்தியின் அழியாமையையும் மாற்றத்தை யும் பற்றிய விதி, பருப்பொருளும் இயக்கமும் நிரந்தர மானவை, உற்பத்தி செய்ய முடியாதவை, அழிக்கப்பட முடியாதவை என்னும் பொருள்முதல்வாதத்தின் தலை யாய கருதுகோளை மீண்டும் உறுதிப்படுத்தியது. இந்த விதி பருப்பொருளின் இயக்கத்தின் வடிவங்களின் ஒற்றுமையையும் வேற்றுமையையும், அவற்றின் பரஸ்பர உருமாற்றத்தின் நியதிகளையும் காட்டியது. அனைத்து உயிரினங்களும் உயிரணுக் கட்டமைப்பைக் கொண்டிருப் பதைக் கண்டுபிடித்தது தாவரங்களுக்கும் பிராணிகளுக் கும் இடையிலிருந்த தடைச்சுவர்களை நொறுக்கி வளர்ச்சி யின் பொதுவான விதிகளால் நிர்ணயிக்கப்பட்ட உயிரின

* V. I. Lenin, *Collected Works*, Vol. 1, p. 142.

உலகத்தின் ஒற்றுமையை நிரூபித்தது. உயிரின உலகம் தொடர்ச்சியாக மாறிக்கொண்டே வளர்ந்து வருகிறது என்பதை டார்வினுடைய பரிணாம வளர்ச்சித் தத்துவம் எடுத்துக் காட்டுகிறது. இத்தத்துவத்தின்படி இப்போதுள்ள தாவரங்கள் மற்றும் மிருக இனங்கள் எல்லாம் நெடுங்காலப் பரிணாம வளர்ச்சியின் விளைவே. எல்லா உயர்வான, சிக்கலான உயிரினங்களும் கீழ்மட்ட, எளிமையான உயிரினங்களிலிருந்து வளர்ச்சியுற்றவையே, மனிதனும் விலங்குலகத்தின் நெடுங்காலப் பரிணாம வளர்ச்சியிலிருந்து தோன்றியவனே என்பதை டார்வின் விஞ்ஞான ரீதியாக நிரூபித்தார். இப்பரிணாம வளர்ச்சித் தத்துவம் இயக்கவியலின் அடிப்படையான கருத்தை, வளர்ச்சி பற்றிய கருத்தை, எளிமையானவற்றிலிருந்து சிக்கலானவற்றுக்கு மாறுவதைப் பற்றிய, கீழ்நிலையானவற்றிலிருந்து உயர்நிலையானவற்றுக்கு மாறுவதைப் பற்றிய கருத்தை மீண்டும் உறுதிப்படுத்தியது.

வேறு விதமாகக் கூறுவதென்றால் 19ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் இயற்கை விஞ்ஞானத்தில் ஏற்பட்ட சாதனைகள் பொருள்முதல்வாதத்தின் தலையாய கருதுகோள்களையும் இயக்கவியல் கோட்பாடுகளையும் வகுத்தளித்து நிரூபிப்பதைச் சாத்தியமாக்கின.

3. தத்துவார்த்த முன்தேவைகள். சமூக வரலாற்று நிலைமைகள் மற்றும் இயற்கை விஞ்ஞானங்களின் வளர்ச்சியால் நிர்ணயிக்கப்பட்ட மார்க்சியத் தத்துவஞானம் அதன் காலத்து தத்துவஞான சிந்தனையை ஆதாரமாகக் கொண்டிருந்தது. பல நூற்றாண்டுகளாகத் தத்துவஞானிகள் வகுத்தளித்த சீரிய, முற்போக்கான கருத்துக்கள் அனைத்தையும் அது தொடர்ந்து விரிவுபடுத்தியது. இதன்

பொருள் என்னவென்றால் 19ம் நூற்றாண்டின் முதற்பாதி இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத் தின் முகிழ்ச்சிக்கான தத்துவார்த்த முன்தேவைகளின் உருவாக்கத்தைக் கண்டது என்பதே. 19ம் நூற்றாண் டின் மூலச்சிறப்புள்ள ஜெர்மானியத் தத்துவஞானத்தில், எல்லாவற்றிற்கும் மேலாக ஹெகல், ஃபாயர்பாஹ் ஆகி யோரது தத்துவங்களில் இருந்த முற்போக்குக் கருத்துக் கள் மார்க்சியத் தத்துவஞானத்தின் உடனடித் தத்து வார்த்த தோற்றுவாய்களாகும்.

புரட்சிகரமான பாட்டாளி வர்க்க நிலைபாட்டிலிருந்து ஹெகலின் இயக்கவியல், ஃபாயர்பாஹின் பொருள்முதல் வாதம் ஆகியவற்றைப் பற்றிய விமர்சன ரீதியான பரி சீலனையின் போக்கில்தான் மார்க்ஸ், எங்கெல்சின் தத்துவ ஞானக் கருத்துக்கள் உருப்பெற்றன.

தங்களது இளமைக் காலத்தில் மார்க்சும் எங்கெல் சும் ஹெகலின் தத்துவஞானத்தில் மிகுந்த ஆர்வம் காட் டினர். ஹெகல் ஒரு புறநிலையான கருத்துமுதல்வாதி. ஆனால் அவர் கருத்துமுதல்வாதத்தை அடிப்படையாகக் கொண்டு இயக்கவியலை ஆழமான முறையில் வளர்த் தார்.

ஹெகல் இயக்கவியலின் பிரதான கோட்பாடுகள், விதிகள் மற்றும் வகையினங்களை வகுத்தளித்தார். கருத் துக்கள் கீழான வடிவங்களிலிருந்து உயர்ந்த வடிவங் களுக்கு முன்னேற்றகரமாக வளர்ச்சி அடைகின்றன; இத் தகைய வளர்ச்சிப் போக்கில் அளவு மாற்றங்கள் பண்பு மாற்றங்களாகப் பரிணமிக்கின்றன; உள்முரண்பாடுகள் வளர்ச்சியின் தோற்றுவாய்கள் ஆகின்றன என்பதை அவர் எடுத்துக் காட்டினார். அவர் இயக்கவியலின் முக்கிய வகையினங்களில் உள்ள உட்தொடர்புகளையும் பரஸ் பரம் மாறும் தன்மையையும் எடுத்துக் காட்டினார்.

ஆனால் அவரது இயக்கவியல் கருத்துமுதல்வாதமாகும்; அது மனிதனுக்கு, பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்ட உணர்வின் அல்லது ''தனிமுதல் கருத்து'', ''உலக ஆன்மாவின்'' இயக்கவியல். மேலும் ஹெகல் கடந்தகாலத்தைப் பற்றிய பகுப்பாய்வுக்கு மட்டுமே இயக்கவியலின் விதிகளைப் பயன்படுத்தினார், எதிர்காலத்துக்கு அவற்றைப் பயன் படுத்தவில்லை.

மார்க்சும் எங்கெல்சும் புரட்சிகரமான ஜனநாயக நிலையைப் பின்பற்றி உழைக்கும் மக்களின் நலன்களை உறுதியாக ஆதரித்தார்கள். அது மக்களிடையே உள்ள உறவுகளில் பொருளாதார நலன்களின் தீர்மான கரமான பாத்திரத்தைப் புரிந்து கொள்வதற்கு அவர்களை இட்டுச் சென்றது. உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமைதான் சமூக ஏற்றத்தாழ்வுக்கும் வர்க்கப் போராட்டத்துக்கும் மூல காரணம் என்று அவர்கள் உணர்ந்தனர். இவையனைத்தும் ஹெகலின் தத்துவஞானத்தில் உள்ள கருத்துமுதல்வாத அடிப்படைகளை அரித் தழித்தன.

மார்க்ஸ், எங்கெல்சின் கருத்துக்களை உருவாக்குவதில் ஃபாயர்பாஹின் பொருள்முதல்வாதம் முக்கியமான பாத்திரத்தை வகித்தது. ஃபாயர்பாஹ் கருத்துமுதல்வாதத்தையும் மதத்தையும் உறுதியான முறையில் நிராகரித்தார். தத்துவஞானம் இயற்கையையும் மனிதனையும் ஆராய்ந்து அறிய வேண்டுமென்று அவர் கூறினார்; இயற்கையின் நெடுங்காலத்திய வளர்ச்சியின் உற்பத்திப் பொருளே மனிதன் என்று அவர் கருதினார். உணர்வு இயற்கையைப் பிரதிபலித்து அறிகிறது என்று அவர் நம்பினார். ''தனிமுதல் கருத்து'', ''உலக ஆன்மா'' உலகத்தைப் படைத்து ஒழுங்குபடுத்துகிறது என்கின்ற

ஹெகலின் கருத்து மாயாவாதம் என்று அவர் வர்ணித்தார். கடவுள் உலகத்தைப் படைக்கவில்லை, மனிதர்கள் தாங்கள் வாழ்கின்ற நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் தங்களுடைய சொந்த உருவங்களைப் போலவே கற்பனையில் கடவுளரைப் படைக்கிறார்கள் என்று அவர் வாதிட்டார்.

கருத்துமுதல்வாதத் தத்துவஞானத்தைப் பற்றி ஃபாயர்பாஹின் விமர்சனம் மார்க்சும் எங்கெல்சும் உறுதியான பொருள்முதல்வாத நிலையைக் கடைப்பிடிப்பதற்கு உதவி செய்தது. ஆனால் அவர்கள் ஃபாயர்பாஹை அப்படியே பின்பற்றவில்லை. ஏனென்றால் அவருடைய பொருள்முதல்வாதம் இயக்க மறுப்பியலின் பால் பட்டது. மேலும் அவரது தத்துவஞானம் சமூக, அரசியல் போராட்டங்களை உள்ளடக்கியிருக்கவில்லை, நடைமுறை வகிக்கின்ற பாத்திரத்தைக் காட்டவில்லை.

ஹெகலின் இயக்கவியலை விமர்சன ரீதியில் மறுபரிசீலனை செய்த மார்க்சும் எங்கெல்சும் அதிலிருந்த கருத்துமுதல்வாதத்தை அகற்றி, யதார்த்தமான உலகத்தை அறிவதற்கும் அதைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்கும் பயன்படுத்தினார்கள். அதே சமயத்தில் ஃபாயர்பாஹின் பொருள்முதல்வாதத்தை விமர்சன ரீதியில் மறுபரிசீலனை செய்த மார்க்சும் எங்கெல்சும் அதிலிருந்த இயக்க மறுப்பியல் மற்றும் ஊகச் சிந்தனை முறையை அகற்றி அதைத் தொழிலாளி வர்க்கம் மற்றும் இதர உழைக்கும் மக்களின் விடுதலைப் போராட்டத்துடனும் வாழ்க்கையுடனும் தொடர்பு கொள்ளுமாறு செய்தனர்.

மார்க்சும் எங்கெல்சும் நிறைவேற்றிய தத்துவஞானப் புரட்சியின் சாராம்சம்

மார்க்சும் எங்கெல்சும் உருவாக்கிய தத்துவம் தத்துவஞான வரலாற்றில் ஒரு அடிப்படையான புரட்சியை,

விஞ்ஞான வளர்ச்சியில் ஒரு மெய்யான புரட்சியை ஏற்படுத்தியது.

அந்தப் புரட்சியின் சாராம்சத்தை எடுத்துக் கூறுவது மார்க்சும் எங்கெல்சும் தத்துவஞான சிந்தனையில் அறிமுகப்படுத்திய புதிய கூறுகளையும் அவர்களுடைய போதனைக்கும் முந்திய தத்துவஞானங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளையும் குறிப்பிடுவதாகும்.

அவர்களுடைய தத்துவத்தின் சமூக உள்ளடக்கத்தில் தான் முக்கியமான வேறுபாடு உள்ளது. உடனடியான தத்துவஞானக் கேள்விகள் அனைத்துக்கும் மார்க்சும் எங்கெல்சும் தொழிலாளி வர்க்கம் மற்றும் இதர உழைக்கும் மக்களின் நலன்கள் என்ற நிலையிலிருந்து விடை அளித்தார்கள். அது புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் உலகக் கண்ணோட்டத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்ற உண்மையில்தான் அவர்களது தத்துவத்தின் பிரதான சமுதாய முக்கியத்துவம் உள்ளது.

புரட்சிகர ஜனநாயகவாதிகளின் தத்துவஞானம் நீங்கலாக அனைத்து முந்திய தத்துவஞானங்களும் ஒரு வடிவத்திலோ அல்லது மற்றொரு வடிவத்திலோ உடைமை வர்க்கங்களது சமுதாயத் தேவைகளையும் நலன்களையும் பிரதிபலித்தன. மார்க்சும் எங்கெல்சும் ஒரு புதிய தத்துவஞானத்தைப் படைத்தளித்தனர். அது உழைக்கின்ற, சுரண்டப்படுகின்ற மக்களின் அடிப்படையான வர்க்க நலன்களை வெளிப்படுத்தியது. மார்க்சியத் தத்துவஞானம் உழைக்கும் மக்களுக்கு ஒரு சித்தாந்த ஆயுதமாகும், அவர்களது பொருளாதார மற்றும் ஆன்மீக அடிமைத் தனத்திற்கு முடிவு கட்டி சமுதாய விடுதலைக்கான வழியைக் காட்டும் தத்துவஞானமாகும். ''தத்துவஞானம் தனது **பொருளாயத** ஆயுதங்களைப் பாட்டாளி வர்க்கத்திடம் காண்கிறது. அதே போல பாட்டாளி வர்க்

கம் தனது ஆன்மீக ஆயுதங்களைத் தத்துவஞானத்தில் காண்கிறது.''* எனவே, தொழிலாளி வர்க்கம் மற்றும் இதர உழைக்கும் மக்கள் ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்கான போராட்டத்தில், சோஷலிச நிர்மாணத்திற்கான போராட்டத்தில் புரட்சிகர பாட்டாளி வர்க்கம் மார்க்சியத் தத்துவஞானத்தைத் தனது சித்தாந்த ஆயுதமாகக் கொண்டது.

நடைமுறையோடு, உழைக்கும் மக்களில் மிகப் பெரும்பான்மையினருடைய நலன்களுக்காக உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதோடு நெருங்கிய இணைப்பு மார்க்சும் எங்கெல்சும் வளர்த்த தத்துவஞானத்தின் முக்கியமான பிரத்யேக அம்சமாகும். ''தத்துவஞானிகள் உலகத்தைப் பல்வேறு வழிகளில் வியாக்கியானம் மட்டுமே செய்தனர்; முக்கியம் என்னவென்றால் அதை மாற்றியமைப்பதுதான்'' என்று மார்க்ஸ் இந்தப் பிரத்யேக அம்சத்தைக் குறிப்பிட்டு எழுதினார்.** ஆனால் உலகத்தை மாற்றியமைப்பதற்கு அதன் வாழ்நிலை மற்றும் வளர்ச்சியின் விதிகளை நன்கு அறிந்து அவற்றைப் பயன்படுத்துவதற்குரிய திறமை வேண்டும். அது ஒரு கறாரான விஞ்ஞானத் தத்துவஞானத்தை, ஒரு ஆழ்ந்த விஞ்ஞான உலகக் கண்ணோட்டத்தைக் கோருகிறது.

மார்க்சும் எங்கெல்சும் தங்களது தத்துவஞானத்தில் இந்த இலட்சியத்தைப் பின்வரும் முறையில் நிறைவேற்றினார்கள்.

முதலாவதாக, அவர்கள் பொருள்முதல்வாதத்தை

---

* K. Marx, F. Engels, *Collected Works*, Moscow, Progress Publishers, Vol. 3, p. 187.

** கா. மார்க்ஸ், பி.எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், தொகுதி 1, 1983, பக்கம் 11.

யும் இயக்கவியலையும் ஒன்றுபடுத்தினார்கள். அவர்களுக்கு முன்பு பொருள்முதல்வாதமும் இயக்கவியலும் முரண்பாடுகளைக் கொண்டிருந்தன; பொருள்முதல்வாதம் தன்னிச்சையாக எழுந்ததாகவோ அல்லது இயக்க மறுப்பியல்பானதாகவோ, யாந்திரிகமானதாகவோ இருந்தது; இயக்கவியல் கருத்துமுதல்வாதமாக இருந்தது.

மார்க்சும் எங்கெல்சும் ஆக்க பூர்வமான முறையில் பொருள்முதல்வாதத்தை இயக்க மறுப்பியலிலிருந்து விடுவித்தும், இயக்கவியலைக் கருத்துமுதல்வாதத்திலிருந்து விடுவித்தும் மறுபரிசீலனை செய்தனர். லெனின் குறிப்பிட்டது போல் அவர்கள் பொருள்முதல்வாதத்தை இயக்கவியலோடு சேர்த்து செழுமைப்படுத்தி இயக்கவியலை ஒரு உண்மையான அடிப்படையில் வைத்தனர். இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் தோற்றம் என்பது ஒரு உண்மையான விஞ்ஞான உலகக் கண்ணோட்டத்தின், மிக ஆழமான அறிவியல் தத்துவஞானத்தின் தோற்றம் எனப் பொருளாகும்.

இரண்டாவதாக, மார்க்சும் எங்கெல்சும் பொருள்முதல்வாதத்தையும் இயக்கவியலையும் சமுதாய வாழ்க்கையைக் கற்றறிந்து அதற்கு விளக்கம் அளிப்பதற்கு ஏற்ப விரிவுபடுத்தினர். முந்திய பொருள்முதல்வாதிகள் முரண்பாடான நிலையில் இருந்தனர். இயற்கை நிகழ்வுகளுக்கு மட்டுமே பொருள்முதல்வாத விளக்கம் அளித்தனர். சமுதாயப் புலப்பாடுகளுக்கும் நிகழ்வுப் போக்குகளுக்கும் விளக்கம் அளிப்பதில் கருத்துமுதல்வாதமே கோலோச்சியது. சமுதாயத்தைப் பொருள்முதல்வாத ரீதியில் விளக்குகின்ற பொழுது பொருள்முதல்வாதம் விஞ்ஞான ரீதியாக மட்டுமல்லாது, முரண்பாடில்லாததாகவும் முழு நிறைவானதாகவும், ஒரே சமயத்தில் இயக்கவியல் ரீதியிலும் வரலாற்று ரீதியிலும் உள்ளது.

இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தைப் படைத்தளித்ததன் மூலம் மார்க்சும் எங்கெல்சும் தத்துவஞானத்தில் ஒரு புரட்சியை நிகழ்த்திக் காட்டினர். உலகத்திற்கும் அதன் மாறுதல் மற்றும் வளர்ச்சி விதிகளுக்கும் ஒரு விஞ்ஞான விளக்கம் அளித்த இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் ஒரு விஞ்ஞான உலகக் கண்ணோட்டம் மட்டுமின்றி, யதார்த்தத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கின்ற வழியுமாகும்.

மார்க்சியத் தத்துவஞானத்தின் படைப்பாற்றல் இயல்பு

இயக்கவியல், வரலாற்றுப் பொருள்முதல்வாதம் சாராம்சத்தில் படைப்பாற்றல் இயல்பு உடையதாகும். அதற்கு கீழ்க்கண்டவை காரணிகளாகும். முதலாவதாக, தொடர்ச்சியாக மாறுகின்ற, வளர்கின்ற உலகத்தை விளக்குகையில் அதுவும் வளர்கிறது; மாறுகின்ற வரலாற்று நிலைமைகளுக்கு ஏற்ப அது தன்னையும் முழு நிறைவாக்கிக் கொள்கிறது, புதிய விஞ்ஞான மெய்விவரங்களுடனும் நடைமுறைப் புரட்சி அனுபவங்களுடனும் தன்னைச் செழுமைப்படுத்திக் கொள்கிறது. இரண்டாவதாக, இயக்கவியல், வரலாற்றுப் பொருள்முதல்வாதம் வளர்ந்து கொண்டே செல்வதற்குக் காரணம், அது தொழிலாளி வர்க்கம் மற்றும் இதர உழைக்கும் மக்களின் கைகளில் அவர்களது புரட்சிகரப் போராட்டத்தில் ஒரு தத்துவ ஆயுதமாக விளங்குகிறது; விஞ்ஞான ரீதியாக அறிதல் மற்றும் உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதில் சக்தி மிக்க கருவியாக விளங்குகிறது. இந்தப் பாத்திரத்தை நிறைவேற்றுவதற்கு அது வாழ்க்கையோடு, புரட்சி

கர நடைமுறையோடு எப்பொழுதும் தொடர்பு வைத்திருக்க வேண்டும்; அனைத்து நடைமுறை வினாக்களுக்கும் விடையளித்து அனைத்துப் புதியவற்றையும் தாமதமின்றி கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும், அப் புதியவற்றை நோக்கி மக்களை வழி நடத்திச் செல்ல வேண்டும். மூன்றாவதாக, இயக்கவியல், வரலாற்றுப் பொருள்முதல்வாதம் விமர்சனத்தையும் சுய விமர்சனத்தையும் கொண்டிருப்பதால் அது படைப்பாற்றல் உடையதாகும். அது யதார்த்தத்திற்கு ஒத்திருக்கின்ற, சமுதாய முன்னேற்றத்தின் தேவைகளுக்குரிய, சமுதாயத்தைப் புரட்சிகரமான முறையில் புனரமைப்பதற்குரிய முடிவுகளையும் கருதுகோள்களையும் மட்டுமே தக்க வைத்துக் கொள்கிறது. இயக்கவியல், வரலாற்றுப் பொருள்முதல்வாதம் வறட்டுக் கோட்பாடாக இல்லாமல் செயலுக்கு வழிகாட்டியாக இருப்பதே அதற்குப் படைப்பாற்றலைத் தருகிறது என்று அதன் மூலவர்கள் கூறினார்கள்.

மார்க்சினாலும் எங்கெல்சினாலும் கண்டுபிடிக்கப் பட்ட இயக்கவியல், வரலாற்றுப் பொருள்முதல்வாதம் லெனின் மற்றும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியினாலும், சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் இயக்கங்களாலும் ஆக்க பூர்வமாக வளர்க்கப்பட்டது.

19ஆம் நூற்றாண்டின் கடைசியிலும் 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் கருத்துமுதல்வாதம் மற்றும் இயக்க மறுப்பியலை எதிர்த்த ஒரு போராட்டத்தில் லெனின் இயக்கவியல் பொருள்முதல்வாத உலகக் கண்ணோட்டத்தின் உண்மையை உயர்த்திப் பிடித்து விஞ்ஞான ரீதியில் நிரூபித்துக் காட்டினார். அந்த உலகக் கண்ணோட்டத்தின் முக்கிய கோட்பாடுகளை அவர் அனைத்து வழிகளிலும் மெய்ப்பித்தார், வளர்த்துச் சென்றார். மேலும் அவர் பொருள்முதல்வாத இயக்கவியலின்

அடிப்படைக் கோட்பாடுகள், விதிகள் மற்றும் வகையினங்களை விரிவாக்கி உறுதி செய்தார். உலகத்தின் விஞ்ஞான அறிவாற்றல் கூறுடன் அதன் புரட்சிகர நடைமுறை மாற்றத்தையும் பிணைத்து அவர் அறிதலைப் பற்றிய இயக்கவியல் பொருள்முதல்வாதத் தத்துவத்தை ஆக்க பூர்வமாக வளர்த்தார்.

மார்க்ஸ், எங்கெல்சின் தத்துவஞானத்தை ஆக்க பூர்வமாக வளர்த்துக் கொண்டே லெனின் அதன் கோட்பாடுகளையும் செயல்படுத்தினார். சமுதாய வளர்ச்சியின் நியதிகளின் பால் அவர் முழுதளாவிய பகுப்பாய்வை வழங்கினார். மானுட வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகளின் தீர்மானமான முக்கியத்துவத்தை நிறுவி, அதே சமயத்தில் புரட்சிகரத் தத்துவத்தின் மாபெரும் பாத்திரத்தையும் எடுத்துக் காட்டினார். அந்தத் தத்துவத்தின் கோட்பாடுகளின் அடிப்படையில் அவர் ஒரு கட்சியை நிறுவினார். அந்தக் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் தொழிலாளி வர்க்கமும் இதர உழைக்கும் மக்களும் ஒன்று திரண்டு ருஷ்ய நாட்டில் முதலாளித்துவத்தை ஒழித்துக் கட்டி, உலகத்தின் முதல் சோஷலிச அரசை நிர்மாணித்தனர்.

புதிய வரலாற்று நிலைமைகளில் சோஷலிசப் புரட்சித் தத்துவத்தை வளர்த்துச் செல்லும் பொழுது, ஒரு புரட்சி முதலில் சில நாடுகளிலும் அல்லது ஒரே ஒரு நாட்டில்கூட வெற்றி பெற முடியும் என்று லெனின் நிரூபித்துக் காட்டினார். அந்த முடிவை வரலாறு முழுமையாக மீண்டும் உறுதிப்படுத்தியது.

இந்தத் தத்துவத்தை விரிவாக்கும் பொழுது லெனின் முதலாளி வர்க்கத்தை எதிர்த்த பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தை, தேசிய விடுதலைக்காகவும் சமுதாய நீதிக்காகவும் அடிமைப்பட்ட மக்களினங்கள் நடத்

தும் விடுதலைப் போராட்டத்துடன் இணைக்க வேண்டியதன் அவசியத்தை மெய்ப்பித்தார். காலனி அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு யுக யுகாந்திரங்களாக நிலவும் பிற்பட்ட தன்மையை ஒழிப்பதற்குப் பாடுபடுகின்ற நாடுகள் சோஷலிசத்திற்கு மாறுவதற்கான சாத்தியத்தையும் நிலைமைகளையும் அவர் மெய்ப்பித்தார்.

மார்க்சும் எங்கெல்சும் முன்வைத்த பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கருத்தையும் லெனின் விரித்துரைத்தார். அதன் சாரம், கடமைகள், பொறியமைவு முதலியவற்றை விளக்கி மேற்கொண்ட வளர்ச்சிக்கு வழிகளைக் காட்டி சோஷலிசத்திற்கு மாறுகின்ற கட்டத்தில் அதன் அவசியத்தை எடுத்துக் காட்டினார். உழைக்கும் மக்களின் புரட்சிகர அனுபவத்தின் அடிப்படையில் அவர் ருஷ்ய நாட்டில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மிகவும் உசிதமான வடிவத்தைக் கண்டுபிடித்தார்; இதர வடிவங்களின் சாத்தியக் கூறுகளையும் காட்டினார்.

லெனினும் அவரது நடவடிக்கைகளும் மனிதகுல வாழ்க்கையில் ஒரு முழுமையான புரட்சிகர சகாப்தத்தைக் குறிப்பனவாகும். வரலாற்று நடைமுறையின் மொத்தமும் அவரது போதனையின் உண்மையை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்து விட்டது.

மார்க்சியத் தத்துவஞானத்தின் வளர்ச்சியில் லெனினியக் கட்டம் லெனினது சகாக்களின், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இதர நாடுகளின் மார்க்சிய-லெனினியக் கட்சிகளது தலைவர்களின் படைப்புக்களையும், உலகெங்கிலுமுள்ள மார்க்சிய-லெனினியத் தத்துவஞானிகளின் ஆராய்ச்சிகளையும் உள்ளடக்கியதாகும். அதன் வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் மார்க்சிய-லெனினியம் ஆக்க பூர்வமான வழியில் தனது தத்துவத்தையும் முறையியலையும் வளர்த்துக் கொண்டுள்ளது,

புதிய விஞ்ஞான அறிவு மற்றும் புரட்சிகர அனுபவத்தினால் செழுமைப்படுத்திக் கொள்கிறது, உலகில் மேலும் மேலும் அதிகமான ஆதரவாளர்களை வென்றெடுக்கிறது. இக்காலத்தில் அதன் வளர்ச்சி முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறுகின்ற காலகட்டத்தில் உலகின் முற்போக்குச் சக்திகளின் புரட்சிகரப் போராட்டக் கடமைகளை, பல நாடுகளின் சோஷலிச நிர்மாண நடைமுறை அனுபவத்தை, இன்றுள்ள சோஷலிசத்தின் வரலாற்று அனுபவத்தைச் சார்ந்திருக்கிறது

இயக்கவியல், வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் தத்துவமும் முறையியலும் மனிதகுலத்தின் சமுதாய முன்னேற்றம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், உலக சோஷலிஸ்ட் குடும்பத்தின் வளர்ச்சிக்குரிய நியதிகளுக்கும், புதிதாக விடுதலை பெற்ற நாடுகளின் சோஷலிசத் திசையிலான வளர்ச்சிக்கும், மாறுபட்ட சமுதாய அமைப்புக்களைக் கொண்ட நாடுகளின் சமாதான சகவாழ்வுக்கும், உலகத்தில் வெப்ப அணு யுத்தத்தைத் தடுப்பதற்கான சாத்தியப்பாடுகளுக்கும், விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகளை மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்துவதற்கும், இயற்கை வளங்களை முறையாகப் பயன்படுத்தி சுற்றுப்புறச் சூழல் நிலைமைகளைப் பாதுகாக்கவும் மற்றும் பல சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் எடுக்கப்பட்ட ஆக்க பூர்வமான முயற்சிகளின் மூலம் மேலும் வளர்த்துச் செல்லப்பட்டுவருகின்றன. மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் முகிழ்ச்சியைப் போன்றே அதன் வளர்ச்சியின் ஒவ்வொரு புதிய கட்டமும் புரட்சிகர மாற்றம் மற்றும் விஞ்ஞான முன்னேற்றத்தின் உடனடிப் பிரச்சினைகளுக்கான தீர்வின் வரலாற்று அவசியம் என்னும் பொதுவான நியதியைப் பிரதிபலிக்கிறது.

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் படைப்பு ரீதியான வளர்ச்சிப் பிரச்சினை முன்னரும் இப்பொழுதும் தீவிர சித்தாந்தப் போராட்டத்தின் மையமாகத் திகழ் கிறது. மார்க்சிய-லெனினியத்தின் விரோதிகள்—பூர்ஷ்வா சித்தாந்தகர்த்தாக்களும் அனைத்து வகையான திருத்தல் வாதிகளும் அந்த ஒருங்கிணைந்த போதனையை ஒழித் துக்கட்ட முயல்கிறார்கள். அவர்கள் இள வயது மார்க் சின் கருத்துக்களை முதிர்ச்சியடைந்த மார்க்சின் கருத் துக்களுடன், மார்க்சின் சொந்தக் கருத்துக்களை எங் கெல்சின் கருத்துக்களுடன், மார்க்சியத்தை லெனினியத் துடன் வேறுபடுத்திக் காட்டுகிறார்கள். அவர்கள் மார்க் சிய-லெனினியத்தை ''மேலை நாட்டுத் தத்துவம்'', ''கீழை நாட்டுத் தத்துவம்'' என்று பூகோள ரீதியிலும் பிரிக்க முயல்கிறார்கள். ''ஐரோப்பிய'', ''ஆசிய'', ''லத்தீன் அமெரிக்க'', ''ஆப்பிரிக்க'' மாடல் மார்க்சிய-லெனினியம் என்று உருவாக்க முயல்கிறார்கள்.

ஆனால் மார்க்சிய-லெனினியத்தின் படைப்பாற்றல் காரணமாக இந்த முயற்சிகளனைத்தும் தோல்வியடை வதைத் தவிர வேறு வழியில்லை. அந்தப் போதனையின் மெய்மையையும் வரலாற்று ரீதியான தொடர்ச்சியை யும், சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் மற்றும் அனைத்து உழைக்கும் மக்களின் அடிப்படை நலன்களை உயர்த்திப் பிடித்துக் காத்தலில் அதன் கோட்பாட்டு உறுதியையும் வாழ்க்கையும் சமுதாய நடைமுறையுமே எடுத்துக் காட்டு கின்றன. ஒரு உலகக் கண்ணோட்டம் மற்றும் முறையியல் என்ற வகையில் மார்க்சிய-லெனினியம் அதன் ஆழமான விஞ்ஞான இயல்பின், சார்புநிலை இயல்பின் அசைக்க முடியாத பலத்தைக் காட்டுகிறது.

அத்தியாயம் நான்கு

பருப்பொருளும் அதன் வாழ்நிலையின் வடிவங்களும்

தத்துவஞானத்தின் அடிப்படையான கேள்விக்கு ஒரு ஆழமான, மெய்ப்பிக்கப்பட்ட விஞ்ஞான ரீதியான விடை தருவதென்றால் பருப்பொருள் மற்றும் உணர்வின் இயல்பு பற்றிய அறிவை முன்னதாகக் கொள்ள வேண்டியிருக் கிறது. பொருள்முதல்வாதத் தத்துவஞானத்தில் பருப் பொருள் பற்றிய கருத்தமைவு ஆரம்பத் திருப்பு முனை யாகும். பருப்பொருள் மற்றும் அதன் வாழ்நிலையின் வடிவங்களை நாம் தீர்க்கமாகப் பரிசீலிப்போம்.

பருப்பொருள் என்றால் என்ன?

மனிதன் எண்ணற்ற வகையிலான பொருட்கள் மற்றும் புலப்பாடுகளினால் சூழப்பட்டிருக்கிறான். அவை கண் ணுக்குத் தெரியாத அணுத் துகள்களிலிருந்து மாபெரும் நட்சத்திர மண்டலங்கள் வரை, சாதாரண கிருமிகளி லிருந்து உயர்மட்ட மிருகங்கள் வரை, அசேதன உலகின் எளிமையான இயக்கியல் நிகழ்வுப் போக்குகளிலிருந்து யதார்த்தத்தை மாற்றுவதைக் குறிக்கோளாகக் கொண்ட உணர்வு பூர்வமான மனித நடவடிக்கை வரை பரவிப் படர்ந்துள்ளன. புராதன காலம் தொட்டு உலகத்தின் வேறு பட்ட தன்மையினது மூலத்தைக் கண்டுபிடிக்க, அதன் வாழ்நிலைக்கான அடிப்படையைக் காண மனிதன் முயன்று வருகிறான். இயற்கைக்கு மேலான ஒரு சக்தி, ஒரு தனி

முதலான கருத்து அல்லது உணர்வுதான் உலகத்திற்கான முதல் காரணம் என்று கருத்துமுதல்வாதிகள் கருதினார்கள். பொருள்முதல்வாதிகளோ இயற்கையை அதன் யதார்த்தத் தன்மையிலேயே பார்த்தனர்.

அவர்கள் உலகத்தின் அடிப்படையை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக பருப்பொருள் பற்றிய கருத்தமைவைப் பயன்படுத்தினர். ஆனால் பருப்பொருள் என்றால் என்ன? பிரபஞ்சத்திற்கு ஆதாரமாக இருப்பது என்ன? உலகத்தைப் பற்றிய மெய்யறிவை மனிதகுலம் பெற்றுவிட்டதால் இந்தக் கேள்விக்கான விடைகள் மாறிய வண்ணமாயிருக்கின்றன. புராதனத் தத்துவஞானிகள் நீர், காற்று, நெருப்பு, பூமி போன்ற பல்வேறு பரவிப்படர்ந்த பொருட்கள் அல்லது புலப்பாடுகளைக் கொண்டு பருப்பொருளின் பாத்திரத்தை வர்ணித்தனர். பின்னர், அணுத் துகள்கள் என்று அழைக்கப்படும் பிரிக்க முடியாத, மாற்ற முடியாத, கணக்கிட முடியாத மூலக் கூறுகளைக் கொண்டது பருப்பொருள் என்று கருதப்பட்டது. 18ஆம் நூற்றாண்டின் பிரெஞ்சுப் பொருள்முதல்வாதிகளும் லுட்விக் ஃபாயர்பாஹும் ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதிகளும், பருப்பொருள் என்பது ஒரு சூக்குமமான கருத்து, இது உலகத்தின் எல்லையில்லாமல் வேறுபட்ட மாறும் பொருட்கள் அல்லது புலப்பாடுகளின் முழுநிறை குணாம்சங்களை எடுத்துரைக்கிறது எனப் புரிந்து கொள்வதை நெருங்கி வந்தனர். ஆனால் அவர்களால் பருப்பொருள் பற்றிய விஞ்ஞான வரையறுப்பைத் தர முடியவில்லை. அதன் கட்டமைப்பு பற்றி இயற்கை விஞ்ஞானக் கருத்துக்களுடன் அதன் சாரத்தைச் சேர்த்துக் குழப்பினர். இதன் விளைவாக இயற்கை விஞ்ஞானங்களில் ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பும் பருப்பொருளைப் புரிந்து கொள்வதில் புதிய குழப்பத்தையும் முரண்பாடுகளையும் தோற்றுவித்

தது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் மின்னணு மற்றும் கதிர் இயக்கக் கண்டுபிடிப்புத் தொடர்பாக ஏற்பட்ட நெருக்கடியின் போது இந்த நிலை கூர்மையடைந்தது.

டெமாக்ரிடஸ் காலத்திலிருந்து மாற்ற முடியாத, பிரிக்க முடியாத அணுத் துகள்களின் கூட்டு மொத்தம் என்றே பருப்பொருள் கருதப்பட்டு வந்தது. ஆனால் மின்னணு கண்டுபிடிப்பு, அணு நிலையான தன்மை கொண்டது, மாற்ற முடியாதது என்பதற்கு அப்பால் மிக மிக நுணுக்கமான துகள்களை அல்லது மின்னணுக் களைக் கொண்டது எனக் காட்டியது. மேலும், மின்னணு வின் பொருண்மை அதன் இயக்கத்தின் வேகத்தைப் பொறுத்திருக்கிறது, அது அதிவேகமாகச் செல்லும் பொழுது அதிகரித்தும் குறைந்த வேகத்தில் செல்லும் பொழுது குறைந்து கொண்டே போகும் என்று கண்டு பிடிக்கப்பட்டது.

அணுத் துகள்கள் பிரிக்க முடியாதவை, நிலையானவை, மாறாத பொருண்மை உடையவை என்ற கருத்துக் கள் வீழ்ச்சியடைந்த பொழுது பருப்பொருளின் வாழ் நிலைதான் பிரபஞ்சத்தின் அடிப்படை என்பதைப் பல இயற்கை விஞ்ஞானிகள் சந்தேகிப்பதற்குத் தொடங் கினர். அணுத் துகள் எலெக்ட்ரான்களாக உடைவது— அவற்றின் பொருண்மை இயக்கத்தின் வேகத்தின் அளவைச் சார்ந்துள்ளது—என்பதின் அர்த்தம் பருப் பொருள் இயக்கமாக மாற்றப்படுகிறது என்பதாகும் என்று அவர்கள் வாதிட்டனர்.

அணுக்களின் வேறு பல பாகங்களின் கண்டுபிடிப்பு மற்றும் எலெக்ட்ரான், பாசிட்ரான் ஆகியவற்றின் ஒளி வீச்சு மாற்றத்தின் கண்டுபிடிப்பைத் தொடர்ந்து இயற்கை விஞ்ஞானத்தில் தோன்றிய நெருக்கடி மேலும் ஆழ

மடைந்தது. எதிர்மறைச் செயலுடன் கூடிய பருப்பொருளின் இரண்டு பாகங்கள் ஒளியாக மாறுகின்றன என்ற உண்மை பருப்பொருள் மறைந்துவிடுகிறது என்று புரிந்து கொள்ளப்பட்டது.

கருத்துமுதல்வாதிகள் உடனடியாக அண்மைக்கால இயற்கை விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் விஞ்ஞான ரீதியாக இல்லாத வியாக்கியானங்களைச் சாதகப்படுத்திக் கொண்டு, அந்தச் சாதனைகள் பொருள்முதல்வாதத்தை நிராகரித்துவிட்டன, பருப்பொருள் என்று ஒன்றிருக்க வில்லை, அது பொருள்முதல்வாதிகளுடைய கற்பனை யின் ஒரு கட்டுக்கதைதான் என்று கூறினார்கள்.

உலகத்தைப் பற்றிய அடிப்படையான பொருள்முதல் வாதக் கருத்தை எதிர்த்த கருத்துமுதல்வாதத் தாக்கு தல் விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பால் மட்டுமல்லாது, பாட்டாளி வர்க்கம் நடத்திய உழைக்கும் மக்களின் வர்க்கப் போராட்டத்திலும் கூட பாதகமான விளைவைக் கொண்டிருந்தது. ஏனென்றால் பொருள்முதல்வாதம் ஒரு பொய்யான அடிப்படையைக் கொண்டிருந்தால் அதன் முடிவுகளனைத்துமே தவறானவைகளாகத்தான் இருக்கும். இதன் பொருள் என்னவென்றால், வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதப் புரிவு, வர்க்கப் போராட்டத்தின் போர்த்திட்டம் மற்றும் செயல்தந்திரம், சமுதாயத்தைப் புரட்சிகரமாக மாற்றுவதன் இலட்சியங்கள் ஆகியவை ஒரு விஞ்ஞான அடிப்படையைப் பெற்றிருக்கவில்லை, அவை கற்பனையானவை என்பதேயாகும். எனவே, சமு தாயத்தைப் பற்றிய பொருள்முதல்வாதத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட, சோஷலிச லட்சியங்களை அடைவதற்கான உழைக்கும் மக்களின் போராட்டம் விஞ் ஞான ஆதாரமற்றது, அதற்கு அர்த்தமும் எதிர்காலமும் கிடையாது என்று கருதப்படும்.

பொருள்முதல்வாதத்தின் அடிப்படையை ஆதரிப்பதென்றால் முதலில் இயற்கை விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்கு ஒரு விஞ்ஞான விளக்கமளிக்க வேண்டியது அவசியமாகும். இத்தகைய ஒரு விளக்கம் லெனினால் அளிக்கப்பட்டது.

இயற்கை விஞ்ஞானத்தில் ஏற்பட்ட நெருக்கடியின் உள்ளடக்கத்தையும் அதற்கான காரணங்களையும் ஆராய்ந்த லெனின், விஞ்ஞானிகள் பொருள்முதல்வாத, ஆனால் இயக்க மறுப்பியல் நிலையெடுத்ததினால்தான் அது ஏற்பட்டது எனக் காட்டினார். இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழியையும் அவர் குறிப்பிட்டார்: இயக்கவியல் பொருள்முதல்வாத நிலைக்குச் செல்லுதல். இது என்றைக்குமே பருப்பொருளை எந்தவிதமான ஸ்தூலமான நிலையான, மாற்ற முடியாத வெளிப்பாடுகளாகச் சுருக்கியதில்லை.

தத்துவஞானத்தின் அடிப்படையான கேள்வியின் சுற்றுவட்டத்துக்குள் மட்டுமே, உலகத்தோடு மனிதனுக்கு உள்ள நடைமுறை உறவுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, பருப்பொருளை வரையறை செய்யலாம் என்று மார்க்சிய-லெனினியத்தின் மூலவர்கள் கருதினார்கள். இந்த உறவுகளில் பருப்பொருள் பற்றிய கருதுகோள் ஒரு சூக்குமக் கருத்தாக்கம்தான்; வெளியுலகத்தின் முடிவில்லாத, வெவ்வேறு வகையான பொருட்கள், நிகழ்வுப் போக்குகள் மற்றும் உறவுகளின் பொதுமைப்படுத்தப் பட்ட பிரதிபலிப்பு என்று எங்கெல்ஸ் கண்டார்.*

பருப்பொருள் பற்றிய கருதுகோளை அதன் ஸ்தூலமான வகைகள் அல்லது வெளிப்பாடுகளுடன் இனங்காணக்

---

* பார்க்க: Frederick Engels, *Dialectics of Nature*, p.p. 235, 256.

கூடாது என்று எங்கெல்ஸ் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார். பருப்பொருளை அதாகவே, அதன் ஸ்தூலமான வெளிப்பாடுகளுக்கு வெளியே ஆராய்வதற்கு இயற்கை விஞ்ஞானிகளின் முயற்சிகளையும் அவர் கண்டித்தார்.

மார்க்சும் எங்கெல்சும் வகுத்துக் கூறிய இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டு, இயற்கை விஞ்ஞானத்தின் அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்களைப் பொதுமைப்படுத்திக் கொண்டு லெனின் பருப்பொருளை ஒரு தத்துவஞான வகையினம் என்ற முறையில் பின்வருமாறு வரையறுத்தார். ''மனிதனுக்கு அவனுடைய புலனுணர்ச்சிகளால் தரப்படுகின்ற புறநிலையான யதார்த்தத்தைக் குறிக்கின்ற தத்துவஞான வகையினமே பருப்பொருள் எனப்படும்; புறநிலையான யதார்த்தம் அவற்றிலிருந்து சுதந்திரமாக இருந்து புலனுணர்ச்சிகளால் பிரதியெடுக்கப்பட்டு, புகைப்படம் பிடிக்கப்பட்டு, பிரதிபலிக்கப்படுகிறது.''*

இயக்கவியல் பொருள்முதல்வாதத்தில் பருப்பொருள் பற்றிய கருத்தமைவு வெளியுலகத்தின் பொருட்கள் மற்றும் நிகழ்வுகளின் சர்வப்பொது குணாம்சத்தை, அதாவது மனிதனின் உணர்வுக்கு வெளியே புறநிலையாக இருப்பதைப் பிரதிபலிக்கிறது. பருப்பொருள் என்பது ஒரு சூக்குமமான கருத்தமைவு, எல்லாப் பொருட்களுக்கும் நிகழ்வுகளுக்கும் பொதுவான ஒன்றைச் சுட்டிக் காட்டுவது: அவை உணர்வுக்கு வெளியே இருக்கின்றன, புலனுணர்ச்சி உறுப்புக்களின் மீது செயல்படுகின்றன, உணர்வினால் பிரதிபலிக்கப்படுகின்றன. ஸ்தூலமான

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி. இ. லெனின், இயக்கவியல் பொருள்முதல்வாதம், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1985, பக்கங்கள் 245—246.

பொருட்கள், புலப்பாடுகள் மற்றும் நிகழ்வுப் போக்கு களைத் தவிர வேறு வகையில் பருப்பொருள் இருக்கவிய லாது. எல்லையற்ற மாறுபாடுகளுடன் கூடிய உலகத்தின் புறநிலையான பொருட்கள் மற்றும் புலப்பாடுகளையும் உலகத்தின் ஒரு பகுதி என்ற முறையில் மனிதனையும் உள்ளடக்கியிருப்பது இதுவே எனலாம்.

தத்துவஞானம், இயற்கை மற்றும் சமூக விஞ்ஞானங் களின் வளர்ச்சிக்குப் பருப்பொருளைப் பற்றிய லெனினது வரையறுப்பு விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முதலாவதாக, பருப்பொருளை லெனின் ஒரு தத்துவ ஞானக் கருத்தமைவாக வரையறுத்தார். புறநிலையாக வும், உணர்விலிருந்து வெளியேயும் சுயேச்சையாகவும் இருப்பதைக் குறிப்பதற்கு அதைப் பயன்படுத்தினார். மார்க்சுக்கு முந்திய பொருள்முதல்வாதம் பருப்பொருள் பற்றிய கருதுகோளை அதன் கட்டமைப்பைப் பற்றிய இயற்கை விஞ்ஞானக் கருத்துக்களோடு இனங்கண்டது என்னும் குறையை லெனினது வரையறுப்பு அகற்றியது. ஆகவே பருப்பொருளின் கட்டமைப்பைப் பற்றி மனித னுடைய அறிவில் எத்தகைய மாற்றம் ஏற்பட்டபோதி லும் பருப்பொருள் ஒரு புறநிலை யதார்த்தம் என்பதை இனிமேல் மறுக்க இயலாது, இதற்கு மாறாக, விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் இதைப் பற்றி நம்முடைய அறிவை விரிவாக்கி ஆழப்படுத்த உதவுகின்றன. இந்த வரை யறுப்பு நாம் ஏற்கெனவே அறிந்துள்ள பொருட்கள், நிகழ்வுப் போக்குகள் மற்றும் புலப்பாடுகளுக்கும், இன் னும் நமக்குத் தெரியாமல் இருக்கக் கூடியவற்றுக்கும் சரியானதே. இரண்டாவதாக, லெனினுடைய வரை யறுப்பு உணர்வைப் பொறுத்தமட்டில் பருப்பொருளின் முதன்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டியது. பருப் பொருள் முதன்மையானது, அது உணர்விலிருந்து தனித்து

இருப்பது என்று லெனின் வற்புறுத்தினார். இந்த வரையறுப்பு கருத்துமுதல்வாதம், சமய கருத்துமுதல்வாதத் தத்துவங்கள், கருதுகோள்கள் ஆகியவற்றைத் தகர்க்கிறது. மூன்றாவதாக, பருப்பொருள் நம்முடைய புலனுணர்ச்சி உறுப்புக்களால் பிரதி செய்யப்பட்டு, படமெடுக்கப்பட்டு, பிரதிபலிக்கப்படுகிறது என்று அந்த வரையறுப்பு சுட்டிக் காட்டியது. நம்மைச் சூழ்ந்துள்ள உலகத்தை மனித உணர்வு பிரதிபலிக்கிறது, இது மனிதனுடைய அறிவு நிகழ்வுப் போக்கு என்பது இதன் பொருளாகும். மனித உணர்வு சுற்றியுள்ள உலகத்தைப் பிரதிபலிக்கிறது, உலகத்தை மனிதன் அறிகிறான் என்னும் கருதுகோள் அறியொணாவாதத்தைத் தகர்க்கிறது. இக்கருதுகோள் உலகத்தைப் பற்றி மேலும் அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று முயற்சிப்பதைத் தூண்டுகிறது. அந்த முயற்சி மட்டும் இல்லையென்றால் புரட்சிகரமான மாற்றம் சாத்தியமல்ல.

பருப்பொருள் ஒரு தத்துவஞான வகையினம் என்று லெனின் அளித்த இயக்கவியல் பொருள்முதல்வாத வரையறுப்பு மிக முக்கியமானது. கருத்துமுதல்வாத, இயக்கமறுப்பியல் தத்துவஞானிகள் விஞ்ஞானத்துக்குப் புறம்பான தம்முடைய கருதுகோள்களை எவ்வளவு சாமர்த்தியமாக மூடிமறைத்தாலும் சுற்றுப்புற உலகத்தைப் பற்றி அவர்களின் போலி விஞ்ஞான மோசடியைக் கண்டுபிடிக்க உதவுகின்ற மிக முக்கியமான சோதனைகளில் ஒன்றாகும் இது.

இயக்கம்—பருப்பொருளின் வாழ்நிலையின் முறை

உலகத்தை விஞ்ஞான ரீதியாகப் புரிந்து கொள்வதற்குப் பருப்பொருளின் வாழ்நிலையின் சர்வப்பொதுவான வடி

வங்களைப் பற்றிய அறிவு மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த வடிவங்களில் இயக்கம் மிக முக்கிய மான ஒன்று. ''இயக்கத்திலிருக்கின்ற பருப்பொருளைத் தவிர உலகத்தில் எதுவுமே கிடையாது'' என்று லெனின் எழுதினார்.*

நாம் பார்க்கும் எந்தப் பொருளும்—அணுத் துகள் கள், மூலக் கூறுகள், உயிரினங்கள், பூமியின் மேற்பரப்பு, கிரகங்கள், நட்சத்திரங்கள், நட்சத்திரக் கூட்டங்கள், இதரவை—தொடர்ச்சியான இயக்கத்தையும் மாற்றத் தையும் கொண்டிருக்கின்றன. எனவே இயக்கம் சர்வப் பொதுவானது. **"பருப்பொருளின் வாழ்நிலையில் இயக்கம் ஒரு முறையாக இருக்கிறது....** இயக்கம் இல்லாமல் எந்தப் பொருளும் கிடையாது, அப்படி இருந்திருக்கவும் முடி யாது'' என்று எங்கெல்ஸ் எழுதினார்.**

ஆனால் உலகத்தின் இயக்கம் மற்றும் மாற்றத்தின் சர்வப்பொதுவான தன்மை அசையாநிலைக் கூறுகளை நிராகரித்துவிடவில்லை. எந்த ஒரு இயக்கம் மற்றும் மாற் றத்தின் போக்கிலும் இயங்கிக் கொண்டிருக்கின்ற, மாறிக் கொண்டிருக்கின்ற பொருளில் ஓரளவு ஸ்திரத் தன்மை யும், ஒரு குறிப்பிட்ட காலகட்டம் வரை குணாம்சங்களில் சிலவற்றைத் தக்க வைத்துக் கொள்ளும் தன்மையும் இருக்கின்றன. எனவே அசையாநிலை மற்றும் ஸ்திரத் தன்மையிலிருந்து இயக்கம் பிரிக்க முடியாதது. ஆனால் அசையாநிலைக் கூறு ஒரு தற்காலிகமான, சார்புநிலை யான இயல்பைக் கொண்டிருக்கிறது.

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 14, p. 175.
** Frederick Engels, *Anti-Dühring*, Moscow, Progress Publishers, 1975, p. 402.

ஏதாவது ஒரு பொருளை, உதாரணமாக, உறங்குகின்ற மனிதனை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த மனிதன் அசையாநிலையில் இருக்கிறான். ஆனால் அந்த அசையா நிலை சார்புநிலையான ஒன்றுதான். ஏனென்றால் அவன் இருக்கின்ற அறையிலுள்ள பொருட்களையும் வீட்டையும் பொறுத்தமட்டில் அவன் தன்னுடைய நிலையை மாற்றிக் கொள்ளவில்லை; ஆனால் அவன் பூமியோடு சேர்ந்து நகர்கிறான். அவனுக்குள் பல்வேறு சிக்கலான உடலியல் மாற்றங்கள், ரத்த ஓட்டம், மூச்சு விடுதல் மற்றும் இதர நிகழ்வுப் போக்குகள் நடைபெறுகின்றன.

எனவே அசையாநிலையும் ஸ்திரத் தன்மையும் சார்பு நிலையானவை. ஆனால் இயக்கம் தனிமுதலானதாக இருக்கிறது. எந்தப் பொருளும் ஒரு அம்சத்தில் அசையாநிலையில் இருக்கின்ற பொழுது மற்ற அம்சங்களில் தொடர்ச்சியான மாற்றம் மற்றும் இயக்கநிலையிலும் இருக்கிறது.

இயக்கம் சர்வப்பொதுவானது, பருப்பொருளிலிருந்து பிரிக்க முடியாதது என்ற கருத்தைப் பல தத்துவஞானிகள் கூறியிருந்தார்கள். ஆனால் மார்க்சுக்கு முந்திய பொருள்முதல்வாதிகள் இயக்கத்தை ஒரு குறுகிய வரையறைக்கு உட்பட்டு விளக்கினார்கள். இயக்கத்தின் சாராம்சம் விசும்பில் இடம் பெயர்தல் என்னும் அளவுக்குக் குறுக்கப்பட்டது. அவர்கள் இயக்கத்தை அதற்கு வெளியிலிருந்து பார்த்தார்கள்; பொருட்களின் இடத்தில் மாற்றம் என்ற நோக்கிலிருந்து பார்த்தார்களே தவிர அப்பொருட்களிலேயே மாற்றம் என்ற நோக்கிலிருந்து பார்க்கவில்லை.

உண்மையில் பருப்பொருளின் இயக்கம் பொருட்களின் யாந்திரிக நகர்வை மட்டுமல்லாமல், அவற்றுக்குள்ளாக ஏற்படும் அனைத்து மாற்றங்களையும் உட்கொண்டிருக்கிறது. ‘‘பருப்பொருளில் ஏற்படுகின்ற இயக்கம் ஒரு

சர்வப்பொதுவான மாற்றமாகும்'' என்று எங்கெல்ஸ் எழுதினார்.*

பருப்பொருளின் இயக்கத்தின் பல்வேறு வடிவங்களுக்குள் மிகவும் முக்கியமான சிலவற்றை எங்கெல்ஸ் வலியுறுத்துகிறார், அவையாவன: யாந்திரிக வடிவம் (ஒன்றோடொன்றான உறவில் விசும்பில் பொருள்களின் இடத்தில் மாற்றம்), வேறுபட்ட பௌதிக வடிவங்கள் (வெப்பம், ஒலி, மின்காந்தம், உள் அணு, உட்கரு இன்ன பிற), இரசாயன வடிவம் (வேறுபட்ட பொருட்களை அமைக்கின்ற மூலக் கூறுகளின் உருவாக்கமும் சிதறலும்), உயிரியல் வடிவம் (அதன் அனைத்து வேறுபட்ட வெளிப்பாடுகளிலும் உயிரின வாழ்க்கை, உயிரினங்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள்), சமூக வடிவம் (மனித சமூகத்தின் வளர்ச்சி).

பருப்பொருளின் இயக்கத்தின் அனைத்து வடிவங்களும் கட்டாயமாக உட்தொடர்பு கொண்டவை, உட்சார்பு கொண்டவை. இயக்கத்தின் சில வடிவங்கள் இதர வடிவங்களின் தோற்றத்துக்கு முன்தேவைகளாக இருக்கின்றன.

பருப்பொருளின் இயக்கத்தின் ஒவ்வொரு வடிவமும் அதற்குரிய பிரத்தியேக அம்சங்களைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வடிவமும் அடுத்த, உயர்ந்த வடிவத்தின் தோற்றத்தைத் தகவமைக்கிறது, அடுத்த வடிவத்துடன் தன்னை இணைத்துக் கொள்கிறது. அதே நேரத்தில் உயர்ந்த வடிவங்கள் கீழானவற்றை அடங்கியிருக்கின்றன, அவற்றை அடித்தளமாகக் கொண்டிருக்கின்றன; ஆனால் அந்தக் கீழான வடிவங்களாக அவை குறுகிவிட முடியாது. இவ்வாறாக ஒரு உயிரியல் ஜீவன் பருப்பொரு

* Frederick Engels, *Dialectics of Nature*, p. 247.

ளின் இயக்கத்தின் முந்திய எல்லா வடிவங்களையும் (யாந்திரிக, பௌதிக, இரசாயன வடிவங்கள்) தன்னுள் கொண்டிருக்கிறது.

எந்த உயிரினத்தின் வாழ்நிலையும் அதன் யாந்திரிக இயக்கத்துடனும் (வளர்ச்சி, அசைவு, இதரவை) பௌதிக, இரசாயன நிகழ்வுப் போக்குகளுடனும் தொடர்பு கொண்டதாகும். ஆனால் அதன் அடிப்படை பிரத்தியேகமான உயிரியல் விதிகளின் ஆளுமைக்குட்பட்ட வளர்சிதை மாற்றமாகும்.

உயர்ந்த வடிவங்களை கீழான வடிவங்களென்று குறுக்கிவிடக் கூடாது. ஏனெனில் அது யாந்திரிகமான மற்றும் இயக்க மறுப்பியல் கருத்தமைவுகளுக்கு இட்டுச் செல்லும், உயர்ந்த வடிவங்களின் தோற்றத்தை விளக்க முடியாததாக்கிவிடும். இயக்கத்தின் உயர்ந்த வடிவங்களைத் தனிமுதலான விதி என்றும் ஆக்கக் கூடாது. அவ்வாறு செய்தால் கீழான வடிவங்களுடனான அவற்றின் தொடர்புகளைப் புரிந்து கொள்ளத் தவறியவர்களாவோம். அது முன்னதைப் பற்றி ''இயற்கைக்கு மேலான'' குணாம்சமுடையது என்ற கருத்துமுதல்வாத முடிவுக்கு இட்டுச் செல்லும்.

இயக்கம் ஒரு வடிவத்திலிருந்து மற்றொரு வடிவத்திற்கு மாற்றம் பெறுவதை மட்டுமல்லாமல், இந்த மாற்றங்களின் அளவையும் விஞ்ஞானம் தீர்மானித்தது. இவ்வாறாக, சக்தியின் அழியாமையையும் மாற்றத்தையும் பற்றிய விதியின்படி சக்தி அல்லது இயக்கத்தின் மொத்த அளவு கூடுதல் இல்லாமல், குறைவதும் இல்லாமல் ஒரே அளவில் இருக்கிறது. இயக்கம் அதன் வடிவத்தை மட்டுமே மாற்றிக் கொள்கிறது. அந்த விதி பருப்பொருள் மற்றும் இயக்கத்தின் உள்ளார்ந்த ஒருமையின் விஞ்ஞான நிரூபணத்தை வழங்குகிறது. பருப்பொருளுக்கும் இயக்

கத்துக்கும் இடையேயுள்ள மற்றொரு தொடர்பு என்னவென்றால், ஒரு பொருளாயத வஸ்துவின் அமைப்பு நிலையை, அதன் கட்டமைப்பை, அதன் பிரத்தியேக அம்சங்களை அறிவதற்கு அதன் இயக்கத்தின் வடிவம் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

இயக்கத்தின் வடிவங்களைப் பற்றி எங்கெல்ஸ் செய்த வகைப்படுத்தலும் அதன் அடிப்படைக் கோட்பாடுகளும்—கடந்த நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான முன்னேற்றம் அவருடைய வகைப்படுத்தலை ஆழப்படுத்துவதையும் ஸ்தூலப்படுத்துவதையும் கணிசமான அளவில் சாத்தியமாக்கி இருக்கிறது என்றாலும்—இன்று கூட செல்லத் தக்கவையாக இருக்கின்றன. இயக்கத்தின் வடிவங்களைப் பற்றி நம்முடைய அறிவு எவ்வளவு முழுமையாக இருக்கிறதோ, அந்த அளவுக்குப் பருப்பொருளைப் பற்றிய அறிவு அதன் எல்லா வெளிப்பாடுகளிலும் முழுமையாக இருக்கும்.

பருப்பொருளின் வாழ்நிலையின்
வடிவங்கள் என்ற முறையில்
விசும்பும் காலமும்

நம்மைச் சூழ்ந்துள்ள உலகில் நகர்கின்ற பொருளாயத வஸ்துக்கள் அனைத்தும் திட்டவட்டமான அளவையும் பரிமாணத்தையும் கட்டமைப்பையும் கொண்டிருக்கின்றன; அவை ஒன்றுக்கொன்று குறிப்பிட்ட உறவு நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தவிர ஒரு வஸ்துக்கு முன் மற்றொன்று என்றோ அல்லது அதற்குப் பதிலாக என்றோ அவை தொடர் வரிசையான அமைப்பைக் கொண்டிருக்கின்றன. பொருளாயத வஸ்துக்கள் விசும்பிலும் காலத்திலும் இருக்கின்றன என்பது இத்தகைய குணாம்சங்களின் பொருளாகும்.

விசும்பும் காலமும் பருப்பொருளின் வாழ்நிலையின் சர்வப்பொது வடிவங்களாகும். "...இயக்கத்திலிருக்கும் பருப்பொருள் விசும்பிலும் காலத்திலும் தவிர வேறு வழியில் நகர முடியாது'' என்று லெனின் எழுதினார்.*

பொருளாயத வஸ்துக்கள் ஒன்றோடொன்றுள்ள உறவில் வகிக்கும் இடத்தையும் அவற்றின் விரிவாக்கத்தையும் சகவாழ்க்கையையும் விசும்பைப் பற்றிய கருத்து எடுத்துக் கூறுகிறது. வஸ்துவின் நீளம், உயரம், அகலம், வடிவம், கட்டமைப்பு, இதர வஸ்துக்களிடமிருந்து அதன் தூரம் ஆகியவற்றை விசும்பு ரீதியான உறவுகள் உள்ளடக்கியிருக்கின்றன.

காலம் என்பது நிலைமைகளின் தொடர்வரிசை, சில நிகழ்வுகள் மற்றவற்றைத் தொடர்ந்து வருகின்ற வரிசை முறை, அவை பங்கெடுக்கின்ற நிகழ்வுப் போக்குகளின் கால அளவு ஆகியவற்றைக் குறிக்கும். காலம் என்பது வஸ்துக்களின் வரலாற்றை ஆராய்வதற்கு வகை செய்யும்.

விசும்பின் தலையாய அம்சம் அதன் முப்பரிமாணத் தன்மையாகும். விசும்பு இடது—வலது, முன்—பின், மேல்—கீழ் என்னும் மூன்று திசைகளைக் கொண்டிருக்கிறது. இம்மூன்று திசைகளும் பரஸ்பரம் செங்குத்தான மூன்று கோடுகளின் மூலம் தத்ரூபமாக வெளிப்படுத்தப்படுகின்றன. இம்மூன்று கோடுகளின் மூலம் விசும்பில் எந்தப் பொருளையும் தீர்மானிக்க முடியும்.

விசும்புக்கு மாறாக, காலம் ஒரேயொரு பரிமாணத்தைக் கொண்டிருக்கிறது. அது எப்பொழுதும் ஒரே திசையில் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது; அதாவது கடந்த காலத்திலிருந்து நிகழ்காலத்துக்கும் பின்னர் எதிர்

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 14, p. 175.

காலத்துக்கும் செல்கிறது. காலத்தின் திசையை மாற்ற முடியாது; அதை எதிர்த்திசையில் செலுத்த முடியாது.

பொருளாயத வஸ்துக்களின் விசும்பு மற்றும் கால குணாம்சங்கள் உட்தொடர்புகளைக் கொண்டிருக்கின்றன; அவற்றின் இயக்கத்தில் இது தெளிவாகப் புலப்படுகிறது. எல்லாப் பொருட்களும் குறிப்பிட்ட வேகங்களில் நகர்கின்றன என்பது நன்கறிந்ததே. குறிப்பிட்ட கால அளவில் ஒரு பொருள் நகர்கின்ற தூரம் வேகம் எனப்படுகிறது. இங்கே விசும்புக்கும் காலத்துக்கும் இடையுறவையும் நகர்ந்து கொண்டிருக்கும் பொருளுடன் அவற்றின் தொடர்பையும் நாம் காண்கிறோம்.

விசும்பு மற்றும் காலத்தின் மற்றொரு தலையாய அம்சம் அவற்றின் எல்லையற்ற தன்மையாகும். முதல் பார்வையில் விசும்பும் காலமும் எல்லைக்கு உட்பட்டவையாகத் தோன்றும்; ஏனென்றால் அவை தொடக்கத்தையும் முடிவையும் கொண்டுள்ள பொருளாயத வஸ்துக்களின் குணாம்சங்கள், உறவுகள் ஆகிய முறையில் இருக்கின்றன. எனினும் விசும்பும் காலமும் எல்லைக்குட்பட்ட பொருட்களின் மூலம் இருப்பினும் அவை எல்லையற்றவை. ஒவ்வொரு பொருளும் மற்ற பொருட்களுடன் இணைக்கப்பட்டிருக்கிறது, இவை இன்னும் பல பொருட்களுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. இப்படியே முடிவில்லாதபடிச் செல்கிறது. எல்லைக்குட்பட்ட அளவுகளைக் கொண்ட விசும்பு எல்லையற்றதாகி விடுகிறது. ஒவ்வொரு தனிப்பட்ட பொருளின் இருப்பும் தொடக்கத்தையும் முடிவையும் கொண்டிருக்கிறது, ஆனால் முடிவில்லாத எண்ணிக்கையைக் கொண்ட இதர பொருட்கள் அதற்கு முன்பு இருந்தன, கடைசியில் வேறு பொருட்கள் அதனிடத்தைப் பெறும், இப்படியே முடிவில்லாமல் நடைபெறும்.

மதமும் கருத்துமுதல்வாதமும் விசும்பு மற்றும் காலத்தின் எல்லையற்ற தன்மையை மறுக்கின்றன. கடவுள் உலகத்தைப் படைத்தார், உலகம் ஒரு நாள் அழியும் என்று நிரூபிக்க மதம் முயல்கிறது. சுற்றிலுமுள்ள பொருட்களுக்கு மனித உணர்வு தருகின்ற குணாம்சங்களே விசும்பும் காலமும் என்று கருத்துமுதல்வாதிகள் கருதுகிறார்கள். பருப்பொருள் விசும்பில் எல்லையற்றது, காலத்தில் முடிவில்லாதது, பிரபஞ்சத்துக்கு ஆரம்பமோ, முடிவோ இல்லை என்னும் கருத்தைச் சிந்தனையாளர்கள் பழங்காலத்திலேயே கூறினார்கள். இன்றைய விஞ்ஞானம் மட்டுமே இக்கருத்தை நிரூபித்து வருகிறது. ஆராய்ச்சியாளர்கள் நவீன விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பச் சாதனைகளைப் பயன்படுத்தி பொருளாயத உலகத்தைப் பற்றி—அணுத் துகளிலிருந்து விண்வெளியில் மொத்த நட்சத்திரக் கூட்டங்களின் இருத்தல் மற்றும் இயக்கத்தின் விதிகள் உட்பட—மிக ஆழமான, விரிவான அறிவைப் பெற்று வருகிறார்கள்.

விசும்பையும் காலத்தையும் பற்றி இயக்கவியல் பொருள்முதல்வாத ரீதியில் புரிந்து கொள்ளுதல் தத்துவ ரீதியில் மட்டுமின்றி, செய்முறையிலும் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. மொத்த சமூக நடவடிக்கையுமே சுற்றியுள்ள உலகத்தின் புலப்பாடுகள் மற்றும் நிகழ்வுப் போக்குகளுடன் மனிதனுடைய சுறுசுறுப்பான இடைச் செயலே; இவை இடஞ்சார்ந்த, காலஞ்சார்ந்த கூறுகளைக் கொண்டிருக்கின்றன. இக்கூறுகள் சமூக நடைமுறையின் வழிமுறைகள், வடிவங்கள், ஒழுங்கியல்பு, வேகம் ஆகியவற்றை நிர்ணயிக்கின்றன. உற்பத்தியின் அனைத்துத் துறைகளிலும் சமூக அரசியல் வாழ்க்கையிலும் இவற்றைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

இடஞ்சார்ந்த காரணி விடுதலைப் போராட்ட வழிமுறைகள் மீது குறிப்பிடத் தக்க தாக்கத்தைக் கொண்டிருக்கிறது. பூகோள ரீதியான தனித்தன்மைகள் உற்பத்திச் சக்திகளின் வினியோகத்திலும் வளர்ச்சியிலும் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. ஒரு நாட்டின் இடஞ்சார்ந்த நிலைமைகள் காலஞ்சார்ந்த கூறுகளுடன் பின்னிப்பிணைந்திருக்கின்றன. பொருளாதார செயல்திட்டத்தை விரிவுபடுத்துவதில், சமூக மற்றும் ஆன்மீக வாழ்க்கையில் அடுக்கடுக்கான மாற்றங்களுக்குத் திட்டமிடுவதில், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்குரிய நம்பகமான அமைப்பை உருவாக்குவதில், இன்னும் பலவற்றில் இடஞ்சார்ந்த மற்றும் காலஞ்சார்ந்த கூறுகள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுகின்றன.

உலகத்தின் பொருளாயத ஒருமை

உலகத்தின் ஒருமை என்ற பிரச்சினை தத்துவஞானத்தின் ஆரம்ப நாட்களிலேயே தோன்றிவிட்டது. சிந்தனையாளர்கள் பண்டைக் காலத்திலிருந்தே உலகத்தின் மாற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் பின்னாலுள்ள பொதுவான கோட்பாட்டைத் தேடினார்கள். உலகத்தின் அளப்பரிய வெவ்வேறு பொருட்கள் மற்றும் நிகழ்வுகளைக் கண்ட பொழுது அவற்றை ஒரே மொத்தமாக ஒன்று சேர்ப்பது எது என்பதைக் கண்டுபிடிப்பதற்கு அவர்கள் முயற்சி செய்தார்கள்; தங்களுடைய நோக்கு நிலைகளுக்குத் தகுந்தவாறு இப்பிரச்சினையை ஆராய்ந்தார்கள்.

மதம் மற்றும் கருத்துமுதல்வாதச் சிந்தனையாளர்கள் உலகத்தின் ஒருமையை ஆன்மீக அடிப்படையின் மூலமாகப் பெறுவதற்கு முயற்சி செய்தார்கள். அந்த அடிப்படை அவர்களுடைய தத்துவங்களில் கடவுள்,

தெய்விக சக்தி, உலக ஆன்மா, தனிமுதல் கருத்து, புல னுணர்ச்சிகளின் தொகுதி, மற்றும் இதர வடிவங்களைப் பெற்றது. இதற்கு மாறாகப் பொருள்முதல்வாதிகள், உலகத்தின் உண்மையான ஒருமை அதன் பொருளாயதத் தன்மையில், உணர்விலிருந்து சுயேச்சையான புறநிலை இருப்பில் அடங்கியுள்ளது என்று கருதினார்கள்.

உலகத்தின் பொருளாயத ஒருமையைத் தத்துவ ஞானம் மற்றும் இயற்கை விஞ்ஞானத்தின் மொத்த வளர்ச் சியும் இயற்கை மற்றும் சமூகம் பற்றிய விஞ்ஞானங்களின் மறுக்க முடியாத சாதனைகளும் மனிதகுல நடைமுறையின் விளைவுகளும் நிரூபிக்கின்றன. அது வளர்ச்சியில், இயங் கும் வஸ்துக்களின் இடைச்செயலில்—அது ஒரே அங்கக அமைப்பாக அவற்றை ஒன்று சேர்க்கிறது—தன்னை வெளிப்படுத்துகிறது.

பூமியும் சூரிய மண்டலத்தைச் சேர்ந்த மற்ற கிரகங் களும் 500 முதல் 1,000 கோடி வருடங்களுக்கு முன்னர் தோன்றின என்று விஞ்ஞானிகள் பூமியியல் ஆராய்ச்சி களின் மூலம் நிரூபிக்கின்றனர். அப்பொழுது சூரியன் தன்னுடைய இயக்கத்தின் போக்கில் வாயு போன்ற மாபெரும் மேகத்திரளுக்குள் நுழைந்தது. ஈர்ப்புச் சக்தி களின் தாக்கத்தில் விண்வெளித் தூசி மற்றும் வாயுக் களின் நுண்ணிய துகள்கள் ஒன்று குவிந்து இறுகி, சூரிய மண்டலத்திலுள்ள கிரகங்களை அமைத்தன. நெடுங் காலம் வரை பூமி உயிரில்லாத கிரகமாக இருந்தது. சுமார் 200 கோடி வருடங்களுக்கு முன்னர் பூமியில் உயிர்ப் பொருட்கள் தோன்றின. பூர்விக மனிதன் பூமியில் சுமார் 25 லட்சம் வருடங்களுக்கு முன்னர் தோன்றினான். சுமார் 50,000—70,000 வருடங்களுக்கு முன்னர் அவ னுடைய உருவாக்கம் பூர்த்தியடைந்தது. மனிதன் தோன் றியதும் சுற்றுப்புற உலகத்தைப் பிரத்யேகமான வழி

யில் பிரதிபலிக்கின்ற மனித மூளையின் ஒரு குணாம்ச மாக உணர்வு தோன்றியது. பூர்விக மனிதன் உலகம் யதார்த்தத்தில் எப்படி இருந்ததோ அப்படியே அறிந் தான். பூமியில் வாழ்வதற்கு அவன் நடத்திய தொடர்ச்சி யான போராட்டத்தில் அவன் கருவிகளைச் செய்தான், உணவைச் சேகரித்தான், வேட்டையாடினான்; காட்டு விலங்குகளிடமிருந்தும் இயற்கைச் சக்திகளிடமிருந்தும் தன்னைத் தானே பாதுகாத்துக் கொண்டான். அவனுக்கு வெளியில் சுயேச்சையான பொருட்கள் இருக்கின்றன; அவற்றை அவனால் பார்க்க முடியும், தொட முடியும்; அவை அவனுக்கு உபயோகமானவையாக அல்லது தீங்கு விளைவிக்கின்றவையாக இருக்க முடியும்; அவற்றின் மீது அவன் தாக்கம் செலுத்த முடியும் என்ற இயற்கையான முடிவுக்கு இவை அனைத்தும் அவனை இட்டுச் சென்றன. ஆனால் வெல்ல முடியாத வலிமையைக் கொண்ட இயற்கை நிகழ்வுகளுக்கு முன்பாக அவன் மிகவும் பலவீனமான வனாக இருந்தான்; அவனிடம் அறிவுத்திறன் இல்லாத படியால் அவற்றைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவற்றை விளக்க முடியாத நிலையில் மனிதன் படிப்படி யாக இத்தகைய நிகழ்வுகளுக்கு இயற்கைக்கு மேலான சக்தியைக் கற்பித்தான். அது நாளடைவில் மதங்கள் தோன்றுவதற்கு, இயற்கைக்கு மேலான சக்திகள் மீதும் கடவுள் மீதும் நம்பிக்கை வைப்பதற்கு வழிவகுத்தது. விஞ்ஞான அறிவு இல்லாதபடியால் மனிதனால் விளக்கிக் கூற முடியாத எல்லாவற்றுக்கும் கடவுளின் சித்தம், ஆண்டவன் படைப்பு என்று அவன் காரணம் கற்பித்தான்.

ஆனால் மனிதகுலம் உலகத்தைப் பற்றிய அறிவைத் திரட்டிய பொழுது விஞ்ஞானம் மதத்தைக் காட்டிலும் செல்வாக்குப் பெற்றது. விஞ்ஞானத்தின் ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பும் உலகத்தின் பொருளாயத ஒரு

மையை மறுபடியும் வலியுறுத்தியது. உலகத்தின் பொருளாயத ஒருமை பொருட்கள் மற்றும் நிகழ்வுப் போக்குகளின் இடைத் தொடர்புகளையும் இடைச் சார்புநிலையையும் உள்ளடக்கியிருக்கிறது: பூமியிலுள்ள பொருட்களுக்கும் வானத்திலுள்ள பொருட்களுக்கும் இடையில் ஈர்ப்புச் சக்தியின் இழுப்பு, அணுக்களின் பாகங்கள் பரஸ்பரம் மாற்றமடைதல், சக்தியின் வேறுபட்ட வடிவங்களின் பரிமாற்றம், இரசாயன மூலகங்கள் உருமாற்றமடைதல், சேதன மற்றும் அசேதன இயற்கையின் ஒற்றுமை, தாவர உலகத்துக்கும் பிராணிகளின் உலகத்துக்குமுள்ள ஒற்றுமை, இயற்கைக்கும் சமுதாயத்திற்கும் இடையேயுள்ள உறவு, இதரவை. பருப்பொருளின் கட்டமைப்பையும் அதன் வாழ்நிலையின் வடிவங்களையும் இயக்கத்தின் விதிகளையும் மேன்மேலும் சிறப்பாக அறிந்து கொண்ட பொழுது இயற்கைச் சக்திகளை அடக்கி அவற்றை மனிதனுக்குச் சேவை செய்ய வைப்பது சாத்தியமாயிற்று.

அத்தியாயம் ஐந்து

உணர்வு,
அதன் தோற்றுவாயும் சாராம்சமும்

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தில் உணர்வு பற்றிய கருத்து பருப்பொருளைப் பற்றிய கருதுகோளைப் போலவே முக்கியமானதாகும். உணர்வு, அதன் தோற்றுவாய், சாராம்சம் ஆகிய பிரச்சினைகளின் மீதே எல்லாத் தத்துவஞான அமைப்புக்களும் முக்கிய கவனம் செலுத்துகின்றன. பருப்பொருள் பற்றிய பிரச்சினையைப் போலவே இந்தப் பிரச்சினையின் எதிர்மறையான தீர்வு ஒரு தத்துவம் பொருள்முதல்வாதமா அல்லது கருத்துமுதல்வாதமா என்று முடிவு செய்வதற்கு முக்கியமான அளவுகோலாக இருக்கிறது.

உணர்வைப் பற்றி மார்க்சியத்துக்கு முந்திய கருதுகோள்கள்

உணர்வின் தோற்றத்தையும் சாராம்சத்தையும் பற்றிய பிரச்சினை மிகவும் சிக்கலான ஒன்றாகும்; மனிதர்கள் பழங்காலந்தொட்டே இதில் ஆர்வம் காட்டி வந்துள்ளனர். தங்களுடைய வாழ்க்கையில் உணர்வின், மனித அறிவின் முக்கியத்துவத்தை அவர்கள் அறிந்திருந்தார்கள். மனிதன் தன்னுடைய உணர்வின் மூலமாகவே சம்பவங்களையும் மற்ற மனிதர்களையும் மதிப்பீடு செய்

கிறான்; உலகத்தின் அழகையும் கடந்த தலைமுறையினர் திரட்டியுள்ள அறிவையும் போற்றிப் புகழ்கிறான்; முற்போக்கான கருத்துக்களை கிரகித்துக் கொண்டு, சமூக நீதி நிலவுகின்ற சமுதாயத்துக்காகப் போராடுகிறான்.

மனிதகுலச் சிந்தனை தன்னுடைய இயல்பைப் புரிந்து கொள்வதற்கு முன்னால் ஒரு நீண்ட, முரண்பாடான வளர்ச்சிப் பாதையில் பிரயாணம் செய்து வந்திருக்கிறது.

பண்டைக்காலத் தத்துவஞானிகள் ''உணர்வு'' என்ற கருத்துக்குப் பதிலாக ''ஆன்மா'' என்ற கருத்தையே அதிகமாகப் பயன்படுத்தினார்கள். ஆன்மா என்பது மனிதனுடைய மொத்த உளவியல் திறமைகள், பார்த்தல், கேட்டல், சிந்தித்தல், உணர்தல் மற்றும் இதர திறமைகள் என்று அவர்கள் கருதினார்கள். ஆன்மா என்பது இயற்கையான காரணங்களால் படைக்கப்பட்டிருக்கின்ற பொருளாயத வஸ்து என்று பொருள்முதல்வாதிகள் கருதினார்கள்; அது இயற்கைக்கு மேலான சாரப்பொருள், தற்காலிகமாக மனிதனுடைய உடம்பில் குடியிருப்பது என்று கருத்துமுதல்வாதிகள் கருதினார்கள்.

சமூகத்தில் மதம் தனது நிலைகளைப் பலப்படுத்திக் கொண்ட பிறகு மனித உணர்வு தெய்விகமான தோற்றுவாயைக் கொண்டது என்று பெருமளவில் கருதப்பட்டது.

ஆன்மாவையும் உணர்வையும் பற்றிய மதக் கோட்பாடுகள் காலப் போக்கில் அனேகமாக மாறவில்லை. கருத்துமுதல்வாதக் கருதுகோள்களைப் பொறுத்தமட்டில் அவை அகநிலையானவை, புறநிலையானவை என்று இரு கிளைகளாகப் பிரிந்தன. அகநிலைக் கருத்துமுதல்வாதிகள் மனித அறிவை—யதார்த்தமான முழு உலகத்தையும் கூட—தனிப்பட்ட மனித உணர்வுக்குள் அடைப்பதற்கு முற்பட்டார்கள்; புறநிலைக் கருத்துமுதல்வாதிகள் உணர்வைத் தனி மனிதனிடமிருந்தும் மனிதகுலத்தி

லிருந்தும் பிரித்து, அதைப் படைத்த நிலைமைகளி லிருந்தும் பிரித்து அதை தெய்விக நிலைக்கு உயர்த்தி னார்கள்.

விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்த பொழுது உணர்வைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருத்துக்களும் வளர்ச்சி அடைந்தன. பொருள்முதல்வாதச் சிந்தனையின் பல் வேறு மரபுகள் மனித உணர்வின் தோற்றத்தையும் இயல் பையும் பற்றி வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டன. உணர்வு என்பது கருத்தியலானது, ஆன்மீக நிகழ்வு என்று சிலர் கருதினார்கள்; மற்றவர்கள் அதைப் பொருளாயத நிகழ்வு என்று கருதினார்கள். உணர்வின் கருத்தியல் அல்லது ஆன்மீகம் என்பதற்குத் தாங்கள் தருகின்ற பொருள் என்ன என்பதை முன்னவர்களால் விளக்க முடிய வில்லை; கொச்சையான பொருள்முதல்வாதிகள் என்று கருதப்பட்ட பின்னவர்கள் கல்லீரல் பித்த நீரைச் சுரப் பதைப் போல மூளை சிந்தனையைச் சுரக்கிறது என்று கருதினார்கள். மூளையின் ஒரு செயல் என்று உணர்வைக் கருதியபோதிலும் அதன் இயல்பை அவர்களால் புரிந்து கொள்ள இயலவில்லை.

பிரதிபலிப்பின் உயர்ந்த வடிவம் என்ற முறையில் உணர்வு

''எல்லாப் பருப்பொருளும் சாராம்சத்தில் புலனுணர்ச் சியை ஒத்த ஒரு குணாம்சத்தை, பிரதிபலிப்பு என்ற குணாம்சத்தைக் கொண்டிருக்கிறது...''* என்ற லெனி னுடைய கருதுகோள் உணர்வின் சாராம்சத்தைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோலைத் தருகிறது. அசேதனப்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி.இ. லெனின், இயக்கவியல் பொருள்முதல்வாதம், பக்கம் 193.

பொருட்கள் உட்பட எல்லாப் பொருட்களும் வெளியுலகத்தைப் பிரதிபலிக்க முடியும், அதாவது வெளிப்புறத் தாக்கங்களைச் சில வழிகளில் ''பதிவு செய்து'' கொள்ள முடியும், அவற்றின் தாக்கத்தில் அவை மாற்றமடைகின்றன என்பதை மனிதனுடைய அன்றாட அனுபவம் எடுத்துக்காட்டுகிறது. ஒரு பொருள் மற்றொரு பொருளின் மீது ஏற்படுத்துகின்ற மாற்றங்கள் அல்லது ''மனப் பதிவுகள்''—அவற்றைப் பிந்திய பொருள் சிறிது காலம் வரை தக்கவைத்துக் கொள்கிறது—பிரதிபலிப்பு என்று சொல்லப்படுகின்றன. பிரதிபலிப்பு எல்லாப் பொருளாயத வஸ்துக்களுக்கும் பருப்பொருள் அனைத்துக்கும் உள்ளுறையாக இருக்கிறது; பருப்பொருளின் வளர்ச்சியின் வெவ்வேறு மட்டங்களில் வெவ்வேறு வடிவங்களை மேற்கொள்கிறது.

உயிரற்ற இயற்கையில் பிரதிபலிப்பு முற்றிலும் யாந்திரிகமானதாகும். உதாரணமாக, உலோகப் பொருள் பலமாகத் தாக்கும் பொழுது கல் நொறுங்கித் தூள்தூளாகிறது. ஈரக் களிமண்ணைப் பிசைகின்ற பொழுது அது தன்னுடைய வடிவத்தை மாற்றிக் கொள்கிறது. உயிரற்ற இயற்கையில் பிரதிபலிப்பு என்பது பொருட்களுக்கு இடையில் தற்செயலாக ஏற்படுகின்ற இடைச் செயலின் சாத்விகமான விளைவு ஆகும்; அவற்றின் கட்டமைப்பில் பல்வேறு யாந்திரிகமான மாற்றங்களை அல்லது பௌதிக, இரசாயன மாற்றங்களைக் கூட ஏற்படுத்தும்.

உயிர் பிறந்த பொழுது பிரதிபலிப்பின் அதிக சிக்கலான ரகங்கள் உருவெடுக்கத் தொடங்கின. உணர்வின் உருவாக்கத்துக்கு உயிரியல் முன்தேவைகள் சில உண்டு: முதலாவதாக, பூமியில் உயிரின் தோற்றமும் வளர்ச்சியும் (மனிதன் தோற்றம் உட்பட); இரண்டாவதாக, உயிரினங்களின் பிரதிபலிப்புத் திறமையின் வளர்ச்சி.

அசேதனப் பொருட்களில் சிக்கலான இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டதன் விளைவாக உயிர் தோன்றியது என்று விஞ்ஞானம் கூறுகிறது. மிகவும் எளிமையான சேதனக் கூட்டுப் பொருட்கள் (ஹைட்ரோ கார்பன்கள்) முதலில் முதல் ஊழிக் காலத்துக் கடலின் நிலைமைகளில் தோன்றின. பின்னர் இவை மேலும் சிக்கலான, குண ரீதியான மாற்றங்களைப் பெற்று புரோட்டீன்களாகவும் நியுக்லிக் அமிலங்களாகவும் வளர்ச்சியடைந்தன. 100—150 கோடி வருடங்களுக்கு முன்னர் இத்தகைய திரவங்களில் வளர்சிதை மாற்றத்தையும் சுயமாகவே புனருற்பத்தியையும் கொண்ட துளிகள் தோன்றின. இவ்வாறு சிக்கலான அமைப்பைக் கொண்ட உயிரணு படிப்படியாகத் தோன்றியது.

காலப்போக்கில் உயிரினங்கள் மிகவும் அதிகமான வேறுபாடுகளைப் பெற்றன. அவை வளர்ச்சியடைந்த பொழுது வெளியுலகத் தாக்கங்களினால் அவற்றிலேற்படுகின்ற பிரதிபலிப்பும் வளர்ச்சியடைந்து மிகவும் சிக்கலடைந்தது. பூமியில் உயிரினங்களின் ஆரம்பக் கட்டத்தில் சாதாரணமான உயிர்ப் பொருட்கள் பல்விதமான சுற்றுப்புறத் தாக்கங்களைச் சந்தித்த பொழுது அவற்றினுள் பல்விதமான இரசாயனச் செயல்வினைகளும் வளர்சிதை மாற்ற நிகழ்வுப் போக்குகளும் அனைத்தும் பாதிக்கப்பட்டன. உயிரினங்கள் படிப்படியாக பல்வேறு மூலப் பொருட்களுக்கு ஏற்ற பொறுக்கு அணுகுமுறையை வளர்த்துக் கொண்டன; புலனுணர்ச்சி உறுப்புக்கள் உருவாயின.

அதிகமான பல்தொகுதி அமைப்பைக் கொண்ட உயிரினங்களிடம் நரம்பு உயிரணுக்களும் நரம்பிழைகளும் நரம்பு அமைப்புக்களும் தோன்றின; அவை குறிப்பிட்ட செயலை நிறைவேற்றக் கூடிய புலனுணர்ச்சி உறுப்புக்கள், முதுகுத் தண்டு மற்றும் முடிவில் மூளை எனப் பரிண

மித்தன. நரம்பு மண்டலத்தின் உருவாக்கமும் வளர்ச்சியும் பிரதிபலிப்பில் குண ரீதியாகப் புதிய, உளவியல் வடிவத்தைக் குறித்தன. நரம்பு மண்டலம் பல்வேறு புலனுணர்ச்சி உறுப்புக்களின் இயக்கத்தை ஒருங்கிணைத்து மொத்தத்தில் அங்கஜீவியின் நடவடிக்கையை நெறிப்படுத்துகிறது.

ஒரு பிராணி வளர்ச்சி ஏணியில் எவ்வளவு உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறதோ, அந்த அளவுக்கு அதன் நரம்பு மண்டலம் நுட்பம் நிறைந்தும் அதிகமான வேறுபாடுகளைக் கொண்டுமிருக்கும். பிராணிகள் தம் மீது நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்ற பொருட்களுக்கு எதிர்ச்செயல் புரிவது மட்டுமின்றி, அவை பிரதிபலிக்கின்ற மாறும் புறச் சூழலுக்குத் தக்கபடி தம்மை தகவமைப்பதற்கும், சாதகமான பொருட்களையும் தாக்கங்களையும் கண்டுபிடிப்பதற்கும் பாதகமானவற்றைத் தவிர்ப்பதற்கும், எதிர்கால நிலைமைகளை முன்னதாக அறிந்து கொள்வதற்கும் கூடத் திறமையை வளர்த்துக் கொள்கின்றன. அடிக்கடி ஏற்படுகின்ற தாக்கங்களைப் பிரதிபலித்த அங்கஜீவி அத்தகைய தாக்கங்கள் மறுபடியும் ஏற்படுகின்ற பொழுது அவற்றை முன்னரே எதிர்பார்ப்பதற்காக அவற்றைப் பற்றிய தகவல்களைத் திரட்டிச் சேமிக்கிறது. உதாரணமாக, பல பூச்சிகள் காற்று மண்டலத்தின் அழுத்தத்தில் மாற்றம் ஏற்படுகின்ற பொழுது—அது மழை பெய்யப் போவதை முன்னறிவிக்கிறது—உரிய காலத்தில் பதுங்கிடத்தைத் தேடுவதற்காகத் தொடர் வரிசையான பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

உயிரினங்களின் புற வாழ்க்கைச் செயல் உளவியல் பிரதிபலிப்பின் ஆரம்ப வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்கெனவே உருப்பெறுகின்றது. அங்கஜீவி

உயிராற்றலைக் கொண்ட காரணிகளின்பால் சுறுசுறுப்பான அணுகுமுறையைக் கொண்டிருக்கிறது; தன்னுடைய வாழ்க்கைக்கு அவை அத்தியாவசியமானவையாக இருந்தால் அவற்றைத் தேடுகிறது; அவை தீங்கானவையாகவோ, மிகவும் ஆபத்தானவையாகவோ இருந்தால் அவற்றைத் தவிர்க்கிறது. இத்தகைய தேடல் மற்றும் சரிப்படுத்திக் கொள்கின்ற பொறியமைவு நெடுங்காலப் பரிணாம நிகழ்வுப் போக்கின் போது உருவாகிறது; அது ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு மாற்றிக் கொடுக்கப்படுகிறது. இப்பொறியமைவு அனிச்சைச் செயல் அல்லது பல்வேறு தாக்கங்களுக்கு அங்கஜீவியின் நரம்பு மண்டல எதிர்வினையை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.

அனிச்சைச் செயல்கள் பிறவிக் குணமானவையாக இருக்க முடியும், பிற்காலத்தில் பெறப்பட்டவையாகவும் இருக்க முடியும். பிறவிக் குணமான அனிச்சைச் செயல்கள் இயல்நிலையானவை என்று சொல்லப்படுகின்றன. பல தலைமுறைக் காலத்தில் ஒரு உயிரினத்தில் அவை பரிணமிக்கின்றன, மரபு வழியாகத் தரப்படுகின்றன. ஒரு தனிப்பட்ட அங்கஜீவி தன்னுடைய வாழ்க்கைக் காலத்தில் பெற்ற அனிச்சைச் செயல்கள் ஆக்கநிலையானவை என்று சொல்லப்படுகின்றன. குறிப்பிட்ட உயிரினத்தைச் சேர்ந்த பிராணிகளின் பிறவிக் குணமான செயல்களின் முழுமொத்தம் இயல்புணர்ச்சி என்று சொல்லப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட உயிரினத்தைச் சேர்ந்த பிராணி தொடர்ச்சியான தூண்டுவிப்பிகள் அல்லது உறுத்தல்களுக்கு உசிதமான எதிர்வினை புரிவதை இயல்புணர்ச்சி உறுதி செய்கிறது. தேவைகளுக்கு ஏற்ப ஆராய்ச்சியாளர்கள் உணவு, சுயபாதுகாப்பு, இனப் பெருக்கம் மற்றும் இதர இயல்புணர்ச்சிகளைப் பிரித்துக் காட்டி

யிருக்கிறார்கள். பரிணாம ஏணியில் ஒரு உயிரினம் எவ்வளவு உச்சியில் இருக்கிறதோ, அந்த அளவுக்கு அதன் இயல்புணர்ச்சிகள் மிகவும் பல்தொகுதியாக இருக்கும். அவை மிக உயர்ந்த மட்டத்தை அடைந்து உணர்வுபூர்வமான நடவடிக்கை என்னும் பிரமையைக் கூட ஏற்படுத்த முடியும். உதாரணமாக, குயில் குஞ்சு, கூட்டிலிருக்கும் குஞ்சுகள் உணவுக்குப் போட்டி போடுவதைத் தவிர்ப்பதற்காக அவற்றைக் கூட்டிலிருந்து வெளியே தூக்கிப் போட்டுவிடுகிறது.

ஆனால் இயல்புணர்ச்சி சில நிலைமைகளில் மட்டுமே பலனளிக்கிறது; அந்த நிலைமைகள் மாறுகின்ற பொழுது அது பலனளிப்பதில்லை. இயல்புணர்ச்சி நடவடிக்கைக்கும் புதிய நிலைமைகளுக்கும் இடையிலான வேறுபாடு ஆக்கநிலையான அனிச்சைச் செயல்கள் மற்றும் அந்த அடிப்படையில் உருவாக்கப்பட்ட திறன்களின் உதவியைக் கொண்டு சமாளிக்கப்படுகிறது. ஆக்கநிலையான அனிச்சைச் செயல்கள் புதிய நிலைமைகளின் தாக்கத்தின் விளைவாகப் பெறப்பட்டுத் தக்க வைத்துக் கொள்ளப்படுகின்றன. இத்தாக்கம் மாறுகின்ற பொழுது அல்லது முடிந்து விடுகின்ற பொழுது குறிப்பிட்ட ஆக்கநிலையான அனிச்சைச் செயல்களுக்குப் பதில் மற்றவை தோன்றுகின்றன, அல்லது அவை முற்றிலும் மறைந்து விடுகின்றன. உயிரினங்களின் வாழ்க்கையில் அவற்றின் பாத்திரம் மிகவும் முக்கியமானதாகும். இவை அங்கஜீவிக்கும் வெளியுலகத்துக்கும் உள்ள இடைத் தொடர்பை அதிகமான நெகிழ்ச்சியாக, தகவமைக்கக் கூடியதாகச் செய்கின்றன. பிராணிகள் இயல்நிலையான மற்றும் ஆக்கநிலையான அனிச்சைச் செயல்களின் உதவியுடன் உலகத்தைப் பிரதிபலித்து, புதிய சூழலுக்குத் தம்மைத் தகவமைத்துக் கொண்டு புதிய நிலைமைகளில் அழிவிலிருந்து தப்புகின்றன.

எல்லா மிருகங்களிலும் மனிதக் குரங்குகள்தான் மிகவும் வளர்ச்சியடைந்த மூளையைக் கொண்டிருக்கின்றன. அது ஸ்தூலமான செய்முறை சிந்தனை செய்வது அதன் தலைசிறந்த வெளிப்பாடாகும். இக்குரங்குகள் தவறு செய்தல், திருத்திக் கொள்ளுதல் என்ற முறையின் மூலம் ஸ்தூலமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கண்டு பிடிக்க முடியும். உதாரணமாக, கூரையிலிருந்து ஒரு கயிற்றில் வாழைப் பழத்தைக் கட்டித் தொங்க விட்டு, தரையில் மரப் பெட்டிகளை சிதறிப் போட்டிருந்தால், குரங்கு முடிவில் வாழைப் பழத்தைப் பறித்துச் சாப்பிட்டு விடும். குரங்கு முதலில் ஒவ்வொரு பெட்டியின் மீதும் ஏறி நின்று எம்பிப் பார்க்கும்; பிறகு பெட்டிகளை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கி அவற்றின் மீது ஏறி நின்று வாழைப் பழத்தைப் பறிக்கும். இத்தகைய நடவடிக்கை உணர்வு பூர்வமானது என்று கருத முடியாது.

உணர்வு பிரதிபலிப்பின் ஆக உயர்ந்த, முற்றிலும் மனித ரீதியான வடிவமாகும். மனிதனும் மனித சமூகமும் தோன்றிய காலத்தில் அது தோன்றியது; அந்த சமூகத்துக்கு வெளியில் அது இருக்க முடியாது.

உணர்வின் தோற்றம்

பூமியில் ஜீவராசிகளின் வாழ்க்கையில் தட்ப, வெப்ப மற்றும் இதர நிலைமைகளில் முக்கியமான மாற்றங்களுடன் மனிதனுடைய தோற்றுவாய்கள் தொடர்பு கொண்டிருக்கின்றன. சுமார் 50 லட்சம் ஆண்டுகளுக்கு முன் இம்மாற்றங்களின் விளைவாகப் பரந்த காட்டுப் பகுதிகள் அழிந்தன. அதனால் ஏற்பட்ட பாதகமான நிலைமைகளுக்குத் தம்மை மாற்றியமைத்துக் கொள்ள முடியாமல் பல்வேறு பிராணி இனங்கள் அழிந்தன.

ஆனால் தம்முடைய உயிருக்குப் போராடிய மனிதக் குரங்குகள் தனிப் பாதையைப் பின்பற்றின. அவை மரங்களிலிருந்து கீழே பூமிக்கு இறங்கிவிட்டபடியால் கம்புகள், கற்கள் போன்ற இயற்கைப் பொருட்களின் உதவியின் மூலம் அங்கே வாழ்ந்த ஊனுண்ணிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் உணவைப் பெறவும் வேண்டியிருந்தது. இத்தகைய நடவடிக்கைகள் முதலில் தற்செயலானவையாகவே இருந்தன; ஆனால் அவை வழக்கமாக ஆக்க பூர்வமான விளைவுகளுக்கு இட்டுச் சென்றபடியால், ஏதாவது ஒரு தேவையைப் பூர்த்தி செய்ய உதவியளித்தபடியால், அவை படிப்படியாக ஒரு பழக்கமாக, அவசியமாக மாறிவிட்டன. வேட்டைக்கும் பாதுகாப்புக்கும் கருவிகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் மற்றொரு அவசியத்தை ஏற்படுத்தியது—அதாவது, மனிதனுடைய மூதாதையர்கள் கூட்டம் வசித்துவந்த இடத்தில் அவசியமான ''கருவிகள்'' கிடைக்கவில்லை என்றால் இவற்றைத் தயாரிக்க வேண்டியிருந்தது. அதற்கென்று கல்லினால் செய்யப்பட்ட கத்திகள் பயன்படுத்தப்பட்டன. கற்கத்தியைச் செய்தல், கற்கத்தியைக் கொண்டு ஈட்டியைத் தயாரித்தல், இதரவை—இப்படி தொடர்ச்சியான உற்பத்தி நடவடிக்கைகள் படிப்படியாக உருப்பெற்றன. அந்தப் போக்கின் வளர்ச்சியுடனும் மனிதனுடைய பிராணி மூதாதையர்களின் வளர்ச்சியுடனும் அனிச்சைச் செயல்கள் படிப்படியாக உணர்வு பூர்வமான நடவடிக்கைகளாகப் பரிணமித்தன. இவை விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட கருவிகளைக் கொண்டு சுற்றியுள்ள யதார்த்தத்தை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டிருந்தன.

பொருட்களைக் கருவிகளாகப் பயன்படுத்துவதிலிருந்து கருவிகளைத் தயாரிப்பதற்கும், அக்கருவிகளைக் கொண்டு

நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் மாறியது மனிதனின் உருவாக்கத்தில் தலையாய முக்கியத்தைக் கொண்டிருந்தது. அது குணரீதியில் ஜீவாதார நடவடிக்கையில் புதிய முறைக்கு, பிரத்யேகமாக மானுட வகை உயர்ந்த நடவடிக்கைக்கு, மனித உணர்வுக்கு மாற்றமாக இருந்தது.

உழைப்புதானே உடலுக்கும் மூளைக்கும், பிரதிபலிப்புப் பொறியமைவு முழுமைக்கும் பிரத்யேகமான மனித குணாம்சங்களைக் கொடுத்தது. இனிமேல் நடப்பதற்குப் பயன்படாத முன்கால்கள் கைகளாக வளர்ச்சியடைந்தன. உடல் நேராக நிமிர்ந்தது; பல்வேறு ஒருங்கிணைந்த நடவடிக்கைகளுக்கு முன்னைக் காட்டிலும் அதிகமான தகுதியைப் பெற்றது. மனித மூளை எடையிலும் அளவிலும் அதிகரித்தது மட்டுமின்றி உள்ளமைப்பிலும் மாற்றமடைந்தது.

மனிதனுடைய உணர்வின் வளர்ச்சி மூளை எடையிலும் அளவிலும் அதிகரித்ததைச் சார்ந்திருந்ததை ஆராய்ச்சியாளர்கள் தற்பொழுது முடிவாக நிறுவியுள்ளனர். மிகப் பெரிய குரங்கின் மிகப் பெரிய மூளை அளவில் 600 கன சென்டிமீட்டர்களைக் காட்டிலும் அதிகமல்ல; ஆனால் மனிதனுடைய மிகமிகத் தொன்மையான முன்னோரான பித்தேகான்த்ரோபசின் (ஜாவா மனிதன் என்று சொல்லப்படுவது) மூளையின் அளவு 800—900 கன சென்டிமீட்டர்களாக இருந்தது; சினான்த்ரோபசின் (பீகிங் மனிதன் என்று சொல்லப்படுவது—பூர்விகமான பேசுதலைக் கொண்டவன்) மூளையின் அளவு 1,000—1,200 கன சென்டிமீட்டர்களாக இருந்தது. மூன்று லட்சம் வருடங்களுக்கு முன்னர் வசித்த நியாண்டர்தால் மனிதனுடைய மூளையின் அளவு 1,300—1,600 கன சென்டிமீட்டர்களாக இருந்தது. நவீன மனிதனின் ரகத்

தைச் சேர்ந்த குரோமன்யோன் மனிதனுடைய மூளையின் சராசரி அளவு 1,400 கன சென்டிமீட்டர்களாக இருந்தது; அது அவனுடைய உடல் எடையில் நாற்பத்தாறில் ஒரு பங்காகும். மூளைக்குள் புலனுணர்ச்சி மற்றும் இயக்கப் பகுதிகள், அதைப் போல இணையும் பகுதிகளும் விரிவடைந்தது மூளையின் அமைப்பு வளர்ச்சியில் விசேஷ முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. அது பகுப்பாய்வு மற்றும் கூட்டிணைப்பின் உயர் வடிவங்களை உருவாக்குவதில், விவரங்களைப் பொதுமைப்படுத்துவதில் சிந்தனை புதிய மட்டத்தை அடைவதில் சிறப்பான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது.

பெரிய விலங்குகளை வேட்டையாடுவதில் வெற்றியடைவது மனிதனுடைய மூதாதையர்கள் எவ்வளவு அமைப்பு ரீதியாக செயல்பட்டார்கள் என்பதையே பெரிதும் பொறுத்திருந்தது. இது மனிதனுடைய உருவாக்கத்தில் மற்றொரு தலையாய சந்தர்ப்பமாக இருந்தது. சிலர் புதர்களிலிருந்து விலங்குகளை விரட்டி, சிலர் அவற்றை வளைத்து மறித்து, இன்னும் சிலர் ஈட்டிகள், தடிக்கம்புகள் மற்றும் இதர கருவிகளை உபயோகித்து அவற்றைக் கொன்ற பொழுதுதான் வேட்டை மாபெரும் அளவில் வெற்றியடைந்தது. ஆகவே அவர்கள் கூட்டாகச் சேர்ந்து வேட்டையாடும் பொழுது ஒவ்வொரு நபருக்கும் விசேஷமான இடம் இருந்தது, அவர்களில் ஒவ்வொருவரும் திட்டவட்டமான பணியைச் செய்தனர். அதன் விளைவாக மனிதன், கூட்டு உணர்ச்சியில் பாடுபடுகின்ற விசேஷமான தனிநபர் என்று நினைக்கும்படி கற்பிக்கப்பட்டான்.

புதிய ரகச் செயலும் (உற்பத்தி) புதிய ரகத்தைச் சேர்ந்த உறவுகளும் (உற்பத்தி உறவுகள்) சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய பிரதிபலிப்பில் குணரீதியான மாற்றங்களுக்கு இட்டுச் சென்றன. பிராணிகள் இயற்கை

யிலிருந்து தம்மைப் பிரித்துப் பார்ப்பதில்லை; ஆனால் மனிதன் சுற்றுப் புறத்திலுள்ள பொருட்களிலிருந்தும் இதர மக்களிடமிருந்தும் படிப்படியாகத் தன்னைப் பிரித்துப் பார்க்கத் தலைப்பட்டான். அவன் வேறொரு விசேஷமான திறமையையும் வளர்த்துக் கொண்டான்; தனக்கென்று சில குறிக்கோள்களை உணர்வு பூர்வமான வழியில் வகுத்துக் கொள்கின்ற திறமையே அது. சுற்றி யுள்ள உலகத்தைப் பற்றிய உணர்வு, தனிநபர் என்ற முறையில் தன்னைப் பற்றிய உணர்வு, குறிக்கோள்களை வகுத்துக் கொள்ளுதல்—மனிதனுடைய உருவாக்கத்தின் போது தோன்றிய பிரதிபலிப்பு வடிவத்தின் பிரத்யேக மான அம்சங்கள் இவை. மனித உணர்வின் இக்கூறுகள் உற்பத்தி வளர்ச்சியின் போது உருவாகிக் கொண்டிருந்த பொருளாயத உறவுகளினால் வரையறுக்கப்பட்டிருந் தன.

இந்த உறவுகளின் தோற்றம், இருத்தல் மற்றும் வளர்ச்சி தனிநபர்கள் ஒன்று சேர்ந்து பாடுபட வேண்டும் என்று வலியுறுத்தின; ஆகவே குறிக்கோள்களையும் கடமை களையும் வகுத்தல், வேலைகளை வினியோகித்தல் மற்றும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுதல் அவர் களுக்கு அவசியமாயிற்று. ''சுருக்கமாகச் சொல்வதென் றால் உருவாகிக் கொண்டிருந்த மனிதர்கள் ஒருவருக் கொருவர் அவசியமான ஒன்றைப் பற்றிப் பேசுகின்ற நிலைக்கு வந்து விட்டனர்.''* இப்புதிய தேவையின் விளைவாக தொடர்புச் சாதனம் என்ற முறையில் மொழி தோன் றியது. உருவாக்கமடைந்து கொண்டிருந்த மனிதர்கள் தனித்தனியான நிகழ்வுகள் மற்றும் அவற்றின் குணாம்சங்

---

* Frederick Engels, *Dialectics of Nature*, p. 173.

கள், பொருட்கள் மற்றும் செயல்களுக்குத் திட்டவட்ட மான ஒலிகளையும் குறியீடுகளையும் உபயோகித்து அவற் றின் மூலம் ஒருவருக்கொருவர் தகவல் தெரிவித்துக் கொள்ள ஆரம்பித்தனர். பொருட்களையும் நிகழ்வுகளை யும் சுட்டிக் காட்டுவதற்கு அவர்கள் உபயோகித்த சொற் கள் அவற்றின் இடத்தைப் பெற்றன; அப்பொருட்களுக் கும் நிகழ்வுகளுக்கும் மனிதர்கள் எப்படி எதிர்ச்செயல் புரிவார்களோ அப்படியே இச்சொற்களைக் கேட்டதும் நடந்து கொண்டார்கள்.

சொற்களின் மூலம் யதார்த்தத்தைப் பிரதிபலிப்பது அதன் பிரத்யேகமான மனித வடிவமாகும். பிராணிகள் சுற்றுப்புற யதார்த்தத்தை அதன் சமிக்கைகளின் மூல மாகப் பிரதிபலிக்கின்றன. இத்தகைய சமிக்கை அமைப்பு பிராணிகளுக்கும் மனிதனுக்கும் பொதுவானது; இது முதல் சமிக்கை அமைப்பு எனப்படும். மெய்யான பொருட் களையும் நிகழ்வுகளையும் சொற்களின் மூலம் சுட்டிக் காட்டுகின்ற சமிக்கை அமைப்பு இரண்டாவது சமிக்கை அமைப்பு எனப்படும்.

ஆகவே உற்பத்தி மற்றும் மொத்த சமூக வாழ்க்கை யின் தேவைகளிலிருந்து உணர்வு தோன்றியது. சமூகத் துக்கும் சமூக உறவுகளுக்கும் வெளியில் உணர்வு ஒரு போதும் தோன்ற முடியாது, இருக்கவும் முடியாது. முத லிலிருந்து இறுதி வரை அது ஒரு சமூக உற்பத்திப் பொரு ளாகும், உழைப்பு மற்றும் கூட்டு மனித நடவடிக்கையின் விளைவாகும்.

இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் மேற்கூறிய முடிவு விஞ்ஞானத்தால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அது சமூக முழுவதின் உருவாக்கத்துக்கு மட்டுமின்றி, தனிப் பட்ட மனித உணர்வின் உருவாக்கத்துக்கும் செல்தகை மையைக் கொண்டிருக்கிறது. பிறந்த குழந்தை உணர்வு

இல்லாத பிறவி; அதற்குப் படிப்படியாகத்தான் உணர்வு ஏற்படுகிறது. மற்றவர்களுடன் எவ்விதமான தொடர்பும் இல்லாமல் வளர்ச்சியடைகின்ற குழந்தைக்கு ஒருபோதும் உணர்வு வளர்ச்சியடையாது.மனித சமூகத்துக்கு வெளியே உணர்வு வளர்ச்சி அடைவதில்லை என்பதை வரலாறு நிரூபிக்கிறது. 1920 அக்டோபர் 21ந் தேதியன்று இந்தியாவில் கோதமுரி என்ற கிராமத்துக்கு அருகிலுள்ள காட்டில் ஓநாய்க் கூட்டத்துடன் ஒன்பது மற்றும் இரண்டு வயதுள்ள இரண்டு சிறுமிகள் வசிப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அச்சிறுமிகளுக்கு அமலா, கமலா என்று பெயரிடப்பட்டது. அமலா சிறிது காலத்துக்குப் பிறகு இறந்துவிட்டாள்; ஆனால் கமலா பதினெட்டு வயது வரை வாழ்ந்தாள். கமலாவுக்குப் பலவிதமான விசேஷ கல்விப் பயிற்சிகள் தரப்பட்டன; எனினும் அவள் ஒருபோதும் மனிதப் பண்பைப் பெறவில்லை. பேசுதல், சிந்தித்தல் மற்றும் மனித நடவடிக்கை முறைகள் அவளுக்கு அப்பாற்பட்டவையாக இருந்தன. இதைப் போல மற்றொரு உதாரணமும் உண்டு. 1797இல் பிரான்சில் ஒரு காட்டில் விக்டர் என்ற 12 வயதாகிய சிறுவன் கண்டுபிடிக்கப்பட்டான். அவன் நாற்பது வயதாகின்ற வரை வாழ்ந்தபோதிலும் அவனால் மற்றவர்களைப் போல பேச முடியவில்லை; மிகுந்த சிரமத்தோடு நிமிர்ந்து நடந்தான்; அபாயத்தைப் பற்றி மிகவும் அற்பமான சமிக்கை கிடைத்தாலும் உடனே அவன் கைகளைக் கீழே போட்டு நான்கு கால் பாய்ச்சலில் ஓட ஆரம்பித்தான். அவனுக்குக் கற்பிக்க எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டபோதிலும் அவனால் எழுதப்படிக்கக் கற்றுக் கொள்ள முடியவில்லை.

மனிதன் மற்றும் மனித உணர்வின் உருவாக்கம் தனி மனிதன் தன்னுடைய தொடக்க காலத்திலிருந்து சமூக வாழ்க்கையில் பங்கெடுப்பதை முன்னூகிக்கிறது.

ஆகவே, மனிதனுடைய மூதாதையர் தன்னுடைய சொந்த வாழ்நிலை, சொந்த இருத்தலை உணர்ந்த பொழுது, வெளியுலகத்திலிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டு அதன்பால் தன்னுடைய அணுகுமுறையை நிர்ணயித்துக் கொண்ட பொழுது உணர்வு முதலில் தோன்றியது என் பதைக் கண்டோம். பூர்விக மனிதன் தன்னுடைய உணர் வைக் கொண்டு முதல் தடவையாகத் தான் இருப்பதை யும் எப்படி இருக்கிறான் என்பதையும் தெரிந்து கொண் டான். தன்னைச் சுற்றி என்ன நடைபெறுகிறது என்பதை அவன் கவனிக்கத் தொடங்கினான். வேறு வார்த்தை களில் சொல்வதென்றால் உணர்வு என்பது விழிப்பு, தன்னைச் சுற்றிலும் என்ன நடைபெறுகிறது என்பதை அறிதல் எனலாம். இத்தகைய விழிப்பு பிரதிபலித்தலின் மனித வடிவத்துக்கு மட்டுமே பிரத்யேகமானதாகும்.

உணர்வு என்பது பிரதிபலித்தலின் ஆக உயர்ந்த, முற்றிலும் மனித ரீதியான வடிவம் என்று கூறும் பொழுது அதன் முக்கியமான பிரத்யேக அம்சங்களைக் குறிப்பிட வேண்டும்.

முதலாவதாக, மனிதன் உலகத்தை அதன் வெளிப்புற மற்றும் உட்புற அம்சங்களின் ஒருமை என்ற முறையில், புலனுணர்ச்சி வடிவத்தில் மட்டுமின்றி விதிகள், வகையி னங்கள், கலா வடிவங்கள் மற்றும் இதரவற்றின் வடிவத் தில், கருத்தியல், சூக்குமமான சிந்தனை, பேச்சு ஆகிய வற்றின் மூலம் பிரதிபலிக்கிறான்.

இரண்டாவதாக, மனித உணர்வு தன்னுடைய சொந்த நடவடிக்கையின் விளைவுகளை, இயற்கை மற்றும் சமூக நிகழ்வுப் போக்குகளின் இயல்பையும் திசைவழியையும் முன்னரே அறிய முடியும். இது ஆரம்பத்தில் வாழ்க்கை

அனுபவத்தின் அடிப்படையிலும் சமூக வளர்ச்சியின் இன்றைய மட்டத்தில் பெருமளவுக்கு இயற்கை மற்றும் சமூக விதிகளைப் பற்றிய அறிவை அடிப்படையாகக் கொண்டும் சாதிக்கப்படுகிறது.

மூன்றாவதாக, உணர்வு இலக்குகளை நிர்ணயித்துக் கொள்ளவும் இலட்சியங்களை வகுத்துக் கொள்ளவும் எதிர்கால நடவடிக்கையின் உசிதமான விளைவுகளை முன் வைப்பதற்கும் திறமையைக் கொண்டிருக்கிறது. இலக்குகளை நிர்ணயித்துக் கொள்வது உணர்வு பூர்வமான, திட்டமிட்ட நடவடிக்கைக்கு முன்தேவையாகும்.

நான்காவதாக, மனித உணர்வு யதார்த்தத்தை மதிப்பிடுகிறது. மனிதன் குறிக்கோள்கள், அக்கறைகள், இலட்சியங்களை வகுத்துக் கொள்கின்ற பொழுதும் தீர்மானங்களைச் செய்வதிலும் நிறைவேற்றுவதிலும் அறிவை மட்டும் பின்பற்றுவதாகக் கூற முடியாது; வரலாற்று ரீதியாகத் தோன்றிய தனிப்பட்ட மற்றும் சமூகத் தேவைகள், அக்கறைகளைப் பொறுத்து அந்தந்த நிகழ்வு அவசியமானது அல்லது அவசியமில்லாதது, பயனுடையது அல்லது பயனற்றது, சாதகமானது அல்லது தீங்கானது என்று மதிப்பீடு செய்கிறான்.

ஐந்தாவதாக, மனித உணர்வு சுய உணர்வினால் குணாம்சப்படுத்தப்படுகிறது; வெளிப்புற உலகத்தை மட்டுமின்றி அக உலகத்தையும் பிரதிபலித்து சுய உணர்வை அறியப்பட வேண்டிய மற்றுமொரு பொருளாகச் செய்கிறது.

ஆறாவதாக, சுற்றுப்புற உலகத்தின் மீது சுறுசுறுப்பான தாக்கத்தைச் செலுத்துகின்ற உணர்வு படைப்புத் தன்மையைக் கொண்டிருக்கிறது. மனிதனுடைய நலன்களுக்காக, தனி மனிதன் மற்றும் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சமூக வாழ்க்கையின்

யதார்த்த நிலைமைகளை மட்டுமின்றி, சாத்தியமான நிலைமைகளையும் மாற்றுவதற்கு ஆகச் சிறப்பான வழிகளைக் கண்டுபிடிப்பதற்கு உலகத்தைப் பற்றிய அறிவைப் பெறுவது உணர்வின் செயலாகும். இயற்கை நிலைமைகள் மனிதனுக்குத் திருப்தியளிக்க முடியாது என்று எங்கெல்ஸ் எழுதினார். ''அவனுடைய சகஜ நிலைமை அவனுடைய உணர்வுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும், அது அவனாலேயே படைக்கப்பட வேண்டும்.''*

யதார்த்தத்தைச் செய்முறையில் அறிதல் மற்றும் மாற்றியமைத்தல் என்ற அமைப்பில் மனித உணர்வு நிறைவேற்றுகின்ற செயல்களின் மூலம் அதன் சுறுசுறுப்பான பாத்திரம் வெளிப்படுகிறது. அறிதல், அமைத்தல், ஒழுங்குபடுத்தல் ஆகியன இவற்றில் முக்கியமானவையாகும்.

முதலாவதாக, அறிதல் செயல். தன்னுடைய உணர்வின் மூலம் உலகத்தைப் பிரதிபலிக்கின்ற தனிநபர்அதைப் பற்றிப் புதிய தகவலைப் பெறுகிறார். அப்புதிய தகவல் கடந்தகாலத்திய அனுபவத்திலிருந்து பெற்ற தகவல் மீது, பொருளைப் பற்றி அத்தனிநபருடைய எண்ணங்கள் மீது அடுக்கப்படுகிறது. இந்த எண்ணங்கள் எப்பொழுதுமே ஓரளவுக்கு துல்லியமற்றவையாக, அரைகுறையானவையாக, முழுமையற்றவையாக இருக்கின்றன. அதன் விளைவாக ஏற்படுகின்ற முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு ஒப்பிட்டுப் பார்த்தல், சரி பார்த்தல், ஆராய்ச்சி ஆகியன அவசியமாக இருக்கின்றன. அதன் விளைவாகத் தனிநபர் அப்பொருளைப் பற்றிப் புதிய அறிவைப் பெறுகிறார்.

---

* Frederick Engels, *Dialectics of Nature*, p. 195.

உணர்வின் சுறுசுறுப்பான பாத்திரம் அதன் ஆக்க பூர்வமான செயலில், யதார்த்தத்தை முற்கூட்டிப் பிரதி பலித்தல், நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மாற்றுதல் ஆகியவற்றில் மிகவும் முழுமையாக வெளிப் படுகிறது. அதன் விளைவாக மனிதன் இயற்கையான உலகத்தில் இல்லாத புதிய வடிவங்களைப் படைக் கிறான்.

உணர்வின் எதிர்காலத்தை நோக்கிய திசைவழியும் அறிதல், அமைத்தல், முன்னறிவித்தல் என்னும் உணர் வின் பாத்திரங்களும் மக்கள் ஜனநாயகம் மற்றும் விஞ் ஞான சோஷலிசத்தைக் கொண்ட புதிய சமூகத்தை நிர் மாணிப்பதில் தலையாய முக்கியத்துவத்தைக் கொண் டிருக்கின்றன. சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் விஞ்ஞான ரீதியான முன்னறிவித்தலுக்கும் திட்டமிடு தலுக்கும் மார்க்சிய-லெனினியக் கட்சிகள் மாபெரும் முக் கியத்துவத்தை அளிக்கின்றன. சமூக வாழ்க்கையில் உணர் வின் அமைப்பு ரீதியான பரந்த முக்கியத்துவத்தையும் மாற்றியமைக்கின்ற முக்கியத்துவத்தையும் மனதிலிறுத்தி, தம்முடைய உறுப்பினர்களையும் உழைக்கும் மக்களை யும் மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளின் அடிப்படை யில் பயிற்றுவிப்பது தலையாய கடமை என்று கருது கின்றன. மக்கள் உலக மற்றும் உள்நாட்டு வளர்ச்சியின் போக்கையும் அதன் எதிர்காலக் காட்சியையும் காண் பதற்கும் புரிந்து கொள்வதற்கும் சரியாக மதிப்பிடுவதற் கும், புதிய வாழ்க்கைக்கு உணர்வு பூர்வமாகப் போராடு வதற்கும் அதை நிர்மாணிப்பதற்கும் அவர்களுக்கு உதவி யாகப் பயிற்றுவிப்பதற்கு அவை முற்படுகின்றன.

உணர்வின் ஒழுங்குபடுத்தும் செயல் தூண்டல், நிர் வகித்தல் என்னும் இரண்டு வடிவங்களைக் கொண்டிருக் கிறது. கருத்துக்கள் தூண்டுதலுக்குரிய சக்தியைப் பெறு

கின்ற பொழுது தனி மனிதன் தன்னுடைய இலட்சியங் களுக்கு ஏற்ற முறையில் உணர்வு பூர்வமான குறிவழிப்பட்ட நடவடிக்கையை மேற்கொள்கிறான். புரட்சிகர மனோ பாவம் உள்ள எண்ணற்ற ஆண்களும் பெண்களும் நாட் டுக்கும் மக்களுக்கும் விடுதலைக்காக நடைபெறுகின்ற சுதந்திரப் போராட்டத்தில் தமது இன்னுயிரை அர்ப் பணிக்கிறார்கள். தனிநபர் தன்னுடைய இலட்சியத்தை அதை நிறைவேற்றக் கூடிய யதார்த்தமான வழிமுறை யுடன் பொருத்துவதற்கு நிர்வாக ஒழுங்குபடுத்தல் உதவு கிறது.

மனித உணர்வின் சுறுசுறுப்பான பாத்திரம் அதை விஞ்ஞான ரீதியில் அமைப்பதற்கு உதவுவதை அவசிய மாக்குகிறது. உணர்வுள்ள மனிதர்கள்தான் உலகத்தைப் படைக்கிறார்கள், மாற்றுகிறார்கள்; அவர்கள் ஒரு திட்ட வட்டமான சகாப்தத்தில், திட்டவட்டமான சமூக உறவு களைக் கொண்ட அமைப்பில் வாழ்கின்றார்கள். அவர் கள் உலகத்தையும் தம்முடைய சொந்த வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகளையும் எந்த அளவுக்கு மாற்ற முடியும் என்பது கடந்த தலைமுறைகளிடமிருந்து அவர் களுக்குக் கிடைத்திருக்கின்ற சமூக உறவுகள், அவர்களு டைய செய்முறை நடவடிக்கை, அவர்களுடைய சொந்த உணர்வு மட்டத்தின் வளர்ச்சி ஆகியவற்றைப் பொறுத் திருக்கிறது. அதனால்தான் மார்க்சிய-லெனினியக் கட்சி கள் சமூக உறவுகளை மாற்றுவதற்கான தமது போராட் டத்தில் மக்களிடையில் விஞ்ஞான உலகக் கண்ணோட் டத்தை உருவாக்குவதில், அவர்கள் மக்கள் ஜனநாயகம், சமாதானம், சோஷலிசம் ஆகியவற்றுக்கு உணர்வு பூர்வ மான சுறுசுறுப்பான போராட்டக்காரர்களாக புரட்சி கரப் பயிற்சியளிப்பதில் அதிகமான கவனம் செலுத்து கின்றன.

வேறு எந்த நிகழ்வையும் போலவே உணர்வும் சொந்த வழிமுறைகளையும் வாழ்நிலை வடிவங்களையும் கொண்டிருக்கிறது; அவற்றுக்கு வெளியில் அது இருக்க முடியாது. மொழி அதன் வாழ்நிலையின் ஒரு முறையாகும்.

உணர்வு தோன்றிய காலத்திலிருந்து மொழி என்னும் பொருளாயத மேல் ஓட்டைக் கொண்டிருக்கிறது. அது மொழியின் மூலம் பிரத்தியட்சமாக்கப்பட்டு, மற்றவர்கள் அதை அறிவதற்கும் புரிந்து கொள்வதற்கும் உரியதாகிறது. மார்க்சும் எங்கெல்சும் பின்வருமாறு எழுதினார்கள்:''...மனிதனிடம்'உணர்வும்' இருக்கிறது. ஆனால் ஆரம்பத்திலிருந்தே இது 'தூய்மையான' உணர்வாக இருக்கவில்லை. ஆரம்பத்திலிருந்தே 'ஆன்மா' பருப்பொருளின் 'சுமையைத் தாங்கும்'' சாபத்துக்கு ஆளாகியிருக்கிறது; இங்கே பருப்பொருள் காற்றின் அசைந்த படிவங்களின், ஒலிகளின் வடிவத்தில், சுருக்கமாகச் சொல்வதென்றால் மொழியாகத் தோன்றுகிறது. மொழி உணர்வைப் போலப் பழமையானது; மொழி செய்முறையானது, மற்ற மனிதர்கள் உள்ளிட்டு அனைவருக்கும் உரிய மெய்யான உணர்வு, அதனால்தான் அது எனக்காகவும் இருக்கிறது. உணர்வைப் போலவே மொழியும் தேவையின் காரணமாக, மற்ற மனிதர்களுடன் இடை உறவுக்கான அவசியத்தின் காரணமாகத் தோன்றுகிறது.''*

மனிதன் தன்னுடைய சொந்தக் கருத்துக்கள், மற்றவர்களுடைய கருத்துக்கள் ஆகிய இரண்டையும் சொற்கள், அதாவது மொழியின் மூலமாக மட்டுமே அறிகிறான். மொழியும் உணர்வும் ஒன்றிடமிருந்து மற்றொன்று தனித்

* K. Marx, F. Engels, *Collected Works*, Vol. 5, pp. 43—44.

திருக்க முடியாது. ஏதாவதொரு காரணத்துக்காக மொழியைக் கற்றுக் கொள்ளாத குழந்தைகளுக்கு உணர்வு இல்லை என்பது இதற்குச் சிறந்த நிரூபணமாகும்.

மொழி ஒருங்கிணைந்த, வரலாற்று ரீதியில் நிறுவப்பட்ட குறியீடுகளின் அமைப்பின் வடிவத்தில் இருக்கிறது. அந்த அமைப்பு பிரத்யேகமான கட்டமைப்பைக் கொண்டிருக்கிறது; அது புறநிலையான வளர்ச்சி விதிகளால் ஆளப்படுகிறது. மொழி ஓரளவுக்கு சுதந்திரத்தைக் கொண்டிருக்கிறது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

ஆனால் உணர்வைப் போலவே மொழியும் சமூக ரீதியில் வரையறுக்கப்பட்டிருக்கிறது. அது மனிதத் தொடர்பு மற்றும் அறிவுச் சாதனம், மனிதனுடைய சமூக மற்றும் உழைப்பு நடவடிக்கையின் கருவி என்ற முறையில் உணர்வுடன் ஒரே சமயத்தில் தோன்றியது. உணர்வு யதார்த்தத்தைப் பிரதிபலிக்கிறது என்றால் மொழி அதற்குப் பெயரிடுகிறது, கருத்துக்களை வெளியிடுகிறது. மொழியிலும் பேச்சிலும் மனிதனுடைய கருத்துக்கள், எண்ணங்கள், உணர்ச்சிகள் புலன்களால் அறியப்படத் தக்க பொருளாயத வடிவத்தை அடைகின்றன; ஆகவே அவை மக்களிடம் செல்கின்றன. அதனால்தான் மொழி வன்மையான ஆயுதமாக இருக்கிறது; சில தனிநபர்கள் மற்றவர்கள் மீது தாக்கம் செலுத்துவதற்கும் சமூகம் தனிநபர் மீது தாக்கம் செலுத்துவதற்கும் அது பேருதவி செய்கிறது.

உணர்வின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் மொழி பல செயல்களை நிறைவேற்றுகிறது.

முதலாவதாக, குறிப்பிட்டுச் சுட்டும் செயல். மக்கள் தம்மைச் சுற்றியுள்ள பொருட்களையும் நிகழ்வுகளையும், அவற்றின் இணைப்புக்களையும் உறவுகளையும், தம்முடைய சொந்த மனோபாவங்களையும், உலகத்தைப்

பற்றிய அணுகுமுறையையும் இன்னும் மற்றவற்றையும் குறிப்பிட்டுப் பேசுவதற்குச் சொற்களை உபயோகிக்கிறார்கள். சொல் உலகத்தைப் பற்றி மனிதனுடைய அறிவின் சாதனம்; கருத்துக்களையும் பொருட்களையும் தொடர்புபடுத்துகின்ற சாதனம்; ஏனென்றால் அது ஒரே சமயத்தில் பொருட்களைப் பிரதிபலித்துக் குறிப்பிட்டுச் சுட்டுகிறது. அது சிந்தனையின் சூக்கும நடவடிக்கையைப் பதிவு செய்கிறது.

சொல் ஒரு விதத்தில் பொருளுக்குப் பதிலாகப் பயன்படுகிறது, அதை மனித உணர்வில் பிரதிநிதித்துவம் செய்கிறது. அது சிந்தனை நிகழ்வுப் போக்கை, மெய்யான பொருட்களையும் அவற்றின் குணாம்சங்களையும் உறவுகளையும் கருத்தியலான பிம்பங்களாக மனதில் அமைப்பதை சாத்தியமாக்குகிறது.

இரண்டாவதாக, பொதுமைப்படுத்தும் செயல். உணர்வில் யதார்த்தத்தைப் பொதுமைப்படுத்தி பிரதிபலிக்கின்ற சாத்தியத்தைச் சொற்கள் ஏற்படுத்துகின்றன. ''ஒவ்வொரு சொல்லும் (பேச்சும்) ஏற்கெனவே சர்வப் **பொதுமை**'' என்று லெனின் எழுதினார்.* உதாரணமாக பருப்பொருள் என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். அது தனிப்பட்ட எதையும் குறிப்பிடவில்லை (அது சொற்கள் மற்றும் கருதுகோள்களின் அமைப்பினால் வெளியிடப்படுகிறது); ஆனால் அது உணர்விலிருந்து சுயேச்சையாக, புறநிலையாக இருக்கின்ற ஒவ்வொன்றுக்கும் குணாம்சமான ஒன்றை வெளியிடுகிறது. இம்முறையில் மொழியும் பேச்சும் யதார்த்தத்தைச் சுருக்கமாக, கருத்தியலாக மறு ஆக்கம் செய்வதை சாத்தியமாக்குகின்றன; ஆகவே அறிவை மணிச் செறிவாக அறிதல், சேமித்தல், உபயோ

* V. I. Lenin, *Collected Works*, Vol. 38, p. 272.

கித்தல், மாற்றிக் கொடுத்தல் ஆகியவற்றை சாத்திய மாக்குகின்றன. இந்த அர்த்தத்தில் மொழி மனிதகுல அறிவின் மாபெரும் சேமிப்பு நிலையமாக இருக்கிறது. அதன் வரலாறு உலகைப் பற்றி மனிதனுடைய அறிவுத் தேடலின் வரலாறு ஆகும்.

மூன்றாவதாக, தகவல் தொடர்புச் செயல். மொழி தனிநபர்கள், மக்களினங்கள், கடந்தகாலத் தலைமுறை யினர் மற்றும் எதிர்காலத் தலைமுறையினர் மத்தியில் தகவல் தொடர்புச் சாதனமாக விளங்குகிறது. மொழியின் இச்செயல் எழுத்து தோன்றிய பிறகு குறிப்பிடத் தக்க விதத்தில் அதிகரித்தது. அக்காலத்திலிருந்து மனிதகுலத் தின் சமூக மற்றும் உழைப்பு அனுபவம், அறிதல் மற்றும் அழகியல் நடவடிக்கை, பொருளாயத மற்றும் ஆன்மீகக் கலாசாரத் துறைச் சாதனைகள் திரட்டப்பட்டுக் குறிப் பிடத் தக்க வெற்றியுடன் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இக்காலத்தில் சமாதானம், சர்வதேச பதட்ட நிலைத் தணிவு, ஜனநாயகம், முன்னேற்றம், சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்துக்கான போராட்டத்தில் கோடிக்கணக்கான மக்கள் ஈடுபட்டு வருகின்ற காரணத்தினால் உலகத்தை அறிந்து புரட்சிகரமாக மாற்றியமைப்பதில் மொழியின் தகவல் தொடர்புச் செயல் மேலும் அதிகரித்திருக்கிறது. நாடுகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கமான பொரு ளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் கலாசாரப் பிணைப்புகளும், இன்றைய விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சியின் இயற்கையான போக்கும் இதற்குக் காரண மாகும்.

மொழி அறிவின் கருவியாக இருப்பது மட்டுமின்றி, உலகத்தை நடைமுறையில் மாற்றியமைக்கின்ற கருவி யாகவும் இருக்கிறது. அதனால்தான் மொழி மேற்கூறிய மூன்று செயல்களைத் தவிர, அவற்றின் அடிப்படையில்

வெளியிடுதல், தாக்கம் செலுத்துதல் என்ற செயல்களையும் நிறைவேற்றுகிறது.

மனிதன் இயற்கை மற்றும் சமூக நிகழ்வுப் போக்குகளுடனும் சம்பவங்களுடனும் பல்வேறு வழிகளில்பிணைக்கப்பட்டிருக்கிறான்; ஏனென்றால் இவை அவனுடைய அக்கறைகளையும் தேவைகளையும் பாதிக்கின்றன. அதனால்தான் மனிதன் எப்பொழுதும் இந்த நிகழ்வுப் போக்குகள், சம்பவங்களின் பால் திட்டவட்டமான உணர்ச்சிகர அணுகுமுறையைப் பின்பற்றி அவற்றை மதிப்பிடுகிறான். மொழியில் வடிக்கப்படுகின்ற அந்த உணர்ச்சிகர அணுகுமுறை வெளியீட்டுச் செயலின் உருவகமாக இருக்கிறது.

மனிதன் தன்னுடைய பேச்சில் ஓரளவுக்கு, உணர்வுபூர்வமாகவோ அல்லது உணர்வு இல்லாமலோ, தன்னிடம் அல்லது மக்களிடம் பேசுகிறான். அது எப்பொழுதுமே பிரேரணைகள், கேள்விகள், கடமைகள், புகார்கள் வேண்டுதல்கள், ஆணைகள், இதரவற்றைக் கொண்டிருக்கிறது; இவை ஏதாவதொரு வழியில் மக்களைச் செயலுக்குத் தூண்டுகின்றன. இது தாக்கச் செயல் எனப்படும்.

மேற்கூறிய செயல்கள் அனைத்தும் மொழி மற்றும் உணர்வின் ஒற்றுமையிலும் இடையிணைப்பிலும் வெளித்தோன்றுகின்றன. மொழியை உணர்விலிருந்து பிரித்துவிட்டால் அது பொருளற்றதாகி விடுகிறது அல்லது இல்லாமல் போய்விடுகிறது. உணர்வும் மொழியும் தம் இடை இணைப்பில் சமூகத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்கில் வளர்ச்சி அடைகின்றன.

அத்தியாயம் ஆறு

சர்வப்பொதுத் தொடர்பு மற்றும் வளர்ச்சியின் போதனை என்ற முறையில் இயக்கவியல்

பொருள்முதல்வாத இயக்கவியல்— ஒரு விஞ்ஞானம்

யதார்த்தத்தை அறிகின்ற மற்றும் மாற்றியமைக்கின்ற தத்துவம் மற்றும் முறையைக் குறிப்பதற்கு இயக்கவியல் என்ற கருதுகோளை மார்க்சிய-லெனினியத் தத்துவ ஞானம் பயன்படுத்துகிறது. மார்க்சிய-லெனினியம் என்ற ஒருங்கிணைந்த தத்துவஞானத்தில் பொருள்முதல்வாத இயக்கவியலும் தத்துவஞானப் பொருள்முதல்வாதமும் பின்னிப் பிணைந்த இரண்டு அம்சங்கள் ஆகும்.

தத்துவஞானப் பொருள்முதல்வாதம் உலகக் கண்ணோட்டத்தின் பொதுவான பிரச்சினைகளை, சுற்றுப்புற உலகத்தின் இயல்பை ஆராய்கிறது. பொருள்முதல்வாத இயக்கவியல் உலகில் என்ன நடைபெறுகிறது, அது திடீரென்று தோன்றியதா அல்லது நிரந்தரமாக இருந்து வருகிறதா, அது மாறாத் தன்மை உடையதா அல்லது மாற்றமும் வளர்ச்சியும் அடைவதா என்ற கேள்விகளுக்குப் பதிலளிக்கிறது.

முதலில் விஞ்ஞானம் என்ற முறையில் இயக்கவியலை ஆராய்வோம்.

இயக்கவியலைப் பற்றி இரண்டு பிரபலமான வரையறுப்புக்களை வகுத்துக் கொடுத்தவர் எங்கெல்ஸ். அவர் **இயற்கையின் இயக்கவியல்** என்ற நூலில் அதைத் தொடர்புகளின் விஞ்ஞானம் என்று வரையறுக்கிறார்; **டூரிங்குக்கு மறுப்பு** என்ற நூலில் அதை அனைத்து இயக்கம் மற்றும் வளர்ச்சியின் சர்வப்பொதுவான விதிகளைப் பற்றிய விஞ்ஞானம் என்று வரையறுக்கிறார்.* எங்கெல்ஸ் சர்வப் பொதுத் தொடர்புக் கோட்பாட்டை இயக்கம் மற்றும் வளர்ச்சிக் கோட்பாட்டுடன் அங்கக ஒருமையில் பரிசீலிக்கிறார்; ஏனென்றால் பொருளாயத உலகில் தொடர்பு என்பது இடைச் செயலைக் குறிக்கிறது, இடைச் செயல் என்பது இயக்கமும் வளர்ச்சியுமாகும். ''நமக்குப் பக்கத்திலுள்ள மொத்த இயற்கையும் ஒரு அமைப்பாக, இடைத் தொடர்பு கொண்ட பொருட்களின் மொத்தமாக இருக்கிறது; பொருட்கள் என்று சொல்லும் பொழுது பொருளாயத இருத்தல்கள் அனைத்தையுமே நாம் குறிக்கிறோம்...இப்பொருட்கள் இடைத்தொடர்பு கொண்டவை என்னும் மெய்விவரத்தில் அவை ஒன்றுடன் ஒன்று செயல்விளைவைக் கொண்டிருக்கின்றன என்பது ஏற்கெனவே உள்ளடங்கியுள்ளது; துல்லியமாக இப்பரஸ்பரச் செயல்விளைவுதான் இயக்கமாகும்.''** இயக்கவியல் என்பது சர்வப்பொதுத் தொடர்புகளைப் பற்றிய விஞ்ஞானம் என்று எங்கெல்ஸ் வரையறுத்த பொழுது அவர் இந்தத் தொடர்புகளால் ஆளப்படுகின்ற இயக்கம் மற்றும் வளர்ச்சி என்னும் இடைச் செயலின் சர்வப் பொது விதிகளையும் குறிப்பிடுகிறார். அதே சமயத்தில் இயக்கவியலை அனைத்து இயக்கத்தின் சர்வப்பொது

* பார்க்க: Frederick Engels, *Anti-Dühring*, p. 168.
** Frederick Engels, *Dialectics of Nature*, p. 70.

விதிகளைப் பற்றிய விஞ்ஞானம் என்று வரையறுக்கின்ற பொழுது அவர் சர்வப்பொதுத் தொடர்புகளையும் குறிக்கிறார்; ஏனென்றால் இடைச் செயல் அல்லது இயக்கம் இல்லாமல் தொடர்புகள் இல்லை; அதே போல தொடர்புகளோ அல்லது இடைச் செயலோ இல்லாமல் இயக்கமும் இல்லை.

எங்கெல்சை முழு அளவில் அங்கீகரித்த லெனின் இயக்கவியலை வளர்ச்சியின் ஆக வளமான போதனை என்று வர்ணித்தார்.*

மார்க்சிய இயக்கவியல் உலகின் பொருளாயத ஒருமை மற்றும் பருப்பொருளின் இயக்கம், வளர்ச்சியின் எல்லா வடிவங்களின் புறநிலைத் தன்மையிலிருந்து தொடங்குகிறது. அதன் பொருள்முதல்வாதத் தன்மை புறநிலை இயக்கவியல் மற்றும் அகநிலை இயக்கவியல் கோட்பாட்டில் அதிகமான முனைப்பைக் கொண்டிருக்கிறது. ''புறநிலை இயக்கவியல் என்று கூறப்படுவது இயற்கை நெடுகிலும் நிறைந்திருக்கிறது; அகநிலை இயக்கவியல் என்று சொல்லப்படுவது, அதாவது இயக்கவியல் சிந்தனை இயற்கையில் எங்கணும் இருக்கும் இயக்கத்தின் பிரதிபலிப்பு மட்டுமே...'' என்று எங்கெல்ஸ் எழுதினார்.**

ஆகவே **புறநிலை இயக்கவியல்** என்பது பொருளாயத உலகத்தில் இயக்கமும் வளர்ச்சியுமாகும். **அகநிலை இயக்கவியல்** அல்லது இயக்கவியல் சிந்தனை என்பது மனித உணர்வில் புறநிலை இயக்கவியலைப் பிரதிபலிக்கின்ற சிந்தனைகள், கருத்துக்கள், இதரவற்றின் இயக்கமும் வளர்ச்சியுமாகும்.

---

* வி.இ. லெனின், கார்ல் மார்க்சும் அவரது போதனையும், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், *1981*, பக்கம் *22*.
** Frederick Engels, *Dialectics of Nature*, p. 211.

புறநிலை இயக்கவியலின் பிரதிபலிப்பு என்ற முறையில் அகநிலை இயக்கவியலின் உள்ளடக்கம் முந்தியதுடன் பொருந்தி இருக்கிறது. இரண்டுமே ஒரே சர்வப்பொது விதிகளால் ஆளப்படுகின்றன. வாழ்நிலை மற்றும் சிந்தனையின் சர்வப்பொது விதிகள் ''இரண்டு ரகங்களைச் சேர்ந்த விதிகளாக இருக்கின்றன; அவற்றை நாம் எப்பொழுதாவது சிந்தனையில் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்கலாமே தவிர, யதார்த்தத்தில் பிரிக்க முடியாது.''*

விஞ்ஞானம் என்ற முறையில் இயக்கவியல் பொருளாயத உலகத்தின் இருத்தலின் சர்வப்பொதுவான புறநிலைக் கோட்பாடுகளையும் வளர்ச்சி விதிகளையும் ஆராய்கிறது. புறநிலை இயக்கவியல் அகநிலை இயக்கவியலின் உள்ளடக்கமாக இருக்கிறது. அதனால்தான் அதனுடைய அடிப்படை விதிகளும் வகையினங்களும் அதே சமயத்தில் வாழ்நிலை, அறிதல் ஆகிய இரண்டின் விதிகளாகவும் வகையினங்களாகவும் இருக்கின்றன. ''அதன் விதிகள் இயற்கை மற்றும் மனித சமூக வரலாற்றுக்குச் செல்தகைமையைக் கொண்டிருப்பதைப் போல சிந்தனையின் இயக்கத்துக்கும் செல்தகைமையைக் கொண்டிருக்கும் என்பதை இது சுட்டுகிறது.''**

இதை அடிப்படையாகக் கொண்டு லெனின் மிகவும் முக்கியமான உலகக் கண்ணோட்ட முடிவைப் பெறுகிறார்; மார்க்சியத் தத்துவஞானத்தில் இயக்கவியல், தர்க்கவியல் மற்றும் அறிதல் தத்துவம் பொருந்தி இருக்கின்றன என்பது அந்த முடிவாகும். இயற்கை, சமூகம் மற்றும் சிந்தனை (அறிதல்) வளர்ச்சியின் ஆகப் பொது விதிகள் ஒரே

---

* Frederick Engels, *Anti-Dühring*, p. 137.

** Frederick Engels, *Dialectics of Nature*, p. 267.

மாதிரியானவை என்பது இதன் பொருளாகும். இவை பொருள்முதல்வாத இயக்கவியலின் விதிகள். அதனால் தான் பொருள்முதல்வாத இயக்கவியல் மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் தர்க்கவியலாகவும் அறிவுத் தத்துவமாகவும் இருக்கிறது. ''இயக்கவியல் மார்க்சியத்தின் அறிவுத் தத்துவமாக இருக்கிறது'' என்பதை வலியுறுத்தினார் லெனின்.*

வளர்ச்சியைப் பற்றிய பொதுவான தத்துவம் என்ற முறையில் பொருள்முதல்வாத இயக்கவியல் உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. அதன் உதவியின்றி ஒருவர் உலகத்தைப் பற்றிய நவீனமான, ஒருங்கிணைந்த, விஞ்ஞான பூர்வமான சித்திரத்தை ஒரு போதும் முன்வைக்க முடியாது. அதே சமயத்தில் உலகத்தை விஞ்ஞான ரீதியாக அறிவதற்கும் புரட்சிகர முறையில் மாற்றியமைப்பதற்கும் அது அத்தியாவசியமான கருவியாக இருக்கிறது. அதனால்தான் லெனின் இயக்கவியல் மார்க்சியத்தின் ''உயிர்'' என்று கூறினார்.

பொருள்முதல்வாத இயக்கவியல் மொத்த மார்க்சிய-லெனினியத்தின்,சிறப்பாக மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் ''உயிர்'' என்று கருதப்படுவதற்குக் காரணங்கள் என்ன?

முதலாவதாக, பொருள்முதல்வாத இயக்கவியல் சாராம்சத்திலும் உள்ளடக்கத்திலும் புரட்சிகரமானது. அது எல்லாவற்றையும் இயக்கம்,மாற்றம் மற்றும் வளர்ச்சியில் பார்க்கிறது. இம்முறையில் அது உலகத்தில் எல்லா நிகழ்வுகளின், சிறப்பாக சமூக உறவுகளின் எல்லா வடிவங்களின் வரலாற்று ரீதியில் தற்காலிகத் தன்மையை

* V. I. Lenin, *Collected Works*, Vol, 38, p. 360.

வெளிக்காட்டுகிறது. பொருள்முதல்வாத இயக்கவியல் ''முதலாளி வர்க்கத்துக்கும் அதன் கோட்பாட்டுவாதப் பேராசிரியர்களுக்கும் அவதூறாக, அருவருப்பாக இருக்கிறது. ஏனென்றால் அது இன்றைக்கிருக்கின்ற நிலைமையைப் புரிந்து கொண்டு ஆமோதித்து அங்கீகரிக்கின்ற அதே சமயத்தில், அந்த நிலைமையின் மறுப்பையும், அது தவிர்க்க முடியாத வகையில் நொறுங்கும் என்பதையும் அங்கீகரிக்கிறது... எதுவும் தனக்குக் கட்டளையிட அது அனுமதிப்பதில்லை, சாராம்சத்தில் அது விமர்சனத் தன்மையுடனும் புரட்சிகரமாகவும் இருக்கிறது'' என்று மார்க்ஸ் எழுதினார்.*

இரண்டாவதாக, பொருள்முதல்வாத இயக்கவியல் சமூக முன்னேற்றத்தின் பொதுத் திசைவழியையும் முதலாளித்துவத்திலிருந்து (அல்லது வளர்ச்சியின் முதலாளித்துவத்துக்கு முந்திய வடிவங்களிலிருந்தும் கூட) சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் மாறுகின்ற தர்க்கத்தையும் விளக்குவதோடு பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமையையும் அதன் முற்போக்கான இலட்சியங்களையும் சோஷலிஸ்ட் புரட்சியின் மூலம் சுரண்டல் அமைப்பை ஒழிப்பதற்கு வெல்லற்கரிய முறையில் முயல்வதையும் நிறுவுகிறது. பொருள்முதல்வாத இயக்கவியல் அறிதலின் பொது விதிகளையும் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர நடவடிக்கையையும் வெளிக் கொணர்வதால் அது மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் போர்த்திட்டம் மற்றும் செயல்தந்திரத்துக்குத் தத்துவரீதியான அடிப்படையைத் தருகிறது. ''மார்க்ஸ் பாட்டாளி வர்க்க செயல் தந்திரத்தின் அடிப்படைக் கடமையை அவருடைய

* Karl Marx, *Capital*, Vol. 1, p. 29.

பொருள்முதல்வாத இயக்கவியல் உலகக் கண்ணோட்டத்தின் எல்லா முன்மொழிவுகளோடும் கறாராகப் பொருந்துகின்ற முறையில் வரையறுத்துக் கூறினார்'' என்று லெனின் எழுதினார்.*

மூன்றாவதாக, இயற்கை, சமூகம், சிந்தனையின் வளர்ச்சியின், மனிதகுலத்தின் மொத்த பொருளாயத மற்றும் ஆன்மீக வாழ்க்கையின் வளர்ச்சியின் சர்வப் பொது விதிகளை விளக்கும் பொழுது பொருள்முதல்வாத இயக்கவியல் தொழிலாளி வர்க்கம் மற்றும் இதர எல்லா உழைக்கும் மக்களின் சமூக அரசியல் இலட்சியங்களையும் குறிக்கோள்களையும் நலன்களையும் விஞ்ஞான ரீதியில் வகுத்துக் கூறுவதை சாத்தியமாக்குகிறது. பெருந்திரளான மக்களின் படைப்புத் திறனுக்கு அது வளமான தோற்றுவாயாக, அவர்களது சமூகத்தை மாற்றியமைக்கும் புரட்சிகர நடவடிக்கையின் அளவு, வேகம், திசையமைவின் மீது நேரடியாகத் தாக்கம் செலுத்துவதாக இருக்கிறது.

நான்காவதாக, பொருள்முதல்வாத இயக்கவியல் இயற்கை மற்றும் சமூக நிகழ்வுகளையும் சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கின்ற போராட்டத்தின் விதிகளையும் சமூக நீதியை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தை நிர்மாணிக்கின்ற விதிகளையும் அறிதலில் மிக முக்கியமான உலகக் கண்ணோட்ட மற்றும் முறையியல் பாத்திரத்தை வகிக்கிறது. லெனின் பொருள்முதல்வாத இயக்கவியலின் முக்கியத்துவத்தையும் மார்க்சியத்தின் அடிப்படையான கருதுகோள்களை வகுத்தளிப்பதில் அதன் பாத்திரத்தையும் பின்வருமாறு வர்ணிக்கிறார்: ''பொருள்முதல்வாத இயக்கவியலை அடிப்படைகளிலிருந்து எல்லா அரசியல் பொருளாதாரத்தையும் மாற்றி

---

* வி.இ. லெனின், கார்ல் மார்க்சும் அவரது போதனையும், பக்கம் 55.

யமைப்பதற்குப் பின்பற்றுதல், வரலாறு, இயற்கை விஞ்ஞானம், தத்துவஞானம், தொழிலாளி வர்க்கத்தின் கொள்கை மற்றும் செயல்முறைக்கு அதைப் பின்பற்றுதல்—எல்லாவற்றுக்கும் மேலாக இதில்தான் மார்க்சும் எங்கெல்சும் மிகவும் அதிகமான அக்கறை காட்டினார்கள். இத்துறையில்தான் அவர்கள் மிகவும் முக்கியமானவற்றை, புதியவற்றைக் கொடுத்தார்கள். புரட்சிகரச் சிந்தனையின் வரலாற்றில் அவர்கள் செய்த மாபெரும் முன்னேற்றம் இதுவே.''*

இயக்கவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்

இயக்கவியல் என்பது சர்வப்பொதுத் தொடர்புகளின் விஞ்ஞானம், பொருளாயத உலகத்தின் மற்றும் அந்த உலகத்தைப் பிரதிபலிக்கின்ற மனித உணர்வின் சர்வப் பொது விதிகளின் விஞ்ஞானம் என்று வரையறுக்கின்ற பொழுது தொடர்பு மற்றும் வளர்ச்சி என்ற கோட்பாடுகளிலிருந்து நாம் தொடங்குகிறோம்.

1. சர்வப்பொதுத் தொடர்புக் கோட்பாடு. தொடர்பும் இடைச் செயலும். நிகழ்வுகளின் சர்வப்பொதுத் தொடர்பு பொருளாயத உலகத்தின் ஆகப் பொதுவான நியதியாகும். உலகத்தில் எல்லாப் பொருட்கள், நிகழ்வுப் போக்குகள் மற்றும் புலப்பாடுகளுக்கும் பொதுவாக இருக்கின்ற பொருளாயதத் தன்மையிலிருந்து அது தோன்றுகிறது. சர்வப் பொதுத் தொடர்பு என்று கூறுகின்ற பொழுது பொருட்கள் அல்லது நிகழ்வுகளின் தோற்றம், மாற்றம், வளர்ச்சி மற்றும் பண்பு ரீதியில் ஒரு புதிய நிலைக்கு மாறுதல் தனித்த நிலையில் நடைபெறுவதில்லை, மற்ற நிகழ்வு

* V. I. Lenin, *Collected Works*, Vol. 19, p. 554.

கள் மற்றும் பொருளாயத அமைப்புக்களுடன் இடைத் தொடர்பு மற்றும் இடைச் சார்பு நிலையில் மட்டுமே நடைபெறுகிறது என்பது அர்த்தம். ஒரு பொருள் அல்லது அமைப்பு மற்ற பொருட்கள் அல்லது அமைப்புக்களுடன் வலைப் பின்னலைப் போன்ற உறவுகளின் மூலமாக இணைக்கப்பட்டிருக்கின்றன; இவற்றில் சிலவற்றில் ஏற் படுகின்ற மாற்றங்கள் அடுத்தவற்றிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

சர்வப்பொதுத் தொடர்பு என்ற கருத்தமைப்பில் உறவுகளின் எல்லா ரகங்களும் வடிவங்களும் அடங்கி யிருக்கின்றன. இத்தொடர்பின் சர்வப்பொதுவான கூறு களில் இடைச் செயல் ஒன்று. பொருட்களும் நிகழ்வுப் போக்குகளும் ஒன்றின் மீதொன்று ஏற்படுத்துகின்ற தாக் கத்தின் எல்லா ரகங்களும் முறைகளும் வடிவங்களும் இடைச் செயல் எனப்படுகின்றன. பொருட்கள் இடைச் செயல் புரிகின்ற பொழுது பரஸ்பர மாற்றமும் இயக்க மும் எப்பொழுதும் ஏற்படுகிறது. யதார்த்தமான பொருட் களுக்கு இடையில் எண்ணற்ற இடைச் செயல்கள் என்னும் வலைப் பின்னல் மொத்தத்தில் வளர்ச்சியின் ஒருமித்த உலக நிகழ்வுப் போக்காகும். ''இப்பொருட்கள் இடைத் தொடர்பு உள்ளவை என்ற மெய்விவரத்தில் அவை ஒன் றின் மீது ஒன்று எதிர்வினை ஆற்றுகின்றன என்பது அடங் கியிருக்கிறது; துல்லியமாக இப்பரஸ்பர எதிர்வினைதான் இயக்கம்'' என்று எங்கெல்ஸ் வலியுறுத்தினார்.*

சூரிய மண்டல அமைப்புக்குள் கிரகங்களுடன் சூரிய னின் இடைச் செயல் அவை சூரியனைச் சுற்றி வருகின்ற விளைவைத் தவிர்க்க முடியாதபடி ஏற்படுத்துகிறது. உயிருள்ள இயற்கைக்கும் உயிரில்லாத இயற்கைக்கும்

---

* Frederick Engels, *Dialectics of Nature*, p. 70.

இடைச் செயல் தாவரங்களையும் பிராணிகளையும் மட்டுமின்றி புறச் சூழலையும் மாற்றுகிறது. பொருளாயத உற்பத்தியின் போது மனிதர்கள் இயற்கையுடன் இடைச் செயல் புரிகின்றனர்; அப்பொழுது இயற்கையையும் தங்களையும் மாற்றுகின்றனர்.

புறநிலையான உலகத்தின் பொருட்களும் நிகழ்வுகளும் இடைச் செயல் புரிவது மட்டுமின்றி பரஸ்பரம் ஒன்றையொன்று வரையறுக்கின்றன. பொருட்கள் அல்லது நிகழ்வுகளின் இத்தகைய இடைச் சார்பு நிலைக்கு வளர்ச்சியின் போது அவை ஒன்றையொன்று நிர்ணயிக்கின்றன, ஒன்றையொன்று சார்ந்து இருக்கின்றன என்று அர்த்தமாகும்.

பரஸ்பரச் சார்பு இயற்கை, சமூக வாழ்க்கை, மனித உணர்வு ஆகியவற்றில் எங்கும் காணப்படுகிறது. உதாரணமாக, நவீன பௌதிகம் எலெக்ட்ரானுடைய திண்மைக்கும் அதன் இயக்கத்தின் வேகத்துக்கும் பரஸ்பரச் சார்பை நிறுவியிருக்கிறது. சமூக வாழ்க்கையில் பொருளாயத சமூக உறவுகள் தனி மனிதர்களுடைய அறிவில் பிரதிபலித்து அவர்களுடைய சித்தாந்தத்தைத் தகவமைக்கின்றன. அது மறுபடியும் சுறுசுறுப்பான எதிர்த்தாக்கத்தைச் செலுத்துகிறது. மனித உணர்வில் புலனுணர்ச்சிகளுக்கும் கருத்தமைவுகளுக்கும் இடையில் பரஸ்பரச் சார்பு இருக்கிறது.

சர்வப்பொதுத் தொடர்பு மற்றும் இடைச் செயல் என்னும் கோட்பாடு உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது; உலகத்தின் பொருளாயத ஒருமையைப் பற்றி, சுய இயக்கம் என்ற முறையில் பருப்பொருளின் இயக்கத்தைப் பற்றி மிகவும் ஆழமான தெளிவைக் கொடுக்கிறது.

சர்வப்பொதுத் தொடர்பு மற்றும் இடைச் செயலின்

வடிவங்களும் முடிவில்லாத அளவுக்கு வேறுபாடானவை யாக இருக்கின்றன. தொடர்பின் வடிவங்களின் இயல்பும் வேறுபாட்டுத் தன்மையும் புறநிலையான உலகத்தின் ஒருமை மற்றும் ஒழுங்குமுறையினாலும் அதன் பொருட்கள் மற்றும் நிகழ்வுகளின் வேறுபாட்டுத் தன்மையினாலும் நிர்ணயிக்கப்படுகின்றன. பொருளாயத உலகத்தின் ஒவ்வொரு தனிப்பொருள் அல்லது நிகழ்வு எண்ணற்ற வெவ்வேறு அம்சங்களையும் குணாம்சங்களையும் கொண்டிருக்கின்றன; ஆகவே மற்ற பொருட்களுடனும் நிகழ்வுகளுடனும், மொத்தமாக எஞ்சிய உலகத்துடனும் எண்ணற்ற இடையுறவுகளைக் கொண்டிருக்கின்றன. அதே சமயத்தில் அவை தொடர்ச்சியான இயக்கம், மாற்றம், வளர்ச்சியைக் கொண்டிருக்கின்றன. வளர்ச்சியின் போது அவை ஒவ்வொன்றுடனும் எஞ்சிய உலகத்துடனும் கொண்டிருக்கின்ற இடையுறவுகள் தொடர்ந்து மாற்றமடைகின்றன; ஆகவே யதார்த்தத்தின் சர்வப்பொதுவான தொடர்பு வடிவங்கள் அதிகமான அளவில் இயங்கும் தன்மை உடையனவாகவும் பல்தொகுதியானவையாகவும் வேறுபாடுகளைக் கொண்டவையாகவும் இருக்கின்றன.

இயக்கவியலின் எல்லா வகையினங்களும் விதிகளும் யதார்த்தத்தின் பல்வேறு தொடர்புகளையும் உறவுகளையும் ஏதாவதொரு வழியில் எடுத்துரைக்கின்றன. அவற்றின் அமைப்புக்குள்ளாகத்தான் சர்வாம்சத் தொடர்பின் மிகப் பொதுப்படையான, சூக்குமமான கருத்து ஸ்தூலப்படுத்தப்படுகிறது. அத்தொடர்பின் வகைவேறான வடிவங்கள் தனித்திருக்கவில்லை, ஆனால் ஒருங்கிணைந்த அமைப்பாக இருக்கின்றன.

இடைச் செயலின் வடிவங்களும் அதே அளவுக்கு வகைவேறாக இருக்கின்றன. இவற்றில் அதிக முக்கியமானவை யாந்திரிக, பௌதிக, இரசாயன, உயிரியல்

மற்றும் சமூக வடிவங்கள் எனலாம். இவ்வடிவங்கள் ஒவ்வொன்றும் எண்ணற்ற இடைச் செயல்களைக் கொண்டிருக்கின்றன, அவை அதே சமயத்தில் மற்ற வடிவங்களுடன் சிக்கலான, வகைவேறான இடைச் செயல்களில் ஈடுபடுகின்றன.

சர்வப்பொதுத் தொடர்பு மற்றும் இடைச் செயல் என்னும் கருதுகோள் மனிதனுடைய அறிதலுக்கும் செய்முறை நடவடிக்கைக்கும் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. உண்மையில், மனிதன் உலகை அறிந்து கொண்ட மொத்த வரலாறுமே சர்வப்பொதுத் தொடர்பு மற்றும் இடைச் செயலின் முடிவில்லாத வெவ்வேறு வடிவங்களின் மர்மங்களை மனிதன் ஊடுருவிக் கண்டறிந்த வரலாறுதான், அவற்றைச் செய்முறையில் பயன்படுத்திய வரலாறுதான்.

2. வளர்ச்சிக் கோட்பாடு. இயக்கவியலின் இரண்டாவது அடிப்படைக் கோட்பாடு வளர்ச்சியாகும். உலகம் என்பது "முன்னரே தயாரிக்கப்பட்ட **பொருட்களின்** தொகுதியல்ல, ஆனால் அது **நிகழ்வுப் போக்குகளின்** தொகுதியே... அதில் பார்வைக்கு நிலையானவையாகத் தோன்றுகின்ற பொருட்கள் தோற்றம், அழிவு என்னும் இடைநிறுத்தமில்லாத மாற்றத்துக்கு உள்ளாகின்றன; அவற்றில் பார்வைக்குத் தற்செயலாக, தற்காலிகமான பின்னடைவாக அனைத்தும் தோன்றியபோதிலும் முடிவில் ஒரு முற்போக்கான வளர்ச்சி மேலோங்கும்..."* இதுதான் வளர்ச்சிக் கோட்பாட்டின் பொருள்.

உலகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற மாற்றங்கள் தன்மையிலும் திசையிலும் வேறுபடுகின்றன. இவை

* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. 3, pp. 362—363.

பொருட்கள் ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள உறவில் இயக்கமாகவும் மற்றவை ஒரு பொருளின் குணாம்சங்கள், கட்டமைப்பு, செயலில் மாற்றங்களாகவும் அமைந்திருக்கின்றன. சில மாற்றங்கள் மாற்றப்படக் கூடியவை (தண்ணீர்—பனிக்கட்டி—தண்ணீர்); மற்றவை மாற்றப்பட முடியாதவை (கரு—அங்கஜீவி). சில நிகழ்வுப் போக்குகள் கீழ்நிலையிலிருந்து உயர்நிலைக்கும், எளிமையானவற்றிலிருந்து சிக்கலானவற்றுக்கும் மாற்றத்தைக் குறிக்கின்றன; மற்றவை உயர்நிலையிலிருந்து கீழ்நிலைக்கும், சிக்கலானவற்றிலிருந்து எளிமையானவற்றுக்கும் மாற்றத்தைக் குறிக்கின்றன. மாற்றத்தின் வெவ்வேறு ரகங்களைக் குறிப்பதற்கு ''வளர்ச்சி'', ''முன்னேற்றம்'', ''பின்னடைவு'' ஆகிய கருத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

வளர்ச்சி என்பது ஒரு பொருள் அல்லது நிகழ்வுப் போக்கின் உள் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துகின்ற இயக்கத்தின் வகையாகும். ஒரு அமைப்பு வளர்ச்சியடைகின்றது என்று நாம் கூறும் பொழுது அதன் கட்டமைப்பில் உள்ளீடான, பண்பு ரீதியான மாற்றத்தை நாம் குறிக்கிறோம். கட்டமைப்பில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மாற்றப்பட முடியாதவை; அவை திட்டவட்டமான திசை வழியைக் கொண்டிருக்கின்றன.

உயர்நிலையான அமைப்பு ரகத்தை நோக்கி ஏறுமுகமான வளர்ச்சி முன்னேற்றம் என்று சொல்லப்படுகிறது, எதிர்த்திசையில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பின்னடைவு என்று சொல்லப்படுகின்றன. வளர்ச்சி என்பது முன்னேற்றம், பின்னடைவு ஆகியவற்றின் பல்தொகுதியான இயக்கவியல் இடைச் செயலாகும். ''பிரபஞ்சம், அதன் பரிணாமம், மனிதகுலத்தின் வளர்ச்சி, மனிதர்களின் மூளைகளில் இந்தப் பரிணாமத்தின் பிரதிபலிப்பு ஆகியவற்றைத் துல்லியமாகப் பிரதிநிதித்துவம் செய்

வதற்கு வாழ்க்கை மற்றும் மரணம், முன்னேற்றகரமான மற்றும் பின்னடைவான மாற்றங்கள் ஆகியவற்றின் எண்ணற்ற செயல்கள் மற்றும் எதிர்ச்செயல்களில் தொடர்ச்சியாக அக்கறை எடுத்துக் கொள்கின்ற இயக்கவியல் முறைகளினால் மட்டுமே முடியும்'' என்று எங்கெல்ஸ் எழுதினார்.*

ஆகவே, மொத்தத்தில் உலகின் இயக்கத்தை ஒரு திசையில் வளர்ச்சி—ஏறுமுகம் (முற்போக்கானது) அல்லது இறங்குமுகம் (பின்னடைவு)—என்று வர்ணிக்க முடியாது. தனிப்பட்ட அமைப்புக்களையும் நிகழ்வுப் போக்குகளையும் பொறுத்து மட்டுமே குறிப்பிட்ட திசையில் மாற்றத்தைப் பற்றி நாம் பேச முடியும். முன்னேற்றத்துக்கும் பின்னடைவுக்கும் இடையிலுள்ள உறவுப் பொருத்தம் பொருளாயத உலகின் ஒரு துறைக்கும் மற்றொரு துறைக்கும் வேறுபடுகிறது. அசேதன இயற்கையில் ''நடுநிலையான'' நிகழ்வுப் போக்குகள் (இவற்றில் முற்போக்கான மாற்றங்கள், பின்னடைவுகள் ஆகிய இரண்டுமே உள்ளன) நடைபெறுகின்றன. உயிருள்ள, சேதன இயற்கையில் பிரதான போக்கு முன்னேற்றமாக, அதாவது அங்கஜீவிகளின் உள்ளமைப்பு, கட்டமைப்பு மற்றும் செயல்களில் அதிகச் சிக்கலானவற்றை நோக்கியதாக இருக்கிறது. ஆனால் இங்கும் கூட முன்னேற்றம் என்பது பின்னடைவுக் கூறுகளுடன் இணைந்திருக்கிறது.

சமூகம் முன்னேற்றப் பாதையில் வளர்ச்சி அடைகிறது; ஆனால் அந்த முன்னேற்றம் நேர்பாதையாக இருப்பதில்லை. வரலாற்றில் பல தலைகீழ் மாற்றங்களும் திடீர்திருப்பங்களும் ஏற்பட்டிருக்கின்றன. எனினும் அதன் பொதுத் திசைவழி ஏறுமுகமாகவும் முற்போக்காகவுமே

* Frederick Engels, *Anti-Dühring*, p. 33.

இருக்கிறது. "...அடுத்தடுத்துத் தொடர்கின்ற வரலாற்று அமைப்புக்கள் அனைத்துமே மனித சமூகம் கீழ்நிலை யிலிருந்து உயர்நிலைக்கு வளர்ச்சியடைகின்ற முடிவில் லாத பாதையில் தற்காலிகமான கட்டங்கள் மட்டுமே."* வரலாற்று வளர்ச்சியின் ஆக உயர்ந்த கட்டம் கம்யூ னிஸ்ட் சமூகம்; அதை நோக்கியே எல்லா மக்களினங் களும் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

இயக்கமும் வளர்ச்சியும் சர்வப்பொதுவானவை என்ற உண்மை மறுக்கப்பட முடியாதது என்றபோதிலும் உலக நிகழ்வுப் போக்கைப் புரிந்து கொள்வதில் இரண்டு அணுகு முறைகள், வளர்ச்சியைப் பற்றி இரண்டு கருதுகோள் கள் இருக்கின்றன; அவை இயக்க மறுப்பியல், இயக்க வியல் எனப்படும்.

வளர்ச்சியைப் பற்றிய இயக்கவியல் கருதுகோள் ஆக வளமானது என்று லெனின் கூறினார். இயக்கம் மற்றும் வளர்ச்சியின் தோற்றுவாய், அவற்றின் தன்மை, பொறி யமைவு, வடிவம், திசைவழி ஆகியவற்றைப் பற்றி உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படையான கேள்விகளுக்கு அது பதிலளிக்கிறது.

இயக்க மறுப்பியல் கருதுகோள் இயக்கம் மற்றும் வளர்ச்சியின் தோற்றுவாயைத் தவறாகப் புரிந்து கொள் கிறது, வளர்ச்சியை ஏற்கெனவே இருக்கின்ற ஒன்றில் ஏற்படுகின்ற சாதாரண அதிகரிப்பு அல்லது குறைவு என்று பார்க்கிறது; நிலையான தன்மைக் கூற்றைத் தனிமுதலாக்கு கிறது, இயக்கம் மற்றும் வளர்ச்சியின் முரண்பாடான தன்மையைப் புரிந்து கொள்ளத் தவறுகிறது, இதரவை.

இயக்கவியல் மற்றும் இயக்க மறுப்பியல் கருதுகோள் களுக்கு இடையிலுள்ள எதிர்நிலையை லெனின் எடுத்துக்

* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. 3, p. 339.

காட்டினார். அவர் பின்வருமாறு எழுதினார்: ''வளர்ச்சி (பரிணாமம்) பற்றி இரண்டு அடிப்படையான கருதுகோள்கள் இருக்கின்றன; வளர்ச்சி என்பது குறைதல் மற்றும் அதிகரித்தல், திரும்பத் திரும்ப நடைபெறுதல் என்பது ஒன்று; எதிர்நிலைகளின் ஒற்றுமை (ஒருமையைப் பரஸ்பரம் விலக்குகின்ற எதிர்நிலைகளாகப் பிரித்தல், அவற்றின் எதிரிடை உறவுகள்) என்ற முறையில் வளர்ச்சி என்பது மற்றொன்று.

''இயக்கத்தைப் பற்றிய முதல் கருதுகோளில் இயக்கம்தானே, அதன் உந்து விசை, அதன் தோற்றுவாய், அதன் இயக்கி ஒதுங்கியிருக்கிறது (அல்லது இந்தத் தோற்றுவாய் வெளியில் இருப்பதாகக் காட்டப்படுகிறது—கடவுள், அறிவன், இதரவை). இரண்டாவது கருதுகோளில் முக்கிய கவனம் 'சுய' இயக்கத்தின் தோற்றுவாயை அறிவதை நோக்கியே துல்லியமாகத் திருப்பப்படுகிறது.

''முதல் கருதுகோள் உயிரில்லாதது, வெளுத்துப் போனது, உலர்ந்தது. இரண்டாவது கருதுகோள் உயிருள்ளது.''*

இன்றைய பூர்ஷ்வா தத்துவஞானம் வளர்ச்சியைப் பற்றி அளிக்கின்ற இயக்க மறுப்பியல் கருதுகோள் திட்டவட்டமான வர்க்க நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. அது இயக்கவியலின் புரட்சிகரமான உள்ளடக்கத்தைச் சீர்குலைக்க முயல்கிறது; சமூக முன்னேற்றம் என்னும் கருத்தைக் கைவிடுகின்ற அல்லது சிதைக்கின்ற முறையில் வளர்ச்சியை வர்ணிப்பதற்கும், சுரண்டுகின்ற சமூகம் சாசுவதமானது, வர்க்கப் போராட்டத்தினால் பயனில்லை என்று எடுத்துக் காட்டுவதற்கும், மனிதகுலம்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 38, p. 358.

தவிர்க்க முடியாத வகையில் சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் மாறும் என்கின்ற மார்க்சிய-லெனினியக் கோட்பாட்டை மறுப்பதற்கும் முயல்கிறது.

பொருள்முதல்வாத இயக்கவியல் சாராம்சத்தில் புரட்சிகரமானது, சுற்றுப்புற உலகத்தின் நிகழ்வுப் போக்குகள் மற்றும் புலப்பாடுகள் அனைத்தையும் இயக்கத்திலும் வளர்ச்சியிலும் காண்பதற்கு மக்களுக்குப் போதிக்கிறது. இயற்கையிலும் சமூகத்திலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற யதார்த்தமான நிகழ்வுப் போக்குகளை அதிக ஆழமாக, தாராளமாகப் பிரதிபலிக்கின்ற பொழுது அவற்றை விஞ்ஞான ரீதியாக அறிவதற்கும் புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்கும் அது சக்திமிக்க கருவியாக இருக்கிறது.

யதார்த்தத்தை அறிதல் மற்றும் மாற்றியமைத்தலின் சர்வப்பொது முறை என்ற வகையில் பொருள்முதல்வாத இயக்கவியல்

எந்த ஒரு விஞ்ஞானமும் மற்றும் அறிவும் கடந்தகால அறிவாராய்ச்சியின் விளைவு மட்டுமல்ல; அது புதிய உண்மைகளைக் கண்டுபிடிப்பதற்கும் யதார்த்தத்தை மேலும் முழுமையாகவும் ஆழமாகவும் பிரதிபலிப்பதற்கும் ஒரு கருவி என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டினார். எத்தகைய மனித அறிவும் புதிய அறிவைப் பெறுவதற்கு உபயோகிக்கப்படுமானால் அது அறிவைப் பெறுகின்ற முறை என்பது இதன் பொருள். எனவே எந்தப் பொதுவான அல்லது குறிப்பிட்ட தத்துவம் அறிதல் மற்றும் நடவடிக்கையின் பொதுவான அல்லது குறிப்பிட்ட முறை என்று கூற முடியும். இதன் எதிரிடையும் இதே அளவுக்கு உண்மையானதே: எந்த முறைக்கும் ஒரு தத்துவார்த்த அம்

சம் இருக்கிறது, அது தத்துவார்த்த முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது.

விஞ்ஞானம் என்ற முறையில் இயக்கவியலும் தத்துவமாகும். உலகம் மற்றும் மனித அறிவின் வளர்ச்சியின் ஆகப் பொதுவான விதிகளைக் கொண்ட அமைப்பு அது. ஆகவே இயக்கவியல் புறநிலையான உலகத்தில் ஏற்படுகின்ற மாற்றம் மற்றும் வளர்ச்சி நிகழ்வுப் போக்குகளின் மனத்தளவிலான மாதிரியாகும்.

உலகத்தில் இயக்கம் மற்றும் வளர்ச்சியின் அனைத்து நிகழ்வுப் போக்குகளுக்கும் பொதுவானவற்றின் விஞ்ஞான ரீதியாகப் பொதுமைப்படுத்தப்பட்ட தத்துவ மாதிரி என்ற முறையில் அது அறிதல் மற்றும் செய்முறை நடவடிக்கையின் மிகவும் பொதுவான முறையாகவும் இருக்கிறது; மிகவும் பொதுவான போக்கை, பல்வேறு நிகழ்வுப் போக்குகளின் மாற்றம் மற்றும் வளர்ச்சியின் பொதுவான தர்க்கவியலைப் புரிந்து கொள்வதை சாத்தியமாக்குகிறது.

அதன் காரணமாகவே அறிதல் மற்றும் செய்முறை நடவடிக்கையில் வெற்றியடைவதற்கு இயக்கவியல் அறிவும் அதைப் பயன்படுத்துகின்ற திறமையும் அவசியமாக இருக்கின்றன. இயக்கவியலை ஸ்தூலமான விஞ்ஞான விதிகளுடன் திறமையாக ஒருங்கிணைப்பது இயக்க மறுப்பியல் சிந்தனை முறையின் எவ்விதமான வெளிப்பாடுகளுக்கும் எதிரான போராட்டத்தில் நம்பகமான கருவியாக இருக்கிறது. இயக்கவியலிலிருந்து எவ்விதத்திலும் விலகிச் செல்வது தத்துவத்திலும் நடைமுறையிலும் தவறுகளுக்கு இட்டுச் செல்லும்.

இயக்கவியல் பொருள்முதல்வாத முறையை சரியாக உபயோகிக்க சில கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

இக்கோரிக்கைகளை வரையறுக்கின்ற பொழுது லெனின் ''ஆராய்ச்சியில் புறநிலையை (உதாரணங்கள் அல்ல, விலகிச் செல்லுதல்கள் அல்ல, ஆனால் தன்னிலைப் பொருள்)'' வலியுறுத்தினார்.* ''முதலாவதாக, ஒரு பொருளைப் பற்றி உண்மையான அறிவை நாம் பெற வேண்டும் என்றால் நாம் அதன் அம்சங்கள், அதன் தொடர்புகள் மற்றும் 'இடையீடுகள்' அனைத்தையும் கவனித்துப் பார்த்து ஆராய வேண்டும். இதை முழுமை யான அளவில் நிறைவேற்ற முடியும் என்று நாம் ஒரு போதும் நினைக்க முடியாது; ஆனால் அகல்விரிவு என்னும் விதி தவறுகளுக்கும் கட்டிறுக்கத்துக்கும் எதிராகப் பாது காப்புத் தருகிறது. இரண்டாவதாக, இயக்கவியல் தர்க் கம் ஒரு பொருளை அதன் வளர்ச்சியில், மாற்றத்தில், (சில சமயங்களில் ஹெகல் குறிப்பிட்டதைப் போல) 'சுய இயக்கத்தில்' எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோருகிறது... மூன்றாவதாக, ஒரு பொருளைப் பற்றிய முழு 'வரையறுப்பு' மனித சமூக அனுபவத்தின் மொத் தத்தையும்—உண்மையின் அளவுகோல் மற்றும் மனிதத் தேவைகளுடன் அப்பொருளின் தொடர்பின் செய்முறைக் குறிகாட்டி என்ற இரு வகைகளில் —உள்ளடக்கியிருக்க வேண்டும்; நான்காவதாக, 'உண்மை எப்பொழுதும் ஸ்தூ லமானது, அது ஒருக்காலும் சூக்குமமானதல்ல' என்று இயக்கவியல் தர்க்கம் கருதுகிறது...'' என்று லெனின் எழுதினார்.**

ஆகவே முக்கியமான கோரிக்கைகள் பின்வருமாறு:

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 38, p. 220.

** வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், தொகுதி 1, 1979, பக்கம் 228.

முதல்வதாக, சமூக நிகழ்வுப் போக்குகளுக்கும் புலப் பாடுகளுக்கும் புறநிலையான அணுகுமுறையைப் பின் பற்ற வேண்டும், அதாவது அவை மெய்யாகவே இருக் கின்ற முறையில்—எவ்விதமான சேர்த்தல்கள், எளிமைப் படுத்தல்கள் அல்லது சிக்கல்கள் இல்லாமல்—ஆராயப் பட வேண்டும். ஒரு நிகழ்வுப் போக்கு அல்லது புலப்பாட் டின் சாராம்சத்தை, அதன் உண்மையான தன்மையை ஆராய வேண்டிய தலையான அவசியத்தை விஞ்ஞான ரீதியான புறநிலைத் தன்மை வலியுறுத்துகிறது. தத்து வார்த்த அறிவு யதார்த்தமான நிகழ்வுப் போக்குகள் மற்றும் புலப்பாடுகளின் புறநிலையான வளர்ச்சியை சரியான முறையில் பிரதிபலித்தால் அது உண்மையாக இருக்கும்.

புறநிலைத் தன்மைக்கு நிகழ்வுப் போக்குகள் மற்றும் புலப்பாடுகளின் சாராம்சத்தை உண்மையாக விளக்கு தல், வாழ்க்கையைப் பற்றிய யதார்த்தமான சித்திரத்தை முன்வைத்தல், அதன் வளர்ச்சியின் முக்கியமான போக்கை வெளிக்கொணர்தல், அந்த வளர்ச்சிக்குப் பின்னாலுள்ள சக்திகளைச் சுட்டிக் காட்டுதல் என்று பொருள். பொருள் முதல்வாத இயக்கவியல் மிக அதிகமான அளவுக்கு விஞ் ஞான ரீதியானதாகவும் புறநிலையானதாகவும் உண்மை யானதாகவும் இருப்பதால் அது மிகவும் சக்தி வாய்ந்த தாகவும் வளவாய்ப்புக் கொண்டதாகவும் இருக்கிறது.

பொருள்முதல்வாத இயக்கவியலின் கருதுகோள்கள் அனைத்தும் புறநிலையான யதார்த்தத்துடன், வாழ்க்கை யுடன் பொருந்துவதால் அவை உண்மையாக இருக்கின் றன. பொருள்முதல்வாத இயக்கவியல் சமூக வளர்ச்சி விதி களையும் சமூகத்தை மாற்றியமைக்கின்ற வழிகளை யும் பற்றிய அறிவை மக்களுக்குத் தந்து தேசிய சுதந் திரத்துக்கும் சமூக விடுதலைக்கும், சோஷலிசத்துக்கும்

கம்யூனிசத்துக்கும் போராடுகின்ற ஒரே உண்மையான பாதையைச் சுட்டிக் காட்டுகிறது. அதன் உண்மையும் புறநிலைத் தன்மையும் அகநிலைவாதம், சார்புநிலை இயல்பை மறுக்கின்ற பூர்ஷ்வா ''புறநிலைவாதம்'', இந்தப் ''புறநிலைவாதம்'' தன்னியல்பாக எழுகின்ற சமூக வளர்ச்சிக்குச் சாதகமானது எனக் கூறுகின்ற திருத்தல்வாதம் ஆகியவற்றின் எந்த வெளிப்பாடுகளுக்கும் எதிராகத் திருப்பப்பட்டிருக்கின்றன. ''சமூக நிகழ்வுகளைப் பற்றிய கருத்துக்கள் யதார்த்தங்களையும் வளர்ச்சியின் உண்மையான பாதையையும் பற்றிய குறைகாண முடியாத புறநிலையான பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்'' என்று லெனின் கூறியிருப்பது* இங்கே தலையாய முறையியல் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது.

இரண்டாவதாக, யதார்த்தமான நிகழ்வுப் போக்குகளையும் புலப்பாடுகளையும் அகல்விரிவான முறையில் பகுப்பாய்வு செய்ய வேண்டுமென்று பொருள்முதல்வாத இயக்கவியல் கோருகிறது. அறிவாராய்ச்சியில் அகல்விரிவான தன்மை சர்வப்பொதுவான தொடர்பு என்னும் இயக்கவியலின் முக்கியமான கோட்பாட்டிலிருந்து பிறக்கிறது. ஒரு வஸ்து மற்ற வஸ்துக்களுடன் கொண்டிருக்கின்ற வகைவேறான தொடர்புகள் மற்றும் உறவுகளின் முழு மொத்தத்தைப் பற்றிய ஆராய்ச்சியை அது முன்னூகிக்கிறது. இந்தத் தொடர்புகளையும் உறவுகளையும் பற்றிய அகல்விரிவான ஆராய்ச்சிதான் அந்த வஸ்துவின் ஆதாரமான, சாராம்சமான தொடர்புகள், குணாம்சங்கள், கூறுகளைப் பிரித்தெடுப்பதை சாத்தியமாக்குகிறது.

---

* வி.இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 1, பக்கம் 188.

ஒரு வஸ்துவை அகல்விரிவான முறையில் ஆராய்ச்சி செய்து அதன் ஆதாரத்தை, அவசியமான கூறுகளை வெளிக்கொணர்வதுதான் அதன் சாராம்சத்தைப் புரிந்து கொள்கின்ற வழியாகும். அகல்விரிவான ஆராய்ச்சி மார்க்சிய-லெனினியம் என்னும் போர்வையில் உலவுகின்ற போலித் தத்துவத்தை அம்பலப்படுத்துவதற்கும் உதவி செய்கிறது. இன்றைய திருத்தல்வாதமும் வறட்டுக் கோட்பாட்டுவாதமும் அவற்றின் தத்துவத்திலும் நடைமுறையிலும் நிகழ்வுப் போக்குகள் மற்றும் புலப்பாடுகளை அகல்விரிவாக ஆராய்வதன் அவசியத்தை இனியும் மொட்டையாக மறுப்பதில்லை; இது நாம் மனத்திலிறுத்த வேண்டிய கருத்தாகும். அவற்றின் அணுகுமுறை தவறாக இருப்பது அவை புறநிலைத் தன்மையையும் அகல்விரிவான தன்மையையும் மறுப்பதனால் அல்ல; அவை இயக்கவியலுக்கு மாறான வகையில் இவற்றைப் புரிந்து கொள்வதே காரணம் எனலாம். அதற்கு மாறாக, இன்றைய திருத்தல்வாதிகளும் வறட்டுக் கோட்பாட்டுவாதிகளும் சமூக வாழ்க்கையைப் பற்றித் தங்களுடைய ''அகல்விரிவான'' அணுகுமுறையைப் பற்றி உரக்கப் பேசுகிறார்கள்; அவர்கள் சமூக வாழ்க்கையின் ஒவ்வொரு விவரத்தையும் பகுப்பாய்வு செய்வதாகப் பெருமை பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் அகல்விரிவு என்னும் கோட்பாட்டை மிகவும் ''அகல்விரிவான'' முறையில் பொருள்படுத்தி உபயோகிப்பதால் அதன் சாராம்சத்தைத் திரிக்கிறார்கள். ஆராயப்படுகின்ற நிகழ்ச்சிப் போக்கு அல்லது புலப்பாட்டின் விவரங்கள், அம்சங்கள், கூறுகள் அனைத்தையும் எடுத்துக் கொள்ள முற்படுவதால் அவர்கள் அதன் சாராம்சத்தை, அதன் தலையாய அம்சத்தைப் புறக்கணிக்கிறார்கள். இத்தகைய ''அகல்விரிவான'' ஆராய்ச்சி முடிவில் அறியொணாவாதத்துக்கும் ஆராயப்படுகின்ற

நிகழ்ச்சிப் போக்கின் தோற்றுவாயைச் சுட்டிக் காட்ட வும் அதன் வடிவங்களையும் பொதுப் போக்கையும் வெளிக் கொண்டுவரவும் இயலாமைக்கும் இட்டுச் செல் கிறது; நடைமுறையில் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் பொது நியதிகளை, வர்க்கப் போராட்டத்தின் விதிகளை, சோஷலிஸ்ட் நிர்மாணத்தில் பாட்டாளி வர்க்க சர்வா திகாரத்தின் அவசியத்தை மற்றும் இதரவற்றைப் புறக் கணிக்க இட்டுச் செல்கிறது.

மூன்றாவதாக, ஒருவர் ஒரு நிகழ்ச்சிப் போக்கு அல் லது புலப்பாட்டின் வளர்ச்சியின் உள் தோற்றுவாய்களை நிர்ணயம் செய்து, அதை ஏற்படுத்திய முரண்பாடுகளை வெளிக்கொணர்வதன் மூலமாக மட்டுமே அதன் சாராம் சத்தைத் தொட முடியும். நிகழ்ச்சிப் போக்குகளையும் புலப்பாடுகளையும் அவற்றின் வளர்ச்சியில் புனருற்பத்தி செய்வது சிந்தனையில் அவற்றைச் சரியாகப் பிரதிபலிப் பதற்கு, அதாவது அவற்றை அறிவதற்கு அவசியமான நிபந்தனையாகும்.

சமூக வளர்ச்சியின் உள் தோற்றுவாய்களைக் கண்டு பிடிப்பது மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் புரட்சிகர நடவடிக்கையில் தலையாய முக்கியத்துவத்தைக் கொண் டிருக்கிறது. இது சமூக வளர்ச்சியின் முக்கியமான போக்கு களையும் சாத்தியமான வடிவங்களையும் நிர்ணயிப் பதைச் சாத்தியமாக்குகிறது; அதன் மூலம் சமூகத்தின் முற்போக்கு சக்திகள் மற்றும் பெருந்திரளான உழைக் கும் மக்களின் சமூகத்தை மாற்றியமைக்கும் புரட்சிகர நடவடிக்கையைத் திருத்தியமைத்துக் கொள்ள முடிகிறது.

நான்காவதாக, ஒருவர் சமூக நிகழ்ச்சிப் போக்குகளை யும் புலப்பாடுகளையும் பகுப்பாய்வு செய்கின்ற பொழுது ஸ்தூலமான வரலாற்று அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும். ''ஒவ்வொரு கருதுகோளும் (அ) வரலாற்று

ரீதியில் மட்டுமே, (ஆ) மற்றவற்றுடன் உள்ள தொடர்பில் மட்டுமே, (இ) வரலாற்றின் ஸ்தூலமான அனுபவத்துடன் தொடர்பான அளவில் மட்டுமே ஆராயப்பட வேண்டும் என்று மார்க்சியத்தின் மொத்த உணர்ச்சியும், மொத்த அமைப்பும் கோருகின்றன.''*

ஸ்தூலமான வரலாற்று அணுகுமுறை நிகழ்ச்சிப் போக்கு நடைபெறுகின்ற இடத்தையும் காலத்தையும் கணக்கிலெடுத்துக் கொள்கின்ற அவசியத்தை, ''அடிப்படையான வரலாற்றுத் தொடர்பை மறந்துவிடக் கூடாது, குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி வரலாற்றில் எப்படித் தோன்றியது, அது தன் வளர்ச்சியில் என்னென்ன முக்கியமான கட்டங்களைக் கடந்து சென்றது என்ற நோக்கிலிருந்து ஒவ்வொரு பிரச்சினையையும் ஆராய வேண்டும், அந்த வளர்ச்சி நிலையிலிருந்து குறிப்பிட்ட பொருள் இன்று எப்படி மாறியிருக்கிறது என்று ஆராய்வதன் அவசியத்தை''** உள்ளடக்கியிருக்கிறது.

ஸ்தூலமான, வரலாற்று ரீதியான அணுகுமுறை வேண்டும் என்ற கோரிக்கை தத்துவார்த்தக் கருதுகோள்களை உபயோகிப்பதிலுள்ள இடஞ்சார்ந்த மற்றும் காலஞ் சார்ந்த வரையறைகளைப் பார்ப்பதற்கு உதவி செய்கிறது. தத்துவம் யதார்த்தமான நிகழ்ச்சிப் போக்குகள் மற்றும் புலப்பாடுகளின் பொதுமைப்படுத்தப்பட்ட மனப் பிரதிபலிப்பாகும். அன்றாட வாழ்க்கையும் சமூக நடைமுறையும் இடைவிடாமல் புதிய கேள்விகளை எழுப்புகின்றன, விஞ்ஞான ரீதியான விளக்கத்தைக் கோருகின்

* வி.இ. லெனின், **பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்**, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1984, பக்கங்கள் 239—240.

** வி.இ. லெனின், **அரசு**, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1984, பக்கங்கள் 7—8.

றன. மாறிக் கொண்டிருக்கின்ற நிலைமைகளை உதாசீனம் செய்தல், காலாவதியாகிப் போன கருதுகோள்களைப் பிடிவாதமாக வற்புறுத்துதல், பிரத்யேகமான வரலாற்று நிலைமைகளைப் பற்றி அக்கறையின்றி அவற்றை உபயோகித்தல் ''போதனையின் எழுத்துக்கு உண்மையாக இருப்பதாகுமே தவிர அதன் உணர்ச்சிக்கு உண்மையாக இருக்காது'' என்று லெனின் கூறினார்.*

ஸ்தூலமான வரலாற்று அணுகுமுறை அறிதலுக்கும் புரட்சிகர நடைமுறைக்கும் தலையாய முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது; ஏனென்றால் அது பொதுவான முடிவுகளை ஸ்தூலமான நிகழ்வுகளுக்குப் பகுப்பாய்வு இல்லாமல், அவற்றின் தனித் தன்மைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் யாந்திரிகமாகக் கையாள்வதைத் தடுப்பதற்கு உதவி செய்கிறது; ஆராயப்படுகின்ற நிகழ்வின் தனித்தன்மை என்று சொல்லி பொது விதிகளையும் கோட்பாடுகளையும் புறக்கணிக்கின்ற போக்கைத் தடுப்பதற்கும் அது உதவி புரிகிறது.

ஐந்தாவதாக, செய்முறைக் கோரிக்கைகள். அறிதலின் நிலைமை என்ற முறையில் இக்கோரிக்கைகள் பெருந்திரளான மக்களின் புரட்சிகர மாற்றியமைக்கும் நடவடிக்கை, நிர்மாண நடவடிக்கையின் தேவைகளுக்கு உதவுகின்ற முறையில் யதார்த்தத்தை ஆராய வேண்டும், புறநிலையான, விஞ்ஞான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கோருகின்றன. சுற்றுப்புற உலகம் மற்றும் சமூக வளர்ச்சியின் விதிகளை அறிந்து கொள்வதற்கு இத்தகைய அணுகுமுறை அத்தியாவசியமாக இருக்கிறது. சமூக நடைமுறையின் அவசியங்களை உரிய

---

* வி.இ. லெனின், **பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்,** பக்கம் 30.

முறையில் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் ஒரு குறிப்பிட்ட சகாப்தத்தில் அறிவாராய்ச்சியின் இலக்குகளையும் திசைவழியையும் நிர்ணயிக்க முடியாது. நடைமுறையின் உதவியில்லாமல் உண்மையையும் கற்பனையையும் ஒரு போதும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. அதிக ஆழத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பொருளாதார, அரசியல் மற்றும் ஆன்மீக நிகழ்ச்சிப் போக்குகளின் சாரத்தைக் கண்டுபிடிப்பதற்கு, நெருக்கடிகளையும் முரண்பாடுகளையும் உரிய காலத்தில் கண்டுபிடித்துச் சமாளிப்பதற்கு, உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளை வகுத்துக் கூறி அவற்றின் தீர்வுக்கு உசிதமான வழிகளைக் கண்டுபிடிப்பதற்கு சமூக நடைமுறையின் அவசியங்களை, சமூக வளர்ச்சிக் கடமைகளை உரிய முறையில் கணக்கிலெடுத்துக் கொள்வதுதான் ஒரே வழியாகும்.

உலகத்தைப் புரட்சிகரமான முறையில் மாற்றியமைக்கின்ற கடமை அறிதலின் அடிப்படையாகவும் உந்து விசையாகவும் இருக்கிறது; ஏனென்றால் உலகத்தை மாற்றியமைக்க வேண்டுமென்றால், முதலில் அதை விஞ்ஞான ரீதியாகப் புரிந்து கொள்ள வேண்டும், அதன் புறநிலையான விதிகளை அறிந்து அவற்றுக்குத் தகுந்தவாறு செயலாற்ற வேண்டும். சமூக நடைமுறையின் தேவைகளுக்கு, உலகத்தின் வளர்ச்சி, அதைப் புரட்சிகரமான முறையில் மாற்றியமைப்பதன் சாரத்தையும் விதிகளையும் அறிந்து கொள்ள வேண்டும் என்று வரலாற்றில் அதிகப் புரட்சிகர வர்க்கமாகிய தொழிலாளி வர்க்கத்தின் தேவைகளுக்குத் தகுந்தவாறு விஞ்ஞானத் தத்துவம் வளர்க்கப்பட்டது. மார்க்சிய-லெனினியம் உலகத்தை விஞ்ஞானக் கோணத்திலிருந்து விளக்குகிறது, அதன் வளர்ச்சி விதிகளை வெளிப்படுத்தி, சமூக வளர்ச்சியின் தோற்றுவாய்களையும் போக்குகளையும் எடுத்துக் காட்டுகிறது. மார்க்சிய-லெனி

னியத் தத்துவம் யதார்த்தத்தை சரியாகப் பிரதிபலிப்பதன் மூலம் சமூக வளர்ச்சியின் பொதுவான திசைவழி மற்றும் தொலைக் காட்சிகளைத் தயாரிப்பதை, சரியான அரசியல் கொள்கையை விரித்துரைப்பதை, அதை அமுலாக்குவதைச் சாத்தியமாக்குகிறது.

ஆறாவதாக, விஞ்ஞான அறிதலிலும் செய்முறை நடவடிக்கையிலும் சம்பவங்களின் சங்கிலித் தொடரில் முக்கியமான கண்ணியைக் கண்டுபிடிப்பது, கடமைகளின் மொத்தத் தொகுதியில் முக்கியக் கடமையைத் துல்லியமாகக் காட்டுவது அவசியமாகும்.

சமூக வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் முக்கியமான கண்ணியை, முக்கியமான கடமைகளைக் கண்டுபிடிக்கின்ற திறமை மொத்த அறிதல் மற்றும் செய்முறை நடவடிக்கையில் வினையாற்றலுக்கும் வெற்றிக்கும் அவசியமான ஒரு நிபந்தனையாகும். முக்கியமான கண்ணி தீர்மானமான நிபந்தனையாகவும் தீர்மானமான இணைப்பாகவும் இருக்கிறது; சமூக நிகழ்ச்சிப் போக்கின் தன்மை, வேகம், திசைவழியை இறுதியில் இவையே நிர்ணயிக்கின்றன. பெருந்திரளான மக்களின் புரட்சிகர நடவடிக்கையின், சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்கும், சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் நடைபெறுகின்ற போராட்டத்தின் வெற்றிக்கு அந்தக் கண்ணியைக் கண்டுபிடிப்பது மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. ''பொதுவில் ஒரு புரட்சிவீரனாக, சோஷலிசத்தை ஆதரிப்பவராக அல்லது ஒரு கம்யூனிஸ்டாக இருப்பது மட்டும் போதுமானதல்ல. குறிப்பிட்ட ஒவ்வொரு தருணத்திலும் மொத்த சங்கிலியையும் தூக்குவதற்கு உதவக் கூடிய கண்ணியைக் கண்டுபிடித்து அதை முழு பலத்துடனும் பற்றிக்கொண்டு, அடுத்த கண்ணிக்கு மாறுவதற்கு உறுதியான திறமையைப் பெற்றிருக்க வேண்டும்; கண்ணிகளின்

அமைப்பு, அவற்றின் வடிவம், அவை ஒன்றுசேர்த்து இணைக்கப்பட்டிருக்கின்ற முறை, சம்பவங்கள் என்னும் வரலாற்றுச் சங்கிலியில் அவை ஒன்றுடன் ஒன்று வேறு படுகின்ற முறை ஆகியவை ஒரு கருமானால் செய்யப்படு கின்ற சாதாரணச் சங்கிலியில் இருப்பதைப் போன்று எளிதானவை அல்ல, அர்த்தமில்லாதவை அல்ல'' என்று லெனின் எழுதினார்.*

முக்கியமான கண்ணியைக் கண்டுபிடிப்பது சுலபமல்ல என்பது இயற்கையே. சமூகம் என்பது பல்தொகுதியான, வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற அமைப்பு; அதற் குள் எண்ணற்ற புறநிலைக் கூறுகளும் அகநிலைக் கூறு களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பொருள்முதல்வாத இயக்கவியலின் கோட்பாடுகளையும் கோரிக்கைகளையும் மார்க்சிய-லெனினியம் முழுவதையும் படைப்பாற்றலுடன் உபயோகிப்பதன் மூலமாக மட்டுமே முக்கியமான கட மைகளை விஞ்ஞான முறையில் நிர்ணயிப்பதுடன் அர சியல், பொருளாதார மற்றும் கலாசாரப் பிரச்சினை களின் தீர்வில் முக்கியமான கண்ணியை உரிய நேரத்தில் கண்டுபிடிக்க முடியும்.

பொருள்முதல்வாத இயக்கவியலைப் பற்றிய அறிவு யதார்த்தத்தைப் பகுப்பாய்வு செய்கின்ற விஞ்ஞான முறையை மக்களுக்குக் கொடுக்கிறது; அன்றாட வாழ்க்கை யின் உதிரியான சம்பவங்கள், விவரங்கள் மற்றும் நிகழ்வு களுக்கு அடியிலுள்ள சாராம்சத்தைக் கண்டுபிடிப்பதற்கு உதவுகிறது; சமூக வளர்ச்சியின் புறநிலையான விதிகளுக்குத் தகுந்தவாறு செயலாற்றுவதற்கு உதவுகிறது.

---

* வி.இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 8, பக்கம் 109.

அத்தியாயம் ஏழு

பொருள்முதல்வாத இயக்கவியலின் விதிகள்

பொருள்முதல்வாத இயக்கவியல் சர்வாம்சத் தொடர்பு மற்றும் வளர்ச்சியின் போதனை என்பதால் இவை அதன் விதிகளில் அதிக முழுமையாக வெளிப்படுகின்றன.

விதி என்பது பொருட்கள் மற்றும் நிகழ்வுகளின் புறநிலையான, சர்வாம்சமான, தேவையான மற்றும் முக்கியமான தொடர்பு; அது ஸ்திரமானது, திரும்பத் திரும்ப நடைபெறுவது. தத்துவஞானம் ஆராய்ந்து வெளிப்படுத்துகின்ற விதிகள் மெய்யான உலகத்தின் அனைத்துப் பொருட்களுக்கும் நிகழ்வுகளுக்கும் உரித்தானவை.

எதிர்நிலைகளின் ஒற்றுமை மற்றும் போராட்டத்தின் விதி

மக்கள் ஆதிகாலத்திலிருந்தே இயற்கையிலும் சமூகத்திலும் ஏற்படுகின்ற மாற்றங்களுக்குரிய காரணங்களைப் பற்றி சிந்தித்தார்கள், அவற்றின் தோற்றுவாய்களையும் உந்து சக்திகளையும் தேடினார்கள்.

சிந்தனையாளர்கள் இதைப் பற்றி உருவாக்கிய பல்வேறு கருதுகோள்கள் உண்மையை நெருங்கி வந்தன அல்லது அதை விட்டு விலகிச் சென்றன. உதாரணமாக, மதம் உலகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்குக் கடவுளைக் காரணமாக்குகிறது; கருத்துமுதல்வாதிகள் ஏதோ

ஒரு சர்வப்பொதுச் சித்தம் அல்லது இயற்கைக்கு மேற்பட்ட தனிமுதல் கருத்து காரணம் என்றார்கள்; இயக்க மறுப்பியல்வாதிகள் இயக்கம் மற்றும் மாற்றத்தின் தோற்றுவாயை ஏதோ ஒரு வெளிச் சக்தியில், ஆதித் தூண்டுதலில் தேடினார்கள்; எனவே அவர்கள் கருத்து முதல்வாதத்தில் விழுந்தார்கள்.

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் வளர்ச்சியின் காரணம் எது என்னும் கேள்விக்குத் தந்த விஞ்ஞான ரீதியான பதில் எதிர்நிலைகளின் ஒற்றுமை மற்றும் போராட்டத்தின் விதியில் எடுத்துரைக்கப்படுகிறது. இவ் விதியைப் பொருள்முதல்வாத இயக்கவியலின் சாரம், கரு என்று லெனின் கூறினார். இவ்விதி வளர்ச்சியின் உள்ளுறையான காரணத்தை எடுத்துரைக்கிறது, அதன் தோற்றுவாய் புலப்பாடுகள் மற்றும் நிகழ்வுப் போக்குகளின் முரண்பாடான தன்மையில், அவற்றின் உள்ளுறையான எதிர்நிலைகளின் இடைச்செயலிலும் போராட்டத்திலும் இருப்பதை எடுத்துக் காட்டுகிறது.

இவ்விதியைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் ஒருவர் முதலில் எதிர்நிலைகள் மற்றும் முரண்பாடுகளின் அர்த்தத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

எதிர்நிலைகள் எனப்படுபவை ஒரு பொருள் அல்லது நிகழ்வின் உள் அம்சங்கள், போக்குகள் அல்லது சக்திகள்; இவை ஒரே சமயத்தில் ஒன்றையொன்று முன்னனுமானிக்கின்ற பொழுதே ஒன்றையொன்று அகற்றுகின்றன. எதிர்நிலைகளின் இடைத் தொடர்பு முரண்பாடு ஆகும்.

உயிரில்லாத இயற்கையிலுள்ள எதிர்நிலைகளுக்குக் காந்தம் ஒரு உதாரணமாகும். ஒன்றையொன்று பரஸ்பரம் விலக்குகின்ற, ஆனால் நெருக்கமான தொடர்பைக் கொண்ட அம்சங்கள் (எதிர்துருவங்கள்) இருப்பது அதன் முக்கியமான தனிக் கூறு ஆகும். ஒருவர் வட துருவத்தைத்

தென் துருவத்திலிருந்து பிரிப்பதற்கு எவ்வளவு முயற்சி செய்தாலும் அது நிறைவேறாது. ஒரு காந்தத் துண்டை இரண்டு, நான்கு, எட்டு அல்லது இன்னும் அதிகமான பகுதிகளாக வெட்டினாலும் அதில் இரண்டு எதிர்துருவங்கள் இருக்கும்.

உயிர்நிலைகளின் இருத்தலிலும் வளர்ச்சியிலும் எதிர்நிலைகள் இருக்கின்றன. உதாரணமாக, சேர்த்தலும் பிரித்தலும்* எதிர்நிலைகள் ஆகும். ஆனால் இவற்றில் ஏதாவதொன்று மறைந்தாலும் அங்கஜீவி செத்துவிடும். பாரம்பரியம், தகவமைத்தல் ஆகிய குணாம்சங்களும் எதிர்நிலைகளே. உயிரினம் ஒரு பக்கத்தில் பாரம்பரிய குணாம்சங்களைத் தக்கவைத்துக் கொள்ள முற்படுகிறது; மறு பக்கத்தில் மாறியுள்ள நிலைமைகளுக்குத் தக்கவாறு புதிய குணாம்சங்களை வளர்த்துக் கொள்ள முற்படுகிறது.

முரணியல்பான வர்க்க சமூகங்களில் எதிர்நிலையான வர்க்கங்கள் இருக்கின்றன: அடிமையுடைமைச் சமுதாயத்தில் அடிமை மற்றும் அடிமை உடைமையாளர்; நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் விவசாயி மற்றும் நிலப்பிரபு; முதலாளித்துவ சமுதாயத்தில் பாட்டாளி மற்றும் முதலாளி.

சிந்தனை நிகழ்வுப் போக்குக்கும் அறிதலுக்கும் முரண்பாடான அம்சங்கள் இருக்கின்றன.

---

* எளிமையான மூலப்பொருட்களைக் கொண்டு பல் தொகுதியான பொருட்களை உடலில் அமைத்துக் கொள்வது சேர்த்தல் எனப்படும்; உடலில் அத்தகைய பல் தொகுதியான பொருட்களைப் பிரிக்கின்ற பொழுது ஜீவாதாரமான நடவடிக்கைகளுக்கு அவசியமான சக்தி உருவாக்கப்படுகிறது, இது பிரித்தல் எனப்படும். சேர்த்தல் மற்றும் பிரித்தல் உடலில் ஏற்படுகின்ற பொருட்களின் வளர்சிதை மாற்றச் செயல்முறையைக் குறிப்பிடுகின்றன.

ஆகவே யதார்த்தத்தின் எல்லா நிகழ்வுப் போக்குகளும் புலப்பாடுகளும் எதிர்நிலை அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றிலும் முரண்பாடு இருக்கிறது.

நிகழ்வுகளிலும் பொருட்களிலும் உள்ள எதிர்நிலைகள் எப்படி இடைச் செயல் புரிகின்றன? இந்த இடைச் செயலில் அவற்றின் ஒற்றுமை, போராட்டம் ஆகிய இரண்டுமே இருக்கின்றன.

எதிர்நிலைகளின் ஒற்றுமை என்றால் அவை ஒன்று இல்லாமல் அடுத்தது இருக்க முடியாது, அவை பரஸ்பரம் சார்ந்திருக்கின்றன என்று அர்த்தம். அவற்றின் ஒற்றுமையின் மற்றொரு வெளிப்பாடு திட்டவட்டமான நிலைமைகளில் அவை சமன்படுத்தப்படுகின்றன என்பதாகும். இரண்டு எதிர்த்தரப்புக்களில் ஏதாவதொன்று ஆதிக்கம் வகிக்க முடியாத அத்தகைய சமநிலை ஒரு பொருளின் வளர்ச்சியில் ஸ்திர நிலைக் கட்டத்தைக் குறிக்கிறது. எனினும் சமநிலைக் கட்டம் சார்புநிலையானது, தற்காலிகமானது மட்டுமே. வளர்ச்சிப் போக்கில் சமநிலை அழிக்கப்படுகிறது, முடிவில் ஒரு பொருள் மறைந்து, எதிர்நிலைகளின் புதிய ஒற்றுமையைக் கொண்ட வேறு பொருள் தோன்றுவதற்கு அது வழி வகுக்கிறது. உதாரணமாக, ஒரு இளம் பிராணியின் உடலில் சேர்த்தல் ஆதிக்கம் வகிக்கிறது; முதிர்ந்த பிராணியின் உடலில் சேர்த்தலும் பிரித்தலும் சமமாக இருக்கின்றன; மூப்படைந்து கொண்டிருக்கும் பிராணியிடம் பிரித்தல் அதிகமாக மேலோங்கியிருக்கிறது.

எதிர்நிலைகள் ஒற்றுமையில் இருக்கின்ற அதே சமயத்தில் ஒன்றுக்கொன்று ''போராடுகின்றன'', அதாவது அவை பரஸ்பரம் ஒன்றையொன்று மறுத்து நிராகரிக்கின்றன. எதிர்நிலைகளின் ஒற்றுமை சார்புநிலையானது என்றால் அவற்றின் போராட்டம் இயக்கத்தையும் வளர்ச்சி

யையும் போல அதே அளவில் தனிமுதலானது, நிரந்தரமானது என்று லெனின் கூறினார். முரண்பாடுகள் இருக்கின்றன என்பதே ஒரு எதிர்நிலை மற்றொன்றின் மீது எதிர்ச்செயல் புரிவதையும் அதன் விளைவாகப் பரஸ்பர மாற்றங்கள் ஏற்படுவதையும் சுட்டுகிறது.

உதாரணமாக, உற்பத்தியும் நுகர்வும் சமூக வாழ்க்கையின் எதிர்நிலையான அம்சங்கள்; இவற்றின் இடைச்செயல் இரண்டுமே மாற்றமடைவதற்கும் பின்னர் மொத்த சமூகமே மாறுவதற்கும் வழி வகுக்கிறது. சமூகத்தின் தேவைகள் உற்பத்தியின் மீது தாக்கம் செலுத்தி அதில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. உற்பத்தி இத்தேவைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு அவற்றுக்குப் பொருத்தமான திசையில் வளர்ச்சி அடைகிறது. உதாரணமாக, காலனியாதிக்கத்துக்கு அடிமைப்பட்டிருந்த நாடுகளில் உற்பத்தி பெருமளவுக்குத் தலைமை நாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற விதத்தில் அமைக்கப்பட்டிருந்தது; அந்த நாடுகள் விடுதலை அடைந்த பிறகு மொத்த சமூக உற்பத்தியையும் தேசிய வளர்ச்சியின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற முறையில் மாற்றியமைப்பது அவசியமாக இருக்கிறது. சமூகத்தில் சோஷலிச மாற்றம் உழைக்கின்ற பெருந்திரளான மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பாடுபடுகின்ற தெளிவான கடமையை உற்பத்தியின் முன் வைக்கிறது.

மொத்த சமூக உற்பத்தியையும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற முறையில் திருத்தியமைப்பது பழைய பொருளாதாரக் கட்டமைப்புகள் நொறுங்குவதற்கும், புதிதாக சுதந்திரம் பெற்ற அரசுகளின் இயற்கையான கூட்டாளிகளான சோஷலிஸ்ட் நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதைப் பிரதான நோக்கமாகக் கொண்ட புதிய பொருளாதாரக் கட்ட

மைப்புகள் தோன்றுவதற்கும் பலப்படுவதற்கும் தவிர்க்க முடியாத விதத்தில் வழி வகுக்கிறது.

உற்பத்தி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயல்கின்ற பொழுது அது மேலும் வளர்ச்சியடைகிறது, அதற்கேற்பத் தேவைகளும் மாறுகின்றன, வளர்ச்சி அடைகின்றன. மாற்றமடைந்த தேவைகள் உற்பத்திக்கு முன்பாகப் புதிய கடமைகளை வைக்கின்றன, அதற் கேற்ப உற்பத்தியும் மாற்றமடைகிறது, இப்படியே முடி வில்லாமல் நடைபெறுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் எதிர்நிலைகளின் இடைச் செயல் மாற்றத்துக்கும் பண்பு ரீதியான புதிய நிலைமைக்கு மாறுவதற்கும் வழி வகுக்கிறது. பொருட்கள் மற்றும் நிகழ்வுகளின் இயக்கம் மற்றும் வளர்ச்சியின் தோற்று வாய் முரண்பாடுகளே என்பதை இது எடுத்துக் காட்டு கிறது.

ஆகவே பொருட்களிலும் நிகழ்வுகளிலும் ஒற்றுமை யிலுள்ள எதிர்நிலைகள் இருக்கின்றன. அதே சமயத்தில் அவை வெறுமனே சகவாழ்க்கை நடத்தவில்லை, தொடர்ச் சியான முரண்பாடு மற்றும் பரஸ்பரப் போராட்டம் என்ற நிலையில் இருக்கின்றன. எதிர்நிலைகளின் போராட் டம் யதார்த்தத்தின் உள்ளடக்கமாக, அதன் வளர்ச்சியின் தோற்றுவாயாக இருக்கிறது.

உலகத்திலுள்ள வேறுபாடுகள் எண்ணற்றவை, பல் விதமானவை. மக்கள் அன்றாட வாழ்க்கையில் அவற்றைச் சந்திக்கிறார்கள், தம்முடைய விஞ்ஞான ஆராய்ச்சியில் அவற்றைப் பகுப்பாய்வு செய்கிறார்கள். மார்க்சிய-லெனி னியத் தத்துவஞானம் மிகவும் பொதுவான முரண்பாடு களை ஆராய்கிறது. அவற்றில் மிகவும் முக்கியமானவை பின்வருமாறு: உள்ளீடானவை மற்றும் வெளிப்புறத்தி லிருந்து வருபவை, பகைமை முரணியல்பானவை மற்றும்

பகைமை முரணியல்பு இல்லாதவை, அடிப்படையானவை மற்றும் அடிப்படை அல்லாதவை.

உள்ளீடான முரண்பாடுகள் ஒரே பொருள் அல்லது நிகழ்வின் எதிர்நிலையான அம்சங்களுக்கு இடையில் தோன்றுகின்றன; வெளிப்புற முரண்பாடுகள் ஒரு குறிப் பிட்ட பொருள் அல்லது நிகழ்வுக்கும் மற்ற பொருட்கள் அல்லது நிகழ்வுகளுக்கும் இடையில் தோன்றுகின்றன.

எந்த ஒரு பொருள் அல்லது நிகழ்வின் வளர்ச்சியிலும் உள்ளீடான முரண்பாடுகள் தீர்மானமான முக்கியத்து வத்தைக் கொண்டிருக்கின்றன; ஏனென்றால் அவை அதன் உள்ளடக்கம், சாராம்சத்துடன் தொடர்புடைய வை, அதன் மாற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படை யானவை. ஆகவே எந்த பகை முரணியல்பான சமூகத் திலும் சுரண்டுபவர்களுக்கும் சுரண்டப்படுபவர்களுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள் உள்ளீடான முரண்பாடு களாகும்; இவை எந்த பகை முரணியல்பான சமூகத்தின் சாராம்சத்தையும் தன்மையையும் பிரதிபலிக்கின்றன.

வெளிப்புற முரண்பாடுகள் பொருட்கள் மற்றும் நிகழ்வுகளின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன; அவை உள்ளீ டான முரண்பாடுகளின் தீர்வில் கணிசமான தாக்கத்தைச் செலுத்துகின்றன. அதனால்தான் பல்வேறு வளர்ச்சி நிகழ்வுப் போக்குகளை ஆராய்கின்ற பொழுது அவற்றைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

சோஷலிஸ்ட் நிர்மாணத்தை வெற்றிகரமாக நிறை வேற்றுவதற்கு உள் முரண்பாடுகளைத் தீர்ப்பது அவ சியம் என்பதை சோஷலிஸ்ட் நாடுகளின் அனுபவம் எடுத்துக் காட்டுகிறது; அவற்றில் மிக முக்கியமானவை உழைக்கும் மக்களுக்கும் தூக்கியெறியப்பட்ட சுரண்டும் வர்க்கத்தினருக்கும் இடையில் இருப்பவை ஆகும். வெளிப் புற முரண்பாடுகளும் (சோஷலிசத்துக்கும் முதலாளித்து

வத்துக்கும் இடையில் உள்ளவை) சோஷலிஸ்ட் நிர்மாணப் போக்கின் மீது தாக்கம் செலுத்துகின்றன; ஆனால் அவற்றின் தீர்வு சோஷலிஸ்ட் மற்றும் முதலாளித்துவ நாடுகளின் உள் வளர்ச்சியையே பெரும்பாலும் சார்ந்திருக்கிறது.

முரண்பாடுகளை உள்ளீடானவை, வெளியிலிருப்பவை என்று பிரிப்பது சார்புநிலையானது மட்டுமே என்பதை அதே சமயத்தில் நினைவிலிறுத்த வேண்டும்; ஏனென்றால் இரண்டு உலக அமைப்புக்களுக்கு இடையிலுள்ள முரண்பாடுகள் இவை ஒவ்வொன்றுக்கும் வெளிப்புறமானவை என்ற போதிலும் மொத்தமாக மனித குலத்தைப் பொறுத்தமட்டில் அவை உள் முரண்பாடுகளே.

ஒரு பொருள் அல்லது நிகழ்வின் வளர்ச்சியில் தீர்மானமான பாத்திரத்தை வகிக்கின்ற உள் முரண்பாட்டை அடிப்படையானது என்று கூறுகிறோம். அது அந்தப் பொருள் அல்லது நிகழ்வின் சாராம்சத்தோடு தொடர்புடையது; அதன் இதர முரண்பாடுகளும் மொத்த வளர்ச்சியும் அந்த அடிப்படையான முரண்பாட்டைப் பொறுத்திருக்கின்றன. உதாரணமாக, முதலாளித்துவத்தின் அடிப்படையான முரண்பாடு உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் ஒதுக்கீட்டின் தனியார் முதலாளித்துவ வடிவத்துக்கும் இடையில் இருக்கிறது. அது முதலாளித்துவத்தின் முக்கியமான முரண்பாடுகள் எல்லாவற்றையும்—பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில், மொத்த மக்களுக்கும் ஒரு சில ஏகபோக முதலாளிகளுக்கும் இடையில், உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையில், இதரவை—நிர்ணயிக்கிறது.

நம் சகாப்தத்தின் அடிப்படையான முரண்பாடு சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையில் இருக்

கிறது; மனிதகுலத்தின் மொத்த வளர்ச்சிப் போக்கு இம்முரண்பாட்டின் பரிணாமத்தையும் தீர்வையும் பொறுத்திருக்கிறது. அந்த முரண்பாட்டின் ஏறுமுகமான அம்சம் சோஷலிசம்; அது சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் சாதகமான முறையில் தீர்க்கப்பட்டு வருகிறது.

அடிப்படையான முரண்பாட்டைப் பற்றிய கருதுகோள் மிகவும் முக்கியமானது; ஏனென்றால் ஒவ்வொரு நிகழ்வுப் போக்கிலும் அடிப்படையான முரண்பாட்டை வெளிக்காட்டுவது என்பது அதன் சாராம்சத்தை எடுத்துக் காட்டுவதாகும்.

சமூக வாழ்க்கையில் முரண்பாடுகள் பகை முரணியல்பானவையாக மற்றும் பகை முரணியல்பு இல்லாதவையாக இருக்க முடியும். சமூகம் எதிரெதிரான நலன்களைக் கொண்ட வர்க்கங்களாகப் பிரிந்திருப்பது—இந்தப் பிரிவினை உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமையிலிருந்து பிறக்கிறது—முரண்பாடுகளை பகை முரணியல்பாகச் செய்கிறது. பகை முரணியல்பான முரண்பாடுகளை அவற்றைப் படைத்த சமூக அமைப்பின் நிலைமைகளில் தீர்க்க முடியாது. பழைய சமூக அமைப்பை ஒழித்து புதிய சமூக அமைப்பை நிறுவுகின்ற வர்க்கப் போராட்டம் மற்றும் சமூகப் புரட்சியின் மூலமாக மட்டுமே அவற்றைத் தீர்க்க முடியும். இத்தகைய முரண்பாடுகள் அடிமையுடைமை, நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவ சமூகங்களில் நிலவுகின்றன. ஆகவே முதலாளித்துவத்தின் அடிப்படையான முரண்பாடு வளர்ச்சி அடைகின்ற பொழுது முதலாளித்துவத்தை அதன் தவிர்க்க முடியாத வீழ்ச்சிக்கு இட்டுச் செல்கிறது.

சமூகத்திலுள்ள வெவ்வேறு பிரிவினர் பொதுவான ஜீவாதார நலன்களைக் கொண்டிருக்கின்ற பொழுது பகை முரணியல்பு அல்லாத முரண்பாடுகள் தோன்று

கின்றன. உதாரணமாக, முதலாளித்துவத்தின் கீழ், விவசாயிகளுக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள் இப்படிப்பட்டவை. விவசாயிகளிடம் தனியுடைமை இருக்கிறது (நிலம், கால்நடை மற்றும் விவசாயக் கருவிகள்); அவர்கள் இந்த உடைமையைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் பெருக்குவதற்கும் முயல்கிறார்கள். மறுபக்கத்தில் தொழிலாளர்களிடம் தனியுடைமை இல்லை; அவர்கள் தனியுடைமையை முற்றிலும் ஒழிப்பதில் அக்கறை கொண்டிருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளின் நலன்களுக்கும் தொழிலாளர்களின் நலன்களுக்கும் இடையில் ஓரளவுக்கு முரண்பாடு இருக்கிறது. எனினும் முக்கியமான பிரச்சினையில் இந்தச் சமூகப் பிரிவுகளின் நலன்கள் பொருந்தி நிற்கின்றன; ஏனென்றால் இரண்டு பிரிவினருமே முதலாளி வர்க்கத்தால் சுரண்டப்படுகின்றனர். இது முதலாளி வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் விவசாய வர்க்கத்தைத் தன்னுடைய அணியில் கொண்டுவருவதற்குத் தொழிலாளி வர்க்கத்துக்கு உதவுகிறது. சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் போது இரு பிரிவினருக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள் முற்றிலும் ஒழிக்கப்படுகின்றன.

சோஷலிஸ்ட் வளர்ச்சிக்குப் பகை முரணியல்பு அல்லாத முரண்பாடுகள் இயல்பானவை. சோஷலிஸ்ட் சமூகத்திலுள்ள எல்லா வர்க்கங்களும் சமூகப் பிரிவினரும் தனிநபர்களும் ஒரே விதமான அடிப்படையான பொருளாதார நலன்களையும் அரசியல், தார்மிகக் கோட்பாடுகளையும் கொண்டிருக்கின்றனர். மக்களில் அதிகப் பெரும்பான்மையினர் புதுமையின் தரப்பில் நின்று காலங்கடந்தவற்றை, காலாவதியானவற்றை எதிர்த்துப் போராடி பொதுவான இலட்சியத்தை நோக்கி முன்னேறுகின்றனர். இதன் விளைவாக, முரண்பாடுகளை வெளிக்

கொணர்ந்து தீர்க்கின்ற புதிய முறைகளும் வடிவங்களும் சோஷலிசத்தின் கீழ் தோன்றுகின்றன. ஆகவே மக்கள் அனைவருடைய அமைப்பு ரீதியான முயற்சிகளின் மூல மாக, சமூக அரசியல் மற்றும் சித்தாந்த ஒற்றுமை, சட்ட முறையை உறுதிப்படுத்தல், சோஷலிஸ்ட் தேசபக்தி, விமர்சனம் மற்றும் சுயவிமர்சனம் ஆகியவற்றைப் போன்ற சமூகத்தின் புதிய உந்து சக்திகளின் இயக்கத்தின் மூலமாக முரண்பாடுகள் தீர்க்கப்படுகின்றன. முந்திய சமூக பொரு ளாதார அமைப்புக்களில் முரண்பாடுகள் தாமாகவே வெளிப்பட்டுத் தீர்க்கப்பட்டன; ஆனால் சோஷலிசத்தின் கீழ் முரண்பாடுகள் மார்க்சிய-லெனினியக் கட்சியினால் வழி காட்டப்படுகின்ற மக்களுடைய உணர்வு பூர்வமான நடவடிக்கையினால் வெளிக்கொண்டு வரப்பட்டுத் தீர்க் கப்படுகின்றன. சமூக விதிகளைப் பற்றிய அறிவை ஆதார மாகக் கொண்டு அக்கட்சியின் கொள்கை உருவாக்கப் படுகிறது.

ஆகவே எதிர்நிலைகளின் ஒற்றுமை மற்றும் போராட் டத்தின் விதி எல்லாவித இயக்கம் மற்றும் வளர்ச்சியின் சாராம்சத்தை எடுத்துரைத்து, உள்ளீடான எதிர்நிலை களுக்கு இடையில் இடைச் செயலின் போக்கில் இவை நடைபெறுகின்றன என்று எடுத்துக் காட்டுகிறது. இந்த இடைச் செயல்தான் எல்லா நிகழ்வுப் போக்குகள் மற்றும் புலப்பாடுகளின் இயக்கத்துக்கும் வளர்ச்சிக்கும் உள் தோற்றுவாயாகும்.

ஒரு பொருள் அல்லது நிகழ்வைப் பகுப்பாய்வு செய் கின்ற பொழுது அதன் முரண்பாடுகளைத் தொடக்க நிலையாக எடுத்துக் கொண்டு அதை எதிர்நிலையான அம் சங்கள், குணாம்சங்கள் மற்றும் போக்குகளின் ஒற்றுமை என்று புரிந்து கொண்டு அவற்றின் இடைத் தொடர்பு களை வெளிக் கொணர முயல வேண்டும். ஒரு பொருள்

அல்லது நிகழ்வில் அதன் ஆக்கரீதியான அல்லது எதிர் மறையான அம்சத்தை, புதியதை அல்லது பழமை யானதை, அல்லது இரண்டையுமே ஒன்றுக்கொன்று தனி யாகப் பிரித்துப் பார்ப்பது மட்டும் இயலாது; அவற்றின் ஒற்றுமை, இடையுறவு மற்றும் முரண்பாடான இடைச் செயலைக் கண்டுபிடிப்பதே முக்கியமாகும். பொருட்களை யும் நிகழ்வுகளையும் இம்முறையில் ஆராய்வதே அவற்றின் சாராம்சத்தைக் கண்டுபிடிப்பதற்குரிய ஒரே வழியாகும். இயக்கவியல் முறையில் நிகழ்வுகளை அவற்றின் வளர்ச்சி யில் ஆராய வேண்டுமென்றால் அவற்றில் உள்ளுறையாக வுள்ள எதிர்நிலைகளின் ஒற்றுமை மற்றும் போராட்டம் என்ற நோக்கிலிருந்து அவற்றை ஆராய வேண்டும். ''உல கத்திலுள்ள எல்லா நிகழ்வுப் போக்குகளையும் அவற்றின் 'சுய இயக்கத்தில்', அவற்றின் தன்னியல்பான வளர்ச்சி யில், அவற்றின் மெய்யான வாழ்க்கையில் அறிவதற்குரிய நிபந்தனை எதிர்நிலைகளின் ஒற்றுமை என்கின்ற முறை யில் அவற்றைப் பற்றிய அறிவே. எதிர்நிலைகளின் 'போராட்டமே' வளர்ச்சி எனப்படும்.''*

ஆராயப்படுகின்ற நிகழ்வுகளில் உள்ள முரண்பாடு களைக் கண்டுபிடிப்பது அந்த நிகழ்வுகளின் பின்னால் உள்ள இயக்கு சக்திகளைக் கண்டுபிடிக்க உதவுவதுடன் அவற்றின் வளர்ச்சியின் விதிகளையும் அறிந்து கொள்ள உதவுகிறது. ஒரு நிகழ்வின் பிரதான உள்ளடக்கமாகவும் அதன் இயக்கத்தின் தோற்றுவாயாகவும் இருக்கின்ற பிரத்யேக முரண்பாடுகள் அதன் வளர்ச்சியின் பிரதான விதிகளோடு தொடர்பு கொண்டிருப்பது இதற்குக் கார ணம். ஒரு நிகழ்வின் சாராம்சத்தையும் அதன் வளர்ச்சி யின் பிரதான விதிகளையும் கண்டுபிடிப்பதற்கு அதன்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 38, p. 358.

உள்ளுறையான முரண்பாடுகளையும், அவற்றின் அமைப்பையும் இடைத் தொடர்பையும் எடுத்துக் காட்டி குறிப்பிட்ட நிலைமைகளில், வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்தில் இயங்குகின்ற அடிப்படையான முரண்பாட்டைச் சுட்டிக் காட்ட வேண்டும். ''இயக்கவியலின் சரியான அர்த்தம் **பொருட்களின்** சாராம்சத்தில் உள்ள முரண்பாட்டை ஆராய்வதாகும்'' என்று லெனின் எழுதினார்.*

பொருட்களிலும் நிகழ்வுகளிலும் உள்ள முரண்பாடுகளை ஒருபோதும் புறக்கணிக்கக் கூடாது; அவற்றை வெளிப்படுத்துவதற்கும் சமாளிப்பதற்கும் முயல வேண்டும். ஆகவே முதலாளித்துவத்தின் முரண்பாடுகளைப் பற்றிய அறிவு அவற்றைத் தீர்ப்பதற்குரிய வழிகளைப் புரிந்து கொள்வதற்கும் போராட்ட வடிவங்களையும் முறைகளையும் தேர்ந்தெடுப்பதற்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் இதர உழைக்கும் மக்களுக்கும் உதவியாக இருக்கிறது.

பகை முரணியல்பு அல்லாத முரண்பாடுகளை வெற்றி கொண்டு வளர்ச்சியடைகின்ற சோஷலிஸ்ட் சமூகத்தில் தோன்றக் கூடிய எத்தகைய முரண்பாடுகளையும் பார்க்கத் தவறிவிடக் கூடாது. இம்முரண்பாடுகளை உரிய காலத்திலேயே கண்டுபிடிப்பதும் அவை தீவிரமடையாமல் தடுப்பதும் முக்கியமாகும்.

முரண்பாடுகள் பல்விதமானவை, அவற்றைத் தீர்க்கின்ற வழிகளும் பல்வேறு விதமானவை என்பதால் நடைமுறையில் தோன்றுகின்ற முரண்பாடுகளின் தனித்தன்மைகளைத் திறமையாக இனங்காண்பதும் குறிப்பிட்ட நிலைமைகளில் அவற்றைத் தீர்க்கின்ற மிக உசிதமான வழிகளைக் கண்டுபிடிப்பதும் முக்கியமாகும்.

---

* *Ibid.*, pp, 251—252.

அளவு மாற்றங்கள் பண்பு மாற்றங்களாகப் பரிணமித்தலைப் பற்றிய விதி

அளவு மாற்றங்கள் பண்பு மாற்றங்களாகப் பரிணமித்தலைப் பற்றிய விதி வளர்ச்சி நடைபெறுகின்ற வழியை, அந்த நிகழ்வுப் போக்கின் பொறியமைவை எடுத்துக் காட்டுகிறது. பொருட்கள் மற்றும் நிகழ்வுப் போக்குகளின் எதிர்நிலைகளான அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான அம்சங்களின் இடைத் தொடர்பை அது எடுத்துக் கூறுகிறது. இவ்விதியைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் முதலில் பண்பு, அளவு ஆகியவற்றின் பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாம் எண்ணற்ற பொருட்களாலும் நிகழ்வுகளாலும் சூழப்பட்டிருக்கின்றோம். இவை தொடர்ச்சியான இயக்கத்தில், மாற்றத்தில் இருக்கின்றன. எனினும் தனித்தன்மையான ஒன்றை, அவை ஒவ்வொன்றுக்கும் பிரத்யேகமான ஒன்றை, ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்துகின்ற ஒன்றை அவை தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, உயிருள்ள இயற்கை உயிரில்லாத இயற்கையிலிருந்து வேறுபடுகிறது; தாவரங்கள் மற்றும் பிராணிகளில் பல்வேறு இனங்கள் இருக்கின்றன; மனிதனும் சமூகமும் வெவ்வேறு சகாப்தங்களில் வெவ்வேறாக இருக்கின்றன. அதே சமயம் எல்லாப் பொருட்களிலும் சில பொதுவான அம்சங்கள் உண்டு. உயிருள்ள இயற்கை, உயிரில்லாத இயற்கை இரண்டுமே பொருளாயதத் தன்மையைக் கொண்டிருக்கின்றன. தாவரங்கள் மற்றும் பிராணிகளின் எல்லா இனங்களும் ஒரே விதமான ஜீவாதாரமான குணாம்சங்களைக் கொண்டிருக்கின்றன. சமூக வளர்ச்சி புறநிலையான விதிகளால் ஆளப்படுகிறது, இதரவை.

பொருட்களுக்கு இடையிலுள்ள வேற்றுமைகளும் ஒற்றுமைகளும் பண்பு என்ற கருத்தில் வெளியிடப்படுகின்றன. ஒரு பொருளின் இயல்பையும் தனித்தன்மைகளையும் வெளியிடுகின்ற அவசியமான கூறுகளின் மொத்தம் பண்பு எனப்படும். அது அப்பொருளின் சார்புநிலையான ஸ்திரத்தன்மையையும் வரையறுப்பையும் சுட்டிக் காட்டுகிறது. இந்த வரையறுப்பு பொருளின் இருத்தலுடன் தொடர்புடையது. பொருளின் பண்பில் ஏற்படுகின்ற எவ்விதமான மாற்றமும் அப்பொருளில் மாற்றத்தை உண்டாக்கும். அங்கஜீவியின் வளர்சிதை மாற்றம் முடிந்து விடும் பொழுது அதற்கு மரணமும் அழிவும் ஏற்படுகிறது, அதன் இருத்தல் முடிந்து விடுகிறது.

பண்புகள் பொருட்களுக்குச் சொந்தமானவை; அப்பொருட்களில் மாற்றங்கள் ஏற்படுகின்ற பொழுது அவையும் மாற்றமடைகின்றன. ஒரு பொருளைப் பற்றி ஆழமான அறிவைப் பெற்று அதன் சாராம்சத்தைப் புரிந்து கொள்வதற்கு அதை மற்ற பொருட்களிலிருந்து தனியாக வேறுபடுத்த வேண்டும்; அவற்றுக்கு இடையிலுள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் நிறுவி அவற்றின் குணாம்சங்களை வகைப் படுத்த வேண்டும். பண்பு குணாம்சங்களின் மூலமாக வெளிப்படுகிறது. குணாம்சம் ஒரு பொருளை மற்ற பொருட்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது அல்லது அவற்றுடன் அதன் ஒற்றுமையைச் சுட்டிக் காட்டுகிறது.

ஒவ்வொரு பொருளும் எண்ணற்ற குணாம்சங்களைக் கொண்டிருக்கிறது; அவற்றில் சில மாற்றமடைதல் அல்லது மறைந்து விடுதல் உடனே அப்பொருளை மாற்றி விடாது. உதாரணமாக, நிறம் பெட்ரோலுக்கு அவசியமல்ல; அது பெட்ரோல் என்ற பண்பில் நிறத்தைப் பெறலாம் அல்லது இழக்கலாம். ஆனால் எரிகின்ற தன்மை

அதற்கு அவசியமானது. ஏதாவதொரு இரசாயன மூலகத்துடன் இடைச் செயலில் அந்தக் குணாம்சத்தை அது இழக்குமானால் அதன் பண்பு அதற்குத் தகுந்தவாறு மாற்றமடைகிறது. பெட்ரோல் தன் பண்பை இழந்து விட்டால் அது ஒரு எரிபொருள் என்ற நிலை முடிந்து விடுகிறது.

நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைச் சேர்ந்த எல்லாப் பொருட்களும் நிகழ்வுகளும் பல பண்புகளைக் கொண்டிருக்கின்றன; ஆகவே ஆராயப்படுகின்ற பொருள் அல்லது நிகழ்வின் அடிப்படையான பண்புகளையும் அடிப்படை அல்லாத பண்புகளையும் வேறுபடுத்திக் காண்பது அவசியம். உதாரணமாக, ஒரு நபர் பல உழைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பொழுது உழைப்பாளி என்ற முறையில் தன்னுடைய குணாம்சங்களை வெளிப்படுத்துகிறார். இந்தச் சூழலில் அவர் தேர்ச்சியற்ற தொழிலாளி, ஃபிட்டர், வரைவாளர், டாக்டர், பொறியியலாளர், நிர்வாக அதிகாரி மற்றும் இதரவையாக இருக்க முடியும். வேறு உறவுகளில் அதே நபர் வேறு குணாம்சங்களை வெளிப்படுத்துகிறார். அவர் தன்னுடைய பெற்றோர்களுக்கு மகனாக, மனைவிக்குக் கணவனாக, குழந்தைகளுக்குத் தந்தையாக இருக்கிறார். அவர் உயர்ந்த சித்தாந்தத் தரத்தையும் அரசியல் முதிர்ச்சியையும் பெற்று மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கட்சியில் சேர்ந்தால் சமூகத்தின் புரட்சிகரமான மாற்றத்துக்கு, சோஷலிசத்துக்குத் தீவிரப் போராளியாகிறார்.

ஆனால் சில உறவுகளில் தம்மை வெளிப்படுத்திக் கொண்டு வேறு உறவுகளில் மறைந்துவிடுகின்ற குணாம்சங்களுடன் எப்பொழுதும் இருக்கின்ற குணாம்சங்களும் உள்ளன. இந்தக் குணாம்சங்களின் மொத்தம்தான் அடிப்

படையான பண்பு என்று சொல்லப்படுகிறது. ஒரு பொருளின் அடிப்படையான பண்பு அப்பொருளின் தோற்றத்துடன் தோன்றுகிறது; அப்பொருள் மாற்றமடைகின்ற பொழுதுதான் அது மாறுகிறது. உதாரணமாக, ஒரு மனிதனின் அடிப்படையான பண்பில் பின்வரும் குணாம்சங்கள் இருக்கின்றன: உணர்வு, சுற்றியுள்ள யதார்த்தத்தைக் குறிக்கோளின் வழியில் மாற்றுகின்ற தகுதி, வாழ்க்கைக்குத் தேவையான பொருளாயத வசதிகளை உற்பத்தி செய்கின்ற தகுதி, சமூகத்துக்குள் மட்டுமே, அதாவது மற்ற மக்களுடன் சேர்ந்து வாழ்கின்ற சாத்தியம்.

பண்பு தவிர பொருட்கள் மற்றும் நிகழ்வுப் போக்குகள் திட்டவட்டமான அளவைக் கொண்டிருக்கின்றன.

குறிப்பிட்ட பண்பின் பரிமாணம், வளர்ச்சியின் வேகம் மற்றும் மட்டத்தைக் குறிக்கின்ற வரையறுப்பு அளவு எனப்படும். அது வழக்கமாக எண்களால் குறிக்கப்படும். யதார்த்தத்தை அறிவதற்கு புலப்பாடுகள் மற்றும் நிகழ்வுப் போக்குகளை அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்ய வேண்டும். விஞ்ஞானம் மற்றும் செய்முறையின் வளர்ச்சி மட்டம் எவ்வளவு உயர்வாக இருக்கிறதோ அவை அவ்வளவு அதிகமாக அளவு ரீதியான குறியீடுகளைப் பயன்படுத்துகின்றன, பொருட்களை அளவு ரீதியாகப் பகுப்பாய்வு செய்கின்றன.

பொருட்களின் அளவு மற்றும் பண்பு ரீதியான அம்சங்கள் பின்னிப் பிணைந்திருக்கின்றன. அவற்றின் பிரிக்க முடியாத ஒற்றுமையில் அவை ஒரு பொருள் அல்லது நிகழ்வின் இரு பகுதிகளாக ஒன்றையொன்று நிர்ணயிக்கின்றன. ஒரு பொருள் அல்லது நிகழ்வின் அளவு மற்றும் பண்பின் ஒற்றுமையை அளவுகோல் என்கிறோம். அளவுகோல் என்னும் கருத்து கறாரான திட்டவட்டமான அளவு

மட்டுமே குறிப்பிட்ட பண்புடன் பொருந்தும் என்பதை அறிவிக்கிறது.

அளவு குறிப்பிட்ட எல்லைகளுக்குள் மட்டுமே பண்பை மாற்றாத விதத்தில் மாற முடியும்; அந்த எல்லை அப்பொருளின் அளவுகோல் எனப்படுகிறது. அளவு ரீதியான மாற்றங்கள் இந்த எல்லைகளை மீறுகின்ற பொழுது அளவுகோல் நொறுக்கப்படுகிறது, பொருளின் பண்பு மாற்றமடையத் தொடங்குகிறது. உதாரணமாக, வழக்கமான காற்று மண்டல அழுத்தத்தின் போது தண்ணீரின் வெப்ப அளவுகோல் 0° சென்டிகிரேடிலிருந்து 100° சென்டிகிரேட் வரை இருக்கிறது. வெப்பம் பூஜ்யத்துக்குக் கீழே குறைகின்ற பொழுது தண்ணீர் உறைந்து பனிக்கட்டியாக மாறுகிறது, திரவ நிலையிலிருந்து கெட்டியான நிலைக்கு மாறுகிறது. தண்ணீரை 100° சென்டிகிரேடுக்கு மேல் சூடாக்கும் பொழுது அது நீராவியாக மாறுகிறது, அதாவது வாயு நிலைக்கு மாறுகிறது.

அளவு மீறினால் ஆக்கபூர்வமானவை எதிர்மறையாக மாறும், நல்லவை தீயவையாக மாறும் என்று மக்கள் சாதாரணமாகக் கூறுவதுண்டு. அளவுகோலைப் பற்றிய தத்துவஞானக் கருத்து இந்த வெகுஜனக் கருத்துடன் பொருந்துகிறது. உதாரணமாக, வாழ்க்கைக்கும் ஆரோக்கியத்துக்கும் மிகவும் அவசியமான பொருள் உணவு. ஆனால் அளவுக்கு மீறி உணவை உட்கொண்டால் அது உடலுக்குத் தீங்கு விளைவிக்கும், ஆரோக்கியம் கெட்டுவிடும்.

அளவுகோல் நொறுங்குகின்ற பொழுது பழைய பண்பு புதிய அளவுடன் பொருந்தாது; அவற்றுக்கு இடையில் முரண்பாடு தோன்றுகிறது. அந்த முரண்பாடு தீவிரமடைந்து புதிய பண்பு உருவாகி புதிய அளவுகோல் தோன்றுவதில் அது இறுதியில் முடிகிறது. அளவு மாற்றங்கள்

பண்பு மாற்றங்களாகப் பரிணமித்தல் என்று இதைக் கூறுகிறோம்.

அளவு ரீதியான மாற்றங்களுக்கும் பண்பு ரீதியான மாற்றங்களுக்கும் இடையிலான தொடர்பு இயல்பானது. அளவு மாற்றங்கள் பண்பு மாற்றங்களாகப் பரிணமிக்கின்ற விதியைக் கூறும் பொழுது எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: "இயற்கையில்... பருப்பொருள் அல்லது இயக்கத்தில் அளவு ரீதியான சேர்த்தல் அல்லது அளவு ரீதியான கழித்தலின் மூலமாக மட்டுமே பண்பு ரீதியான மாற்றங்கள் ஏற்பட முடியும்."*

இந்த விதி சர்வப்பொதுவானது, புறநிலையான உலகம், மனித அறிதல் ஆகிய இரண்டுக்கும் செல்தகைமையுள்ளது. உதாரணமாக, அங்கஜீவிகளில் தொடக்கத்தில் அற்பமாக உள்ள அளவு ரீதியான மாற்றங்கள் ஒன்று சேர்ந்து பண்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்த முடியும், புதிய ரகங்களையும் இனங்களையும் தோற்றுவிக்க முடியும். விஞ்ஞானிகள் இதைப் பயன்படுத்தி தானியங்களிலும் பிராணிகளிலும் புதிய ரகங்களை உருவாக்குவதில் வெற்றி அடைந்திருக்கிறார்கள். ஆகவே இனக் கலப்பு மற்றும் தேர்ந்தெடுப்பு மூலம் ஆப்பிள், எலுமிச்சம் பழங்கள் மற்றும் இதரவற்றில் பல புதிய ரகங்களை உற்பத்தி செய்ய முடிந்திருக்கிறது.

அளவு மாற்றங்கள் பண்பு மாற்றங்களாகப் பரிணமித்தல் சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் நடைபெறுகிறது. உதாரணமாக ஒத்துழைப்பு, அதாவது ஒரே உற்பத்தி நிகழ்வுப் போக்கில் உழைக்கின்ற மக்கள் பலரும் தம்முடைய உழைப்பை ஒன்று சேர்த்தல் ஒரு புதிய சமூக உற்பத்திச் சக்தியைப்

---

* Frederick Engels, *Dialectics of Nature*, p. 63.

படைக்கிறது; அவர்களுடைய உழைப்பின் வெறும் கூட்டுத் தொகையாக அது இருப்பதில்லை, அது சாராம்சத்தில் வேறுவிதமாக இருக்கிறது. ஒத்துழைப்பின் பல் வேறு வடிவங்கள் மேலும் பயனுள்ள உழைப்புக்கும் உற்பத்தியிலும் மக்களுடைய ஜீவாதாரமான தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் ஏற்படுகின்ற பிரச்சினைகளைக் கூட்டாகத் தீர்ப்பதற்கும் உரிய நிலைமைகளைத் தோற்றுவிக்கின்றன.

அளவு மாற்றங்கள் பண்பு மாற்றங்களாகப் பரிணமிப்பதைப் பற்றிய விதி அறிவாராய்ச்சித் துறையிலும் செயல்படுகிறது. மார்க்சிய-லெனினியத்தின் தோற்றம் சமூகத்தை மனிதன் அறிதலில் பண்பு ரீதியில் புதிய கட்டத்தைக் குறித்தது; எனினும் அதற்கு முன்னர் விஞ்ஞான அறிவு படிப்படியாகத் திரட்டப்பட்டிருந்தது.

யதார்த்தத்தின் வெவ்வேறு துறைகளிலும் வெவ்வேறு நிகழ்வுகளிலும் பண்பு ரீதியான மாற்றங்கள் வெவ்வேறு வழிகளில் நடைபெறுகின்றன; அவை தமக்குரிய தனித்தன்மைகளைக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த மாற்றங்கள் அனைத்தும் எப்பொழுதும் விதிகளுக்கு உட்பட்டவை; அவை அளவு ரீதியான மாற்றங்களின் விளைவாக நடைபெறுகின்றன.

அளவு ரீதியான மாற்றங்கள் மற்றும் பண்பு ரீதியான மாற்றங்கள் பரஸ்பர இடைச்சார்பைக் கொண்டிருக்கின்றன. இயற்கையிலும் சமூகத்திலும் அளவு மாற்றங்கள் பண்பு மாற்றங்களாகப் பரிணமிப்பது மட்டுமின்றி, அதன் எதிர்நிலையும் நடைபெறுகிறது. அதனால்தான் எங்கெல்ஸ் அளவு மாற்றங்கள் பண்பு மாற்றங்களாகப் பரிணமிப்பதையும் அதன் மறுதலையையும் பற்றி பேசினார்.

பண்பு மாற்றங்கள் அளவு மாற்றங்களாகப் பரிண

மிக்கும் என்று கூறும் பொழுது ஏதாவதொரு நிகழ்வு புதிய பண்பைப் பெறுகின்ற பொழுது புதிய அளவு ரீதியான தன்மைகளையும் அடைகிறது என்பது பொருள். உதாரணமாக, நவீன இயந்திரங்களையும் தொழில்நுட்பவியலையும் பயன்படுத்துகின்ற பொழுது உழைப்பின் உற்பத்தித் திறன் பேரளவில் அதிகரிக்கிறது; விவசாய உற்பத்தியில் சோஷலிஸ்ட் முறைகளுக்கு மாறுகின்ற பொழுது, சிறு தனிப்பட்ட நிலவுடைமைகளில் இருந்ததைக் காட்டிலும் உற்பத்தித் திறன் அதிகரிக்கிறது.

அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான மாற்றங்களின் இடைச் செயலை நடைமுறையில் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். நாம் விரும்புகின்ற பண்பு அளவு ரீதியான தயாரிப்புகளின் அடிப்படையில் மட்டுமே ஏற்பட முடியும்; பழைய அளவிலிருந்து மாறுபட்ட புதிய அளவுக்குப் பாதை வழக்கமாகப் புதிய பண்பின் மூலமாகவே உள்ளது. சிறந்த தொழிலாளர்கள் பண்பு ரீதியில் புதிய இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பவியல், உழைப்பின் ஒழுங்கமைப்பில் புதிய முறைகள், தங்களுடைய தேர்ச்சி நிலைகளை உயர்த்துதல் மற்றும் இதரவற்றின் மூலமாகவே உழைப்பின் உயர்ந்த உற்பத்தித் திறனை அடைகிறார்கள்.

அளவு ரீதியான மாற்றங்கள் வழக்கமாகப் படிப்படியாகவும் சரளமாகவும் நடைபெறுகின்றன; பெரும்பாலும் அவை பார்வைக்குக் கூடத் தெரிய மாட்டா. ஆனால் பண்பு ரீதியான மாற்றங்கள் எப்பொழுதுமே அதிக விரைவாகவும் உறுதியாகவும் நடைபெறுகின்றன; அவை நிச்சயமாகப் பாய்ச்சல் முறையில் நடைபெறுகின்றன. பாய்ச்சல் என்பது பண்பு ரீதியான மாற்றம்; ஒரு நிகழ்வு அல்லது அதிலுள்ள சில அம்சங்கள் ஒரு பண்பிலிருந்து மற்றொரு பண்புக்கு மாறுதலாகும். முன்னர் நடைபெற்ற

அளவு ரீதியான மாற்றங்களுடன் ஒப்பிடுகின்ற பொழுது பாய்ச்சல்கள் மிகக் குறுகிய காலத்தில் நடைபெறுகின்றன; ஆனால் அக்காலத்திற்குள் பொருள் அல்லது நிகழ்வில் ஆழமான மாற்றங்கள் நடைபெறுகின்றன.

அளவு மாற்றங்கள் பண்பு மாற்றங்களாகப் பரிண மித்தலைப் பற்றிய விதி சர்வப்பொதுவானது என்றாலும் அது வெவ்வேறு ஸ்தூலமான நிலைமைகளில் வெவ்வேறு வழிகளில் வெளிப்படுகிறது. பாய்ச்சல்கள் இயல்பிலும் கால அளவிலும் முக்கியத்துவத்திலும் வெவ்வேறாக இருக்கின்றன. பழைய பண்பிலிருந்து புதிய பண்புக்கு மாற்றம் உடனே நடைபெறுகின்ற பொழுது பாய்ச்சல் கூர்மையானதாக இருக்கிறது. அந்த மாற்றம் சில இடை நிலைக் கட்டங்களை அல்லது தற்காலிகமான வடிவங் களை—அவை ஒன்றுக்குப் பின் ஒன்றாக நடைபெறுகின் றன—கொண்டிருக்கும் பொழுது அது படிப்படியானதாக இருக்கிறது. உதாரணமாக, சமூகப் புரட்சியின் போது அரசியல் அதிகார மாற்றம் வழக்கமாக வேகமாக நடை பெறுகிறது; ஆனால் பொருளாதார மற்றும் சித்தாந்த மாற்றங்கள் அநேகமாகப் படிப்படியாக, பல கட்டங் களின் வழியாக நடைபெறுகின்றன.

நாம் படிப்படியான அளவு மாற்றங்களுக்கும் படிப் படியான பண்பு மாற்றங்களுக்கும் இடையில் வேறு பாட்டைக் காண வேண்டும். முதலில் சொல்லப்பட்டதில் ஒரு பொருளின் பண்பு மாறுவதில்லை, அது ஒரு நிலை வரை அப்படியே இருக்கிறது. ஏனென்றால் அளவு மாற்றங்கள் அடிப்படையான, பண்பு மாற்றங்களுக்கே வழிவகுக்கின் றன. இரண்டாவதாகச் சொல்லப்பட்டதில் அந்தப் பொருளின் பண்பிலேயே படிப்படியான மாற்றங்கள் தொடர்வரிசையாக நடைபெறுகின்றன; இவை பழைய

பண்பிலிருந்து வேறுபட்ட புதிய பண்பின் உருவாக்கத்துக்கு வழிவகுக்கின்றன.

ஆகவே எந்த வளர்ச்சியும் அளவு மாற்றங்கள், பண்பு மாற்றங்கள் என்னும் இரண்டு அம்சங்களைக் கொண்டிருக்கிறது. இது அதன் பிரிக்க முடியாத ஒருமையாக இருக்கிறது. வளர்ச்சி என்பது அளவு மாற்றங்களோ அல்லது பண்பு மாற்றங்களோ மட்டுமே அல்ல; அது இரண்டின் இடைச் செயலாகும். சமூக வாழ்க்கையில் பரிணாமம் புரட்சிக்குத் தயாரிப்புச் செய்து அதைத் தூண்டுகிறது; புரட்சி பரிணாமத்தைப் பூரணமாக்குகிறது.

செய்முறை நடவடிக்கையில் அளவு மாற்றங்களுக்கும் பண்பு மாற்றங்களுக்கும் இடையிலுள்ள உறவுப் பொருத்தத்தை மதிப்பிடுவதும் அளவு மாற்றங்கள் பண்பு மாற்றங்களாகப் பரிணமிப்பதை இனங்காண்பதும் மிக முக்கியம். அது இல்லையென்றால் பழையதிலிருந்து புதியவற்றுக்குச் செல்கின்ற சரியான பாதைகளைக் கண்டுபிடிக்க இயலாது.

ஒவ்வொரு நாடும் சோஷலிசத்துக்கு மாறுகின்ற வடிவங்களைக் கண்டுபிடிக்கின்ற பிரச்சினை நம் காலத்தில் மிகவும் முக்கியமான ஒன்றாகும். எந்த நாட்டிலும் சோஷலிசத்துக்கு மாற்றம் சோஷலிஸ்ட் புரட்சியின் மூலமாக மட்டுமே நடைபெற முடியும். பிரம்மாண்டமான பண்பு ரீதியான பாய்ச்சல் இல்லாமல், புரட்சி இல்லாமல் அத்தகைய மாற்றம் நடைபெற முடியாது. ஆனால் ஒவ்வொரு தனிப்பட்ட நாட்டிலும் சோஷலிஸ்ட் புரட்சி நடைபெறக் கூடிய ஸ்தூலமான முறை அதன் சமூக, பொருளாதார வளர்ச்சி மட்டத்தை, தொழிலாளி வர்க்கம் மற்றும் அதன் கூட்டாளிகளின் பலம் மற்றும் ஒழுங்கமைப்பு, சிறந்த அனுபவத்தைப் பெற்ற புரட்சிகரமான முன்னணிப்படை இருப்பது, மக்களின் பழக்கங்

கள் மற்றும் மரபுகள், முதலாளி வர்க்கத்தின் பலம் மற்றும் புரட்சிகரமான மாற்றங்களுக்கு அதன் எதிர்ப்பு, மற்றும் பல உள்ளீடான, வெளிப்புறக் காரணிகளைப் பொறுத்திருக்கிறது.

வெவ்வேறு நாடுகளில் சோஷலிஸ்ட் புரட்சிகள் ஒரே மாதிரியான வடிவங்களைக் கொண்டிருக்காது என்பதை சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் நடைமுறை அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. எதிர்காலத்தில் இந்த வடிவங்கள் இன்னும் அதிகமான அளவுக்கு வேறுபாட்டைக் கொண்டிருக்கும்.

இனி தொகுத்துக் கூறுவோம். அளவு மாற்றங்கள் பண்பு மாற்றங்களாகப் பரிணமிப்பதைப் பற்றிய விதி வளர்ச்சிப் போக்கில் ஒரு பண்பு ரீதியான நிலையிலிருந்து மற்றொரு பண்பு ரீதியான நிலைக்கு மாற்றம் எப்படி நடைபெறுகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், இந்த விதி வளர்ச்சியின் முக்கியமான திருப்பு முனைகளை எடுத்துக் காட்டுகிறது, புதியவற்றின் தோற்றத்தில் முக்கியமான அம்சங்களில் ஒன்றை வெளிப்படுத்துகிறது.

நிலைமறுப்பின் நிலைமறுப்பைப் பற்றிய விதி

நிலைமறுப்பின் நிலைமறுப்பைப் பற்றிய விதி அடுத்தடுத்து வருகின்ற வளர்ச்சிக் கட்டங்களுக்கும், பழமைக்கும் புதுமைக்கும் இடையிலுள்ள தொடர்பை எடுத்துக் காட்டுகிறது. அது வளர்ச்சியின் பொதுப் போக்கையும் திசைவழியையும் எடுத்துக் கூறுகிறது. இந்த விதியைப் புரிந்து கொள்வதற்கு முதலில் இயக்கவியல் நிலைமறுப்பின் அர்த்தத்தையும் வளர்ச்சியில் அதன் இடத்தையும் புரிந்து கொள்ள வேண்டும்.

நிலைமறுப்பில் பழையவற்றுக்குப் பதிலாகப் புதிய வை வருகின்றன, அதாவது ஒரு வளர்ச்சிக் கட்டத்தை அகற்றிவிட்டு மற்றொரு வளர்ச்சிக் கட்டம் வருகிறது. பழையவற்றிலிருந்து புதியவற்றுக்கு மாற்ற நிகழ்ச்சிப் போக்கு, ஒரு வளர்ச்சிக் கட்டத்துக்குப் பதிலாக மற் றொரு வளர்ச்சிக் கட்டம் ஏற்படுவது தத்துவஞானத்தில் இயக்கவியல் நிலைமறுப்பு என்று சொல்லப்படுகிறது.

நிலைமறுப்பின் மிக முக்கியமான இயல்புகளும் சிறப்புத் தன்மைகளும் என்ன?

முதலாவதாக, நிலைமறுப்பு சர்வப்பொதுவானது. இயற்கையிலும் சமூகத்திலும் நிகழும் எந்த வளர்ச்சிக் கும் அது இயல்பானது, அதன் அவசியமான அம்சமாக இருக்கிறது. உயிருள்ள இயற்கையில் பழைய உயிரினங் கள் அனைத்தும் பல நூற்றாண்டுகளில் புதிய உயிரினங் களால் நிலைமறுக்கப்படுகின்றன; புதியவை பழைய வற்றை அடிப்படையாகக் கொண்டு அதிகமான வாழ்க்கைத் திறன் கொண்டவையாக இருக்கின்றன. வரலாற்று வளர்ச்சி என்பது பழைய சமூகங்களின் இடத்தில் புதிய, உயர்வான சமூகங்கள் வருவதே ஆகும். உதாரணமாக, பூர்விக கூட்டு வாழ்க்கைச் சமூகத்துக்குப் பதிலாக அடிமையுடைமை சமுதாயம், அடிமையுடைமை சமுதாயத்துக்குப் பதிலாக நிலப்பிரபுத்துவ சமுதாயம், நிலப்பிரபுத்துவ சமுதாயத் துக்குப் பதிலாக முதலாளித்துவ சமுதாயம், முதலாளித் துவ சமுதாயத்துக்குப் பதிலாக சோஷலிச சமுதாயம். அறிவாராய்ச்சித் துறையில் சில விஞ்ஞானக் கருதுகோள் கள் யதார்த்தத்தின் தொடர்புகளை அதிகத் துல்லிய மாகப் பிரதிபலிக்கும் வேறு கருதுகோள்களுக்கு இடம் கொடுத்து விலகிக் கொள்கின்றன.

எதிர்நிலைகளின் ஒற்றுமையிலும் போராட்டத்திலும் நிலைமறுப்பு அடங்கியிருக்கிறது. முரண்பாடுகளின்

எதிர் அம்சங்கள் வெவ்வேறு முக்கியத்துவம் கொண்டிருக்கின்றன; அவை ஒரு பொருள் அல்லது நிகழ்வின் வளர்ச்சியில் வெவ்வேறு பாத்திரத்தை வகிக்கின்றன. இவற்றுள் ஒரு அம்சம் பொருள் அல்லது நிகழ்வை மாற்றுவதற்குச் செயல்படுகிறது; எனவே அது முற்போக்கான பாத்திரத்தை வகிக்கிறது. அடுத்த அம்சம் அந்தப் பொருள் அல்லது நிகழ்வின் ஸ்திர நிலைமையை வெளியிடுகிறது; எனவே அது பழமையைப் பாதுகாக்கும் தன்மையைக் கொண்டிருக்கிறது. பழைய, பழமையான அம்சம் அகற்றப்பட்டு புதிய, முற்போக்கான அம்சம் தன்னை உறுதிப்படுத்திக் கொள்வதன் மூலம் உள் முரண்பாடு தீர்க்கப்படுவதுதான் நிலைமறுப்பு எனப்படும்.

எனவே பழையது தொடர்ச்சியாக நிலைமறுக்கப்பட்டுப் புதியவற்றால் மாற்றப்படுகின்ற செயல்முறை வளர்ச்சி எனப்படுகிறது. இது இல்லாவிடில் வளர்ச்சி இல்லை. ''எந்த வளர்ச்சியையும் அதன் உள்ளடக்கம் எதுவாக இருப்பினும், ஒன்று மற்றொன்றின் நிலைமறுப்பாக விளங்கும் விதத்தில் ஒன்றோடொன்று தொடர்புள்ள வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களின் வரிசையாகக் கருதலாம்... தான் நிலவிய முந்திய வடிவங்களை மறுக்காத வளர்ச்சி எந்தத் துறையிலும் ஏற்பட முடியாது'' என்று மார்க்ஸ் எழுதினார்.*

நிலைமறுப்பின் மற்றொரு முக்கியமான அம்சம் என்னவென்றால் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற எந்த நிகழ்வுப் போக்குக்கும் அது உள் இயல்பானது, வெளியிலிருந்து புகுத்தப்படுகின்ற அயலான ஒன்றாக ஒருபோதும் இருப்பதில்லை.

மாற்றங்களின் வெவ்வேறு வடிவங்களை, ஒரு பண்பின் இடத்தில் மற்றொரு பண்பு வெவ்வேறான முறை

* K. Marx, F. Engels, *Collected Works*, Vol. 6, p. 317.

களில் வருவதை நாம் காண்கிறோம். உதாரணமாக, ஒரு தானியத்தைப் பறவை தின்றுவிடலாம் அல்லது அரவை இயந்திரத்தில் இது அரைக்கப்படலாம். இங்கே ஒரு பொருள் வெளிச் சக்திகளால் அழிக்கப்பட்டு அதன் அடுத்த வளர்ச்சி முடிக்கப்படுகிறது. இதுவும் நிலைமறுப்பு என்றாலும் இது யாந்திரிகமான நிலைமறுப்பு ஆகும். இயக்கவியல் நிலைமறுப்பு வளர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவருவதில்லை; அது அடுத்த வளர்ச்சிக்கு நிபந்தனையாகவும் விளங்குகிறது. அதே தானிய உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். அது நல்ல மண்ணில் விழுந்து வெப்பமும் ஈரமும் இருந்தால் முளைக்கிறது. அதிலிருந்து வளர்கின்ற செடி அந்த தானியத்தின் நிலைமறுப்பாக இருக்கிறது. ஆனால் இத்தகைய நிலைமறுப்பு வளர்ச்சியின் இன்றியமையாத அம்சமாகும், அந்த நிகழ்வுப் போக்கின் இயற்கையாலேயே அது நிர்ணயிக்கப்படுகிறது.

இயக்கவியல் நிலைமறுப்பில் உள் காரணிகள் தீர்மானமான பாத்திரத்தை வகிக்கின்றன. எனினும் அதன் தயாரிப்பிலும் அதன் நிகழ்வுப் போக்கிலும் வெளிப்புற நிலைமைகள் கணிசமான தாக்கத்தைக் கொண்டிருக்க முடியும். உதாரணமாக, போதுமான வெப்பம் அல்லது ஈரம் இல்லாமலிருப்பது தானியத்தின் வளர்ச்சியை மற்றும் தானியத்தை செடி நிலைமறுப்புச் செய்வதைத் தாமதம் செய்து தடுக்கக் கூட முடியும்.

நிலைமறுப்பு என்பது வளர்ச்சியின் கூறு, ஒரே சமயத்தில் பழையதை அகற்றுவதும் புதியதை நிலைநிறுத்துவதும் ஆகும் என்று இயக்கவியல் கருதுகிறது. புதியதை நிர்ணயிப்பதும் தயாரிப்பதும் பழையதுதான்; பழையதன் கருவிலேயே இது தோன்றுகிறது; ஆகவே இயக்கவியல் நிலைமறுப்பு பழையதை அகற்றுவது மட்டுமல்லாமல் புதியதை நிலைநிறுத்துகிறது.

புதியது பழையதை முழுமையாக ஒருபோதும் அழித்து விடுவதில்லை. இயக்கவியல் நிலைமறுப்பு பழையதின் ஆக்கபூர்வமான அம்சங்களைப் பாதுகாக்கிறது; கடந்த கால வளர்ச்சியின் சாதனைகளைப் புதியவை எடுத்துக் கொள்கின்றன. ஆரோக்கியமானவற்றையும் முற்போக் கானவற்றையும் தக்கவைத்துக் கொள்வதற்கும், அடுத்த வளர்ச்சிக்கு ஏற்ற நிலைமைகளை உருவாக்குவதற்கும் காலாவதியானவற்றை மறுப்பது இன்றியமையாததாகும். உதாரணமாக, சோஷலிஸ்ட் புரட்சி முதலாளித்துவ உற் பத்தி உறவுகளை அழிக்கின்ற பொழுது உற்பத்திச் சக்தி களைப் பாதுகாக்கிறது; சமூகத்தின் மேற்கட்டுமானத்தை மாற்றுகின்ற பொழுது விஞ்ஞானம், பண்பாடு ஆகிய துறைகளில் உள்ள விலைமதிப்பற்ற அனைத்தையும் அது பாதுகாக்கிறது.

நிலைமறுப்பு நிகழ்வுப் போக்கு முற்றிலும் கலப்பற்ற வடிவத்தில் நடைபெறுவதில்லை. பழையதிலுள்ள ஆக்க பூர்வமான அம்சங்கள் அனைத்தும் புதியதில் பாதுகாக் கப்படவில்லை; அதன் தீய அம்சங்களில் சில புதியதில் இடம்பெறுவதும் உண்டு. உதாரணமாக, புரட்சிக்குச் சிறிது காலத்துக்குப் பிறகு கூட காலனியாதிக்கத்தின் எச்சங்கள் பொருளாதாரத்திலும் மக்களில் ஒரு பகுதி யினருடைய மனங்களிலும் நீடிக்கின்றன. கடந்தகாலத்தைச் சேர்ந்த இக்கூறுகள் படிப்படியாகவே அகற்றப்படு கின்றன.

வளர்ச்சியின் முந்திய கட்டங்களில் தோன்றிய முற் போக்கான கூறுகளைப் பாதுகாப்பது தொடர்வளர்ச்சி யாக, புதுமைக்கும் பழமைக்கும் இணைப்பாக இருக்கிறது. காலாவதியானவற்றை அகற்றாமல் முற்போக்கான வளர்ச்சி இருக்க முடியாது என்பதைப் போலவே தொடர் வளர்ச்சி இல்லாமலும் அது சாத்தியமல்ல. மனிதகுல

வளர்ச்சியின் போது மனித உழைப்பு மற்றும் சிந்தனை யின் சாதனைகள் பாதுகாக்கப்பட்டுத் திரட்டப்படு கின்றன, ஆகவே வளர்ச்சியின் ஒவ்வொரு புதிய கட்டமும் முந்திய கட்டங்களைக் காட்டிலும் வளமிகுந்தும் அதிக மான அர்த்தத்துடனும் இருக்கிறது என்பதை மனித குலத்தின் வரலாறு எடுத்துக் காட்டுகிறது. ஒவ்வொரு புதிய தலைமுறையும் ஆதியிலிருந்து தொடங்க வேண்டி யிருந்தால் சமூக முன்னேற்றம் என்பது இயலாததாகும்.

இயக்கவியல் நிலைமறுப்பு காலாவதியானவற்றை அகற்றுவதையும் பழையதில் உள்ள ஆக்கபூர்வமான கூறு களைப் பாதுகாப்பதையும் கொண்டிருக்கிறது. புரட்சிகர மான மாற்றங்கள், குறிப்பாக சோஷலிஸ்ட் புரட்சியின் அவசியத்தை பூர்ஷ்வா சித்தாந்திகள், திருத்தல்வாதிகள், சீர்திருத்தவாதிகள் எதிர்ப்பது தத்துவ ரீதியில் தவறாக வும் அரசியல் ரீதியில் பிற்போக்கானதாகவும் இருப்பது இதனால்தான். பழையதின் கருப்பையிலே புதியது தோன்று கிறது என்ற உண்மையைப் பொறுத்தமட்டில், புதிய, சோஷலிஸ்ட் அமைப்பை நிறுவுவதற்கு பழைய, முத லாளித்துவ சமூகத்தை அகற்ற வேண்டும் என்பதை அவர் கள் வேண்டுமென்றே மறந்துவிடுகிறார்கள்.

புரட்சி என்பது தொடர்வளர்ச்சி இல்லாத நிலை மறுப்பு என்னும் இயக்க மறுப்பியலான, அராஜகவாதக் கருத்து இதே அளவுக்குத் தவறாக இருக்கிறது. பழைய பண்பாட்டை மொத்தமாகத் தூக்கியெறிய விரும்பிய சித் தாந்திகளை லெனின் கடுமையாக விமர்சனம் செய்தார். பாட்டாளி வர்க்கப் பண்பாடு பூர்ஷ்வா பண்பாட்டை மறுத்து இது உட்பட பழைய பண்பாட்டிலிருந்து பண்பு ரீதியில் தனித்திருந்த போதிலும் அது வேர்கள் இல்லாமல் தோன்றியதல்ல, அது மனிதகுலத்தின் கடந்தகால வளர்ச்சி யின் மிகச் சிறந்த சாதனைகளைச் சுவீகரித்துக் கொள்

கிறது என்று லெனின் விளக்கினார். கடந்தகாலத்தின் சித்தாந்தச் செல்வத்தைப் பற்றி சரியான அணுகுமுறைக்கு மார்க்சியம் ஒரு மாதிரிப் படிவம் என்று அவர் கூறினார். மார்க்சியம் கடந்தகாலத் தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், கற்பனாவாத சோஷலிசம் ஆகியவற்றை உறுதியாக நிலைமறுப்புச் செய்கின்ற பொழுதே அவற்றிலடங்கிய மெய்யான விஞ்ஞானக் கூறுகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. மார்க்சும் எங்கெல்சும் மனித குலத்தின் ஒன்றுதிரட்டப்பட்ட அறிவு என்னும் உறுதியான அடிப்படையின் மீது தம்முடைய விஞ்ஞான உலகக் கண்ணோட்டத்தை வளர்த்துக் கூறினார்கள்.

புதியவை எதுவுமே சீக்கிரமாகவோ, தாமதமாகவோ, முதுமையை அடைகின்றன, பின்னர் முதுமை அடைந்த எல்லாவற்றையும் போல அவை புதியதற்கு வழிவிட்டு மறைகின்றன, அதாவது ஒரு காலத்தில் நிலைமறுப்பாக இருந்த ஒன்று நிலைமறுப்பை அடைகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் வளர்ச்சியின் விதி நிலைமறுப்பை நிலைமறுப்புச் செய்வதாகும்; பழையவற்றுக்குப் பதிலாகப் புதியவை வருவதும் அவை இன்னும் புதியவற்றால் அகற்றப்படுவதுமாகும்.

நிலைமறுப்பு காலாவதியானவற்றை அகற்றுவது மட்டுமல்லாமல் ஆக்கபூர்வமானவற்றைப் பாதுகாத்துக் கொள்வதால் வளர்ச்சி முற்போக்கான நிகழ்வுப் போக்காகும்.

முற்போக்கான, ஏறுமுகமான வளர்ச்சி நேர்பாதையில் நடைபெறுவதில்லை. மொத்தத்தில் ஏறுமுகமான நிகழ்ச்சிப் போக்காக இருக்கின்ற வளர்ச்சி நிகழ்வில் தேக்கம் அல்லது தற்காலிகமான பின்னடைவுக் கட்டங்கள் கூட இருக்கும். சமூக வளர்ச்சியில் இத்தகைய பின்னடைவுகள் வழக்கமாக பழையதன் எதிர்ப்பு மற்றும் தற்

காலிகமான வெற்றிகளினால் ஏற்படுகின்றன. உதாரணமாக, புரட்சிகள் பிற்போக்கினால் முறியடிக்கப்படக் கூடும், பாசிசம் ஏதாவதொரு நாட்டில் வெற்றியடையக் கூடும், இதரவை. ஆனால் இத்தகைய பின்வாங்கல்கள் எப்பொழுதும் பகுதியளவாகவும் தற்காலிகமானவையாகவும் இருக்கின்றன; மொத்தத்தில் வளர்ச்சி முற்போக்கானதே. பழையவை வளர்ச்சி வேகத்தைக் குறைக்க முடியும், ஆனால் அதை நிறுத்த முடியாது, அல்லது அதன் உள்ளார்ந்த தன்மையை மாற்ற முடியாது. சமூக வாழ்க்கையில் கீழ்நிலையான, தொடக்க வடிவங்களிலிருந்து மேன்மேலும் உயர்ந்த வடிவங்களுக்கு வளர்ச்சியடைகின்ற மனிதகுலத்தின் மொத்த வரலாற்றிலும் இது நன்கு வெளிப்படுகிறது.

வளர்ச்சி நேர்கோட்டில் செல்லாததற்கு இன்னொரு காரணம் என்னவென்றால் பழைய, தொடக்கக் கட்டத்தின் சில இயல்புகள் திரும்பத் தோன்றுவதுதான். இத்தகைய மறு தோற்றம் பழையதன் முழுமையான திருப்பம் அல்ல; அது பழையதன் சில அம்சங்களை உயர்ந்த மட்டத்தில், புதிய அடிப்படையில் மட்டுமே திரும்ப உண்டாக்குகிறது.

நிலைமறுப்பின் நிலைமறுப்பு ''ஏற்கெனவே கடந்து செல்லப்பட்ட கட்டங்களைத் திரும்ப உண்டாக்குகிறது, ஆனால் அவற்றை வேறு வகையில் உயர்வான அடிப்படையில் திரும்ப நடத்துகின்ற வளர்ச்சி'' என்று லெனின் எழுதினார்*. உதாரணமாக, சமூக வாழ்க்கையில் வர்க்கங்கள் இல்லாத பூர்விக கூட்டு வாழ்க்கைச் சமூகம் உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமையை அடிப்படை

---

* வி.இ. லெனின், **கார்ல் மார்க்சும் அவரது போதனையும்**, பக்கம் 22.

யாகக் கொண்டிருந்தது. அதன் பிறகு, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி சமூக உடைமையின் நிலைமறுப்புக்கும் அதனிடத்தில் தனியுடைமை ஏற்படுவதற்கும் இட்டுச் சென்றது; இத்தனியுடைமை அடிமையுடைமை, நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவ சமூகங்களில் முழு ஆதிக்கம் செலுத்தியது. ஆனால் உற்பத்திச் சக்திகளின் கூடுதலான வளர்ச்சி கம்யூனிஸ்ட் சமூகத்துக்குக் கட்டாயமாக இட்டுச் செல்கிறது; அந்த சமூகத்தில் உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமை மறுபடியும் நிலைநாட்டப்படுகிறது. ஆகவே தொடக்கக் கட்டத்தின் குணாம்சங்கள் உயர்ந்த மட்டத்தில் திரும்ப ஏற்படுகின்றன.

ஆகவே வளர்ச்சி என்பது நேர்கோட்டு இயக்கமோ அல்லது பழையது முழுமையாகத் திரும்பத் தோன்றும் வட்ட இயக்கமோ அல்ல. முன்னோக்கிய இயக்கம், ஒப்பளவான மறுநிகழ்வு ஆகியவற்றின் இயக்கவியல் ஒற்றுமையே வளர்ச்சி. இது ஒரு வகையான சுருள்வட்டத்தில் முடிகிறது. இத்தகைய வளர்ச்சி இயற்கை, சமூகம், சிந்தனை ஆகிய யதார்த்தத்தின் எல்லாத் துறைகளிலும் நடைபெறுகிறது.

நிலைமறுப்பின் நிலைமறுப்பைப் பற்றிய விதி சர்வப் பொது விதி ஆகும். ஆனால் இயக்கவியலின் மற்ற விதிகளைப் போலவே இது வெவ்வேறு நிகழ்வுப் போக்குகள், பொருட்கள் ஆகியவற்றின் சிறப்புத்தன்மைகளுக்கும் அவற்றின் வளர்ச்சி நிலைமைகளுக்கும் ஏற்றவாறு எப்பொழுதும் செயல்படுகிறது. ''நிலைமறுப்பின் முறை நிர்ணயிக்கப்படுவது... முதலாவதாக நிகழ்வுப் போக்கின் பொது இயல்பாலும், இரண்டாவதாகச் சிறப்பு இயல்பாலுமே... எனவே ஒவ்வொரு வகைப் பொருட்களுக்கும், ஒவ்வொரு வகை எண்ணங்களுக்கும் கருதுகோள்களுக்கும் உள்ளதைப் போன்றே, அவற்றிற்குரிய வகையான நிலை

மறுப்பு நிலவுகிறது. எதனால் வளர்ச்சி உண்டாகிறதோ, அந்த வகையான நிலைமறுப்பே இது'' என்று எங்கெல்ஸ் எழுதினார்.*

சோஷலிசத்தின் கீழ் நிலைமறுப்பின் நிலைமறுப்பு எனும் விதி சில சிறப்புத் தன்மைகளைக் கொண்டிருக்கிறது. இவை உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமையைக் கொண்ட சோஷலிஸ்ட் அமைப்பின் புதிய இயல்பாலும் மக்களது சமூக அரசியல் மற்றும் சித்தாந்த ஒற்றுமையாலும் சமூக வளர்ச்சியின் புறநிலையான விதிகளைப் பற்றி இன்னும் சிறப்பான அறிவினாலும் நிர்ணயிக்கப்படுகின்றன. எனவேதான் இங்கே நிலைமறுப்பு பகைமை முரணியல்பான சமூகங்களில் உள்ள நிலைமறுப்புடன் ஒப்பிடுகையில் சாராம்சத்தில் வேறுவிதமாக இருக்கிறது.

எல்லாவற்றுக்கும் முதலாவதாக, சோஷலிசத்தின் கீழ் நிலைமறுப்பு சமூக வாழ்க்கையை அடிப்படையான முறையில் திருத்தியமைக்கின்ற சமூக அரசியல் புரட்சிகளின் வடிவத்தை அடைய முடியாது. சோஷலிஸ்ட் சமூகத்திலுள்ள முரண்பாடுகள் பகை முரணியல்பானவை அல்ல, அவற்றைத் தீர்ப்பதற்கு சமூக வாழ்க்கையை அடிப்படையாகத் திருத்தியமைப்பதும் அவசியமல்ல என்பது இதற்குக் காரணமாகும். இங்கே நிலைமறுக்கப்படுபவை சமூக அமைப்பின் அடிப்படைகள் அல்ல, சமூகக் கட்டமைப்பில் பழையனவாகிவிட்ட சில அம்சங்களும் காலாவதியாகி விட்ட நிகழ்வுகளும் கடக்கப்பட்ட வளர்ச்சிக் கட்டங்களுமே.

சோஷலிசத்தின் அடிப்படைகள் நிர்மாணிக்கப்பட்டு, பகை முரணியல்பான வர்க்கங்கள் அகற்றப்பட்டு எதிர்ப்புரட்சிச் சக்திகள் மறைந்து நிலைமறுப்பு பகை முரணி

---

* Frederick Engels, *Anti-Dühring*, p. 169.

யல்பு அல்லாத முரண்பாடுகளைத் தீர்ப்பதற்குப் பயன் படுகிறது. இத்தீர்வு இனியும் வர்க்கப் போராட்டங்களின் வடிவத்தை அடைவதில்லை, மார்க்சிய-லெனினியக் கட்சி யினாலும் அரசினாலும் வழிநடத்தப்படுகின்ற மக்களின் அமைப்பு ரீதியான முயற்சிகளின் வடிவத்தில் செயல் படுகிறது. இங்கும் கூட, பழையதன் இடத்திற்குப் புதியது போராட்டத்தின் மூலமாகத்தான் வருகிறது. ஆனால் சோஷலிசத்தின் கீழ் மக்களின் பெரும் பகுதியினர் புதிய தற்கு ஆதரவாகச் செயல்படுகிறார்கள்.

சோஷலிசத்தின் கீழ் நிலைமறுப்புக்கள் திட்டமிட்ட வகையில், உணர்வு பூர்வமான முறையில் நிறைவேறு கின்றன. அவை புறநிலையாகத் தோன்றி முதிர்ச்சி அடை வதால் இன்னும் புறநிலையாகவே இருக்கின்றன; ஆனால் கடந்தகாலத்தைப் போன்று தன்னிச்சையாகவே நிறை வேறுவதில்லை, சமூக வளர்ச்சியின் விதிகளின் அடிப் படையில் மக்களின் உணர்வு பூர்வமான நடவடிக்கைகளால் நிறைவேற்றப்படுகின்றன.

சோஷலிசத்தின் கீழ் பெரிய அளவில் நிலைமறுப்புக் கள் படிப்படியாக, தொடர்வரிசையான இடைநிலைக் கட்டங்களின் மூலமாக—பல சிறு அளவான நிலைமறுப்புக் கள் ஒன்று சேர்வதால்—நடைபெறுகின்றன. சோஷ லிச நிர்மாணத்திலிருந்து வளர்ச்சியடைந்த சோஷலிசத் துக்கும் அதிலிருந்து கம்யூனிசத்துக்கும் மாறுவது பேரள விலான, படிப்படியான நிலைமறுப்பாகும். வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் சிறு அளவிலான நிலைமறுப்புக் களை உள்ளடக்கிக் கொண்டு அது மொத்த சமூகத்தை யும் தழுவி நிற்கிறது.

சோஷலிஸ்ட் சமூகத்தின் நிலைமைகளில் வளர்ச்சி யின் மொத்த இயல்பு சில சிறப்புக் கூறுகளை அடை கிறது. அங்கே ஒரு புது வகையான சமூக முன்னேற்றம்

நடைபெறுகிறது. அது பகைமை முரணியல்பு இல்லாதது, திட்டமிட்ட வகையைச் சேர்ந்தது, புறநிலையான பொருளாதார விதிகளை உணர்வு பூர்வமாக உபயோகிப்பதையும் சமூக நடவடிக்கையின் விளைவுகளை முன்னறிதலையும் அடிப்படையாகக் கொண்டது. சோஷலிசத்தின் கீழ் முன்னேற்றம் வேகமானதாகவும் இடைநிறுத்தம் இல்லாததாகவும் எல்லையற்றதாகவும் இருக்கிறது. இந்த சமூகம் வளர்ச்சியடைகின்ற பொழுது தன்னுடைய சொந்த அடிப்படையிலேயே மேன்மேலும் செம்மை அடைகிறது.

ஆகவே நிலைமறுப்பின் நிலைமறுப்பைப் பற்றிய விதி வளர்ச்சியின் தொடர்வரிசையான கட்டங்களின் இடைத் தொடர்பையும் அதன் பொதுத் திசையையும் வெளியிடுகிறது. புதியவை நிச்சயமாக வெற்றி பெறும், ஆனால் காலாவதியானவற்றுக்கு எதிராக உறுதியான போராட்டம் இல்லாமல் சமூக வாழ்க்கையில் முன்னேற்றம் சாத்தியமல்ல என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

முன்னேற்றத்துக்குத் துணை புரிகின்ற விலை மிக்கவை அனைத்தையும் பாதுகாக்கவும் பயன்படுத்தவும், கடந்த கால பாரம்பரியத்தின் ஆக்கபூர்வமான அம்சங்களை விமர்சன ரீதியான, படைப்பு உணர்ச்சியில் மறுமதிப்பீடு செய்யவும், காலாவதியான வடிவங்களின் நிலைமறுப்பைத் தாமதப்படுத்தாதிருக்கவும் புதியவற்றுக்காக உறுதியான போராட்டத்தை நடத்துவதற்கும் இந்த விதி கற்பிக்கிறது.

சமூக இயக்கத்தின் முன்னோக்கும் தன்மையும் புதியதன் வெல்ல முடியாமையும் உழைக்கும் மக்களுக்கு உத்வேகமூட்டுகின்றன; தங்களுடைய புரட்சிகரமான போராட்டம் வெற்றி அடையும், ஜனநாயகம், சோஷலிசம், கம்யூனிசம் தவிர்க்க முடியாத விதத்தில் வெற்றி அடையும் என்னும் நம்பிக்கையையும் உறுதியையும் அவர்களுக்குத் தருகின்றன.

அத்தியாயம் எட்டு

பொருள்முதல்வாத இயக்கவியலின் கருத்தினங்கள்

பொருள்முதல்வாத இயக்கவியல் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற யதார்த்தத்தின் ஆகப் பொதுப்படையான மற்றும் முக்கியமான தொடர்புகளை எடுத்துரைக்கின்ற கோட்பாடுகள், விதிகள் மட்டுமல்ல; அது தத்துவஞான கருத்தினங்களில் எடுத்துரைக்கப்படுகின்ற பொருளாயத உலகம் மற்றும் அறிதலின் வளர்ச்சியின் அவசியமான தொடர்புகளையும் அம்சங்களையும் கூட ஆராய்கிறது.

கருத்தினங்கள் எந்தவொரு விஞ்ஞானத்துக்கும் அடிப்படையான கருதுகோள்களாகும். உதாரணமாக, பொருண்மை, சக்தி, மின்னேற்றம் போன்றவை பௌதிக கருத்தினங்களாகும்; உற்பத்தி உறவுகள், பண்டம், மதிப்பு போன்றவை அரசியல் பொருளாதாரத்தின் கருத்தினங்களாகும், இதரவை. தத்துவஞான கருத்தினங்கள் ஆகப் பொதுப்படையான கருதுகோள்களாக இருப்பது அவற்றின் சிறப்பான அம்சமாகும். அவற்றின் உறவுப் பொருத்தம் நிகழ்வுகளின் வெவ்வேறு அம்சங்களுக்கு இடையில் பொதுவான இயக்கவியல் நியதிகளையும் நிலையான தொடர்புகளையும் வெளியிடுகிறது. இத்தொடர்புகளுக்கும் இயக்கவியலின் பிரதான, அடிப்படை விதிகளில் வெளியிடப்படுகின்ற தொடர்புகளுக்கும் அதிகமான வேறு

பாடு கிடையாது; ஆகவே சில சமயங்களில் இவை இயக்கவியலின் அடிப்படை அல்லாத விதிகள் என்றும் சொல்லப்படுகின்றன.

தனியானதும் சிறப்பானதும் பொதுவானதும்

பொருட்கள், நிகழ்வுகளின் பண்பு வரையறுப்பைப் பரிசீலனை செய்த பொழுது அவை ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடுகின்றன என்பதை நாம் கண்டோம். உலகத்தில் முற்றிலும் ஒரே மாதிரியான பொருட்கள் கிடையா; பூமியில் வாழ்கின்ற பல கோடிக்கணக்கான மக்களுக்கு இடையில் ஒரே மாதிரியான இரண்டு விரல் அடையாளங்கள் கூடக் கிடையாது. மற்ற எல்லாப் பொருட்களிலிருந்தும் ஒரு பொருளை வேறுபடுத்திக் காட்டுகின்ற தனித்தன்மையான கூறுகளின் தொகுப்பு தனியானது எனப்படுகிறது. உதாரணமாக, இம்மாதிரியான அம்சங்களின் அடிப்படையில்தான் ஆயிரக்கணக்கான மக்களுக்கு மத்தியில் நமக்கு அறிமுகமான ஒருவரை வேறுபடுத்திக் கண்டுகொள்ள முடிகிறது.

ஆனால் பல்விதமான பொருட்கள் தனித்தன்மையும் வேற்றுமையும் மட்டும் கொண்டிருக்கவில்லை. அவை தமக்கிடையில் சில அம்சங்களில் ஒற்றுமையும் கொண்டிருக்கின்றன. பொதுவான அம்சம் எதுவுமே இல்லாத பொருட்களே கிடையா. முதல் பார்வைக்குப் பொதுவான அம்சங்கள் எவையும் இல்லாதவை போலத் தோன்றும் பொருட்கள் கூடச் சில முக்கியமான இயல்புகளிலும் பண்புகளிலும் ஒற்றுமையைக் கொண்டிருக்கின்றன என்பது கூர்மையாகப் பார்க்கும் பொழுது தெரிகிறது. உதாரணமாக, மக்கள் ஒருவருக்கொருவர் வேறுபடுகிறார்கள்;

ஆனால் அவர்கள் எல்லோரும் மனிதர்கள் எனக் காட்டுகின்ற பல கூறுகள் அவர்களிடம் இருக்கின்றன. ஒரு மனிதன் பூமியில் ஏராளமான பல மனிதர்களுடன் சேர்ந்து வசிக்கிறான். ஆயிரக்கணக்கிலுள்ள பல்வேறு இணைப்புக்களும் ஒற்றுமைகளும் அவனை அவர்களுடன் பிணைக்கின்றன. ஒரு மனிதனின் உடலமைப்பு மற்றவர்களைப் போன்றுதான் இருக்கிறது. மற்ற மனிதர்களைப்போலவே அவனும் உணர்கிறான், சிந்திக்கிறான், பேசுகிறான், உழைக்கிறான். அவன் குறிப்பிட்ட இனத்தையும் நாட்டையும் சேர்ந்தவன், அதற்குரிய தனி அம்சங்களையும் பெற்றிருக்கிறான். அவன் ஒரு குறிப்பிட்ட வர்க்கம் அல்லது சமூகப் பிரிவைச் சேர்ந்தவன், எனவே அதற்குரிய தனிக் கூறுகளையும் பிரதிபலிக்கிறான், இதரவை.

அநேகப் பொருட்களுக்கு உரிய ஒத்த, ஒரே மாதிரியான, திரும்பத் திரும்ப நிகழும் அம்சங்கள் பொதுவானவை என்று சொல்லப்படுகின்றன.

பொருட்களின் பொதுவான இயல்புகள் அல்லது அம்சங்கள் எப்பொழுதுமே முதல் பார்வைக்குத் தெரிவதில்லை என்பதை மேற்கூறிய உதாரணம் எடுத்துக் காட்டுகிறது. இப்பொதுவான இயல்புகள் ஒரே மாதிரியான தோற்றம், ஒரே மாதிரியான வளர்ச்சி விதிகள் மற்றும் இதரவற்றிலிருந்து பிறக்கலாம்.

அதே சமயத்தில் பொதுத்தன்மையின் அளவு வேறுபட்டிருக்க முடியும். உதாரணமாக, மரமாக இருக்கும் இயல்பு மாமரமாக அல்லது பனைமரமாக இருக்கின்ற இயல்புடன் ஒப்பிடுகையில் அதிகப் பொதுவானதாகும். ஆனால் ஒரு தாவரமாக இருக்கின்ற இயல்புடன் ஒப்பிடுகையில் அது குறைவான அளவில் பொதுவானதாக இருக்கிறது. அதிகப் பொதுவான இயல்புடன் ஒப்பிடுகின்ற பொழுது குறைவான பொது இயல்பு சிறப்பானது என்று

சொல்லப்படுகிறது. இந்த உதாரணத்தில் மரம் என்பது ஒரு சிறப்பான தாவரம் ஆகும்.

விதிவிலக்கில்லாமல் எல்லா நிகழ்வுகளுக்கும் உரிய இயல்புகளும் அம்சங்களும் சர்வப்பொதுவானவை அல்லது மிக மிகப் பொதுவானவை என்று சொல்லப்படுகின்றன. பொருட்கள், நிகழ்வுகளின் வளர்ச்சியின் சர்வப்பொது வான அம்சங்களும் அவை நிலவுகின்ற வடிவங்களும் இயக் கவியலால் ஆராயப்படுகின்றன, இயக்கவியலின் விதி களிலும் கருத்தினங்களிலும் அவை பிரதிபலிக்கின்றன.

தனியானதும் பொதுவானதும் பரஸ்பரத் தொடர்பு கொண்டிருக்கின்றன என்பதிலிருந்து பொருள்முதல்வாத இயக்கவியல் தொடங்குகிறது. ''...தனியானது பொது வானதற்கு இட்டுச் செல்லும் தொடர்பில் அன்றி வேறு விதமாக நிலவுவதில்லை. பொதுவானது தனியானதில், தனியானதன் மூலமாக மட்டுமே நிலவுகிறது. எந்தத் தனியானதும் (ஒரு அல்லது மறு வகையில்) பொதுவானது ஆகும். எந்தப் பொதுவானதும் தனியானதன் (பகுதி, அம்சம் அல்லது சாராம்சம்) ஆகும். எந்தப் பொதுவான தும் எல்லாத் தனிப் பொருட்களையும் கிட்டத்தட்ட மட்டுமே கொண்டிருக்கிறது எந்தத் தனியானதும் பொது வானதில் அரைகுறையாகத்தான் சேர்கிறது, இதரவை, இதரவை'' என்று லெனின் எழுதினார்.*

பொதுவானதையும் தனியானதுடன் அதன் பரஸ்பரத் தொடர்பையும் பற்றி இயக்கவியல் பொருள்முதல்வாத ரீதியில் புரிந்து கொள்வது யதார்த்தத்தைச் சரியாக அறிந்து கொள்வதற்கு அவசியமானது. பொதுவானது பொருட்களின் சாராம்சத்தில் வேரூன்றியிருக்கிறது; அவற் றின் உள் ஒருமையின் வெளியீடு அது. எனவே பொருட்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 38, p. 359.

கள், நிகழ்வுகளின் சாராம்சத்தையும் அவற்றின் வளர்ச்சி விதிகளையும் புரிந்து கொள்வதற்குரிய வழி பொது வானதைப் புரிந்து கொள்வதில் அடங்கியிருக்கிறது. பொது வானது தனியானதின் மூலமாக மட்டுமே அறியப்படும். மனிதன் முதலில் புலனுணர்ச்சி உறுப்புக்களின் உதவியால் தனியான, பிரத்யேகமான நிகழ்வுகளையும் அவற்றின் வெவ்வேறு இயல்புகளையும் புரிந்து கொள்கிறான்; பிறகு சிந்தனை புலனறிவு விவரங்களைப் பகுத்தாய்கிறது, முக் கியமானவற்றை முக்கியம் அற்றவற்றிலிருந்தும் பொது வானதைத் தனியானதிலிருந்தும் பிரிக்கிறது. பிறகு ஒரு வகுப்பைச் சேர்ந்த நிகழ்வுகளின் பொதுவான, முக்கிய மான அம்சங்களை ஒன்றிணைத்தும் தொகுத்தும் இந்த நிகழ்வுகளைப் பற்றிய கருதுகோளை உருவாக்குகிறது. நிகழ்வுகளின் ஒரு குறித்த வகுப்புக்கு இயல்பான பொது மையும் அதே சமயத்தில் முக்கியத்துவமும் வாய்ந்த அம் சங்களைக் கருதுகோள் வெளியிடுகிறது. மொத்தத்தில் அறிதல் செயல்முறை தனியானதிலிருந்து சிறப்பானதன் வாயிலாகப் பொதுவானதற்கும் சர்வப்பொதுவானதற் கும் செல்கிறது.

தனியானது, பொதுவானது என்னும் கருத்தினங்கள் புதியன தோன்றுகின்ற நிகழ்வுப் போக்கைப் புரிந்து கொள்வதற்கும் உதவுகின்றன. இயற்கையிலும் சமூகத் திலும் புதியது பெரும்பாலும் உடனடியாகத் தோன்றி விடுவதில்லை என்பது முக்கியமாகும். முதலில் அது தனி யானதாகத் தோன்றுகிறது, பின்பு உறுதிப்பட்டுத் துலக் கமாக உருவாகி, சிறப்பானது ஆகிறது, அப்புறம் பொது வானது அல்லது சர்வப்பொதுவானது கூட ஆகிவிடுகிறது. சோஷலிஸ்ட் போட்டியைப் போன்ற புதிய முன்முயற்சி கள், இயக்கங்கள் அனைத்தும் இப்படித்தான் தோன்று கின்றன. புரட்சிகர உணர்வு இப்படித்தான் தோன்றி

வலுப்படுகிறது. சோஷலிஸ்ட் சமூக அமைப்பு முதலில் ஒரு நாட்டில் உருவாகத் தொடங்கியது; இப்பொழுது பெரிய குழுவாகிய பல நாடுகளுக்குப் பரவியுள்ளது. அவை உலக சோஷலிஸ்ட் அமைப்பு என்று சொல்லப்படுகின்றன. உலக முழுவதிலும் சோஷலிசத்தின் தவிர்க்க முடியாத வெற்றியின் விளைவாக அது சர்வப்பொதுவானதாகிவிடும்.

பொதுவானதற்கும் தனியானதற்கும் இடையிலுள்ள பரஸ்பரத் தொடர்பைப் பற்றிய பிரச்சினைக்குத் தவறான தீர்வு காண்பது ஆபத்தான தத்துவ மற்றும் அரசியல் தவறுகளை நோக்கி இட்டுச் செல்லும். உதாரணமாக, பொதுவானது சிறப்பானதிலும் தனியானதிலும் நிலவுகிறது, எனவே நிகழ்வின் வளர்ச்சிக்கு உரிய நிலைமைகளையும் ஸ்தூலமான நிலைமை மற்றும் சிறப்புத் தன்மைகளையும் பொறுத்து எப்பொழுதும் ஸ்தூலமான வடிவத்தில் தோற்றமளிக்கிறது என்பதை வறட்டுச் சூத்திரவாதிகள் புரிந்து கொள்ளத் தவறுகிறார்கள். அவர்கள் தனியானதன் சிறப்புத் தன்மைகளைப் புறக்கணித்து, நிலைமைகள் மற்றும் சந்தர்ப்பங்களின் மாறுதல்களைப் பற்றி அக்கறையின்றி பொதுவானதைக் கையாள்வதற்குப் பிரதான முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்கள் புதிய சந்தர்ப்பங்களைத் தேவையான அளவுக்கு ஆராயாது பொதுச் சூத்திரங்களைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள்; ஆகவே வாழ்க்கையுடனும் பெருந்திரளான மக்களுடனும் தொடர்பை இழந்துவிடுகிறார்கள்.

பொதுவானதன் பாத்திரத்தை மறுப்பதும் சிறப்பானது, தனியானது ஆகியவற்றின் பாத்திரத்தை மிகைப்படுத்துவதும் அதே அளவுக்கு ஆபத்தான தவறாகும். இத்தவறு வலதுசாரித் திருத்தல்வாதத்தின் தத்துவ ரீதியான தோற்றுவாய்களில் ஒன்றாகும். உதாரணமாக, திருத்தல்வாதிகள் எல்லா நாடுகளுக்கும் பொதுவான

சோஷலிஸ்ட் புரட்சியின் நியதிகள் நிலவுவதை மறைப்பதற்கும் அல்லது நேரடியாக மறுப்பதற்கும் தனித்தனி நாடுகளின் சிறப்புக்களை மிகைப்படுத்துவதற்கும் முயற்சி செய்கிறார்கள். சோஷலிஸ்ட் புரட்சியின் பொதுவான நியதிகள் அதிகமான முக்கியத்துவம் வாய்ந்தவை, ஆகவே அவற்றின் நிறைவேற்றம் கட்டாயமானது என்று மார்க்சிய-லெனினியம் கருதுகிறது. அதே சமயத்தில் ஒவ்வொரு நாட்டிலும் அதன் ஸ்தூலமான வரலாற்று நிலைமைகளைப் பொறுத்து இந்த நியதிகள் வெளிப்படுகின்ற சிறப்புத் தன்மைகளைப் பகுத்தாராய்ந்து உரிய முறையில் மதிப்பீடு செய்ய வேண்டுமென்றும் மார்க்சிய-லெனினியம் கோருகிறது.

உள்ளடக்கம், வடிவம் என்னும் கருத்தினங்கள் ஒரு பொருள் அல்லது நிகழ்வின் சாராம்சத்தைப் புரிந்து கொள்வதற்கு உதவுகின்றன.

உள்ளடக்கமும் வடிவமும்

எல்லாப் பொருட்களும் நிகழ்வுகளும் தமக்குரிய உள்ளடக்கத்தையும் வடிவத்தையும் கொண்டிருக்கின்றன.

உள்ளடக்கம் என்பது ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது நிகழ்வின் இருத்தலுக்கு ஆதாரமான, அதன் வடிவங்களின் வளர்ச்சியையும் மாற்றத்தையும் நிர்ணயிக்கும் கூறுகள், அம்சங்கள், நிகழ்வுப் போக்குகள் மற்றும் அவற்றின் உறவுகளின் மொத்தம் ஆகும். வடிவம் என்பது உள்ளடக்கத்தின் அமைப்பு முறை, அது நிலவுகின்ற சாதனம்; ஒரு குறிப்பிட்ட உள்ளடக்கத்தின் கூறுகள், அம்சங்கள் மற்றும் நிகழ்வுப் போக்குகளின் பிரத்யேக உள் தொடர்பு; வெளிப்புற நிலைமைகளுடன் இடைச் செயலில் இது உள்ளடக்கத்தின் முழுமையை வகை செய்யும்.

உள்ளடக்கமும் வடிவமும் ஒரு பொருள் அல்லது நிகழ்வின் பிரிக்க முடியாத இரண்டு பகுதிகளாகும். உலகத்தில் வடிவமோ, உள்ளடக்கமோ இல்லாத எதுவுமே கிடையாது. உதாரணமாக, ஒவ்வொரு அங்கஜீவியும் குறிப்பிட்ட கூறுகளை (உயிரணுக்கள், உறுப்புக்கள், பகுதிகள்) மற்றும் நிகழ்வுப் போக்குகளை (வளர்சிதை மாற்றம், வகைமாற்றம், இதரவை) கொண்டிருக்கிறது. இவை அதன் உள்ளடக்கமாகும். அந்த உள்ளடக்கம் இருத்தலை சாத்தியமாக்குகின்ற மேற்கூறிய கூறுகள், நிகழ்வுப் போக்குகளின் தொடர்பு மற்றும் அமைப்பு முறை அதன் வடிவம் என்று சொல்லப்படுகிறது. ''வடிவமும் உள்ளடக்கமும் முற்றொருமையானவை அல்லது பிரிக்கப்பட முடியாதவை என்பதற்கு உயிருள்ள மொத்த இயற்கையும் நிரந்தரமான சான்றாகும்'' என்று எங்கெல்ஸ் எழுதினார்.*

எல்லா சமூக நிகழ்வுப் போக்குகளிலும் புலப்பாடுகளிலும் உள்ளடக்கம் மற்றும் வடிவத்தின் அங்கக ரீதியான ஒற்றுமையைப் பார்க்கிறோம். உதாரணமாக, உற்பத்திச் சக்திகள் உற்பத்தி முறையின் உள்ளடக்கமாகவும் உற்பத்தி உறவுகள் அதன் வடிவமாகவும் இருக்கின்றன. நம் சகாப்தத்தின் உள்ளடக்கம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுவதாகும். அந்த மாற்றம் பல்வேறு வடிவங்களில், மார்க்சிய-லெனினியக் கட்சிகளால் வழிநடத்திச் செல்லப்படுகின்ற தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார, அரசியல், சித்தாந்தப் போராட்டத்தில், சமூகத்தின் ஜனநாயக சக்திகள் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பையும் எதிர்ப்புரட்சியின் ஏற்றுமதியையும் எதிர்த்து நடத்துகின்ற போராட்டத்தில், உலக சமாதானம், ஜன

---

* Frederick Engels, *Dialectics of Nature*, p. 305.

நாயகம் மற்றும் சோஷலிசத்துக்கு ஆதரவான போராட்டத்தில் நிறைவேறுகிறது.

இலக்கிய மற்றும் கலைத் துறைகளில் கலைப் படைப்புக்களில் பிரதிபலிக்கப்படுகின்ற வாழ்க்கை உள்ளடக்கமாகும்; இப்படைப்புக்களை அமைக்கின்ற, வெளியிடுகின்ற முறை வடிவமாகும். உதாரணமாக, மொழி, புனைவு, நடை, இதரவை ஒரு இலக்கியப் படைப்பின் வடிவம் ஆகும்.

ஏதாவதொரு பொருள் மற்றும் நிகழ்வுப் போக்கின் உள்ளடக்கத்துக்கு வெளிப்புற மற்றும் உட்புற வடிவங்கள் இருக்கின்றன. பரிமாணம், உருவம், நிறம் மற்றும் இதரவை வெளிப்புற வடிவம் ஆகும்; அந்த உள்ளடக்கத்தின் அமைப்பு உட்புற வடிவம் ஆகும்.

வெளிப்புற வடிவம் உள்ளடக்கத்துடன் உட்புற வடிவத்தைப் போல நெருக்கமாக இணைந்திருக்கவில்லை. உள்ளடக்கத்தில் எத்தகைய மாற்றமும் இன்றி வெளிப்புற வடிவத்தில் கணிசமான மாற்றங்களைச் செய்ய முடியும். உதாரணமாக, மார்க்ஸ் எழுதிய மாபெரும் நூலாகிய மூலதனத்தை வெவ்வேறு அளவுகளைக் கொண்ட நான்கு பகுதிகளாக அல்லது பத்து பகுதிகளாக வெளியிட முடியும்; வெவ்வேறு ரகத்தைச் சேர்ந்த காகிதங்களில் அதை வெவ்வேறு விதமாகத் தயாரித்துப் பிரசுரிக்க முடியும். குறிப்பிட்ட எல்லை வரை வெளிப்புற வடிவம் புத்தகத்தின் உள்ளடக்கத்தைக் கணிசமான அளவுக்கு பாதிக்காது. ஆனால் வேறு சில உதாரணங்களில் (விமானம் அல்லது கப்பல்) வெளிப்புற வடிவத்தில் விருப்பம் போன்ற மாற்றங்களைச் செய்ய முடியாது; எனென்றால் அது உள்ளடக்கத்திலும் கணிசமான மாற்றங்களைச் செய்யும். இந்த உதாரணங்களில் வெளிப்புற வடிவம் உள்ள

டக்கத்துடன் நேரடியாக இணைகின்ற அளவுக்கு தொழில் நுட்பப் பொருத்தத்தைக் கொண்டிருக்கிறது.

உட்புற வடிவம் உள்ளடக்கத்துடன் இன்னும் அதிக நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கிறது. அதில் செய்யப் படுகின்ற மாற்றங்கள் எல்லாம் உள்ளடக்கத்தில் ஏதாவ தொரு வழியில் பிரதிபலிக்கின்றன. உதாரணமாக, ஒரு நூலின் நடை அல்லது புனைவில் செய்யப்படுகின்ற மாற் றம் தவிர்க்க முடியாத வகையில் அதன் உள்ளடக்கத்தைப் பாதிக்கிறது. அப்பொழுது வாசகரிடம் அது ஏற்படுத்து கின்ற தாக்கம் வேறுவிதமாகவே இருக்கும். கலையில் உள்ளடக்கம் மற்றும் வடிவத்தின் ஒற்றுமை முக்கியமான விதியாகவும் அதன் வெற்றியின் அடிப்படையாகவும் இருக்கிறது.

உள்ளடக்கத்துக்கும் வடிவத்துக்கும் இடையில் ஒற்று மை, பிரிக்க முடியாத இணைப்பு மற்றும் பரஸ்பரத் தொடர்பு சர்வப்பொதுவான நியதி ஆகும். இத்தகைய ஒற்றுமை பின்வரும் காரணங்களினால் ஏற்படுகிறது. முத லாவதாக, ஒன்று இல்லாமல் அடுத்தது இருக்க முடியாது; உள்ளடக்கம் எப்பொழுதுமே வடிவத்தில் உறைந்திருக் கிறது, வடிவம் உள்ளடக்கத்தை மூடுகிறது. இரண்டாவ தாக, உள்ளடக்கம் திட்டவட்டமான ஒரு வடிவத்தில் தான் இருக்க முடியும், ஸ்தூலமான வடிவம் எப்பொழு தும் தனிவகையான உள்ளடக்கத்துடன் பொருந்தியிருக் கிறது.

அதே சமயத்தில் உள்ளடக்கம் மற்றும் வடிவத்தின் ஒற்றுமை மாற்றத்துக்கு உட்படாதது அல்ல, நிரந்தர மானதுமல்ல. அது மாறக் கூடியது, இயக்கவியல் ரீதியில் முரண்பாடானது. பொருட்களில் உள்ளடக்கமும் வடி வமும் எப்பொழுதும் வளர்ச்சியின் எதிர்நிலையான அம் சங்களாக அல்லது கூறுகளாகத் தம்மை வெளிப்படுத்து

கின்றன. எந்தப் பொருளும் சர்வப்பொதுவான இடைச் செயலில் இருக்கின்றபடியால் அதன் உள்ளடக்கம் தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருக்கிறது. ஆனால் இதற்கு மாறாக ஒரு பொருளின் வாழ்நிலையின் வடிவம் அதன் சுய பாதுகாப்பு, ஸ்திர நிலைமைப் போக்கை எடுத்துரைக்கிறது. வடிவத்தின் தொடர்புகளும் உறவுகளும், அதன் கூறுகள் அமைக்கப்பட்டிருக்கின்ற முறையும் உள்ளடக்கமாக இருக்கின்ற அம்சங்கள், நிகழ்வுப் போக்குகளைப் போல வேகமாக மாற முடியாது.

வடிவம் உள்ளடக்கத்தின் தாக்கத்தில் தோன்றுகிறது, மாறுகிறது; எனினும் அதன் மாற்றம் உள்ளடக்கத்தின் மாற்றத்துக்கு ஓரளவு தாமதமாகவே நடைபெறுகிறது. அதுதான் உள்ளடக்கத்துக்கும் வடிவத்துக்கும் இடையிலுள்ள போராட்டத்துக்குக் காரணம்.

இவற்றுக்கு இடையிலுள்ள முரண்பாட்டின் வளர்ச்சியும் தீர்வும் பொருட்களின் வளர்ச்சியில் முக்கியமான தோற்றுவாய்களில் ஒன்றாக, வடிவத்தின் மாற்றம் மற்றும் அவற்றின் உள்ளடக்கத்தின் மாற்றத்தின் முக்கிய காரணமாக இருக்கிறது. உள்ளடக்கம் மற்றும் வடிவத்தின் இந்த இயக்கவியல் அம்சத்தைப் பற்றி லெனின் பின்வருமாறு எழுதினார்: ''உள்ளடக்கம் வடிவத்துடன் நடத்துகின்ற போராட்டம் மற்றும் அதன் மறுதலை. வடிவம் தூக்கியெறியப்படுதல், உள்ளடக்கம் மாறுதல்.''*

பொருட்களில் மாற்றங்கள் அவற்றின் உள்ளடக்கத்தில் மாற்றங்களுடன் தொடங்குகின்றன, அவை முடிவில் அவற்றின் வடிவத்தின் வளர்ச்சியை நிர்ணயிக்கின்றன. அதனால்தான் உள்ளடக்கம் மற்றும் வடிவத்தின் இயக்கவியல் ஒற்றுமையில் உள்ளடக்கம் தீர்மானகரமான பாத்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 38, p. 222.

திரத்தை வகிக்கிறது. ஆனால் வடிவம் உள்ளடக்கத்தைச் சார்ந்திருப்பதைத் தனிமுதலாக்கக் கூடாது. ஏனென்றால் வடிவம் ஒப்பளவான சுதந்திரத்தைக் கொண்டிருக்கிறது.

பொருட்களின் பல்விதமான அம்சங்களை உள்ளடக்கம், வடிவம் என்று பிரித்தலும் தனிமுதலானதல்ல. ஒரு வகையில் உள்ளடக்கமாக இருப்பது மற்றொரு வகையில் வடிவமாக வெளிப்படுகிறது; உதாரணமாக, உற்பத்தி முறையில் உற்பத்தி உறவுகள் வடிவமாகவும் உற்பத்திச் சக்திகள் அதன் உள்ளடக்கமாகவும் இருக்கின்றன. அதே சமயத்தில் உற்பத்தி உறவுகள் சமூக பொருளாதார அமைப்பின் அடிப்படையாக இருக்கின்றன; இந்த வகையில் அவை உள்ளடக்கமாக உள்ளன.

வடிவத்தை சார்பு நிலையாக்குவது என்னவென்றால் அது முடிவில் உள்ளடக்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட போதிலும் அது தனக்கே உரிய வளர்ச்சி விதிகளைக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, சமூக உணர்வு மனிதனுடைய சமூக வாழ்நிலையின் வடிவமாகும். ஆனால் அது சமூக வாழ்நிலையின் வளர்ச்சி விதிகளால் ஆளப்பட்ட போதிலும் அதே சமயத்தில் அதற்கே உரிய பிரத்யேகமான வளர்ச்சி விதிகளைக் கொண்டிருக்கிறது: மரபுத் தொடர்ச்சி, சமநிலை இன்மை, மரபுகளின் தாக்கம் மற்றும் இதரவை. அதன் விளைவாக வடிவம் மற்றும் உள்ளடக்கத்தின் வளர்ச்சி ஒரே சமயத்தில் நடைபெறவில்லை; அவற்றுக்கு இடையில் முரண்பாடு இயற்கையாகவே தோன்றுகிறது.

வடிவத்துக்கும் உள்ளடக்கத்துக்கும் ஏற்படுகின்ற முரண்பாடான இடைச் செயல் வளர்ச்சிப் போக்கின் போது புதிய உள்ளடக்கம் குறிப்பிட்ட காலத்திற்குப் பழைய வடிவத்தைக் கொண்டிருக்க முடியும் என்பதில் பிரதானமாக வெளிப்படுகிறது. உதாரணமாக, பல நாடு

களில் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளுக்குப் பதிலாக சோஷலிஸ்ட் உற்பத்தி உறவுகள் ஏற்பட்ட பொழுது பழைய வடிவங்கள்—பணச் செலாவணி முறை, வங்கிகள், பண்ட உற்பத்தி, இதரவை—நீடித்து நிலவின.

ஒரே உள்ளடக்கம் பல்விதமான வடிவங்களை அடைய முடியும் என்பதிலும் வடிவம் மற்றும் உள்ளடக்கத்தின் இயக்கவியல் வெளிப்படுகிறது. உதாரணமாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பாரிஸ் கம்யூன், சோவியத் ஆட்சியதிகாரம், மக்கள் ஜனநாயகம் மற்றும் இதர வடிவங்களை அடைந்திருக்கிறது.

வடிவம் மற்றும் உள்ளடக்கத்தின் இயக்கவியலின் மற்றொரு வெளிப்பாடு என்னவென்றால் அவற்றுக்கு இடையிலுள்ள முரண்பாடு தவிர்க்க முடியாதபடி தீவிரமடைகிறது, மேலும் சில நிலைமைகளில் மோதல் கட்டத்தை அடைகிறது என்பதாகும். அந்த நிலையில் பழைய வடிவத்துக்குப் பதிலாகப் புதிய வடிவம் ஏற்பட்டால் மட்டுமே, அதாவது உள்ளடக்கத்துக்கும் வடிவத்துக்கும் புதிய பொருத்தம் நிறுவப்பட்ட பிறகு மட்டுமே கூடுதலான வளர்ச்சி ஏற்பட முடியும். அதற்குப் பிறகு வளர்ச்சி வளையம் புதிதாகத் தொடங்குகிறது. இந்த நியதி உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் இயக்கவியலினால், அடுத்தடுத்துத் தொடர்கின்ற உற்பத்தி முறைகளினால் நன்கு விளக்கப்படுகிறது.

வடிவம் உள்ளடக்கத்தின் மீது சுறுசுறுப்பான எதிர்த்தாக்கம் செலுத்துவது இல்லை என்று கூற முடியாது என்பதுடன் அவற்றின் புறநிலை இயக்கவியல் அத்தகைய தாக்கத்தை முன்னூகிக்கிறது. வடிவம் வளர்ச்சிப் போக்குகளைத் தாமதப்படுத்த முடியும் அல்லது விரைவுபடுத்த முடியும், அவற்றைத் தகர்த்து அவை மறையும்படி செய்ய முடியும். உதாரணமாக, முதலாளித்துவத்தின் கீழ் தனியு

டைமை உறவுகள் மொத்த உற்பத்தி வளர்ச்சியையும் தாமதப்படுத்துகின்றன; ஆனால் சோஷலிஸ்ட் சமூக உறவுகள் சோஷலிஸ்ட் குடும்பத்தைச் சேர்ந்த நாடுகளில் பொருளாதார, கலாசார வளர்ச்சியைச் சக்திமிக்க வகையில் விரைவுபடுத்துகின்றன.

வடிவம் மற்றும் உள்ளடக்கத்தின் புறநிலையான இயக்கவியல் அறிதலில் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது; ஏனென்றால் அது பொருட்கள் மற்றும் நிகழ்வுப் போக்குகள் தமக்குள் கொண்டிருக்கும் இயக்கவியல் இணைப்பை, அவற்றின் பரஸ்பர மாற்றங்கள், முரண்பாடுகள் மற்றும் இதரவற்றைக் கணக்கிலெடுக்கும் வகையில் அவற்றை உள்ளடக்கம் மற்றும் வடிவத்தின் ஒற்றுமையில் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. வடிவம் உள்ளடக்கத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதால், அதன் வெளியீடாக இருப்பதால் அறிதல் முதலில் வடிவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும், பிறகு உள்ளடக்கத்தை விளக்க வேண்டும், பிறகு மொத்தமாகப் பொருளுக்குத் திரும்ப வேண்டும், பிறகு வடிவத்தை உயர்ந்த மட்டத்தில் ஆராய்வதற்குத் திரும்ப வேண்டும், இதரவை. அறிதல் உள்ளடக்கத்தையும் அதற்கும் வடிவத்துக்கும் இடையிலுள்ள புறநிலையான இயக்கவியலையும் வெளிக் கொண்டுவர முயற்சி செய்யும் பொழுது தான் உண்மையான விஞ்ஞான அறிவு உருவாகிறது. உதாரணமாக, உயிருள்ள இயற்கையை அறிதல் தாவரங்கள், பிராணிகளின் வெளித் தோற்றத்திலுள்ள சிறப்புத் தன்மைகளைப் பற்றிய அறிவைத் தொகுத்து அவற்றை பிரிவுகள், இனங்கள், வர்க்கங்கள் என்று பகுப்பதிலிருந்து ஆரம்பமாகி அவற்றின் உள்ளடக்கத்தை, அதாவது இன வேறுபாடுகளின் கருவியல் அடிப்படையையும் பரிணாம

வளர்ச்சியின் ஆகப் பொதுவான விதிகளையும் நிறுவுவதற்கு முன்னேறியது.

வடிவம் மற்றும் உள்ளடக்கப் பிரச்சினையை ஆராய்கின்ற பொழுது சோஷலிஸ்ட் சமூகத்தில் அவற்றின் இயக்கவியல் இடைச் செயலின் சிறப்புக் கூறுகள் சிலவற்றைச் சுட்டிக் காட்ட வேண்டும். முதலாவதாக, சோஷலிசத்தின் கீழ் வடிவத்துக்கும் உள்ளடக்கத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளின் பகை முரணியல்பு அல்லாத தன்மை, மற்றும் அதன் விளைவாக ஆழமான சமூக மோதல்கள் ஏற்பட சாத்தியமின்மை. சோஷலிசத்தின் கீழ் சமூக வளர்ச்சியின் உணர்வு பூர்வமான தன்மை புதிய உள்ளடக்கத்துக்குத் தகுந்த முறையில் வடிவத்தை அநேகமாக உரிய காலத்தில் மறு அமைப்புச் செய்வதை சாத்தியமாக்குகிறது.

பொருளின் வளர்ச்சியில் அதன் பல்வேறு அம்சங்கள் மற்றும் கூறுகளின் பாத்திரத்தைத் தெளிவுபடுத்துவதும் முக்கியமாகும். சாராம்சம் மற்றும் தோற்றம் என்னும் கருதினங்களை நாம் புரிந்து கொள்வது அதற்கு உதவுகிறது.

சாராம்சமும் தோற்றமும்

சாராம்சம், தோற்றம் என்னும் கருதுகோள்கள் பொருட்கள் மற்றும் நிகழ்வுப் போக்குகளின் இணைந்த அம்சங்களை இயக்கவியல் ரீதியில் பிரதிபலிக்கின்றன.

சாராம்சம் மிகவும் அடிப்படையான இணைப்புகள் மற்றும் உள் விதிகளின் ஒருங்கிணைந்த மொத்தமே. அது ஒரு பொருள் அல்லது நிகழ்வின் நிலையான வாழ்க்கை முறையையும் வளர்ச்சிப் போக்குகளையும் நிர்ணயிக்கிறது. அது முதலாவதாக பொருட்கள் அல்லது அவற்

றின் இயல்புகளின் பல்வகைத் தன்மையில் பொதுவானதை வெளியிடுகிறது; இரண்டாவதாக, மாற்றமடைந்து கொண்டிருக்கின்ற பொருள் அல்லது நிகழ்வின் ஆக ஆழமான அடிப்படையை, அதன் ஆக நிலையான, நிரந்தரமான கூறுகளை வெளியிடுகிறது. சாராம்சம் பொருட்கள், நிகழ்வுப் போக்குகள் அல்லது அவற்றின் உறவுகளின் மேற்பரப்பில் ஒருபோதும் நிலவுவதில்லை, அது தோற்றத்துக்குப் பின்னால் மறைந்திருக்கிறது; ஆகவே அதைப் புலனுணர்ச்சி உறுப்புக்களின் மூலம் அறிய முடியாது. அதனால்தான் சாராம்சம் சூக்குமமான சிந்தனையின் மூலம் அறியப்படுகிறது.

தோற்றம் என்பது பொருட்களின் வெளிப்புறக் கூறுகள், இயல்புகள், பொருட்களுக்குள் அல்லது அவற்றுக்கு இடையிலுள்ள உறவுகளின் மொத்தம்; சாராம்சம் நிலவுகின்ற, தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்ற வடிவம் அது. அது பொருட்களில் உள்ள சிறப்பியல்பை, தனித்தன்மைகளை, ஒப்பு நோக்கில் அவற்றின் வெளித்தோற்ற, மேற்பரப்புப் பகுதியை, அவற்றுக்குள் ஸ்திரமில்லாத, மாற்றமடையக் கூடியதை வெளியிடுகிறது; இந்த விஷயத்தில் அது சாராம்சத்திலிருந்து வேறுபட்டது. தோற்றம் மனிதனுடைய புலனுணர்ச்சி உறுப்புக்களின் மீது நேரடியான தாக்கத்தைக் கொண்டிருக்கிறது; அவற்றினால் பிரதிபலிக்கப்படுகிறது. உலகில் அனைத்தும் சாராம்சம் மற்றும் தோற்றத்தின் ஒற்றுமையைக் கொண்டிருக்கின்றன. முதலாவதாக, அவை ஒரே பொருளின் இரண்டு அம்சங்கள், அவற்றை சிந்தனையில்தான் பிரிக்க முடியும் என்பதில் இந்த ஒற்றுமை வெளிப்படுகிறது. இந்த ஒற்றுமையைப் பற்றி லெனின் பின்வருமாறு எழுதினார்: ''இங்கும் ஒரு மாற்றத்தை, ஒன்றிலிருந்து மற்றதற்கு ஓடுதலை நாம் பார்க்கிறோம்: சாராம்சம்

தோன்றுகிறது. தோற்றம் சாராம்சமாகிறது.''* இரண்டாவதாக, வளர்ச்சியின் மெய்யான நிகழ்வுப் போக்கில் அவை ஒன்று மற்றொன்றாக மாற்றமடைகின்றன என்பதில் இந்த ஒருமை வெளிப்படுகிறது. இதை மனத்திலிறுத்த வேண்டும்; ஏனென்றால் பொருட்களின் பல்வேறு அம்சங்களை சாராம்சம் மற்றும் தோற்றம் என்று பிரிப்பது தனிமுதலானதல்ல; அதற்குக் குறிப்பிட்ட எல்லைகளுக்குள் மட்டும்தான் அர்த்தமும் புறநிலையான அடிப்படையும் இருக்கின்றன. உதாரணமாக, உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமையும், அதை அடிப்படையாகக் கொண்ட நட்புறவான வர்க்கங்களுக்கு இடையில் ஒத்துழைப்பும் பரஸ்பர உதவியும் சோஷலிஸ்ட் சமூகத்தின் சாராம்சமாக இருக்கின்றன. அது தன்னைப் பல வழிகளில் வெளிப்படுத்துகிறது: சுரண்டல் மற்றும் நெருக்கடிகள் இல்லாதிருத்தல், திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி, மக்களின் சமூக, அரசியல் ஒற்றுமை, மக்களினங்களுக்கிடையில் நட்புறவுகள் மற்றும் இதரவை. மூன்றாவதாக, சாராம்சம் மற்றும் தோற்றத்தின் ஒற்றுமை அவற்றின் மாற்றத்தின் புறநிலையான இடைச்சார்பு நிலையில் வெளிப்படுகிறது. வளர்ச்சிப் போக்கில் சாராம்சத்தில் ஏற்படுகின்ற எந்த மாற்றமும் தோற்றத்தில் மாற்றங்களைத் தவிர்க்க முடியாதபடி ஏற்படுத்துகிறது, மறுதலை. உதாரணமாக, ஏகபோகத்துக்கு முந்திய முதலாளித்துவத்திலிருந்து ஏகபோக முதலாளித்துவத்துக்கு மாறியது அந்த சமூகத்தின் சாராம்சத்தில் பகுதியளவு மாற்றத்தைக் குறித்தது, முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக மாறியது. முதலாளித்துவத்தின் மாறிய சாராம்சம் அதன் புதிய கூறுகளில் பிரதிபலித்தது: முத

* V. I. Lenin, *Collected Works*, Vol. 38, p. 251.

லாளித்துவ நாடுகளின் வாழ்க்கையில் ஏகபோகங்களின் ஆதிக்கத்தை நிறுவுதல், நிதி மூலதனத்தை நிறுவுதல், பொருளாதார ஆக்கிரமிப்பிற்காக சர்வதேச ஏகபோகங்களை நிறுவுதல், உலகத்தின் பிரதேசங்களைக் கூறு போடுவதைப் பூர்த்தி செய்தல். இங்கே சாராம்சத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் தோற்றத்தில் மாற்றங்களை ஏற்படுத்தின. முதலாளித்துவம் ஆக்கிரமிப்புத் தன்மை கொண்டதாகவும் ஒவ்வொரு துறையிலும் அதிகப் பிற்போக்கானதாகவும் மாறியது; வேலையில்லாத் திண்டாட்டம், சமூக ஏற்றத்தாழ்வுகள், போட்டி, வர்க்கப்போராட்டம் அதிகரித்தன, இதரவை. ஆனால் சாராம்சம் மற்றும் தோற்றத்தின் ஒருமை சார்புநிலையானது, அது வேறுபாட்டை, அவற்றின் எதிர்நிலையைக் கூடச் சுட்டுகிறது. சாராம்சத்துக்கும் தோற்றத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடு அவை பொருந்துவதில்லை என்பதில் பிரதானமாக வெளிப்படுகிறது: சாராம்சம் முற்றிலும் தோற்றத்தை உட்கொள்கிறதில்லை; தோற்றம் சாராம்சத்தின் உத்தேசமான வெளியீடாக மட்டுமே இருக்கிறது.

சாராம்சமும் தோற்றமும் பொருந்துவதில்லை; ஏனென்றால் அவை ஒரு பொருளின் வெவ்வேறு அம்சங்களாக இருக்கின்றன. சாராம்சம் எப்பொழுதுமே ஆழமாக மறைந்திருக்கின்றபடியால், அதைப் பார்த்த மாத்திரத்தில் உடனே கண்டுபிடித்து விட முடியாது. பொருட்களின் சாராம்சம் அவற்றின் தோற்றத்துடன் முழுமையாகப் பொருந்தியிருந்தால் அறிதல் இவ்வளவு நீண்ட, சிக்கலான நிகழ்வுப் போக்காக இருந்திருக்காது, விஞ்ஞானமும் அவசியமற்றதாக இருந்திருக்கும்.

ஆனால் சாராம்சமும் தோற்றமும் பிரிக்க முடியாதபடித் தொடர்பு கொண்டவை, சாராம்சம் தோற்றங்களிலேயே வெளிப்படுகிறது, ஆகையால் அதை அறிய

முடியும். அறிதல் தோற்றத்திலிருந்து சாராம்சத்துக்கு, பொருட்களின் வெளித் தோற்றத்திலிருந்து அடிப்படையான, விதிகளினால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற தொடர்புகளுக்கு எப்பொழுதும் முன்னேறிச் செல்கிறது.

சமூக நிகழ்வுகளின் சாராம்சத்தைப் பகுத்தாராய்வதற்கு மார்க்சிய-லெனினியத்தின் மூலவர்கள் ஒப்பற்ற உதாரணங்களைத் தந்திருக்கிறார்கள். முதலாளித்துவச் சுரண்டலின் சாராம்சத்தை மார்க்ஸ் கண்டுபிடித்தது இவற்றில் ஒன்றாகும்.

தோற்றங்களை ஆராய்வதுடன் நின்று விடுகின்ற பூர்ஷ்வா பொருளியலாளர்களும் சமூகவியலாளர்களும் முதலாளித்துவ சமூகத்தில் சுரண்டல் இல்லை, தொழிலாளர்களின் உழைப்புக்குத் தகுந்த ஊதியத்தை முதலாளி தருகிறார் என்று எப்பொழுதும் கூறி வந்திருக்கிறார்கள். முதலாளித்துவ லாபம் முதலாளி உற்பத்தியில் முதலீடு செய்திருக்கின்ற மூலதனத்திலிருந்து கிடைக்கிறது, தொழிலாளர்களைச் சுரண்டுவதிலிருந்து அது கிடைக்கவில்லை என்று சொல்லப்பட்டது.

யதார்த்தம் முற்றிலும் வேறுவிதமாக இருக்கிறது. தொழிலாளி வாழ்வதற்கும் தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கும் குறிப்பிட்ட அளவு வாழ்க்கைச் சாதனங்கள் அவசியம். முதலாளித்துவ அமைப்பில் இந்த வாழ்க்கைச் சாதனங்களைப் பெறுவதற்கு அவன் முதலாளியிடம் தன்னுடைய உழைப்புச் சக்தியை விற்பனை செய்வது அவசியமாகிறது. முதலாளியும் தொழிலாளியும் வாங்குதல் மற்றும் விற்பனை எனப்படும் வாடிக்கையான நடவடிக்கையைச் செய்வதாக முதல் பார்வைக்குத் தெரிகிறது. தொழிலாளி உழைப்புச் சக்தியை விற்பனை செய்கிறார், முதலாளி அதை வாங்குகிறார்; தொழிலாளி உழைக்கிறார், முதலாளி அவருக்குக் கூலி தருகிறார்.

முதலாளித்துவ உறவுகளின் மேற்பரப்பில் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் சமத்துவமான நடவடிக்கை என்பதைப் போன்ற மேல்தோற்றம் நிலவுகிறது. ஆனால் மார்க்ஸ் முதலாளித்துவ சமூகத்தின் மேல்தோற்றத்தை மட்டும் ஆராயவில்லை. அந்த மேல்தோற்றத்தின் கீழ், முதலாளிக்கும் தொழிலாளிக்கும் சமத்துவமான பேரம் என்னும் கற்பனைக்குப் பின்னால் இருக்கின்ற முதலாளித்துவ உற்பத்தியின் சுரண்டல் தன்மையை அவர் அம்பலப் படுத்தினார். உழைப்புச் சக்தி என்பது பொருளாயத மதிப்புக்களை உற்பத்தி செய்கின்ற விசேஷமான பண்டம், அது உற்பத்தி செய்கின்ற மதிப்பு முதலாளி அதற்குத் தருகின்ற கூலியைக் காட்டிலும் அதிகமானது என்று அவர் எடுத்துக் காட்டினார்.

முதலாளித்துவச் சுரண்டலின் சாராம்சத்தை மார்க்ஸ் கண்டுபிடித்தது மாபெரும் வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது; முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள பகை முரணியல்பின் ஆணி வேரைக் கண்டுபிடிப்பதை, அவற்றுக்கு இடையில் போராட்டம் தவிர்க்க முடியாதது, அது முடிவில் சோஷலிஸ்ட் புரட்சிக்கும் முதலாளித்துவத்தின் வீழ்ச்சிக்கும் இட்டுச் செல்லும் என்று எடுத்துக் காட்டுவதை சாத்தியமாக்கிற்று.

அது சமூக ஆராய்ச்சிக்கு மூலச்சிறப்பான உதாரணம்; நிகழ்வுகளின் சாராம்சத்தைப் புரிந்து கொள்வது விஞ்ஞானத்துக்கும் புரட்சிகர நடைமுறைக்கும் எவ்வளவு முக்கியமானது என்பதற்கு மிகச் சிறந்த சான்றாகும்.

யதார்த்தத்தின் பொருட்களும் நிகழ்வுகளும் தனித் தனியாக இருப்பதில்லை, அவை பரஸ்பரத் தொடர்பில் இருக்கின்றன. அந்தச் சூழலுக்கு வெளியே அவற்றில் ஒன்றைக் கூடப் புரிந்து கொள்ள முடியாது. ஒரு பொரு

ளை மற்றவற்றுடன் உள்ள தொடர்பில் ஆராய்வதற்கு முதலில் அதன் தோற்றத்திற்குரிய காரணத்தை நிறுவுவது அவசியம். எனவே நாம் காரணம் மற்றும் விளைவு என்னும் கருத்தினங்களை இப்பொழுது எடுத்துக் கொள்வோம்.

காரணமும் விளைவும்

உலகத்தில் காரணம் இல்லாத சம்பவங்கள் கிடையாது; எல்லாச் சம்பவங்களும் திட்டவட்டமான காரணங்களின் விளைவுகளே. ஒரு நிகழ்வின் காரணத்தை நிறுவுவது அதை அறிதலில் தலைமையான கூறாகும். விஞ்ஞானம் காரணகாரியத் தொடர்பைக் கண்டுபிடிப்பதிலிருந்து தொடங்குகிறது.

காரணகாரியத் தொடர்பு சர்வப்பொதுவான தொடர்பின் ஒரு வடிவமாகும்; ஒரு நிகழ்வு அல்லது சந்தர்ப்பம் மற்றொன்றுக்குக் காரணம் அல்லது மற்றொன்றைத் தோற்றுவிக்கும் தொடர்பு இது. ஏதேனும் ஒரு நிகழ்வைத் தோற்றுவிக்கும் காரணி காரணம் எனப்படுகிறது. காரணம் ஒரு நிகழ்வைத் தோற்றுவிக்கிறது, அதன் நிலையில் மாற்றத்தையும் அதன் மறைவையும் ஏற்படுத்துகிறது. காரணத்தின் செயல்பாட்டின் பயன் விளைவு எனப்படுகிறது.

காரணகாரியத் தொடர்பு பல முக்கியமான அம்சங்களைக் கொண்டிருக்கிறது. முதலாவதாக, நிகழ்வுகளின் காரணச் சார்பு சர்வப்பொதுவானது. காரணம் இல்லாத நிகழ்வோ, சம்பவமோ ஒன்று கூடக் கிடையாது. காரணத் தொடர்பு என்பது பொருட்களுக்கும் நிகழ்வுகளுக்கும் இடையில் பரஸ்பரச் செயல்கள் என்ற முடிவில்லாத சங்கிலித் தொடரில் முக்கியமான கண்ணி ஆகும்.

காரணத் தொடர்பு புறநிலையானது, அதாவது பொருளாயத உலகத்தின் நிகழ்வுகளுக்கு அது இயல்பானது. சில குறிப்பிட்ட நிலைமைகளில் ஒரு குறிப்பிட்ட காரணம் தவிர்க்க முடியாத விதத்திலும் தவறாமலும் ஒரு திட்டவட்டமான விளைவை ஏற்படுத்துகிறது என்பது அதன் முக்கியமான அம்சமாகும். உதாரணமாக, ஒரு இரும்புத் துண்டை சூடுபடுத்தினால் அது விரிவடையும்; ஆனால் அதைச் சூடுபடுத்துவதன் மூலம் தங்கமாக மாற்ற முடியாது. ஒரு தானிய விதை நல்ல மண்ணில் விழுந்தால், சில குறிப்பிட்ட நிலைமைகளில் அது அந்தச் செடியாக முளைக்கும்; எனினும் அது வேறொரு செடியாக ஒருபோதும் முளைக்காது.

காரணகாரியத் தொடர்பின் மற்றொரு முக்கியமான அம்சம் அதன் கறாரான காலவரிசைத் தன்மையாகும்: காரணமாக விளங்கும் நிகழ்வு எப்பொழுதும் விளைவுக்கு முந்தியதாக இருக்கும். விளைவு இந்த நிகழ்வுக்கு முன்னரோ அல்லது அதனுடன் ஒரே நேரத்திலோ தோன்ற முடியாது. அது எப்பொழுதும் சிறிது பின்னரே தொடங்கும். ஆனால் காலவரிசையில் முந்தியிருப்பது ஒரு குறித்த நிகழ்ச்சியைக் காரணமாகக் கருதுவதற்கு அவசியமானது என்றாலும் போதிய நிபந்தனை அல்ல. ஒரு நிகழ்வுக்கு முந்தி இருந்தவை அனைத்தும் அதன் காரணம் ஆகிவிடா.

விஞ்ஞானம் இன்னும் போதிய வளர்ச்சியில்லாமலும் விஞ்ஞான அறிவு பெருந்திரளான மக்களுக்குக் கிடைக்காமலும் இருந்த பொழுது அவர்கள் காரணத் தொடர்பையும் காலவரிசைக் கிரமத்தையும் வேறுபடுத்திப் பார்க்கத் தவறினார்கள். இது பல விதமான மூட நம்பிக்கைகளுக்கும் தப்பெண்ணங்களுக்கும் ஒரு தோற்றுவாயாக விளங்கியது. அவற்றின் எச்சங்கள் ஏதாவதொரு வடிவத்தில் இன்றளவும் நிலைத்திருக்கின்றன.

காரணகாரியத் தொடர்பை சரியாக நிர்ணயிக்கும் அளவுகோலாகவும், காரணத் தொடர்பை வெறும் கால வரிசைக் கிரமத்திலிருந்து வேறுபடுத்திக் காண்பதற்கான அளவுகோலாகவும் பயன்பட வேண்டியது மனிதனுடைய நடைமுறை மட்டுமே. காரணத் தொடர்புகளைப் பற்றிய அறிவு மனிதனுடைய நடைமுறைக்கும் விஞ்ஞான ரீதியான முன்னறிவித்தலுக்கும் யதார்த்த நிகழ்வுப் போக்குகளை மாற்றுவதற்கும் அவற்றை மனிதன் விரும்புகின்ற திசையில் செலுத்துவதற்கும் மிகவும் முக்கியமாக இருக்கிறது.

காரணத் தொடர்பை ஆராய்கின்ற பொழுது காரணங்கள் வெளியிலிருந்தும் உள்ளார்ந்தவையாகவும் இருக்கலாம் என்பதை மனத்திலிறுத்த வேண்டும். ஒரு பொருளின் மாற்றத்துக்குரிய உள்காரணங்கள் அந்தப் பொருளின் இயல்பிலேயே வேரூன்றியுள்ளன, அதன் அம்சங்களின் பரஸ்பரப் பாதிப்பாக விளங்குகின்றன. உள்காரணங்கள் வெளிப்புறக் காரணங்களை விட அதிக முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. உதாரணமாக, எந்த சமூகப் புரட்சிக்கும் உள்காரணமாக விளங்குவது ஒரு நாட்டிலுள்ள குறிப்பிட்ட உற்பத்தி முறையின் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையில் ஏற்படுகின்ற முரண்பாடே தவிர, வெளிச் சக்திகள் காரணமல்ல.

காரணம் வெளியிலிருந்து ஏற்படுகின்ற பொழுது, அந்தக் காரணமும் அது செயல்படுகின்ற நிகழ்வும் பரஸ்பரம் செயல்படுவதன் பயனாகவே விளைவு நடைபெறுகிறது. ஆகவே ஒரே காரணம் வெவ்வேறு விளைவுகளைத் தோற்றுவிக்க முடியும். உதாரணமாக, சூரிய வெளிச்சத்தின் விளைவாகப் பனிக்கட்டி உருகுகிறது, தாவரம் கரியமிலவாயுவை உட்கொண்டு வளர்கிறது, மனிதன் வெயி

லில் காய்ந்து கருப்பு நிறத்தை அடைகிறான், அவனுடைய உடலில் சிக்கலான உடலியல் நிகழ்வுப் போக்குகள் நடைபெறுகின்றன. வெவ்வேறு காரணங்கள் ஒரே விளைவை ஏற்படுத்துவதும் நிகழ்கிறது. தானிய விளைச்சல் மோசமாக இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதற்கு வறட்சி நிலைமை அல்லது தவறான வேளாண்மை முறைகள் (மாற்றிப் பயிரிடுதலில் தவறுகள், மோசமான விதைகளைப் பயன்படுத்துதல், உரிய காலத்தில் விதைக்கத் தவறுதல், இதரவை) காரணமாக இருக்கலாம்.

ஆகவே ஒரு நிகழ்வுக்குப் பல்வேறு பொருட்களின் பரஸ்பரச் செயல்பாடு அல்லது ஒரே பொருளின் பல்வேறு அம்சங்களின் செயல்பாடு அல்லது இரண்டுமே, அதாவது உட்புற மற்றும் வெளிப்புறக் காரணிகள் ஒன்றுகூடுதல் காரணமாக இருக்க முடியும்.

காரணகாரியத் தொடர்புகளில் ஒரு முக்கியமான அம்சம் காரணமும் விளைவும் இடங்களை மாற்றிக் கொள்ளலாம் என்பதாகும். ஒரு உதாரணத்தில் விளைவாக இருக்கின்ற சம்பவம் பிறிதொரு சமயத்தில் நடைபெறுகின்ற மற்றொரு உதாரணத்தில் காரணமாக இருக்க முடியும். உதாரணமாக, மழை திட்டவட்டமான பருவ நிலைமைகளின் விளைவாகும், அது அமோகமான விளைச்சலுக்குக் காரணமாக இருக்க முடியும்; அமோகமான விளைச்சல் பொருளாதாரத்தின் முன்னேற்றத்துக்குக் காரணமாக இருக்க முடியும், இதரவை.

எல்லா நிகழ்வுகளும்—குறிப்பாக சிக்கலான நிகழ்வுகள்—பல காரணங்களைக் கொண்டிருக்கின்றன. ஆனால் காரணங்கள் முக்கியத்துவத்தில் வேறுபடுகின்றன. அடிப்படையான, தீர்மானகரமான காரணங்கள், அடிப்படை அல்லாத காரணங்கள், பொதுவான காரணங்கள், உடனடியான காரணங்கள் எனப் பலவாறாக இருக்கின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் அடிப்படையான, தீர் மானகரமான காரணங்களைக் கண்டறிவது மிக அவ சியம். அடிப்படையான காரணங்கள் வழக்கமாக உள்கா ரணங்களாக இருக்கின்றன என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவற்றைக் கண்டுபிடிப்பது விஞ்ஞான அறித லுக்கும் புரட்சிகர நடைமுறைக்கும் மிக முக்கியமாகும்.

காரணகாரியம் பற்றிய இயக்கவியல் பொருள்முதல் வாதக் கோட்பாடு உலகக் கண்ணோட்டத்தில் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. இது நோக்கம் பற்றிய கருத்துமுதல்வாத மற்றும் சமயக் கோட்பாட் டுக்கு எதிரானது. உலகத்திலுள்ள அனைத்துமே உசிதமா னவை, ஏனென்றால் அவற்றை ''இறைவன்'' படைத்தார் என்று சமயம் வற்புறுத்துகிறது. எங்கெல்ஸ் கூறியதைப் போல, நியதிவாதத்தின்படி பார்த்தால் ''பூனை கள் சுண்டெலிகளைத் தின்று தீர்ப்பதற்குப் படைக்கப் பட்டிருக்கின்றன, சுண்டெலிகளோ பூனைகள் தின்று தீர்ப் பதற்காகப் படைக்கப்பட்டிருக்கின்றன, இயற்கை அனைத் தும் இறைவனின் விவேகத்தை நிரூபிப்பதற்குப் படைக் கப்பட்டிருக்கிறது.''*

சமயவாதிகள் தம்முடைய கருத்துக்களை உறுதிப் படுத்துவதற்காக உயிருள்ள இயற்கையை உதாரணமாகக் காட்டுகிறார்கள். அங்கே அங்கஜீவிகளுக்கும் அவற்றின் வாழ்க்கை நிலைமைகளுக்கும் உள்ள பொருத்தம் மிகவும் வியப்பைத் தருவதாக இருக்கிறது; தாவரங்கள், பிராணி களின் கட்டமைப்பும் அநேகமாகச் செவ்வையாக இருக் கிறது. ஆனால் இந்த ஒப்பு நோக்கான செவ்வைப்பாடு நெடுங்கால அளவில் நடைபெற்ற பரிணாமப் போக்கில் சூழ்நிலையுடன் உயிரினங்களின் பரஸ்பரச் செயல்முறை,

* Frederick Engels, *Dialectics of Nature*, p. 25.

இயற்கைத் தேர்வு மற்றும் இதர உயிரியல் விதிகள் ஆகிய வற்றின் விளைவாக ஏற்பட்டிருக்கிறது என்று உயிரியல் எடுத்துக் காட்டுகிறது.

இயற்கையில் எல்லாமே இயல்பான, புறநிலையான விதிகளின் விளைவாக, குறிப்பாக நிகழ்வுகளின் காரண காரியத்தின் விளைவாக நடைபெறுகின்றன. மக்கள், அறி வுள்ள நபர்கள் செயலாற்றத் தொடங்குகின்ற பொழுது, அதாவது சமூக வளர்ச்சிப் போக்கில்தான் நோக்கங்கள் வெளிப்படுகின்றன. ஆனால் மனிதர்கள் பல்வேறு நோக் கங்களைத் தங்களுக்கு முன் வைத்துக் கொண்ட போதி லும், சமூக வாழ்க்கையின் வளர்ச்சியின் புறநிலையான, காரணகாரிய, நியதியான தன்மையை அது அகற்றி விடு வதில்லை.

காரணகாரியத் தொடர்பு சர்வப்பொதுவானது. ஆனால் யதார்த்தத்தின் பல்வகையான தொடர்புகள் அனைத்தும் அதற்கு உட்பட்டவை அல்ல. லெனின் சுட்டிக் காட்டியதைப் போல, உலகத் தொடர்பின் சிறு பகுதியாக மட்டுமே அது இருக்கிறது. உலகக் காரணத் தொடர்பு கள் என்ற நெருக்கமான வலையில் இன்றியமையாத மற்றும் தற்செயலான தொடர்புகள் மிகவும் முக்கிய மானவையாகும். அடுத்தபடியாக அவற்றை எடுத்துக் கொள்வோம்.

இன்றியமையாமையும் தற்செயலும்

காரணகாரியத் தன்மையை மேலும் ஆராய்வது, குறிப் பாக காரணகாரியத் தொடர்புகளின் கட்டாயத் தன் மையை விளக்குவதன் மூலம் ஆராய்வதன் அடிப்படை யில் இன்றியமையாமைக் கருதுகோள் அமைக்கப்பட்டிருக் கிறது. அதனால்தான் இன்றியமையாமை சில சமயங் களில் காரணகாரியத் தன்மையுடன் இனங்காணப்படு

கிறது. ஆனால் இன்றியமையாமையும் காரணகாரியத் தொடர்பும் வெவ்வேறு கருதுகோள்களாகும். காரண காரியத் தொடர்புக் கருதுகோள் இருத்தலின் சில வடிவங்களை வேறு வடிவங்கள் தகவமைத்தலைப் பிரதிபலிக்கிறது; இன்றியமையாமைக் கருதுகோள் உரிய நிலைமைகளில் சில தொடர்புகளும் இயல்புகளும் தவிர்க்க முடியாத வகையில் தோன்றுவதைப் பிரதிபலிக்கிறது.

இயல்புகள் மற்றும் தொடர்புகளின் இருத்தலின் காரணங்கள் அவற்றுக்குள்ளாகவே இருக்கின்ற பொழுது, நிகழ்வை ஏற்படுத்துகின்ற கூறுகளின் உள் தன்மையினால் அவை கட்டுப்படுத்தப்படுகின்ற பொழுது அவை இன்றியமையாதவை என்று சொல்லப்படுகின்றன. அதே காரணங்கள் வெளியே உள்ள இயல்புகளாலும் தொடர்புகளாலும், அதாவது வெளிப்புற சந்தர்ப்பங்களாலும் கட்டுப்படுத்தப்படுகின்ற பொழுது அவை தற்செயலானவை என்று சொல்லப்படுகின்றன. இன்றியமையாத இயல்புகளும் தொடர்புகளும் உரிய நிலைமைகளில் தவிர்க்க முடியாதபடி ஏற்படுகின்றன; தற்செயலான இயல்புகளும் தொடர்புகளும் தவிர்க்க முடியாதவை அல்ல; அவை நடைபெறுகின்றன அல்லது நடைபெறுவதில்லை.

உதாரணமாக, பின்தங்கிய நிலைமையை அகற்றுதல் இன்றியமையாததாகும்; புதிதாக விடுதலையடைந்த சமூகங்களின், குறிப்பாக சோஷலிசத் திசையமைவைத் தேர்ந்தெடுத்திருக்கின்ற சமூகங்களின் விதிக்கு உட்பட்ட வளர்ச்சியிலிருந்து இது பிறக்கிறது. இது மக்களின் சமூக, அரசியல் ஒற்றுமையினால், புரட்சிகரமான முன்னணிப் படை சமூகத்துக்கு அளிக்கின்ற வழிகாட்டுதலினால், பெருந்திரளான மக்களின் வளர்ச்சியடைந்து வருகின்ற சமூக நடவடிக்கையினால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் அந்த இன்றியமையாமையின் நிறைவேற்றப் போக்கில் பல தற்

செயல்கள் ஏற்படலாம். உதாரணமாக, பாதகமான பருவ நிலைமைகள் ஏதாவதொரு பிரதேசத்தில்விவசாயத்தைப் பாதிக்கலாம். ஆனால் வளமான கனிச் செல்வங்கள் கண்டு பிடிக்கப்படுதல் ஒரு பிரதேசத்தின் வளர்ச்சிக்கு—அல்லது ஒரு நாட்டுக்கும் கூட—சக்திமிக்க தூண்டுதலாக இருக்கும்.

சோஷலிச வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றுகின்ற நாட்டில் மக்கள் திரளினருடைய நிர்மாண நடவடிக்கை மற்றும் முன்முயற்சியை அதிகப்படுத்துதல் விதிக்கு உட்பட்ட இன்றியமையாததாகும். உழைக்கும் மக்கள் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும், உழைப்பின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கும், சமூகத்துக்கு, மக்களுக்கு உற்பத்தியின் புதிய மற்றும் அதிகப் பயனுள்ள வடிவங்களை அறிமுகப்படுத்துவதற்கும் தங்களுடைய முயற்சிகளை ஒன்றுகுவிப்பது நிச்சயம். ஆனால் ஒரு குறிப்பிட்ட இயக்கத்தை ஆரம்பிக்கின்ற நிறுவனமும் அதை ஆரம்பித்துவைக்கின்ற நபரும் தற்செயலானவை; அந்த இயக்கத்தை எவரும் ஆரம்பித்திருக்க முடியும்.

புறநிலையான உலகத்தில் நிகழ்வுகளின் வளர்ச்சியின் தவிர்க்க முடியாத சக்தி என்ற முறையில் இன்றியமையாமை ஆதிக்கம் வகிக்கிறது. அந்த நிகழ்வுகளின் தன்மையிலிருந்தே இது உண்டாகிறது, அவற்றின் முந்திய வளர்ச்சி, பரஸ்பர பாதிப்பு ஆகியவை அனைத்தினாலும் தோற்றுவிக்கப்படுகிறது. இன்றியமையாமை என்னும் கருத்தினம் இயற்கை மற்றும் சமூகத்தின் வளர்ச்சியின் விதிமுறைக்கு உட்பட்ட தன்மையை வெளியிடுகிறது.

இன்றியமையாத நிகழ்ச்சிகளைப் போலவே தற்செயலான நிகழ்ச்சிகளுக்கும் உரிய காரணங்கள் இருக்கின்றன என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். தற்செயலும் காரணமின்மையும் ஒன்று எனக் கருதுவது தவறாகும்.

காரணமற்ற நிகழ்ச்சிகள் என்பது அறவே இல்லை. இன்றியமையாமை போல தற்செயலும் புறநிலையானது. அதன் இருத்தல் அதன் காரணங்களை நாம் அறிந்திருக்கிறோமா இல்லையா என்பதைப் பொறுத்ததல்ல. தற்செயலின் புறநிலைத் தன்மையை மறுப்பதால் சமூக வரலாறும் தனிப்பட்ட மனித வாழ்க்கையும் விதிவசமான, மர்மத் தன்மையைப் பெறுகின்றன.

அதே சமயத்தில் தற்செயல் சார்புநிலையானது. எல்லா வகையிலும் தற்செயலான, இன்றியமையாமையுடன் தொடர்பே இல்லாத நிகழ்வுகள் கிடையா. ஒரு நிகழ்வு திட்டவட்டமான விதிமுறைத் தொடர்பின் நோக்கில் மட்டுமே தற்செயலானது; வேறு தொடர்பில் அதே நிகழ்வு இன்றியமையாததாக இருக்க முடியும். உதாரணமாக, விஞ்ஞான வளர்ச்சியின் மொத்தப் போக்கு என்னும் நோக்கிலிருந்து பார்க்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட விஞ்ஞானி ஒரு கண்டுபிடிப்பைச் செய்தார் என்பது தற்செயலானது; ஆனால் அந்தக் கண்டுபிடிப்பு உற்பத்திச் சக்திகளின் குறிப்பிட்ட வளர்ச்சித் தரத்தின், விஞ்ஞான முன்னேற்றத்தின் இன்றியமையாத விளைவு ஆகும்.

தற்செயல் பெரும்பாலும் இரண்டு அல்லது அதற்கும் அதிகமான இன்றியமையாத தொடர்புகள் சந்திக்குமிடத்தில் தோன்றுகிறது. உதாரணமாக, புயலில் விழுந்து விட்ட மரத்தை எடுத்துக் கொள்வோம். அந்த மரத்தின் வாழ்க்கையில் புயல் தற்செயலான சம்பவம்; ஏனென்றால் புயல் மரத்தின் வாழ்க்கை மற்றும் வளர்ச்சியின் சாராம்சத்திலிருந்து தவிர்க்கவியலாதபடித் தோன்றவில்லை. ஆனால் பருவநிலைக் காரணிகளைப் பொறுத்த மட்டில் புயல் இன்றியமையாத நிகழ்வு; ஏனென்றால் குறிப்பிட்ட பருவநிலை விதிகளின் செயல்முறையினால் அது ஏற்படுகிறது. மரத்தின் வாழ்க்கை, புயலின் தோற்

றம் என்னும் இரண்டு இன்றியமையாத நிகழ்வுப் போக்குகள் சந்தித்த முனையில் அந்தத் தற்செயலான சம்பவம் நடைபெற்றது. இந்த உதாரணத்தில் புயல் மரத்துக்குத் தற்செயலானது என்பதுடன் புயலின் பாதையில் மரம் இருந்ததும் அதே அளவில் அதற்குத் தற்செயலானதாகும்.

ஆகவே தற்செயல் என்பது ஒரு குறிப்பிட்ட புலப்பாடு அல்லது நிகழ்வுப் போக்கைப் பொறுத்தமட்டில் வெளிப்புறமானது; ஆகவே அந்த நிகழ்வு அல்லது நிகழ்வுப் போக்குக்கு அது சாத்தியமானதே தவிர, தவிர்க்க முடியாதது அல்ல. அது நடைபெறலாம் அல்லது நடைபெறாமலிருக்கலாம்.

இன்றியமையாமையும் தற்செயலும் நெருக்கமாக இணைந்திருக்கின்றன. ஒரே நிகழ்வு ஒரு வகையில் தற்செயலானதாகவும் வேறொரு வகையில் இன்றியமையாததாகவும் தன்னை வெளிப்படுத்துகிறது என்பது பிரதானமாக இத்தொடர்பின் பொருளாகும். ஆனால் இத்தொடர்பு இதனுடன் நின்று விடவில்லை. தற்செயல் என்பது இடையுறவின் ஒரு முனை மட்டுமே, அதன் மறு முனை இன்றியமையாததாக இருக்கிறது என்று எங்கெல்ஸ் எழுதினார்.

இன்றியமையாமை எப்பொழுதும் ஏராளமான தற்செயல்கள் வாயிலாகவே நிலையான, மீண்டும் மீண்டும் நிகழ்கின்ற ஒன்றாக வெளிப்படுகிறது என்பது திண்ணம். உதாரணமாக, மிகவும் வெவ்வேறான முயற்சிகளும் குறிக்கோள்களும் இயல்புகளும் கொண்ட எண்ணற்ற மனிதர்களின் செயல்களின் கூட்டு மொத்தம் சமூக வளர்ச்சி எனப்படுகிறது. இந்த எல்லா முயற்சிகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைகின்றன, மோதிக் கொள்கின்றன; அவை முடிவில் கண்டிப்பான இன்றியமையாத் தன்மை கொண்ட வளர்ச்சித் திசைக்கு இட்டுச் செல்கின்றன.

தற்செயல்கள் எப்பொழுதும் இன்றியமையாமைக்கு உடன் செல்கின்றன, அதை இட்டு நிரப்புகின்றன. ஆகவே அவை வரலாற்றுப் போக்கில் குறிப்பிட்ட பாத்திரத்தை நிறைவேற்றுகின்றன. அதனால்தான் ஒரே சமூக வளர்ச்சி விதிகள் வெவ்வேறு நாடுகளில், வெவ்வேறு காலகட்டங்களில் விசேஷமான வடிவங்களை மேற்கொண்டு பிரத்யேகமான முறைகளில் செயலாற்றுகின்றன. இன்றியமையாமை மட்டுமே நிலவி தற்செயல் எத்தகைய பாத்திரத்தையும் வகிக்கவில்லை என்றால் வரலாறு மாயத் தன்மை கொண்டதாக இருக்கும் என்று மார்க்ஸ் கூறினார்.

இன்றியமையாமை தற்செயல்களின் மூலமாகவே வெளிப்பட முடியும் என்பதிலிருந்து தற்செயல்கள் இன்றியமையாமையை இட்டு நிரப்புவது மட்டுமின்றி அது வெளிப்படுகின்ற வடிவமாகவும் விளங்குகின்றன என்பது பெறப்படுகிறது. இன்றியமையாமை, தற்செயல் ஆகியவற்றின் இயக்கவியலைப் புரிந்து கொள்வதற்கு இது முக்கியமானது. உதாரணமாக, சமூகப் புரட்சிகள், இதர விதிமுறைக்கு ஒத்த சமூக நிகழ்வுகள் பல்வேறு சம்பவங்கள் நடக்கும் இடம் மற்றும் காலம், அவற்றில் பங்கெடுப்பவர்கள், இதரவை ஆகிய பல தற்செயலான சந்தர்ப்பங்களுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. இச்சந்தர்ப்பங்கள் வரலாற்று வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் தற்செயலானவை; ஆனால் இன்றியமையாத நிகழ்வுப் போக்குகள் இவற்றின் மூலமாகவே நடைபெறுகின்றன.

சமூக வளர்ச்சி திட்டமிட்ட நிகழ்வுப் போக்காக இருக்கின்ற சோஷலிஸ்ட் சமூகத்தில் விரும்பத்தகாத தற்செயல்களின் சுதந்திரத்தைக் கணிசமாகக் குறுக்குவதை சாத்தியமாக்குகின்ற சாதகமான நிலைமைகள் உருவாகின்றன. உதாரணமாக, விஞ்ஞான ரீதியான விவசாய முறைகளை மேற்கொள்ளுதல், நிலச் சீரமைப்பு மற்றும்

இதர நடவடிக்கைகள் பருவநிலைத் தற்செயல்கள் விவசாய உற்பத்தியைப் பாதிப்பதைக் கணிசமாகக் குறைக்கின்றன.

ஒரு மார்க்சிய-லெனினியக் கட்சியினால் வழிகாட்டப்படுகின்ற உணர்வு பூர்வமான, குறி வழிப்பட்ட மனித நடவடிக்கை தற்செயலான சம்பவங்களின் பாத்திரத்தைத் தீவிரமாகக் குறைக்கின்றது. ஆனால் இவை சோஷலிஸ்ட் நிர்மாண நிலைமைகளிலும் கூட நடைபெற முடியும். உதாரணமாக, பொருளாதாரத்தில் சில உற்பத்தித் துறைகள் பல்வேறு வெளிப்புறக் காரணங்களினால் பின்தங்கி விடலாம், சில நிறுவனங்கள் தம்முடைய திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் போய்விடலாம், இதரவை.

மக்கள் தற்செயலான நிகழ்வுகளைப் புறக்கணிக்கக் கூடாது; ஒரு பக்கத்தில் பாதகமான விபத்துக்களை முன்னறிவதற்கும் தடுப்பதற்கும் அல்லது கட்டுப்படுத்துவதற்கும், மறு பக்கத்தில் ஆக்க பூர்வமான தற்செயல்களை உபயோகித்துக் கொள்வதற்கும் அவற்றை ஆராய வேண்டும்.

உலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்வுப் போக்குகளை விஞ்ஞான ரீதியாகப் பார்ப்பதும் அவற்றின் நியதிகளைப் புரிந்து கொள்வதும் புறநிலையான விதிகளைப் பற்றிய அறிவை அடிப்படையாகக் கொண்டு இயற்கை மற்றும் சமூக நிகழ்வுப் போக்குகளைக் கட்டுப்படுத்துவதும் முக்கியமாகும்.

இன்றியமையாமை எப்பொழுதும் திட்டவட்டமான புறவய நிலைமைகளில் தன்னை வெளிப்படுத்துகிறது. ஆனால் இந்த நிலைமைகள் மாறிக் கொண்டே இருக்கின்றன, அவற்றுக்குத் தகுந்தவாறு இன்றியமையாமை மாற்றமடைகிறது, வளர்ச்சி அடைகிறது. இன்றியமையாமை முன்னரே தயாரிக்கப்பட்ட வடிவத்தில் ஒருபோதும் தோன்றுவதில்லை; அது முதலில் சாத்தியமாக இருக்

கிறது, பிறகு சாதகமான நிலைமைகளில் மட்டுமே யதார்த்தமாக மாறுகிறது.

சாத்தியமும் யதார்த்தமும்

புறநிலையான உலகத்தில் நிலவுகின்ற பல்விதப் பொருட்களும் நிகழ்வுப் போக்குகளும் அவை தோன்றுவதற்குரிய முன்னிலைகளும் காரணங்களும் நிலைமைகளும் உருவான பிறகு இயற்கையான இன்றியமையாமையின் காரணமாகத் தோன்றுகின்றன. காலப் போக்கில் வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடைகிறது. அந்தக் கட்டத்தில் புதிய பொருள் அல்லது நிகழ்வுப் போக்கு இன்னும் தோன்றியிருக்காது; ஆனால் அது தோன்றுவதற்குரிய நிலைமைகள் முந்திய வளர்ச்சியினால் தயாரிக்கப் பட்டுத் தோன்றியிருக்கும்.

புதியது தோன்றுவதற்கு உரிய அடிப்படை, அதற்கேற்ற முன்னிலைகள், காரணங்கள், நிலைமைகள் நிலவுவது சாத்தியம் எனப்படுகிறது. சாத்தியம் என்னும் கருத்தினம் யதார்த்தத்தின் வளர்ச்சியில் புறநிலையான போக்கைப் பிரதிபலிக்கிறது.

யதார்த்தம் என்னும் கருதுகோள் விரிவான அர்த்தத்திலும் குறுகிய அர்த்தத்திலும் வழங்கப்படுகிறது. விரிவான அர்த்தத்தில் புறநிலையான உலகத்தில் நிலவுபவை அனைத்தையும் அது குறிக்கிறது; குறுகிய அர்த்தத்தில் செயல்படுத்தப்பட்ட, நிறைவேற்றப்பட்ட சாத்தியத்தை அது குறிக்கிறது.

சாத்தியமும் யதார்த்தமும் தமக்குள் பின்னிப் பிணைந்திருக்கின்றன. சாத்தியம் யதார்த்தத்தின் வளர்ச்சியிலிருந்து பிறக்கிறது, யதார்த்தம் சாத்தியத்தினால் தயாரிக்கப்படுகிறது. எனவே அவற்றை ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கக் கூடாது.

சாத்தியத்தை யதார்த்தத்திலிருந்து பிரிப்பது நடைமுறையில் நிறைவேற முடியாத சாத்தியங்களைப் பற்றி சூக்குமமான விளக்கத்துக்கு இட்டுச் செல்கிறது; ஏனென்றால் மெய்யான சாத்தியம் எப்பொழுதும் யதார்த்தத்துடன் இணைந்திருக்கிறது, அதனால் தோற்றுவிக்கப்படுகிறது. மறு தரப்பில் யதார்த்தத்தை சாத்தியத்திலிருந்து பிரிப்பது புதியதைப் பற்றிய உணர்ச்சியைக் குறைக்கிறது, தொலைக் காட்சியை இழக்க வழிவகுக்கிறது.

சாத்தியமும் யதார்த்தமும் ஒன்றே என்று கருதக் கூடாது; ஏனென்றால் அவை சிக்கலான, அநேகமாகக் கடினமான, நீண்ட நிகழ்வுப் போக்கினால் பிரிக்கப்பட்டிருக்கின்றன; அந்த நிகழ்வுப் போக்கில் சாத்தியம் யதார்த்தமாக மாறுகிறது. உதாரணமாக, சமூக வாழ்க்கையில் சாத்தியம் யதார்த்தம் ஆவதற்குத் தீவிரமான முயற்சிகள் தேவைப்படுகின்றன; மேலும் அது பல்வேறு சமூக சக்திகளின் போராட்டத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறது. நடைமுறையில் சாத்தியமும் யதார்த்தமும் ஒன்றெனக் கருதுவது அசிரத்தையை ஏற்படுத்தும், சாத்தியத்தை யதார்த்தமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு மக்கள் திரளினர் பாடுபடுவதைக் குறைக்கும்.

சூக்குமமான சாத்தியத்திலிருந்து மெய்யான சாத்தியத்தைப் பிரித்து அறிவது அவசியம். சாத்தியம் நிறைவேறுவதற்குரிய நிலைமைகள் அனைத்தும் உருவாகியிருந்தால் அது மெய்யான சாத்தியமாகும். ஒரு சாத்தியம் இயற்கை, சமூகம் ஆகியவற்றின் விதிகளுடன் பொருந்தி முரண்படாமலிருந்தாலும் அதை யதார்த்தமாக மாற்றுவதற்கு இன்றியமையாத நிலைமைகள் இன்னும் ஏற்படாதிருந்தால் அது சூக்குமமான சாத்தியமே.

இந்த நிலைமைகள் உருவெடுக்கின்ற பொழுது சூக்குமமான சாத்தியம் மெய்யான சாத்தியம் ஆகிறது. உதாரண

மாக, 18ம் நூற்றாண்டின் கடைசியிலும் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் கற்பனாவாத சோஷலிஸ்டுகள் சோஷலிசத்துக்கு மாறுகின்ற சாத்தியத்தைப் பற்றிக் கண்ட கனவுகள் சூக்குமமான சாத்தியமே; ஏனென்றால் அதற்குரிய நிலைமைகள் அன்று முதிர்ச்சி அடைந்திருக்கவில்லை. இன்றைய சகாப்தத்தில் அது மெய்யான சாத்தியமாகி விட்டது; உலகத்தின் கணிசமான பகுதியில் அது ஏற்கெனவே யதார்த்தமாகியிருக்கிறது.

சூக்குமமான சாத்தியங்கள் நிறைவேறுகின்ற வாய்ப்பு வெவ்வேறு விதமாக இருக்கிறது. அவற்றில் சில அனேகமாக நிறைவேற முடியாதவையாக இருக்கின்றன; அவை அசாத்தியத்தின் விளிம்பில் இருப்பவை என்று கூறலாம். எனினும் சூக்குமமான சாத்தியமும் அசாத்தியமும் ஒன்று எனக் கருதி விடக் கூடாது. ஏனென்றால் அசாத்தியம் இயற்கை, சமூகம் ஆகியவற்றின் விதிகளுடன் முரண்படுகிறது, அது ஒருபோதும் யதார்த்தம் ஆக முடியாது.

சூக்குமமான சாத்தியங்களுக்கும் மெய்யான சாத்தியங்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடு முக்கியமானதென்றாலும் அது சார்புநிலையானதே. சூக்குமமான சாத்தியங்கள் பல மெய்யான சாத்தியங்களாக மாறுகின்ற வெவ்வேறு கட்டங்களில் இருக்கின்றன. செய்முறை நடவடிக்கையைப் பொறுத்தமட்டில் பிரதானமாக மெய்யான சாத்தியங்களை நோக்கியே கவனத்தைச் செலுத்த வேண்டும். மேலும், மெய்யான சாத்தியங்கள் நிறைவேறுகின்ற வாய்ப்புக்கள் வேறுபடக் கூடும் என்பதை மனத்திலிறுத்த வேண்டும்; மற்றவற்றைக் காட்டிலும் சில விரைவில் நிறைவேறக் கூடியவையாக இருக்கும்.

இயற்கையில் சாத்தியத்தை யதார்த்தமாக மாற்றுவதற்குப் புறவய நிலைமைகள் மட்டுமே போதும். உதாரணமாக, ஒரு காட்டுச் செடியின் விதைகள் தகுந்த மண்

ணில் விழுந்து, போதிய வெப்பமும் ஈரமும் இருக்கு மானால் அவை முளைக்கும். சமூக வாழ்க்கையில் உணர் வும் சித்தமும் கொண்ட மக்கள் செயலாற்றுகின்ற பொழுது சாத்தியம் வேறு முறையில் யதார்த்தமாக மாறுகிறது. இங்கே அந்த மாற்றம் தானாக நடைபெற வில்லை, உணர்வு பூர்வமான மனித நடவடிக்கையின் விளைவாக நடைபெறுகிறது. அதனால்தான் சாத்தியத்தை யதார்த்தமாக மாற்றுவதற்குப் புறவய நிலைமைகள் மட்டும் போதா; மாற்றங்களின் அவசியத்தை உணர்தல், அவற்றுக்காகப் பாடுபடுகின்ற மன உறுதி, மக்கள், வர்க் கங்கள், கட்சி ஆகியவற்றின் அமைப்பு ரீதியான செயல் முதலிய அகவய நிலைமைகளும் இன்றியமையாதவை ஆகும்.

யதார்த்தத்தில் எதிர்நிலையான போக்குகளும் சக்தி களும் நிலவுவதன் காரணமாக ஒரே சமயத்தில் வெவ் வேறு சாத்தியங்கள் தோன்றுவதைக் கருத்தில் கொண் டால் மனிதர்களின் உணர்வு பூர்வமான நடவடிக்கையை அடிப்படையாகக் கொண்டு சாத்தியத்தை யதார்த்தமாக மாற்றுதல் இன்னும் அதிகமான முக்கியத்துவத்தைப் பெறுகிறது. இவற்றில் எந்தச் சாத்தியம் நிறைவேறும் என்பது இந்த சக்திகளின் நடவடிக்கையை, அவற்றுக்கு இடையே நிகழும் போராட்டத்தின் விளைவைக் கணிச மான அளவுக்குப் பொறுத்திருக்கிறது. உதாரணமாக, உலகத்தில் வெப்ப அணு யுத்தம் ஏற்படாமல் தவிர்ப் பதற்குரிய சாத்தியம் இன்று ஏற்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் வேறொரு சாத்தியமும், உலக யுத்தம் மூள் வதற்குரிய சாத்தியமும் இருக்கிறது; ஏனென்றால் ராணுவ தொழில்துறை இணையத்தையும் ஆக்கிரமிப்பு வெறியையும் கொண்ட ஏகாதிபத்தியம் இன்னும் இருக் கிறது. ஆகவே உலக யுத்தத்தைத் தடுப்பது பெருமள வில் சமாதான சக்திகளின் அமைப்பு, ஒருங்கிணைப்பு,

மன உறுதி ஆகியவற்றையும் ஆயுதப் போட்டிக்கு எதிரான போராட்டத்தில், பேரழிவை ஏற்படுத்துகின்ற புதிய ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு எதிரான போராட்டத்தில், பதட்ட நிலைத் தணிவுக்கும் சமாதான சக வாழ்வுக்கும் ஆதரவான போராட்டத்தில் அவற்றின் வீச்சையும் வெற்றிகளையும் பொறுத்திருக்கிறது.

சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றத்துக்குரிய பண்பு ரீதியில் புதிய வாய்ப்புக்களை மட்டுமல்லாமல் ஒப்பிடவியலாத வகையில் மாபெரும் வாய்ப்புக்களைக் கொண்டிருப்பது முதலாளித்துவத்தைக் காட்டிலும் சோஷலிசத்தின் மேம்பாடுகளில் ஒன்றாகும். இதற்குக் காரணம் சோஷலிசத்தின் இயல்பிலேயே அடங்கியிருக்கிறது. ஏனென்றால் சோஷலிச அமைப்பில் உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமை ஒழிக்கப்பட்டு விட்டது, அங்கே சுதந்திரமான உழைப்பாளிகள் பொருளாயத மதிப்புக்களை உற்பத்தி செய்கிறார்கள். சமூக, அரசியல் மற்றும் சித்தாந்த ஒற்றுமை காரணமாக சோஷலிசத்தின் கீழ் முன்னேற்றத்தை எல்லோரும் ஆதரிக்கிறார்கள். இன்றியமையாத மாற்றங்களை எதிர்க்கின்ற வர்க்கங்களோ அல்லது அமைப்பு ரீதியான வேறு சமூக சக்திகளோ கிடையாது. எனினும் சோஷலிஸ்ட் சமூகத்தில் புதிய சாத்தியங்கள் தாமாகவே நிறைவேறுவதில்லை; அதற்கு முயற்சிகளும் போராட்டமும் அவசியப்படுகின்றன. இந்தப் போராட்டம் வர்க்கங்களின் போராட்டம் அல்ல, பிற்போக்கையும் பழமைவாதத்தையும் தேக்க நிலைமையையும் எதிர்த்து அதிகப் பெரும்பான்மையான மக்கள் நடத்துகின்ற போராட்டம் இது என்பது உண்மையே. அதனால்தான் பகை முரணியல்பான எந்த சமூகத்தையும் காட்டிலும் சோஷலிசத்தின் கீழ் புதியது மிகவும் முழுமையாகவும் வெற்றிகரமாகவும் அமுலாக்கப்படுகிறது.

அத்தியாயம் ஒன்பது

இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் அறிவுத் தத்துவம்

மனிதனுடைய உணர்வில் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்ற நிகழ்வுப் போக்கு என்ற முறையில் அறிதல்

உலகம் அறிந்து கொள்ளப்படக் கூடியதா, மனித சிந்தனை உண்மையைப் புரிந்து கொள்வதற்குரிய திறமை உள்ளதா என்ற கேள்வி விஞ்ஞானத்துக்கும் செய்முறைக்கும் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. உலகமும் அதன் வளர்ச்சி விதிகளும் அறியக் கூடியவை, நமது அறிவு யதார்த்தத்தை சரியாகப் பிரதிபலிக்கிறது என்றால் இயற்கை மற்றும் சமூகத்தின் அறியப்பட்ட சக்திகளை மனிதகுலத்தின் சேவைக்குப் பயன்படுத்த முடியும்.

மனிதனால் உலகத்தையும் அதன் வளர்ச்சி விதிகளையும் புரிந்து கொள்ள முடியும், உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்கு மனிதன் இந்த அறிவைப் பயன்படுத்த முடியும் என்று மார்க்சிய-லெனினியத் தத்துவ ஞானம் அனுமானிக்கிறது. இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் அறிவுத் தத்துவம் உலகத்தை மனிதன் அறிவதற்கும், அவ்விதமாகப் பெற்ற அறிவைச் செய்முறையில் உபயோகிப்பதற்குமான முறைகளையும் வடிவங்களையும் சுட்டிக் காட்டுகிறது. சுற்றுப்புற உலகம் புறநிலையாக இருக்கிறது, அது மனித உணர்வில் பிரதிபலிக்

கப்படுகிறது என்ற கருதுகோளை இத்தத்துவம் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. யதார்த்தத்திலுள்ள பொருட்களும் நிகழ்வுகளும் மனிதனுடைய புலனுணர்ச்சி உறுப்புக்களின் மீது தாக்கம் செலுத்தி புலனுணர்ச்சிகளையும் புலனறிவையும் ஏற்படுத்துகின்றன, இவற்றின் அடிப்படையில் மனிதன் கருதுகோள்களை உருவாக்குகிறான் என்பது இதன் பொருளாகும். புற உலகம் நம்முடைய அனைத்து அறிவுக்கும் தோற்றுவாயாக இருக்கிறது.

ஆனால் அறிதல் நிகழ்வுப் போக்கு சுற்றுப்புற உலகத்தைச் செயலற்ற முறையில் பிரதிபலிப்பதல்ல. மக்கள் இயற்கையையும் சமூகத்தையும் சுறுசுறுப்பாக மாற்றியமைக்கிறார்கள். இந்த நடவடிக்கை அவர்களுக்கு முன்னால் குறிப்பிட்ட பிரச்சினைகளை எழுப்புகிறது; அவற்றைத் தீர்ப்பதற்கு இயற்கை மற்றும் சமூகத்தைப் பற்றிய விதிகளை அறிதல் அவசியமாகிறது. ஆகவே அறிதல் என்பது யதார்த்தத்தின் சுறுசுறுப்பான, குறி வழிப்பட்ட பிரதிபலிப்பே தவிர அதைப் பற்றி செயலற்ற முறையில் தியானம் செய்வதல்ல.

இயக்கவியல் பொருள்முதல்வாதம் மனித அறிதலை சமூக வளர்ச்சியின் விளைவு, மனிதன் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைச் சுறுசுறுப்பாக மாற்றியமைப்பதன் பயன் என்று பார்க்கிறது. இயற்கையையும் சமூகத்தையும் மாற்றியமைத்தலை நோக்கமாகக் கொண்டு மனிதன் செய்கின்ற பொருளாயத நடவடிக்கை அறிதலின் அடிப்படையாகவும் அதன் குறிக்கோளாகவும் இருக்கிறது. அறிதலின் எல்லா வடிவங்களும் நடைமுறை நிகழ்வுப் போக்கில், கூட்டு மனித உழைப்பில் உருவெடுக்கின்றன. மனிதன் சமூகத்தில் வாழ்கின்ற பொழுது, முந்திய தலைமுறையினரால் திரட்டப்பட்டு உற்பத்திக் கருவிகளில் கெட்டிப்படுத்தப்பட்டு, மொழி, விஞ்ஞானம், கலாசாரம் இதர

வற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற அனுபவத்தைப் பயன்படுத்துகின்ற பொழுது உலகத்தை அறியத் தொடங்குகிறான்.

மார்க்சிய-லெனினியத்தின் மூலவர்கள் அறிதலின் இயக்கவியலை எடுத்துக் காட்டினார்கள். இயக்கவியல் பொருள்முதல்வாத நோக்கின்படி அறிதல் என்பது முடிவில்லாத நிகழ்வுப் போக்கு; அதில் மனித சிந்தனை ஆராயப்படுகின்ற பொருளின் சாராம்சத்தைப் படிப்படியாக நெருங்கி வருகிறது. அறியாமையிலிருந்து அறிவுக்கு, அரைகுறையான, பரிபூரணமில்லாத அறிவிலிருந்து அதிக முழுமையான, அதிகத் துல்லியமான அறிவை நோக்கிச் சிந்தனையின் இயக்கம் அது. அறிவு காலங்கடந்து போன தத்துவங்களுக்குப் பதிலாகப் புதிய தத்துவங்களை ஏற்படுத்தியும் பழைய தத்துவங்களையும் கருதுகோள்களையும் சரிப்படுத்தியும் முன்னேறிக் கொண்டிருக்கிறது, யதார்த்தத்தின் மேலும் புதிய அம்சங்களை விளக்குகிறது.

அறிதலின் இயக்கவியல்

அறிதல் என்பது தொடக்கத்திலிருந்து இறுதி வரை ஒரு இயக்கவியல் நிகழ்வுப் போக்கு; உயிரோட்டமுள்ள நேரடியான புலனறிவிலிருந்து சூக்குமமான சிந்தனைக்கும் பிறகு செய்முறைக்கும் முன்னேறுகின்ற இயக்கம். "உயிரோட்டமுள்ள புலனறிவிலிருந்து சூக்குமமான சிந்தனைக்கும், **அதிலிருந்து செய்முறைக்கும்**—இதுவே **உண்மை** பற்றிய அறிதலின், புறநிலையான யதார்த்தம் பற்றிய அறிதலின் இயக்கவியல் பாதையாகும்" என்று லெனின் எழுதினார்.*

* V. I. Lenin, *Collected Works*, Vol. 38, p. 171.

ஆகவே அறிதலில் இரண்டு நிலைகள் இருக்கின்றன: முதலாவதாக, புலனுணர்ச்சி அறிதல் அல்லது உயிரோட்டமுள்ள புலனறிவு; இரண்டாவதாக, விவேகமுள்ள அறிதல் அல்லது சூக்குமமான சிந்தனை. செய்முறையே அறிதலுக்கு அடிப்படையாக இருக்கிறது. இந்த இரண்டு நிலைகளிலும் அறிதல் தனக்குரிய ஸ்தூலமான வடிவங்களைக் கொண்டிருக்கிறது. புலனுணர்ச்சி அறிதல் மூன்று வடிவங்களைக் கொண்டிருக்கிறது: புலனுணர்ச்சி, புலனறிவு, எண்ணம்.

மனிதன் உலகத்தைப் பிரதிபலிப்பதன் ஆரம்ப வடிவமாகப் புலனுணர்ச்சிகள் இருக்கின்றன. புலனுறுப்புக்களின் மீது பொருளாயதப் பொருட்களின் நேரடியான தாக்கத்தின் விளைவாக இவை தோன்றுகின்றன. பொருட்களின் மிக மிக வெவ்வேறான இயல்புகள் புலனுறுப்புக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியும். நாம் ஒரு பொருளின் திடத் தன்மையைத் தொட்டு உணர முடியும்; ஒலிகள், நிறங்கள் மற்றும் இதரவற்றை அறிய முடியும். வெவ்வேறு பொருட்களும் நிகழ்வுகளும் புலனுறுப்புக்களின் மீது வெவ்வேறு வழிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சில உதாரணங்களில் புலனுறுப்புக்கள் பொருட்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்கின்றன. உதாரணமாக, இனிப்பு, கசப்பு, புளிப்பு, எதிர்விசைப்பு, கரடுமுரடான தன்மை, மென்மை, இதரவை பற்றிய உணர்ச்சிகள் இவ்வாறு தோன்றுகின்றன. வேறு உதாரணங்களில் நாம் பொருளைத் தொலைவிலிருந்து புலனுறுப்பின் மூலம் உணர்கிறோம். ஒரு பொருளின் பிரதிபலிப்பு அல்லது கதிர்வீச்சு ஒளி விழித்திரையின் மீது பாதிப்பதன் மூலம் அதன் காட்சி உருவம் ஏற்படுகிறது. ஆனால் ஒரு பொருள் நமது புலனுறுப்புக்கள் மீது எப்படிச் செயல்பட்டாலும் அவற்றின் மீது வெளித் தூண்டுவிப்பியின்

பாதிப்பின் விளைவாகவே புலனுணர்ச்சி தோன்றுகிறது.

புலனுணர்ச்சிகள் நம்முடைய எல்லா அறிவுக்கும் தோற்றுவாய். ''புலனுணர்ச்சிகளின் மூலமாக இல்லாமல் வேறு முறையில் பொருட்களின் வடிவங்களைப் பற்றியோ, இயக்கத்தின் வடிவங்களைப் பற்றியோ நாம் எதையும் அறிய முடியாது. இயங்கும் பருப்பொருள் நம்முடைய புலனுறுப்புக்களின் மீது செயல்படுவதால் புலனுணர்ச்சிகள் தோற்றுவிக்கப்படுகின்றன.''*

புலனுணர்ச்சிகள் புறநிலையான யதார்த்தத்தின் அகநிலைத் தோற்றமாக இருப்பதால் அவை நம்முடைய அறிவின் தோற்றுவாயாக இருக்கின்றன. புலனுணர்ச்சிகள் வடிவத்தில் அகநிலையானவை; ஏனென்றால் அவற்றின் தோற்றம் புலனுறுப்புக்களின் நடவடிக்கையுடன் தொடர்புடையது. அதே சமயத்தில் அவை உள்ளடக்கத்தில் புறநிலையானவை; ஏனென்றால் அவை பொருட்களின் புறநிலையான இயல்புகளைப் பிரதிபலிக்கின்றன. உதாரணமாக, பொருட்களின் வாசனை மற்றும் இதர இயல்புகளும் பண்புகளும் ஒவ்வொரு மனிதனாலும் தனித்தனியாகவும் அகநிலையாகவும் அறியப்படுகின்றன. ஆனால் இந்த அகநிலைத் தோற்றம் பொருட்களின் புறநிலை இயற்கைக்குப் பொருந்துகிறது. உதாரணமாக, ஒரு உணவுப் பொருளின் வாசனை அதன் புறநிலையான இயல்புகளில் ஒன்றைப் பிரதிபலிக்கிறது.

புலனுணர்ச்சிகள் புறநிலையாக இருக்கின்ற யதார்த்தத்தைச் சரியாகப் பிரதிபலிக்கின்றன, வெளியுலகத்தின் நிகழ்வுகளைப் பற்றி நமக்குச் சரியான முறையில் தெரிவிக்கின்றன.

புலனறிவு புலனுணர்ச்சி அறிதலில் மேலும் அதிகச்

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 14, p. 302.

சிக்கலான வடிவம் ஆகும். இது புலனுறுப்புக்களின் மீது நேரடியான பாதிப்பு விளைக்கின்ற பொருளை முழுமையாகப் பிரதிபலிக்கிறது. வழக்கமாக, நமது புலனுணர்ச்சிகள் ஒன்றிலிருந்து ஒன்று தனித்திருப்பதில்லை, அவை குறிப்பிட்ட சேர்க்கையில் நமக்குக் கிடைக்கின்றன. ஒரு பொருள் தனது வெவ்வேறு இயல்புகளால் வெவ்வேறு புலனுறுப்புக்களின் மீது விளைவை ஏற்படுத்துகிறது.இந்த இயல்புகள் அப்பொருளில் பிரிக்க முடியாத ஒருமையில் நிலவுகின்றன. தனித்தனியான புலனுணர்ச்சிகள் ஒரு பொருளின் முழுமையான தோற்றமாக ஒன்று சேர்கின்ற செயல்முறையில்தான் புலனறிவு தோன்றுகிறது.

மனிதன் எப்பொழுதோ புலனுறுப்புக்களால் அறிந்ததை நினைவில் பாதுகாத்து வைப்பதற்கும் பொருட்கள் இல்லாத சமயத்தில் அவற்றின் தோற்றங்களைத் திரும்பவும் ஏற்படுத்திக் கொள்வதற்குமான திறமையைக் கொண்டிருக்கிறான்.குறிப்பிட்ட தருணத்தில் புலனுறுப்புக்களைப் பாதிக்காத ஒரு பொருளின் இவ்வாறு மறுபடி உண்டாக்கப்பட்ட தோற்றம் எண்ணம் எனப்படும்.

எண்ணங்கள் பொதுமைப்படுத்தலை சாத்தியமாக்குகின்றன. ஏனென்றால் நினைவில் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்ற தோற்றங்களைக் கொண்டு ஒப்பிடுதல்,இணைகளைக் கண்டுபிடித்தல், பாகுபடுத்தல் ஆகியவற்றை மனிதனால் செய்ய முடிகிறது; இவற்றால் பொருட்களின் அடையாள மாதிரியான அம்சங்கள் பிரித்து அறியப்படுகின்றன. ஆகவே புலனறிவு பொருட்களை அவற்றின் எல்லா ஸ்தூலமான இயல்புகளிலும் விவரங்களிலும் பிரதிபலிக்கிறது என்றால் எண்ணங்கள் அவற்றின் பொதுவான அம்சங்களைத் தனியே எடுத்துக் காட்டுகின்றன; இது பொருட்களின் சாராம்சத்தை அறிய உதவுகிறது. ஏதேனும் ஒரு பொருளைப் பற்றிய எண்ணம் நமக்கு

இருக்கும் போது நாம் அதன் சாராம்சத்தையும் தனித் தன்மைகளையும் சீக்கிரமாகப் புரிந்து கொள்கிறோம்.

புலனுணர்ச்சிகள், புலனறிவு, எண்ணங்கள், அதாவது புலனுணர்ச்சி அறிதலின் வடிவங்கள் யதார்த்தத்தின் பிம் பங்களாக இருக்கின்றன. அந்தப் பிம்பங்கள் புறநிலை யில் இருக்கின்ற பொருட்களுடன் எந்த அளவுக்குப் பொருந்திவருகின்றன என்பது நடைமுறையில் சரி பார்க்கப்படுகிறது.

ஆனால் மனிதன் புலனுணர்ச்சி அறிதல் கட்டத்துடன் நின்று விடுவதில்லை. அவன் அதன் எல்லைகளுக்கு அப் பாலும் செல்கிறான்; பொருட்களின் சர்வப்பொதுவான, இன்றியமையாத, முக்கியமான இயல்புகளையும் உறவு களையும், புலனுணர்ச்சி அறிதலுக்கு உட்படாத அவற் றின் முறைப்படியான தொடர்புகளையும் அறிகிறான். இது சிந்தனையின் உதவியினால் பகுத்தறிவு அல்லது தர்க்க ரீதியான அறிதல் கட்டத்தில் நடைபெறுகிறது. ஒரு தருணத்தில் பார்க்க முடியாததை அல்லது முற்றிலும் நேரடியாகப் பார்க்க முடியாததை அறியக் கூடிய ஆற்றல் மனித சிந்தனைக்கு இருக்கிறது. உதாரணமாக, நம்முடைய புலனுணர்ச்சி உறுப்புக்களால் பூமியில் உயிர்களின் தோற்றத்தை அல்லது ஒளிக்கதிரின் வேகத்தைத் தெரிந்து கொள்ள முடியாது; ஆனால் மனிதன் இத்தகைய நிகழ்வுப் போக்குகளையும் புலப்பாடுகளையும் சிந்தனையின் மூலம் அறிதல் சாத்தியம்.

சிந்தனை பொருட்களின் உள்ளார்ந்த, சர்வப்பொது வான தொடர்புகளை எடுத்துக் காட்டுவதற்கும், இயற்கை, சமூகம், அறிதல் ஆகியவற்றின் மாறுதல்களுக்கும் வளர்ச்சிக்கும் உரிய விதிகளைக் கண்டுபிடிப்பதற்கும், சுற்றியுள்ள உலகத்தின் மிகவும் ஆழமான மர்மங்களை உட்புகுந்து காண்பதற்கும் உதவுகிறது.

சிந்தனை என்பது சமூக நடைமுறையின் வரலாற்று ரீதியான வளர்ச்சியின் விளைவு ஆகும். அது யதார்த்தத்தின் பொதுமைப்படுத்தப்பட்ட, இடைப்பட்ட பிரதிபலிப்பாக விளங்குகிறது. சிந்தனை புலனுணர்ச்சி அறிதலின் மூலம் வெளிப்புற உலகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது; புலனுணர்ச்சி உறுப்புக்களின் மூலம் கிடைக்கின்ற விவரங்களை ஆய்ந்து சீர்படுத்துவதே சிந்தனையின் செயலாகும்.

யதார்த்தத்தின் பொதுமைப்படுத்தப்பட்ட அறிதல் என்ற முறையில் சிந்தனை பொருட்கள், புலப்பாடுகள், நிகழ்வுப் போக்குகள் ஆகியவற்றின் பொதுவான, முக்கியமான இயல்புகளை எடுத்துக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. மொழி இல்லா விட்டால் பொதுமைப்படுத்துகின்ற செயல்முறை நடைபெற முடியாது. சிந்தனையும் மொழியும் பின்னிப் பிணைந்துள்ளன. பொருட்களிலும் நிகழ்வுகளிலும் உள்ள பொது அம்சங்களைப் பிரித்துக் காட்டுகின்ற பொழுது நாம் அவற்றை மொழியின் மூலம், சொற்களின் மூலம் வெளியிடுகிறோம். மொழியின் பொதுமைப்படுத்துகின்ற பாத்திரத்தின் மூலமாகவே ஒரு நபர் தன்னுடைய சிந்தனைகளை மற்ற மக்களுக்குத் தெரிவிக்க முடிகிறது; அவர்களுடைய எண்ணங்களைத் தெரிந்து கொள்வதும் அறிவைத் திரட்டித் தெரிவிப்பதும் முடிகிறது.

புலனுணர்ச்சி அறிதலைப் போல சிந்தனையும் திட்டவட்டமான வடிவங்களில் நடைபெறுகிறது. கருதுகோள்கள், அபிப்பிராயங்கள், தீர்மானங்கள் ஆகியவை இந்த வடிவங்களாகும்.

கருதுகோள் என்பது பொருட்கள், நிகழ்வுகளின் பொதுவான, முக்கியமான அம்சங்களைப் பிரதிபலிக்கின்ற சிந்தனை வடிவம் ஆகும். இத்தகைய பொது அம்சங்

களின் மொத்தம் கருதுகோளின் உள்ளடக்கமாக இருக்கிறது. கருதுகோள்கள் மொழியில் தனிச் சொல்லினால் அல்லது சொற்களின் தொடரினால் (உதாரணமாக, ''பருப்பொருள்'', ''அங்கஜீவி'', ''சமூக பொருளாதார அமைப்பு'', இதரவை) எடுத்துரைக்கப்படுகின்றன.

எந்த விஞ்ஞானத்துக்கும் அதற்குரிய கருதுகோள்களின் அமைப்பு இருக்கிறது; அவற்றின் மூலம் அந்த விஞ்ஞானம் கண்டுபிடிக்கின்ற விதிகளை வெளியிட்டு அதன் தொடக்கக் கோட்பாடுகளை வகுத்துரைக்கிறது. உதாரணமாக, பருப்பொருள், உணர்வு, இயக்கம், காரண காரியத் தன்மை, இதரவை தத்துவஞானத்தின் அடிப்படையான கருதுகோள்கள். மதிப்பு, பண்டம், இதரவை அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படையான கருதுகோள்கள்.

விஞ்ஞானக் கருதுகோள்கள் யதார்த்தத்தின் பொதுமைப்படுத்தப்பட்ட பிரதிபலிப்பாக இருக்கின்றன. ஒரு வரலாற்றுக் காலகட்டம் முழுவதிலும் விஞ்ஞானத்தாலும் செய்முறையாலும் திரட்டப்பட்ட அறிவும் அனுபவமும் அவற்றில் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அவை அறிதலின் வளர்ச்சி குறித்த ஒரு வகைத் தொகுப்பாகவும் புறநிலையான உலகை அறிதலில் ஒரு கட்டமாகவும், விஞ்ஞானத் தத்துவம் என்ற சங்கிலியில் முக்கியமான பகுதியாகவும் இருக்கின்றன. விஞ்ஞானம் கருதுகோள்களின் உதவியினால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மாற்றங்களின் காரணத்தையும் அவற்றின் இயல்புகளையும் தனித்தன்மையையும், அவற்றுக்குப் பின்னாலுள்ள விதிகளையும் விளக்க முடியும். அறிதல் துறையில் கருதுகோள்களின் மாபெரும் மதிப்பு இதில்தான் அடங்கியுள்ளது.

சிந்தனை நிகழ்வுப் போக்கில் கருதுகோள்கள் வழக்கமாக அபிப்பிராயங்களின் அம்சங்கள் என்ற முறையில்

செயல்படுகின்றன. அபிப்பிராயம் என்பது சிந்தனையின் ஒரு வடிவம்; அது ஒரு அடையாளம் குறிப்பிட்ட பொருள் அல்லது பொருட்களின் தொகுதியைச் சேர்ந்தது என் பதை (அல்லது பொருட்களுக்கு இடையில் ஒரு உறவை) உறுதிப்படுத்துகிறது அல்லது மறுக்கிறது.

''மனிதன் ஒரு சமூகப் பிறவி'', ''ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் நிலவுகின்ற பின்தங்கிய நிலைமைக்குக் காலனியாதிக்கமே காரணம்'', ''சோஷ லிசம் என்பது சமூக நீதி நிலவுகின்ற சமுதாயம்'' என் பவை போன்ற கருத்துக்கள் அபிப்பிராயங்கள் ஆகும். முதல் கருத்து மனிதனுக்கும் சமூகத்துக்கும் இடையிலுள்ள தொடர்பை வெளியிடுகிறது. இரண்டாவது கருத்து கால னியாதிக்கத்துக்கும் எண்ணற்ற நாடுகளில் நிலவுகின்ற பின்தங்கிய நிலைமைக்கும் இடையிலுள்ள தொடர்பை வெளியிடுகிறது. மூன்றாவது கருத்து சோஷலிசத்துக்கும் சமூக நீதிக்கும் இடையிலுள்ள தொடர்பை வெளியிடு கிறது.

ஒரு அபிப்பிராயத்தைக் காட்சிப் பதிவின் மூலம் நேரடியாகவும் பிற அபிப்பிராயங்களை ஆதாரமாகக் கொண்டு மறைமுகமாகவும் பெற முடியும்.

ஒரு அபிப்பிராயத்திலிருந்து அல்லது சில அபிப்பிரா யங்களிலிருந்து புதிய ஒன்றைப் பெறுகின்ற சிந்தனை வடிவம் தீர்மானம் எனப்படும். எந்த அபிப்பிராயங்களின் பேரில் அந்தத் தீர்மானம் பெறப்படுகிறதோ அவை முற் கூற்றுக்கள் எனப்படும். புதிய அபிப்பிராயம் முடிவு அல்லது விளைவு எனப்படும். இங்கே தீர்மானத்துக்கு ஒரு உதாரணத்தைக் காண்போம்: ''உழைப்பு சோஷ லிஸ்ட் சமூகத்தைச் சேர்ந்த எல்லாக் குடிமக்களுக்கும் உரிமையாகவும் கடமையாகவும் இருக்கிறது. சோவியத் யூனியனைச் சேர்ந்த ஒவ்வொரு குடிமகனும் சோஷலிஸ்ட்

சமூகத்தின் உறுப்பினனாக இருக்கிறான். ஆகவே ஒவ்வொரு சோவியத் குடிமகனுக்கும் உழைப்புக்கு உரிமையும் கடமையும் இருக்கிறது.'' இங்கே முதல் இரண்டு அபிப்பிராயங்களும் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்ற முறையில் புதிய கருத்தைக் கொண்ட ஒரு புதிய அபிப்பிராயத்தைப் பெறுவது சாத்தியமாகிறது. நேரடியாகப் பார்க்க முடியாத, ஆனால் அறியப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்ட நிகழ்வுகளைப் பற்றிய அறிவைப் பெறுவதற்குத் தீர்மானங்கள் அதிகமான அளவில் உபயோகிக்கப்படுகின்றன. தீர்மானங்கள் பல்வேறு கருதுகோள்களின் மெய்மை அல்லது பொய்மையை எடுத்துக் காட்டுவதற்கு, நிலைநாட்டப்பட்ட உண்மைகளுக்கும் விதிகளுக்கும் விளக்கம் தருவதற்கு, கண்டுபிடிக்கப்பட்ட நியதிகளின் அடிப்படையில் விஞ்ஞான முன்னறிவித்தல்களைச் செய்வதற்கு உதவுகின்றன.

அறிதலின் புலனுணர்ச்சிக் கட்டமும் பகுத்தறிவுக் கட்டமும் பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கின்றன. பொருள் அல்லது நிகழ்வின் தனித்தனியான அம்சங்களையும் தொடர்புகளையும் பற்றிய நேரடியான புலனறிவிலிருந்தே விஞ்ஞான ரீதியான அறிதல் தொடங்குகிறது. பின்னர் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இவை பொதுவானதைத் தனியே பிரித்து அறிவதற்குரிய ஆதாரங்களைத் தருகின்றன. அதன் பிறகு பாகுபடுத்தலும் (பொருட்கள் மற்றும் நிகழ்வுகளின் சில இயல்புகள், உறவுகளைப் பிரித்தெடுத்தல்) பொதுமைப்படுத்தலும் (பிரதானமான, நிர்ணயகரமான இயல்புகளையும் உறவுகளையும் இனங்காணுதல்) நடைபெறுகின்றன. அதன் பிறகு விஞ்ஞான அறிதல் பொருட்கள் மற்றும் நிகழ்வுப் போக்குகளின் உள் தொடர்புகளையும், அவற்றின் பரஸ்பர பாதிப்பையும் மாற்றங்களையும், அவற்றின் வளர்ச்சி

யில் உள்ள தீர்மானமான நியதிகளையும் வெளிப்படுத்தும். நம்முடைய அறிவு ஆழமடைகின்ற பொழுது இத்தொடர்புகள், உறவுகள்—அந்தப் பொருள் கூட—ஆகியவற்றின் பிரதிபலிப்பு அதனுடைய புலனுணர்ச்சி பிம்பத்தை இழப்பதற்கு முற்படுகிறது; ஆனால் அறிதல் நிகழ்வுப் போக்கு தொடர்ந்து முன்னேறுகிறது, ஏனென்றால் விஞ்ஞானப் பாகுபடுத்தல் நேரடியாகப் பார்க்க முடியாதவற்றைப் புரிந்து கொள்வதை சாத்தியமாக்குகிறது. புலனுணர்ச்சி அறிதலைப் போல சிந்தனை நடைமுறையால், செய்முறையான மனித தேவைகளால் தகவமைக்கப்படுகிறது, அவற்றோடு இணைக்கப்பட்டிருக்கிறது, செய்முறையிலிருந்து பெறப்பட்ட விவரங்களை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே நினைவிலிறுத்துவது அவசியம்.

மனித அறிதலைப் பற்றிய விதி தோற்றத்திலிருந்து சாராம்சத்துக்கு, வெளிப்புறத்திலிருந்து உட்புறத்துக்கு முன்னேறிச் செல்வதுதான். விஞ்ஞானத்தின் மொத்த வரலாற்றிலும் இது நன்கு புலப்படும். உதாரணமாக, மார்க்சுக்கு முந்திய பொருளியலாளர்கள் பலர் பண்டங்களின் வெளிப்புற இயல்புகளை, அதாவது அவற்றின் உபயோகம் (பயன் மதிப்பு), பரிவர்த்தனைத் தகுதி (பரிவர்த்தனை மதிப்பு) ஆகியவற்றைக் கண்டார்கள். ஆனால் பண்டங்களின் இயல்புகளின் வெளித் தோற்றங்களான இவை ஆழமான உள் தொடர்புகளை மூடிமறைக்கின்றன. மார்க்ஸ் இத்தொடர்புகளைக் கண்டுபிடித்தார்; எல்லாப் பண்டங்களிலும் அவற்றின் உற்பத்திக்கு அவசியமான சமூக உழைப்பு என்பது பொதுக் கூறாக இருப்பதை நிறுவினார்.

பண்டம் இரட்டைத் தன்மையைக் கொண்டிருக்கிறது; அது பயன் மதிப்பு மற்றும் பரிவர்த்தனை மதிப்பின்

ஒற்றுமை. ஆகவே பண்டத்தில் அடங்கியுள்ள உழைப்பும் இரட்டைத் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். மார்க்ஸ் அதைக் கண்டுபிடித்த பிறகு பண்டத்தின் மதிப்பு உழைப்பின் சமூக இயல்பை, மனிதர்களுக்கு இடையில் சமூக உறவுகளை வெளியிடுகிறது என்பதை எடுத்துக் காட்டினார்.

விஞ்ஞான தத்துவார்த்தச் சிந்தனை உலகத்தை அறிதலிலும் உண்மையைப் புரிந்து கொள்வதிலும் வலிமையான ஆயுதமாக இருப்பதில் அதன் மாபெரும் முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது.

உண்மையைப் பற்றிய மார்க்சிய-லெனினியக் கோட்பாடு

உண்மையைப் புரிந்து கொள்வதே விஞ்ஞான அறிதலின் முக்கியமான கடமை ஆகும். புறநிலை யதார்த்தம் மனிதனால் சரியாக, பிழையின்றிப் பிரதிபலிக்கப்படுதல், அது மெய்யாக இருக்கின்ற முறையின்படி அப்படியே உணர்வில் மீண்டும் உண்டாக்கப்படுதல் என்பதே உண்மை என்று மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் கருதுகிறது. யதார்த்தத்துடன் பொருந்துகின்ற புறநிலை உலகத்தைப் பற்றிய அறிவு உண்மை எனப்படும். அறிவு யதார்த்தத்துடன் பொருந்தாவிட்டால் அது மருட்சி எனப்படும்.

நம்முடைய அறிவு புறநிலையான உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கிறது, உண்மை எப்பொழுதும் புறநிலையானது என்று இயக்கவியல் பொருள்முதல்வாதம் கருதுகிறது.

உதாரணமாக, ''மனிதனுக்கு முன்பே பூமி ஏற்பட்டிருந்தது'' என்ற அபிப்பிராயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இது உண்மையானது. உயிரினங்கள் தோன்று

வதற்கு முன்னர் நூற்றுக் கணக்கான மில்லியன் வருடங்களாக பூமி உயிர் இல்லாத கிரகமாக இருந்தது; அதில் சுமார் 2.5—3 மில்லியன் வருடங்களுக்கு முன்பாகத்தான் மனிதன் தோன்றினான் என்பதை இயற்கை விஞ்ஞானம் எடுத்துக் காட்டுகிறது.

மனிதனை அல்லது மனிதகுலத்தைச் சார்ந்திராத அறிவின் உள்ளடக்கம் புறநிலையான உண்மை எனப் படும்.

புறநிலையான உண்மையை அங்கீகரித்தல் பிரதிபலிப்பைப் பற்றிய பொருள்முதல்வாதத் தத்துவத்திலிருந்து தோன்றுகிறது. நம்முடைய உணர்வு புறநிலை யதார்த்தத்தை, மெய்யாகவே இருக்கின்ற உலகத்தைப் பிரதிபலிக்கிறது, பிரதி செய்கிறது. ''நமது புலனுணர்ச்சிகளைப் புற உலகத்தின் பிம்பங்களாகக் கருதுவது, புறநிலையான உண்மையை அங்கீகரிப்பது, அறிதல் பற்றிய பொருள் முதல்வாதத் தத்துவத்தை மேற்கொள்ளுதல்—இவை அனைத்தும் ஒன்றே'' என்று லெனின் எழுதினார்.*

புறநிலையான உண்மையைப் பற்றிய மார்க்சிய-லெனினியக் கோட்பாடு விஞ்ஞானத்துக்கும் செய்முறை நடவடிக்கைக்கும் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. விஞ்ஞான விவரங்களைத் தக்க முறையில் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை இது வற்புறுத்துகிறது. மனித நடவடிக்கைகளில் உண்மைக்கு விசுவாசமாக இருப்பது மன உறுதி, நேர்மை, துணிவுடைமை ஆகியவற்றுடன் பின்னிப் பிணைந்திருக்கிறது.

மனிதன் புறநிலையான உண்மையை எப்படி அடை

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி. இ. லெனின், **இயக்கவியல் பொருள்முதல்வாதம்,** பக்கம் 246.

கிறான்? அவனுடைய கருதுகோள்கள், அபிப்பிராயங்கள், தத்துவங்களில் அது பிண்டப் பிரமாணமாக, முழுமையான, தனிமுதலான ஒன்றாகத் தோன்றுகிறதா அல்லது உத்தேசமானதாகவும் அரைகுறையானதாகவும் தோன்றுகிறதா? தனிமுதலான உண்மைக்கும் சார்புநிலையான உண்மைக்கும் இடையிலுள்ள பரஸ்பர உறவை ஆராய்கின்ற பொழுது இந்தக் கேள்விக்கு விடை கிடைக்கிறது.

தனிமுதலான உண்மைக்கும் சார்புநிலையான உண்மைக்கும் இடையிலுள்ள வேறுபாடு அறிதலின் ஆழத்தைப் பற்றிய, யதார்த்தத்தைப் பற்றி நம்முடைய அறிவின் முழுமையைப் பற்றிய வேறுபாடே ஆகும். தனிமுதலான உண்மை, சார்புநிலையான உண்மை என்னும் கருத்துக்கள் ஏற்கெனவே அறியப்பட்டுள்ளவற்றுக்கும் இனிமேல் அறியப்பட இருப்பவற்றுக்கும் இடையில், துல்லியமாகக் கூறப்படப் போகின்றவற்றுக்கும் மறுக்கப்பட முடியாதபடி நிலைத்திருக்கப் போவதற்கும் இடையில் உள்ள பரஸ்பர உறவை எடுத்துக் காட்டுகின்றன.

தனிமுதலான உண்மை என்னும் கருத்து இரண்டு அம்சங்களைக் கொண்டிருக்கிறது. முதலாவதாக, அது யதார்த்தத்தின் முற்றிலும் துல்லியமான, பூரணமான, எல்லாவற்றையும் உள்ளடக்கிய பிரதிபலிப்பு; இரண்டாவதாக, அது புறநிலையான உண்மையின் மறுக்கப்பட முடியாத பகுதி.

சார்புநிலையான உண்மை கிட்டத்தட்ட சரியான அறிவு; அது அரைகுறையானது, அறிதல் செயல்முறையில் மேன்மேலும் நிறைவாக்கப்பட்டு, துல்லியமாக்கப்பட்டுத் திருத்தப்படுகிறது. சார்புநிலையான உண்மை வரலாற்று ரீதியில் வரையறுக்கப்பட்டுள்ள நமது அறிவை, அறிதலின் குறிப்பிட்ட கட்டத்தில் அதன் வரம்புக்கு உட்பட்ட தன்மையை வெளியிடுகிறது.

ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் செய்முறை, விஞ்ஞானம் மற்றும் உற்பத்தி அடைந்துள்ள வளர்ச்சித் தரம் மனித அறிவை நிர்ணயிக்கிறது. விஞ்ஞானத்தின் அடிப்படைக் கருதுகோள்களும் விதிகளும் குறிப்பிட்ட நிலைமைகளில் நிலவுகின்ற தொடர்புகளையும் உறவு களையும் பிரதிபலிக்கின்றன. விஞ்ஞான முன்னேற்றம் என்பது புதிய தகவல்களையும் விதிகளையும் கண்டுபிடிப் பதை மட்டும் குறிக்கவில்லை; இவ்விதிகள் எத்தகைய நிலைமைகளின் கீழ் செல்தகைமையைக் கொண்டிருக் கின்றன என்பதைத் துல்லியப்படுத்துவதையும் குறிக் கிறது. ஆகவே விஞ்ஞான உண்மைகள் யதார்த்தத்தைப் பற்றி அனைத்தையும் உள்ளடக்கிய அறிவைத் தரு வதில்லை, அவை மாற்றப்பட்டுத் துல்லியமாக்கப்படு கின்றன என்ற அர்த்தத்தில் அவை சார்புநிலையானவை.

உதாரணமாக, பருப்பொருளைப் பற்றிய அணுத் தத்துவம் பழங்காலம் தொட்டே இருந்து வந்திருக்கிறது. இத்தத்துவத்தில் பருப்பொருள் அணுக்களால் ஆனது என் னும் சரியான கருத்துடன் (இது தனிமுதலான உண்மை) அணுக்கள் பிரிக்கப்பட முடியாதவை என்னும் கருத் தும் (இது வெறும் கற்பனையே) சேர்ந்திருந்தது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் எலெக்ட்ரான், கதிரியக்கம் மற் றும் இதரவை கண்டுபிடிக்கப்பட்டன. இவை விஞ்ஞானத் துறையில் நம்முடைய அறிவைத் துல்லியப்படுத்திக் கொள்வதற்கு, அணுக்கள் பிரிக்கப்பட முடியாதவை என்னும் தவறான கருத்தைக் கைவிடுவதற்கு, சரியான கருத்துக்களை ஆழப்படுத்தி விரிவுபடுத்துவதற்கு உதவி செய்தன.

தனிமுதலான உண்மையை சார்புநிலையான உண் மைக்கு எதிராக நிறுத்தக் கூடாது; ஏனென்றால் உண்மை என்பது ஒரு நிகழ்வுப் போக்கு. அது அரைகுறையான,

உத்தேசமாகச் சரியான அறிவிலிருந்து முழுமையான, அதிகத் துல்லியமான அறிவை நோக்கி முன்னேற்றமடைகின்ற சிந்தனைப் போக்கு. தனிமுதலான உண்மையை நோக்கிச் செல்கின்ற பாதையில் சார்புநிலையான உண்மை ஒரு கட்டமே தவிர வேறில்லை.

மிக முக்கியமான இந்த அடிப்படைக் கருத்துக்களை விளக்குகின்ற பொழுது லெனின் பின்வருமாறு எழுதினார்: ''நவீன பொருள்முதல்வாதத்தின், அதாவது மார்க்சியத்தின் நோக்கிலிருந்து பார்த்தால் நமது அறிவு புறநிலையான, தனிமுதலான உண்மையை நெருங்குகின்ற **வரம்புகள்** வரலாற்று நிபந்தனைகளுக்கு உட்பட்டவை; ஆனால் இந்த உண்மை இருப்பது **நிபந்தனையற்றது,** நாம் அதை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்னும் மெய்விவரமும் நிபந்தனையற்றது.''* எனவே நமது அறிவு தனிமுதலான உண்மையைக் கொண்டிருக்கவில்லை என்ற அர்த்தத்தில் சார்புநிலையானது அல்ல; நம்முடைய அறிவு இந்த உண்மையைப் படிப்படியான, வரலாற்று நிபந்தனைகளுக்கு உட்பட்ட செயல்முறையில் அணுகுகிறது என்னும் அர்த்தத்தில் அது சார்புநிலையானது.

யதார்த்தத்துடன் பொருந்துகின்ற அறிவே உண்மையான அறிவு. யதார்த்தத்தில் மாறுதல்கள் ஏற்படுகின்ற பொழுது அதைப் பற்றிய நம்முடைய அறிவும் அதற்குத் தகுந்த முறையில் மாற வேண்டும். உண்மை சூக்குமமானதல்ல, அது எப்பொழுதுமே ஸ்தூலமானது என்பது இதன் அர்த்தமாகும். அது உருவான நிலைமைகள், காலம் இடம் மற்றும் வரலாற்றுத் தனித்தன்மைகள் ஆகியவற்றை சர்வப்பொதுவான முறையில் ஆராய்ச்சி செய்து கணக்கிலெடுப்பதன் மூலமாகவே நாம் உண்மையை அடை

---

* **அதே நூல்,** பக்கம் 255.

கிறோம்; ஏனென்றால் சில நிலைமைகளில் உண்மையாக இருப்பது வேறு நிலைமைகளில் பொய்யாக இருக்க முடியும், மறுதலை.

ஸ்தூலமான நிலைமைகளைக் கணக்கிலெடுப்பது சமூக வாழ்க்கையில் குறிப்பிடத் தக்க அளவுக்கு முக்கியமாகும். ஏனென்றால் இத்துறையில் சில காரணிகள் மாற்றமடைகின்றன, வேறு காரணிகள் தோன்றுகின்றன, இதரவை; எனவே இத்துறை தொடர்ச்சியாக மாற்றமடைந்து கொண்டிருக்கிறது.

தனிமுதலான உண்மை மற்றும் சார்புநிலையான உண்மையின் இயக்கவியலைப் புரிந்து கொள்ளாமை, உண்மையின் ஸ்தூலமான இயல்பைப் புறக்கணிப்பது வறட்டுச் சூத்திரவாதம், சார்புநிலைவாதம் என்னும் இரண்டு முனைக் கோடி நிலைமைகளுக்கு இட்டுச் செல்கிறது. வறட்டுச் சூத்திரவாதம் அறிதலின் தனிமுதலான கட்டத்தை மிகைப்படுத்தி அதன் சார்புநிலையான தன்மையை மறுக்கிறது. சில கருதுகோள்கள், முடிவுகள் அல்லது சூத்திரங்களை அவற்றின் ஸ்தூலமான நிலைமைகள், இடம், காலத்திலிருந்து தனியாகப் பிரித்துத் தனிமுதலாக்குவதன் விளைவு இது.

வாழ்க்கையுடனும் செய்முறையுடனும் தொடர்பு இல்லாமல் போய் விட்ட வறட்டுச் சூத்திரவாதிகள் உறைந்து போன கருதுகோள்களையும் சூத்திரங்களையும் கையாள்கிறார்கள். எந்த நிகழ்வுகள் அல்லது சம்பவங்களுக்கு இவற்றைப் பயன்படுத்தக் கூடாதோ அவற்றுக்கு இவற்றைப் பயன்படுத்துகிறார்கள். வறட்டுச் சூத்திரவாதம் மனப்பாடம் செய்யப்பட்ட சூத்திரங்களை யாந்திரிகமாக ஒப்பித்தல், சடங்கு முறையான அணுகு முறைகள், அதிகார வர்க்க நடைமுறைகள் மற்றும் இதரவற்றில் காணப்படும்.

சார்புநிலைவாதம் அறிதலின் சார்புநிலையான, நிபந்தனைக்கு உட்பட்ட தன்மையைத் தனிமுதலாக்குகிறது, தனிமுதலான உண்மையை மறுக்கிறது. அறிவுத் தத்துவத்துக்கு அடிப்படை என்ற முறையில் சார்புநிலைவாதம் அறிவின் சார்புநிலையான தன்மையை அங்கீகரிப்பதுடன் மனித சமூகத்திலிருந்து சுதந்திரமாக இருக்கின்ற எந்தப் புறநிலையான அளவுகோல் அல்லது மாதிரிப்படிவத்தையும் (நம்முடைய சார்புநிலையான அறிவு எப்பொழுதும் அதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது) மறுத்தலையும் உள்ளடக்கியிருக்கிறது என்று லெனின் எழுதினார். சார்புநிலைவாதம் அறிதலின் சாத்தியத்தையும் உண்மையான விஞ்ஞான அறிவையும் மறுப்பதற்கு, அகநிலைவாதத்துக்குத் தவிர்க்க முடியாத வகையில் இட்டுச் செல்கிறது. சார்புநிலைவாதமும் வறட்டுச் சூத்திரவாதமும் வலது மற்றும் ''இடது'' சந்தர்ப்பவாதிகளாலும் எல்லா ரகங்களையும் சேர்ந்த திருத்தல்வாதிகளாலும் எப்பொழுதும் மிகவும் அதிகமாக உபயோகிக்கப்படுகின்றன. இவர்கள் தம்மை ''படைப்புச் சக்தியுள்ள மார்க்சிய-லெனினியத்தின்'' ஒரே பிரதிநிதிகள் என்று அடிக்கடி வர்ணித்துக் கொள்வதும் உண்டு.

அறிதலில் செய்முறையின் பாத்திரம்

செய்முறை என்பது மனிதனுடைய குறிவழிப்பட்ட சமூக நடவடிக்கை; அது இயற்கையையும் சமூகத்தையும் மாற்றியமைக்கிறது. அதில் முதலாவதாக, பொருளாயத உற்பத்தி நிகழ்வுப் போக்கு, இரண்டாவதாக, வர்க்கங்களின், பெருந்திரளான மக்களின் சமூக அரசியல் மற்றும் புரட்சிகர மாற்றியமைக்கும் நடவடிக்கை, மூன்றாவதாக,

விஞ்ஞான ஆராய்ச்சிகளும் பரிசோதனைகளும் அடங்கியிருக்கின்றன.

''வாழ்க்கையின், செய்முறையின் நோக்கு அறிவுத் தத்துவத்தின் முதலாவது, அடிப்படை நோக்காக இருக்க வேண்டும். அது தவிர்க்கவியலாதபடி பொருள்முதல் வாதத்துக்கு இட்டுச் செல்லும்'' என்று லெனின் எழுதினார்.*

அறிதலில் செய்முறை பின்வரும் செயல்களை நிறைவேற்றுகிறது. முதலாவதாக, மனிதர்களின் சமூக நடவடிக்கை அறிதலின் தொடக்க முனையாகவும் பிரதான, முக்கிய அடிப்படையாகவும் அமைகிறது. அறிதல் செய்முறையின் அடிப்படையில், மனிதர்களின் உற்பத்திச் செயல்களின் காரணமாகவே தோன்றியது, வளர்ந்து கொண்டிருக்கிறது. உண்மையான விஞ்ஞான ரீதியான அறிதல் வெளியுலகத்துடன் செய்முறையான பரஸ்பரத் தாக்கத்தின் மூலமாக மட்டுமே சாத்தியம்; செய்முறைக்கு வெளியில், செய்முறையிலிருந்து தனியாக அதைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

இரண்டாவதாக, செய்முறை அறிதலின் இயக்கு சக்தியாக இருக்கிறது. செய்முறையின் தேவைகள், முதன்மையாக உற்பத்தியின் தேவைகள் தத்துவத்தையும் விஞ்ஞானத்தையும் முன்னே செலுத்துகின்றன, விஞ்ஞானத்தின் முன்பாகப் பொருத்தமான கடமைகளை வைக்கின்றன, அதன் வளர்ச்சியின் பிரதான திசையைத் திட்டப்படுத்துகின்றன. இந்த அர்த்தத்தில் செய்முறை அறிதலின் நோக்கமாகவும் இருக்கிறது. அறிதல் செயல்முறையும் எந்த விஞ்ஞானப் போக்கும் செய்முறையின் தேவையினால், வாழ்க்கையின் அவசியங்களினால் தோன்றி வளர்ச்சி

* அதே நூல், பக்கம் 266.

அடைகின்றன. ஒரு முக்கியமான பிரச்சினை முற்றிவிட்டால் விஞ்ஞானம் அதற்குத் தீர்வைத் தர வேண்டும்; அது அப்படியே தீர்வைத் தருகிறது.

மூன்றாவதாக, செய்முறை நம்முடைய அறிவின் உண்மைக்கு அளவுகோலாக இருக்கிறது. செய்முறை பல்வேறு கருதுகோள்களையும் தத்துவங்களையும் சரிபார்க்கிறது, அவற்றின் மெய்மை அல்லது பொய்மையை நிறுவுகிறது, அறிவைத் துல்லியமாக்கி வகை பிரிக்கிறது.

மனிதர்கள் செய்முறைச் செயலின் போக்கில்தான் தங்களுடைய அறிவின் புறநிலை மெய்மையை உறுதிப்படுத்தவோ அல்லது நிராகரிக்கவோ முடியும். இது செய்முறையைத் தனிமுதலான அளவுகோலாகச் செய்கிறது.

அதே சமயத்தில் செய்முறை என்ற அளவுகோல் சார்புநிலையானது; ஏனென்றால் ஒவ்வொரு குறிப்பிட்ட காலகட்டத்திலும் சமூக உற்பத்தியும் சமூக உறவுகளும் அடைந்திருக்கின்ற வளர்ச்சியின் வரையறைகளுக்குள்ளாக மட்டுமே அறிவை உறுதிப்படுத்த அல்லது நிராகரிக்க முடியும்.

செய்முறையும் தத்துவமும் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன. இந்த வளர்ச்சியில் செய்முறை நிர்ணயகரமான பாத்திரத்தை வகிக்கிறது. தத்துவமும் செய்முறையும் அறிதலின் பிரிக்க முடியாத பகுதிகள். விஞ்ஞானம் மற்றும் உற்பத்தியின் ஒற்றுமையில் நடைபெறுவதைப் போல அவை ஒன்றையொன்று செழுமைப்படுத்துகின்றன.

விஞ்ஞான வளர்ச்சியின் தர்க்கவியலுக்கு ஏற்ப அது சார்புநிலையான சுதந்திரத்தைப் பெற முடியும், உற்பத்தியின் வளர்ச்சியை விஞ்ச முடியும். அது பொருளாயத உற்பத்தி மற்றும் ஆன்மீகப் பண்பாட்டின் வளர்ச்சி, உற்பத்திச் சக்திகளை விஞ்ஞான ரீதியாகத் திட்டமிடு

தல், மூலப்பொருட்கள் மற்றும் உழைப்பு வளங்களை விவேகமாகப் பயன்படுத்துதல், இதரவற்றுக்கு அடிப்படையைத் தருகிறது.

தத்துவத்தையும் செய்முறையையும் ஒற்றுமையில் பார்க்க வேண்டும்; ஏனென்றால் தத்துவம் சமூக வரலாற்று நடைமுறையினால் செழுமைப்படுவதுடன் அதுவே ஒரு வலிமையான மாற்றியமைக்கின்ற சக்தியாக இருக்கிறது; உலகின் புரட்சிகரமான மாற்றத்துக்கு, பல யுகங்களாக நிலவுகின்ற பின்தங்கிய நிலைமையை அகற்றிப் புதிய வாழ்க்கையை நிர்மாணிப்பதற்கு செய்முறை வழிகளைச் சுட்டிக் காட்டுகிறது.

அத்தியாம்ய பத்து

விஞ்ஞான அறிதலின் முறைகள்

விஞ்ஞான அறிதல் முறைகளின் அமைப்பு

உலகைப் புரட்சிகரமாக மாற்றியமைத்தல் அதை விஞ்ஞான ரீதியாக அறிதல் என்ற அடிப்படையில் நிறைவேற்றப்படுகிறது. அதற்குப் பொருள்முதல்வாத இயக்கவியலின் கோட்பாடுகள், விதிகள் மற்றும் கருத்தினங்களைப் பயன்படுத்துதல் அவசியமாக இருந்தாலும் அவை மட்டும் போதா. ஆராய்ச்சி செய்யப்படுகின்ற பொருட்கள், நிகழ்வுப் போக்குகள் அல்லது புலப்பாடுகளின் தனித்தன்மைகள், அவற்றின் உள் தொடர்புகள் மற்றும் உறவுகளுக்கு உரிய முக்கியத்துவத்தைக் கொடுக்க வேண்டுமென்று பொருள்முதல்வாத இயக்கவியல் கோருகிறது. அறிதல் முறைகள் தத்துவத்துடன், ஆராயப்படுகின்ற பொருள், நிகழ்வுப் போக்கு அல்லது புலப்பாடு செயல்படுகின்ற முறை மற்றும் வளர்ச்சியின் விதிகளுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன.

தத்துவமும் முறையும் மனிதன் தன்னைச் சூழ்ந்திருக்கின்ற புறநிலையான யதார்த்தத்தைப் பழகிக் கொள்கின்ற சார்புநிலையான சுதந்திர வடிவங்கள். தத்துவம் என்பது விஞ்ஞான அறிவை முறைப்படுத்துகின்ற வடிவம். அது யதார்த்தத்தின் குறிப்பிட்ட துறையின் நியதிகளையும் முக்கியமான தொடர்புகளையும் உறவுகளையும் பற்றி ஒன்றிணைந்த கருத்தைத் தருகிறது. அது ஆராயப்

படுகின்ற பொருளின் சாராம்சத்தை, அதன் முக்கியமான உள் தொடர்புகளை, அதன் செயல்முறை மற்றும் வளர்ச்சியின் விதிகளைப் பிரதிபலிக்கின்ற கருத்தியலான பிம்பங்களின் அமைப்பு ஆகும். முறை என்பது தத்துவ ரீதியிலும் செய்முறையிலும் யதார்த்தத்தைப் பழகிக் கொள்வதற்கு உரிய வழிகள் மற்றும் செய்முறைகளின் மொத்தமாகும். அது பரஸ்பரத் தொடர்புடைய கோட் பாடுகள் மற்றும் கோரிக்கைகளின் மொத்தமாகும்; இவை மக்களின் அறிதல் மற்றும் உலகத்தை மாற்றிய மைக்கின்ற நடவடிக்கையை இயக்குகின்றன. ஆகவே தத் துவம் விளக்குகின்ற பணியை நிறைவேற்றுகிறது; பொரு ளில் எந்த அவசியமான இயல்புகளும் தொடர்புகளும் உறைந்திருக்கின்றன, எந்த விதிகள் அதன் செயல்முறை மற்றும் வளர்ச்சியை நிர்வகிக்கின்றன என்பவற்றை எடுத்துக் காட்டுகிறது. முறையைப் பொறுத்தமட்டில் அது ஒழுங்குபடுத்துகின்ற பணியை நிறைவேற்றுகிறது, மனி தன் தான் புரிந்து கொள்வதற்கு அல்லது மாற்றியமைப் பதற்கு விரும்புகின்ற பொருளை எப்படி அணுக வேண் டும், அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு எந்த அறி தல் அல்லது செய்முறை நடவடிக்கைகளை அவன் நிறை வேற்ற வேண்டும் என்பவற்றை எடுத்துக் காட்டுகிறது. ஒரு பொருளை வர்ணிக்கின்ற பொழுது தத்துவம் அந்தப் பொருள் தற்பொழுது எப்படி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது, முறை அந்தப் பொருளைப் பொறுத்தமட்டில் செய்யப்பட வேண்டிய நடவடிக்கை களை விதிக்கிறது.

ஆனால் தத்துவமும் முறையும் ஓரளவுக்குச் சுதந் திரமாக இருந்து கொண்டு வெவ்வேறு பணிகளை நிறை வேற்றினாலும் கூட அவை எப்பொழுதும் பரஸ்பரத் தொடர்பு வைத்திருக்கின்றன, ஒன்றையொன்று சார்ந்

திருக்கின்றன. எந்த விஞ்ஞான முறையும் ஏதாவதொரு தத்துவத்தின் அடிப்படையில்தான் விரித்துரைக்கப்படுகிறது. அது அறிதல் அல்லது செய்முறை நோக்கத்தை நிறைவேற்றுவதில் வெற்றியடைய வேண்டுமென்றால் அதன் கோட்பாடுகள் அறிதல் அல்லது செய்முறை நடவடிக்கையின் இலக்காக இருக்கின்ற பொருளின் இயல்புகளையும் உறவுகளையும் பிரதிபலிக்க வேண்டும். தத்துவம் இந்த இயல்புகளையும் உறவுகளையும் வெளிப்படுத்துகிறது, விளக்கம் கொடுக்கிறது. அதே சமயத்தில் தத்துவத்தில் பொருளின் இயல்புகள் மற்றும் தொடர்புகளைப் பற்றிய விளக்கத்தின் ஆழமும் ஆதார பூர்வமான தன்மையும், நடைமுறையில் அதன் மாற்றத்தின் ஆழமும் செல்தகைமையும் அறிதல் மற்றும் செய்முறை நடவடிக்கைக்குப் பொருத்தமான முறைகளைப் பயன்படுத்துவதைச் சார்ந்திருக்கின்றன.

உலகத்தின் தத்துவ ரீதியான பிரதிபலிப்பின் சர்வப் பொதுவான தன்மையின் அளவு, அதன் ஆழம், ஆராயப்படுகின்ற பொருட்களின் தனித்தன்மைகள், அவற்றின் உள் தொடர்புகள் மற்றும் உறவுகள், அறியப்படுகின்ற பொருளைப் பற்றி ஆராய்பவரின் அணுகுமுறை, அவருடைய மூளை நடவடிக்கைகளின் தொடர் வரிசை மற்றும் அமைப்பு ஆகியவற்றிற்கு ஏற்ற முறையில் அறிதல் முறைகளை மூன்று முக்கியமான பிரிவுகளாகப் பகுக்க முடியும்.

முதலாவதாக, சர்வப்பொது முறை; அதாவது பொருள்முதல்வாத இயக்கவியல் அல்லது இயக்கவியல் பொருள்முதல்வாதம். சர்வப்பொது முறை அறிதலின் மிகவும் பொதுப்படையான விதிகளை வகுத்துத் தருகிறது, ஆகவே அது விஞ்ஞான வளர்ச்சியின் பொதுமைப் படுத்தப்பட்ட தத்துவஞானக் கொள்கையாக, அதன்

பொதுவான முறையியலாக இருக்கிறது என்பதை முன்பே எடுத்துக் காட்டினோம். அதன் உள்ளடக்கத்தில் சர்வப் பொது முறை பொருட்கள் மற்றும் நிகழ்வுகளின் மிகவும் பொதுவான இயல்புகளுடன் பொருந்துகிறது; ஆகவே அது விஞ்ஞான முறைகளின் மிகவும் பொதுவான அம்சங்களை எடுத்துரைக்கிறது.

எல்லா விஞ்ஞானங்களிலும் அல்லது பெரும்பான்மையான விஞ்ஞானங்களிலும் பயன்படுத்தப்படுகின்ற பொதுவான விஞ்ஞான முறைகள் பெரும் பிரிவாக இருக்கின்றன. இவை பரந்த விஞ்ஞானக் கோட்பாடுகள், விதிகள் மற்றும் தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன, விஞ்ஞான அறிதலின் பொதுவான மற்றும் அவசியமான அம்சங்களை, பொருட்களில் பொதுவாகவும் அவசியமாகவும் இருப்பவற்றை எடுத்துரைக்கின்றன. அறிதலின் பொதுவான விஞ்ஞான முறைகளில் கவனித்தல், அளத்தல் மற்றும் சோதனை செய்தல், சம்பிரதாயப்படுத்தல், சூக்குமமானவற்றிலிருந்து ஸ்தூலமானவற்றை நோக்கி முன்னேறுதல், பொருளை வரலாற்று ரீதியிலும் தர்க்க ரீதியிலும் மறு பதிப்புச் செய்தல், பகுப்பாய்வு மற்றும் கூட்டிணைப்பு, கணிதவியல், புள்ளியியல் மற்றும் இதர முறைகள் அடங்கும். மனிதனுடைய செய்முறை நடவடிக்கையின் தர்க்கவியலைப் பிரதிபலிப்பதன் மூலம் சாதாரண தர்க்கவியல் செயல்முறைகள் மற்றும் நிகழ்வுமுறைகளை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இம்முறைகள் புறநிலையான உண்மையை, பொருளாயத உலகத்தின் விதிகள் மற்றும் நியதிகளை அறிவதற்கு முக்கியமான நிபந்தனை என்பதால் பொதுவான விஞ்ஞான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன.

அறிதலின் சர்வப்பொதுவான, பொதுப்படையான முறைகள் பொருட்களை ஆழமாக, அகல் விரிவாகப்

பிரதிபலிப்பதற்குப் போதுமானவை அல்ல; ஏனென்றால் எந்தப் பொருளும் அதற்கே உரிய தனித்தன்மைகள், பண்பு, இயல்புகள் இதரவற்றைக் கொண்டிருக்கிறது. தனித்தன்மையுள்ள எந்த அறிதல் பிரச்சினையும் அதன் தீர்வுக்குப் பொருத்தமான வழிகளையும் முறைகளையும் தேர்ந்தெடுப்பதை முன்னூகிக்கிறது. எந்த விஞ்ஞானமும் அதன் வரலாற்று வளர்ச்சியில் குறிப்பிட்ட (அல்லது ஸ்தூலமான) விஞ்ஞான முறைகளின் அமைப்பை விரித்துரைப்பதற்குக் காரணம் இதுவே. இங்கே சில விஞ்ஞானத் துறைகளில் பயன்படுத்தப்படுகின்ற ஆராய்ச்சி முறைகளைக் குறிப்பிடலாம். உதாரணமாக, பௌதிகத்தில் நிறமாலைப் பகுப்பாய்வு முறை, தொல்பொருள் ஆராய்ச்சியில் தோண்டியெடுக்கும் முறை, வான இயலில் ரேடார் முறைகள், இதரவற்றைக் குறிப்பிடலாம்.

பொதுவான முறைகளுக்கும் குறிப்பிட்ட முறைகளுக்கும் இடையில் தனிமுதலான வேறுபாடு இல்லை. ஒரு விஞ்ஞானப் பிரிவு வளர்ச்சியடைந்து மேன்மேலும் பொதுவான நியதிகளை வெளிக் கொண்டு வருகின்ற பொழுது அதில் கடைப்பிடிக்கப்பட்ட குறிப்பிட்ட முறைகள் பொதுவான விஞ்ஞான முறைகளாக வளர்ச்சியடைகின்றன. விஞ்ஞானங்களின் வளர்ச்சிப் போக்கில் ஏற்படுகின்ற ஒருங்கிணைப்பும் இந்த நிகழ்வுப் போக்குக்குச் சாதகமாக இருக்கிறது. உதாரணமாக, தொழில்நுட்பவியல் மற்றும் இயற்கை விஞ்ஞானங்களின் வளர்ச்சியின் விளைவாக கணித முறைகளைக் கையாள்கின்ற களம் விரிவடைந்திருக்கிறது; இவை தற்பொழுது பொதுவான விஞ்ஞான முறைகளாக வளர்ச்சி அடைந்திருக்கின்றன.

விஞ்ஞான அறிதல் முறைகள் அனைத்தும் நெருக்கமாக இணைந்திருக்கின்றன; அவை ஒன்றுக்கொன்று தனித்திருப்பதில்லை. உலகத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் அவை

ஒற்றுமையில் கையாளப்படுவது இயற்கையே. அதே சமயத்தில், அந்த ஒற்றுமையின் வரம்புகளுக்குள் இம்முறைகள் ஒவ்வொன்றும் ஓரளவுக்குச் சுதந்திரமாக இருக்கின்றன, தமக்குரிய முறையியல் கடமைகளை நிறைவேற்றுகின்றன.

இத்தகைய ஒற்றுமையும் சார்புநிலைச் சுதந்திரமும் அறிதலின் சர்வப்பொது முறைக்கும் இதர எல்லா விஞ்ஞான முறைகளுக்கும் இடையில் உள்ள தொடர்பில் காணப்படுகின்றன. இயக்கவியல் முறைக்கும் இதர விஞ்ஞான முறைகளுக்கும் இடையிலுள்ள ஒற்றுமை மற்றும் வேறுபாட்டின் புறநிலை அடிப்படை எந்தப் பொருட்கள் மற்றும் நிகழ்வுகளின் சர்வப்பொதுவான, பொதுவான, தனித்தனியான இயல்புகள் மற்றும் அம்சங்களின் ஒற்றுமையும் பரஸ்பர பாதிப்பை ஏற்படுத்துகின்ற சர்வப்பொது, பொதுவான, பிரத்யேகமான விதிகளின் அடிப்படையில் அவற்றின் மாற்றமும் ஆகும்.

எந்த விஞ்ஞானத் தத்துவமும் பொருளாயத உலகத்தின் இயல்புகள் மற்றும் விதிகளைப் பிரதிபலிக்கின்ற சர்வப்பொதுவான, பொதுவான, பிரத்யேகமான கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஆகவே எல்லா விஞ்ஞான ஆராய்ச்சிகளும் ஒரே சமயத்தில் சர்வப்பொதுவான தத்துவஞான மற்றும் விசேஷமான கோட்பாடுகள், விதிகள், கருத்தினங்கள் ஆகியவற்றால் வழிகாட்டப்படுகின்றன; சர்வப்பொதுவான, தத்துவஞான முறை விஞ்ஞான அறிதலின் மற்ற எல்லா முறைகளிலும் ஊடுருவிக் கலந்து நின்று தீர்மானிக்கிறது, மேலும் அறிதல் நிகழ்வுப் போக்கை இயக்குகிறது.

சர்வப்பொதுவான முறை என்ற நிலையில் பொருள் முதல்வாத இயக்கவியல் மற்ற அறிதல் முறைகளுடன் பிணைந்திருக்கிறது, அவற்றின் உள்ளடக்கமாக இருக்

கிறது. அது விஞ்ஞான முறைகள், அவற்றின் கூறுகள் மற்றும் அங்கங்களுக்கு இடையிலான தொடர்பில், அறிதல் நிகழ்வுப் போக்கில் அவற்றின் பரஸ்பர மாற்றம் மற்றும் பரஸ்பர பாதிப்பில் எடுத்துரைக்கப்படுகிறது. அதே சமயத்தில் இயக்கவியல் பொருள்முதல்வாத முறை மற்ற விஞ்ஞான முறைகளை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது; இயற்கை மற்றும் சமூக விஞ்ஞானங்களின் சாதனைகளையும் முறைகளையும் இடைவிடாமல் பயன்படுத்திக் கொள்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் சர்வப் பொதுவான, பொதுவான மற்றும் சிறப்பு முறைகள் பின்னிப் பிணைந்திருப்பதுடன் ஒன்றின் மீது ஒன்று தாக்கம் செலுத்துகின்றன. பொருள்முதல்வாத இயக்கவியலை விஞ்ஞான அறிதல் மற்றும் புரட்சிகரமான மாற்றியமைக்கின்ற நடவடிக்கையின் சர்வப்பொதுவான முறையாகப் பயன்படுகின்ற பிரத்யேகமான அம்சங்களும் முக்கியமான கோரிக்கைகளும் மேலே எடுத்துக் கூறப்பட்டன. நாம் இப்பொழுது விஞ்ஞான அறிதலின் மிகச் சாதாரணமான பொது முறைகளை சுருக்கமாக விவரிப்போம்.

விஞ்ஞான அறிதல் அனுபவ ரீதியான மற்றும் தத்துவ அறிவின் ஒற்றுமை ஆகும். அந்த ஒற்றுமைக்குள் ஒவ்வொரு மட்டமும் சார்புநிலையில் சுதந்திரமானது, ஒவ்வொன்றும் பொதுவான விஞ்ஞான முறைகள் உட்பட முறைகளின் தொகுதியைக் கொண்டிருக்கிறது.

அறிதலின் அனுபவ ரீதியான முறைகள்

அனுபவ ரீதியான அறிதலுக்குரிய பிரத்யேகமான முறைகள் அறிதலில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. அனுபவ ரீதியான முறைகள் விஞ்ஞான அறிதலின் தொடக்க முனையாக இருக்கின்றன. அனுபவ ரீதி

யான அறிதல் மட்டத்தின் ஒரு பிரத்யேகமான அம்சம் என்னவென்றால் அது மனிதனுடைய செய்முறை நடவடிக்கையின் போது அல்லது விஞ்ஞான அறிதலின் விளைவாக வெளிப்படுகின்ற பொருட்களின் புறநிலையான இயல்புகள் , தொடர்புகள் மற்றும் உறவுகளை எடுத்துக் கொள்வதே.

ஆராயப்படுகின்ற பொருளைப் பற்றிய விவரங்களையும் தகவல்களையும் திரட்டுவது உண்மையான விஞ்ஞான அறிதலின் ஆரம்பக் கட்டமாகும். எவ்விதமான விஞ்ஞான அறிவும் யதார்த்தத்திலுள்ள விவரங்களை முறைப்படியாகப் பொதுமைப்படுத்துதலையும் ஆராய்தலையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அத்தகைய விவரங்கள் அறிவின் முக்கியமான உள்ளடக்கமாக இருக்கின்றன. அவை மூலக் கருதுகோளை அல்லது எவ்வித தத்துவக் கருதுகோள்களையும் உறுதிப்படுத்துகின்றன, ஸ்தூலமாக்குகின்றன, தனிவகைப்படுத்துகின்றன, அல்லது அவற்றை மறுக்கின்றன; புதிய விஞ்ஞானப் பிரச்சினைகளையும் செய்முறைக் கடமைகளையும் வகுத்தளிப்பதற்கு அடித்தளத்தை அமைக்கின்றன.

இதற்கு அவசியமான விவரங்கள் கவனித்தல் மற்றும் பரிசோதனையின் மூலம் பெறப்படுகின்றன.

கவனித்தல் என்பது அறிதலில் ஒரு முறை; அது பொருட்களையும் நிகழ்வுகளையும் குறிவழிப்பட்ட முறையிலும் அமைப்பு ரீதியாகவும் அறிதலாகும். இயற்கையான நிலைமைகளில் அல்லது விஞ்ஞானப் பரிசோதனையில் ஒரு பொருளின் புறநிலையான இயல்புகளையும் தொடர்புகளையும் நிறுவுதல் மற்றும் பதிவு செய்தலின் ஒரு திட்டவட்டமான அமைப்பாகும் அது.

பொதுவானது மற்றும் சிறப்பானதைப் பற்றிய அறிவு அன்றாட வாழ்க்கையிலும் விஞ்ஞானத்திலும் முக்கிய

மான பாத்திரத்தை வகிக்கிறது. இவை இரண்டிலுமே கவனித்தல் புலனுணர்ச்சி வடிவத்தில் நிறைவேற்றப்படுகிறது. புலனறிவு வடிவத்தில் அகநிலையாகவும் உள்ளடக்கத்தில் புறநிலையாகவும் இருக்கிறது. அன்றாட வாழ்க்கை, விஞ்ஞான ஆராய்ச்சி ஆகிய இரண்டும் யதார்த்தத்தின் புறநிலையான இயல்புகளையும் தொடர்புகளையும் பற்றி தகவல்களைக் கொடுக்கின்றன; அவற்றின் இலக்குகள்தான் வேறுபடுகின்றன. அன்றாட கவனிப்பு விஞ்ஞான அறிதல் துறையில் விசேஷமாக வரையறுக்கப்பட்ட இலக்கு இல்லாமல் முற்றிலும் செய்முறையான நோக்கங்களை நிறைவேற்றுகிறது. ஆனால் விஞ்ஞான ரீதியான கவனித்தல் தெட்டத் தெளிவான கடமையைக் கொண்டிருக்கிறது, அதன் செய்முறை முன்பே தீர்மானிக்கப்படுகிறது, அதன் முடிவுகள் விஞ்ஞான முறைகளினால் சரிபார்க்கப்படுகின்றன. அன்றாட வாழ்க்கையில் கவனிக்கும் திறமையை வளர்த்துக் கொள்வது விஞ்ஞான கவனித்தல் திறமைக்கு அடிப்படையாகும்; மேலும் அன்றாட வாழ்க்கையில் புதியவை மற்றும் அவசியமானவை எல்லாவற்றையும் தனிநபரது கவனித்தலறிவைக் கூர்மைப்படுத்துகின்ற மிக முக்கியமான காரணியாகும். அதோடு அன்றாட கவனித்தல் செய்முறை நடவடிக்கையின் போது நிகழ்கிறது; ஆகவே ஒரு நபர் யதார்த்தத்தின் நிகழ்வுப் போக்குகளையும் புலப்பாடுகளையும் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது.

விஞ்ஞான கவனித்தல் ஒரு முறை என்ற வகையில் ஏதாவதொரு தத்துவம் அல்லது கருதுகோளுடன் இணைந்திருக்கிறது. அது எல்லாப் புதிய விவரங்களையும் பதிவு செய்வதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. மிக முக்கியமான, இன்றியமையாத விவரங்களை அல்லது ஒரு கருதுகோள் அல்லது தத்துவத்தின் ஆரம்பக்

கருத்துக்களுடன் பொருந்தாத அடிப்படையில் புதிய விவரங்களை வகைபிரித்தலையும் கவனமாகத் தேர்ந்தெடுத்தலையும் அது முன்னூகிக்கிறது. முதல் ரகத்தைச் சேர்ந்த விவரங்கள் ஒரு குறிப்பிட்ட கருதுகோளை உறுதிப்படுத்துகின்றன அல்லது மறுக்கின்றன என்றால் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவை புதியவற்றின் கருக்களை, எதிர்காலக் கூறுகளைக் கொண்டிருக்கின்றன.

கவனித்தல் முறையில் உயர்ந்த தேர்ச்சியைப் பெறுதல் இன்றியமையாததாகும்; ஏனென்றால் ஆராயப்படுகின்ற பொருள், நிகழ்வுப் போக்கு அல்லது புலப்பாட்டின் இயல்புகள் மற்றும் தொடர்புகளைப் பற்றி விரிந்த முறையில் விவரங்களின் தொகுதியை சேகரிப்பதற்கு அது உதவுகிறது. இத்தகவல்கள் தத்துவப் பகுப்பாய்வு, நடைமுறை சமூகப் பிரச்சினைகளை வகுத்தளித்தல் மற்றும் அவற்றிற்குரிய தீர்வுக்குக் கணிசமான அடிப்படையைத் தருகின்றன. கவனித்தல் முறையின் செல்தகைமை ஆராய்ச்சியாளர் எந்த விவரங்களை, எவ்வளவு பதிவு செய்திருக்கிறார், வகைபிரித்திருக்கிறார், அறிதல் நிகழ்வுப் போக்கில் சேர்த்திருக்கிறார் என்பதைப் பெருமளவில் பொறுத்திருக்கிறது.

அடுத்து நடைபெறுகின்ற தத்துவப் பகுப்பாய்வுக்குக் கிடைத்துள்ள விவரங்களை அவற்றிலடங்கிய புறநிலையான செய்தியின் அளவு மற்றும் புதுமை, அவற்றில் வெளிப்படுகின்ற இயல்புகள் மற்றும் தொடர்புகளின் பிரத்யேகத் தன்மைகள், ஆராய்ச்சி நோக்கங்கள் மற்றும் தத்துவார்த்த அறிதலுடன் அவற்றின் தொடர்பு என்ற அடிப்படையில் வகைபிரிப்பது குறிப்பிடத் தக்க அளவுக்கு முக்கியமாகும்.

கவனித்தல் அவசியம் என்றாலும் ஆழமான அறிவைப் பெறுவதற்கு அது போதுமானதல்ல. அது பொருட்கள்

மற்றும் நிகழ்வுகளின் வெளிப்புறத் தொடர்புகளையும் இயல்புகளையும் வெறுமனே கண்டுபிடிப்பதற்கும் பதிவு செய்வதற்கும் உதவுகிறது; ஆனால் அவற்றின் இயல்பை, சாராம்சத்தை மற்றும் வளர்ச்சிப் போக்குகளைக் கண்டு பிடிக்க அதனால் இயலாது. இயற்கை நிகழ்வுப் போக்கு களில் சுறுசுறுப்பாகத் தலையிடாதிருப்பதனாலும் அது வரையறைக்கு உட்பட்டதே. இது அளத்தல், இன்னும் அதிகமான அளவில் பரிசோதித்தல் என்னும் அனுபவ முறைகளின் உதவியால் நிறைவேற்றப்படுகிறது.

அளத்தல் என்பது நேரடியான அல்லது மறைமுக மான அனுபவச் செய்முறை; அளவுகோலாக எடுத்துக் கொள்ளப்படுகின்ற மற்றொரு பொருளுடன் ஒப்பிடுகின்ற பொழுது ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக் கும் பொருளின் உறவு அல்லது மாற்றத்தைக் கண்டு பிடிக்க அது உதவுகிறது. ஆராய்ச்சி செய்யப்படுகின்ற பொருட்கள், புலப்பாடுகள் அல்லது நிகழ்வுப் போக்கு களின் அளவு ரீதியான அம்சத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருப்பது அளத்தல் முறையின் தனித் தன்மையான அம்சமாகும். எனினும் அளவு ரீதியான குணாம்சங்களைப் பதிவு செய்வது அந்தப் பொருளின் வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் அதன் பண்புடன் கொண்டிருக்கின்ற தொடர்பை வெளிக் காட்டுவதை சாத்தியமாக்குகிறது.

பொருட்கள், நிகழ்வுகளின் புறநிலையான அளவு ரீதியான குணாம்சங்கள், இயல்புகள் மற்றும் உறவுகளை அளத்தல் முறையின் உதவியால் ஆராய்வது அவற்றின் பண்பை இன்னும் சிறப்பாக ஆராய்வதற்கும் அவற்றின் மாற்றத்தின் பொதுப் போக்கை நிர்ணயிப்பதற்கும் ஆராய்ச்சியாளருக்கு உதவுகிறது. இத்தகவலைத் தத்து வார்த்த அறிதல் மட்டத்தில் பயன்படுத்துவது அவற்றின்

தன்மையையும் சாராம்சத்தையும் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது.

விஞ்ஞான அறிதல் ஒரு நிகழ்வை ''அந்த நிகழ்வு சீரான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்துகின்ற நிலைமைகளின் கீழ்''* ஆராய்ச்சி செய்வதை அடிக்கடி அவசியமாக்குகிறது. இது பரிசோதனையின் மூலம் நடைபெறுகிறது.

பரிசோதனை என்பது ஒரு அறிதல் முறை. அப்பொழுது ஒரு நிகழ்வுப் போக்கை சார்புநிலையில் அதன் ''கலப்பற்ற'' வடிவத்தில் இனங்காண்பதற்கும் ஆராய்வதற்கும் உரிய வாய்ப்புக்கள் அதன் நிலைமைகள், திசை வழி அல்லது தன்மையில் மாற்றங்களைச் செய்வதன் மூலம் உருவாக்கப்படுகின்றன.

ஒரு பரிசோதனையின் போது ஆராய்ச்சியாளர் சில நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். முதலாவதாக, ஆராயப்படுகின்ற பொருள், நிகழ்வுப் போக்கு அல்லது புலப்பாட்டைப் பற்றி அவர் சிறிதளவு அறிவையேனும் கொண்டிருக்க வேண்டும். அந்த அறிவின் அடிப்படையில் அவர் அந்தப் பரிசோதனையின் நோக்கம், வழிமுறை மற்றும் அதை நடத்துவதற்குரிய சாதனங்களை நிர்ணயிக்கிறார். அந்தப் பரிசோதனையின் பொழுது அவர் ஆய்வு விவரங்களைக் கவனிக்கிறார், அளக்கிறார், பதிவு செய்கிறார், வகை பிரிக்கிறார், புள்ளியியல் ரீதியான கணக்குகளைச் செய்கிறார், எதிர்காலத் தத்துவார்த்த பகுப்பாய்வுக்கு அட்டவணைகளையும் வரைபடங்களையும் தயாரிக்கிறார். ஏதாவதொரு கருதுகோள் அல்லது தத்துவத்துடன் அதன் தொடர்பு, அதற்குரிய நிபந்தனை

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, தொகுதி 6, பக்கம் 11.

களைத் தத்துவ ரீதியில் நிறுவுதல், அடுத்து வருகின்ற அறிதல் நிகழ்வுப் போக்கில் அதன் முடிவுகளைச் சேர்த்துக் கொள்ளுதல் பரிசோதனையின் தலைமையான தனிவகைக் கூறு எனலாம்.

சமூக நிகழ்வுகளை ஆராய்கின்ற பொழுது பரிசோதனை என்னும் முறையை எல்லா சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்த முடியாது. சமூகப் பரிசோதனைகள் தார்மிக மற்றும் அறவியல் காரணங்களினால் பெரும்பாலும் கைவிடப்படுகின்றன. பெரும்பான்மையான சமூக புலப்பாடுகள் மற்றும் நிகழ்வுப் போக்குகளை சோதனைச் சாலையில் செய்து பார்க்க முடியாது; பல முறை செய்தலும் இயலாது. அவற்றைக் ''கலப்பற்ற'' வடிவத்தில், அரசியல், வர்க்க மற்றும் சித்தாந்த அடிப்படைகளிலிருந்து தனியே பிரித்து ஆராயக் கூடாது. எனினும் நம் காலத்தில் சமூகப் பரிசோதனைகளின் பாத்திரம் மேன் மேலும் வளர்ந்து வருகிறது. உதாரணமாக, வளர்ச்சியடைந்த சோஷலிசத்தின் கீழ் பொருளாயத உற்பத்தி தொழில்துறைப் பரிசோதனைத் திசை வழியில் மேன் மேலும் வளர்ச்சியடைகிறது; விஞ்ஞானப் பரிசோதனை தொழில்துறை உற்பத்தியின் மட்டத்தை எட்டுகிறது. மொத்த நிறுவனங்கள், பெரிய விசேஷ நோக்குப் பண்ணைகள், கால்நடை வளர்ப்பு இணையங்கள் உற்பத்தி அமைப்பின் புதிய வடிவங்களுக்கு, புதிய தொழில் நுட்பவியலுக்கு, உழைப்புக்குப் பொருளாயத மற்றும் தார்மிக ஊக்குவிப்புக்கு, இதரவற்றுக்கு மாற்றப்படுகின்றன.

சமூகத்தில் புதிதாகத் தோன்றுகின்ற நடைமுறைப் பிரச்சினைகளின் தீர்வுக்கு விஞ்ஞான ரீதியான அணுகுமுறை எப்பொழுதும் பரிசோதனை முறையான ஆராய்ச்சிக் கூறுகளை உள்ளடக்கியிருக்கிறது. சமூகத்

தின் நடைமுறைப் பிரச்சினைகளின் தீர்வுக்கு முன் வைக்கப்படுகின்ற பல்வேறு ஆலோசனைகள் செல்லத் தக்கவையா என்பதை சோதித்துப் பார்ப்பதை சமூகப் பரிசோதனைகள் சாத்தியமாக்குகின்றபடியால் அவை முக்கியமானவைதான்; நாடு முழுமைக்கும், அதன் பிர தேசங்களுக்கும் அல்லது பொருளாதாரக் கிளைகளுக்கும் அவசரமாக முடிவுகள் செய்வதை அது தவிர்க்கிறது.

அறிதலின் தத்துவார்த்த முறைகள்

சூக்குமமானவற்றிலிருந்து ஸ்தூலமானவற்றை நோக்கி முன்னேறுகின்ற முறை அறிதலில் மாபெரும் முக்கியத்து வத்தைக் கொண்டிருக்கிறது. இம்முறை பொருட்கள் மற்றும் நிகழ்வுகளின் சாராம்சத்தை மிகவும் ஆழமான வகையில் அறிவதற்கு, புறநிலையான உண்மையை அறிந்து கொள்வதற்கு வழிகாட்டுகிறது.

அறிதல் நிகழ்வுப் போக்கு யதார்த்தத்தை மேன் மேலும் முழுமையாக, அகல் விரிவாக, ஸ்தூலமாகப் பிரதிபலிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. வெவ் வேறு இயல்புகளிலும் பண்புகளிலும் ஸ்தூலமாக வெளிப் படுகின்ற சுற்றுப்புற யதார்த்தம் புலனுணர்ச்சி அறிதல் கட்டத்தில் பல தொடர்புகளிலும் உறவுகளிலும் ஏற் கெனவே பிரதிபலிக்கப்படுகிறது. ஆனால் யதார்த்தத்தின் அப்பிரதிபலிப்பும் அறிதலும் தன்னியல்பாக, அனுபவ முறையாக இருக்கிறது; அது புலனுணர்ச்சி உறுப்புக் களால் அறியப்படக் கூடிய வெளிப்புற அம்சங்கள், தொடர்புகள் மற்றும் உறவுகளை மட்டுமே தழுவியிருக் கிறது. ஆனால் யதார்த்தத்தின் நியதியான தொடர்பு களின் சாராம்சத்தை சூக்குமமான சிந்தனையின் மூலமாக மட்டுமே வெளிக்கொணர முடியும்.

அறிதலின் இயக்கவியல் சூக்குமமானவை மற்றும்

ஸ்தூலமானவற்றின்இயக்கவியலில் பிரதிபலிக்கப்படுகிறது. பொருளாயத உலகத்தை அறிதல் அதைப் புலனுணர்ச்சி உறுப்புக்களால் அறிதலிலிருந்து தொடங்குகிறது. ஆனால் விஞ்ஞானத் தத்துவார்த்த அறிதல் ஸ்தூலமான புலனுணர்ச்சிகளின் இயக்கவியல் நிலைமறுப்பில், சூக்குமமானவற்றுக்கு மாறுவதில் திருப்பு முனையைக் கொண்டிருக்கிறது.

சூக்குமச் சிந்தனை ஒரு பொருளின் ஆக முக்கியமான, அவசியமான இயல்புகள், அம்சங்கள், நியதிகள் ஆகியவற்றைத் தனியே பிரித்தெடுப்பதற்கும் புலனுணர்ச்சி உறுப்புக்களால் அறிய முடியாத உள்தொடர்புகள் மற்றும் உறவுகள் என்னும் மூடியிருக்கின்ற துறைக்குள் ஊடுருவுவதற்கும் உதவுகிறது. ''ஸ்தூலமானவற்றிலிருந்து சூக்குமமானவற்றை நோக்கிச் செல்கின்ற சிந்தனை—அது சரியாக இருக்குமானால்... உண்மையிலிருந்து விலகிப் போவதில்லை, ஆனால் அதை நெருங்கி வருகிறது. பருப்பொருளை, இயற்கை விதியை சூக்குமப்படுத்துதல், மதிப்பை சூக்குமப்படுத்துதல், இதரவை, சுருக்கமாகச் சொல்வதென்றால் எல்லா விஞ்ஞான (சரியான, அர்த்தமுள்ள, அர்த்தமற்றவை அல்ல) சூக்குமப்படுத்துதல்களும் இயற்கையை அதிக ஆழமாக, உண்மையாக, முழுமையாகப் பிரதிபலிக்கின்றன'' என்று லெனின் எழுதினார்.*

ஒரு பொருளை அதன் அடிப்படையான எல்லாத் தொடர்புகள் மற்றும் உறவுகளுடன் மூளையில் மறுபதிப்புச் செய்வதை சூக்குமப்படுத்துதல்கள் விஞ்ஞான அறிதலின் தொடக்க முனை என்ற முறையில் சாத்தியமாக்குகின்றன. ஒரு பொருளின் ஒருங்கிணைந்த மனோபிம்பத்தைப் பற்றிய, சூக்குமமான கருதுகோள்களின் உதவியுடன் செய்யப்படுகின்ற அத்தகைய மறுபதிப்பு

* V. I. Lenin, *Collected Works*, Vol. 38, p. 171.

சூக்குமமானவற்றிலிருந்து ஸ்தூலமானவற்றை நோக்கி முன்னேறுதல் என்று சொல்லப்படுகிறது.

ஆகவே அறிதல் நிகழ்வுப் போக்கு இரண்டு கட்டங்களைக் கொண்டிருக்கிறது. முதல் கட்டத்தில் ஸ்தூலமான புலனுணர்ச்சி வடிவத்திலிருந்து சூக்குமமானதை நோக்கிய முன்னேற்றம் நடைபெறுகிறது; பொருட்கள் மற்றும் நிகழ்வுகள் நேரடியாகப் புலனுணர்ச்சி உறுப்புக்களால் அறியப்படுகின்றன, அவை தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன, சூக்குமப்படுத்தப்படுகின்றன. இரண்டாவது கட்டத்தில் கருத்தினங்களின் கீழ்ப்படுத்தலின் அடிப்படையில் பொருள் மனோரீதியாகவும் முழுமையாகவும் மறுபதிப்புச் செய்யப்படுகிறது; அதன் சாராம்சம் மற்றும் நியதிகளைப் பற்றி ஸ்தூலமான அறிவு உருவாகிறது. ''ஸ்தூலமான கருத்து பல வரையறைகளின் சேர்க்கையாக இருப்பதால், பல்வேறு அம்சங்களின் ஒற்றுமையைப் பிரதிநிதித்துவப் படுத்துவதால் அது ஸ்தூலமானதாக இருக்கிறது. எனவே அது ஆரம்பத்தின் உண்மையான முனையாக, அதனால் புலன் உணர்வு, கற்பனையின் ஆரம்ப முனையாகவும் இருந்த போதிலும் சிந்தனையின் போது அது ஆரம்ப நிலையாக இல்லாமல் தொகுக்கப்பட்ட முடிவாகத் தோன்றுகிறது. முதலாவதாகச் சொல்லப்பட்ட முறை அர்த்தமுள்ள பிம்பங்களைச் சூக்குமமான வரையறைகளுக்கு உட்படுத்தித் தளர்த்துகிறது; இரண்டாவது முறை சூக்குமமான வரையறைகளிலிருந்து தொடங்கி ஸ்தூலமான நிலைமையைச் சிந்தனையின் மூலம் மறுபதிப்புச் செய்கிறது'' என்று மார்க்ஸ் எழுதினார்.*

* கா. மார்க்ஸ், **அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை,** மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1983, பக்கம் 315.

அறிதலில் சூக்குமம் என்பது யதார்த்தத்தில் ஸ்தூல மானவற்றுக்கும் சிந்தனையில் ஸ்தூலமானவற்றுக்கும் இடையிலுள்ள இடைநிலைக் கட்டமாகும். அறிதல் அதன் மூலமாக, அதன் உதவியைக் கொண்டு மட்டுமே, புலனு ணர்ச்சி ஸ்தூலமானவற்றிலிருந்து சிந்தனையில் ஸ்தூல மானவற்றை நோக்கிச் செல்கிறது. யதார்த்தத்தில் ஸ்தூலமானவற்றைப் பற்றிய சூக்குமமான வரையறை களின் கூட்டிணைப்பு சிந்தனையில் ஸ்தூலமானவற்றை மறுபதிப்புச் செய்வதற்கு, ஸ்தூலமான அறிவைப் பெறுவதற்கு ஒரே வழியாகும்.

சூக்குமப்படுத்தல்கள் புலனுணர்ச்சி ஸ்தூலமான வற்றில் உள்ள ஆக முக்கியமான, இன்றியமையாத அம்சங் கள், தொடர்புகள், உறவுகளைப் பிரித்தெடுக்கின்றன. யதார்த்தத்தில் ஒரு பொருள் அல்லது நிகழ்வின் தோற்றத் தையும் வளர்ச்சியையும் அறிவதை அவை சாத்தியமாக்கு கின்றன. சூக்குமப்படுத்தல் பின்னர் ஸ்தூலப்படுத்து வதற்கு, சிந்தனையில் யதார்த்தத்தைப் போதுமான அளவில் பிரதிபலிப்பதற்கு ஒரு நிபந்தனையாகும். ஒரு பொருள் அல்லது நிகழ்வை மூளையில் மறுபதிப்புச் செய் தல் ஸ்தூலமானவற்றைப் பற்றிய அறிவை அதன் சாராம் சத்திலும் முழுமையிலும் வழங்குகிறது.

கல்வியில் பெறுகின்ற அறிவு விஞ்ஞான ஆராய்ச்சி யினால் பெறுகின்ற அறிவுடன் பொருந்துவதில்லை. ''முன்வைக்கும் முறை ஆராய்ச்சி முறையிலிருந்து வடி வத்தில் வேறுபட வேண்டும். பிந்திய முறை விஷயத்தை விவரமாக சுவீகரிக்க வேண்டும், அதன் வளர்ச்சியின் வெவ்வேறு வடிவங்களைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்; அவற்றின் உள் தொடர்புகளைக் கண்டுபிடிக்க வேண்டும். இந்த வேலையைச் செய்த பிறகுதான், மெய்யான இயக்

கத்தைப் போதிய அளவுக்கு வர்ணிக்க முடியும்'' என்று மார்க்ஸ் எழுதினார்.*

தனிநபர் கல்வி கற்கின்ற பொழுது ஏற்கெனவே உள்ள அறிவை, ஆராய்ச்சி செய்யப்பட்டுக் குறிப்பிட்ட முறையில் முன்வைக்கப்படுகின்ற அறிவைப் பெருமளவில் சுவீகரிக்கிறார். அனுபவ ரீதியான அறிதல் மற்றும் அடிப்படையான விஞ்ஞான கருதுகோள்களைத் தேர்ந்து தெளிகின்ற கட்டம் முன்பே முடிந்து விட்டது என்று அனுமானிக்கப்படுகிறது. ஸ்தூலமான அனுபவ விவரங்களை நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்தல், சூக்குமப்படுத்தல்களை, அடிப்படையான கருதுகோள்களை வகுத்தளித்தல் கற்பித்தலில் அரைகுறையாக மட்டுமே பிரதிபலிக்கப் பட முடியும் அல்லது சிறிதும் பிரதிபலிக்கப்படாமல் இருக்கலாம். மார்க்ஸ் மூலதனம் என்னும் நூலில் சூக்குமமானவற்றிலிருந்து ஸ்தூலமானவற்றை நோக்கிச் செல்கின்ற முறையைப் பெரும்பாலும் பின்பற்றுகிறார்; ஆனால் ஸ்தூலமானவற்றிலிருந்து சூக்குமமானவற்றுக்குச் செல்கின்ற முறையை அவர் முற்றிலும் ஒதுக்கி விடவில்லை. மார்க்ஸ் ஸ்தூலமானவற்றை (பண்டம், பரிவர்த்தனை, விலை, இதரவை) பற்றிய பகுப்பாய்விலிருந்து சூக்குமமானவற்றுக்கு (மதிப்பு, உபரி மதிப்பு, இதரவை) முன்னேறிச் சென்று அதன் பிறகு அன்றாட சமூக வாழ்க்கையிலுள்ள மெய்யான உறவுகளை (வர்த்தக லாபம், வட்டி விகிதம், இதரவை) வெளிக் காட்டினார் என்பதைப் பார்க்க முடியும்.

புதிய சமூக நிகழ்வுகளை அறிதல் முதல் மற்றும் இரண்டாவது கட்டத்தைப் பயன்படுத்துகின்ற சாத்தியத்தை

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 6, பக்கம் 31.

விலக்கவில்லை. ஸ்தூலமானவை மற்றும் சூக்குமமானவற்றின் இயக்கவியலைப் பற்றிய அறிவு விஞ்ஞான அறிதல், படைப்புச் சிந்தனைக்குத் தலைமையான நிபந்தனையாக இருக்கிறது. ஒரு நபர் இயக்கவியல் பொருள்முதல் வாதத்தைக் கற்கின்ற பொழுது விஞ்ஞான உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படையான கருத்தினங்கள், கருது கோள்கள், சூக்குமப்படுத்தல்களில் நிபுணத்துவம் அடைகிறார்; இந்த விஞ்ஞானக் கருதுகோள்களின் உருவாக்கத்தின் இயக்கவியலையும் மிகவும் எளிமையானவற்றிலிருந்து, தொடக்க நிலையானவற்றிலிருந்து மிகவும் சிக்கலானவற்றை நோக்கிய அவற்றின் ஒழுங்கமைப்பையும் கற்கிறார். அவற்றின் தர்க்க ரீதியான உள்ளடக்கத்தையும் அளவையும், அவை மற்றவற்றுடன் கொண்டிருக்கும் தொடர்பையும் உறவுநிலையையும் கற்பதும் நிர்ணயிக்க முடிவதும் முக்கியமாகும். புலனுணர்ச்சி ஸ்தூலமானவற்றிலிருந்து சூக்குமமானவற்றுக்கும் அதன் பிறகு மனோ ரீதியில் ஸ்தூலமானவற்றுக்கும் நடைபெறுகின்ற முன்னேற்றத்தைத் தொடர்ந்து கண்டுபிடித்தல் இயக்கவியல் சிந்தனையின் வளர்ச்சிக்கு மற்றொரு நிபந்தனையாகும்.

விஞ்ஞான அறிதல் நிகழ்வுப் போக்கு தர்க்கவியல் மற்றும் வரலாற்று முறைகளைப் பயன்படுத்துவதை அவசியமாக உள்ளடக்கியிருக்கிறது; இவை சூக்குமமானவற்றிலிருந்து ஸ்தூலமானவற்றுக்கு முன்னேற்றத்தையும் ஸ்தூலமான அறிவைப் பெறுவதையும் சாத்தியமாக்குகின்றன.

சூக்குமமானவற்றிலிருந்து ஸ்தூலமானவற்றுக்கு முன்னேற்றம் பொருளின் வரலாற்று வளர்ச்சியுடன் எப்படிப் பொருந்துகிறது என்னும் கேள்வி அறிதலில் தர்க்கவியல் மற்றும் வரலாற்றுக் கூறுகளின் உறவுப் பொருத்தத்தின் அம்சங்களில் ஒன்றாகும். மார்க்ஸ் இக்கேள்விக்குப் பின்வருமாறு பதிலளித்தார்: ''மிகவும் எளிமையான கருத்துக்

களிலிருந்து மிகவும் சிக்கலான கருத்துக்களுக்கு முன்னேறுகின்ற சூக்குமமான சிந்தனை நடைமுறை வரலாற்று ரீதியான வளர்ச்சிக்கு ஒத்திருக்கிறது.''*

புறநிலையான உண்மையை அறிவதற்கும் யதார்த்தமான பொருட்கள், புலப்பாடுகள் மற்றும் நிகழ்வுப் போக்குகளைப் பற்றி ஸ்தூலமான அறிவைப் பெறுவதற்கும் ஒருவர் அவற்றின் சாராம்சத்தை வெளிக் கொணர்தல், அவற்றின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் அறிதல் ஆகிய இரண்டையும் செய்ய வேண்டும். இந்த இருமுகக் கடமையை நிறைவேற்றுதல் தர்க்கவியல் மற்றும் வரலாற்று முறைகளின் ஒற்றுமையை உள்ளடக்கியிருக்கிறது.

வரலாற்று முறை வளர்ச்சியின் புறநிலையான வரலாற்று நிகழ்வுப் போக்கை, அதன் நிபந்தனைகள் மற்றும் முன்தேவைகளை, அதன் கால வரிசை முறை மற்றும் வெளிப்பாட்டின் ஸ்தூலமான வடிவங்களை உணர்வில் மறுபதிப்புச் செய்கிறது.

தர்க்கவியல் முறை வரலாற்று முறைக்கு மாறாக இருக்கிறது. அது யதார்த்தமான பொருட்கள் மற்றும் நிகழ்வுகளை சூக்குமப்படுத்தல்களின் உதவியுடன் தத்துவார்த்த வடிவத்தில் மறுபதிப்புச் செய்கிறது. அப்பொருளின் சாராம்சம், பிரதான உள்ளடக்கம், அதன் பொதுவான நியதி, அதன் வளர்ச்சியின் திசைவழி மற்றும் வரிசை முறை இங்கே மறுபதிப்புச் செய்யப்படுகின்றன.

ஒரு பொருளை ஒரு பக்கத்தில் அதன் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்கில், மறு பக்கத்தில் அதன் வளர்ச்சியின் தர்க்கவியலின் அடிப்படையில் ஆராய்வதை விஞ்ஞான அறிதல் முன்னூகிக்கிறது. இங்கே வரலாற்று

---

* கா. மார்க்ஸ், அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை, பக்கங்கள் 317—318.

முறை தர்க்கவியலின் உள்ளடக்கமாக இருக்கிறது; தர்க்க வியல் வரலாற்று முறையின் கட்டமைப்பு மற்றும் நியதிகளை வெளிக் கொணர்கிறது.

தர்க்கவியல் மற்றும் வரலாற்று முறைகளின் சாராம்சத்தையும் அவற்றை உபயோகிப்பதன் தலைமையான கோரிக்கைகளையும் பற்றிய அறிவு இயக்கவியல் சிந்தனையின் வளர்ச்சிக்கும் விஞ்ஞான தத்துவார்த்த மற்றும் நடைமுறைப் பயிற்சி முழுமைக்கும் மிகவும் முக்கியமாகும். இயக்கவியல் பொருள்முதல்வாதத்தைக் கற்றல் என்பது இரண்டு முறைகளையும் உபயோகித்தலை உள்ளடக்கியிருக்கிறது.

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் என்பது உலகத்தையும் அதில் மனிதனுடைய இடத்தையும் பற்றிய கருத்துக்களின் முற்றிலும் விஞ்ஞான ரீதியான அமைப்பாகும்; அதன் முன்வைப்பு முறை தத்துவ ரீதியாக, அதாவது தர்க்க ரீதியாக இருக்கிறது. இயற்கையாகவே, இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் அடிப்படையான கோட்பாடுகளை விவரிப்பதற்கு வரலாற்று முறையைக் கையாள முடியாது என்பது இதன் அர்த்தமல்ல. அநேகமாக ஒவ்வொரு தலைப்பிலும் அடிப்படையான கருதுகோள்கள், கருத்தினங்கள் மற்றும் விதிகளின் தர்க்க ரீதியான முன்வைப்பு அறிதலின் வரலாற்று நிகழ்வுப் போக்கில் அவற்றின் வளர்ச்சியைப் பற்றிய முன்வைப்பினால் ஸ்தூலப்படுத்தப்படுகிறது. உதாரணமாக, ''பருப்பொருளும் அதன் வாழ்நிலையின் வடிவங்களும்'' என்ற தலைப்பில் ஆராய்கின்ற பொழுது மாணவர் தற்கால அறிவின் மட்டத்துடன், பருப்பொருள், இயக்கம், விசும்பு, காலம், இதரவற்றின் விஞ்ஞானப் புரிதலுடன் மட்டும் நின்று விடுவதில்லை; பொருள்முதல்வாத மற்றும் கருத்துமுதல்வாதத் தத்துவஞானங்களின் வெவ்வேறு

கட்டங்களில், வெவ்வேறு தத்துவஞான மரபுகள் மற்றும் போக்குகளில் இக்கருத்தினங்களின் நிலையைப் பற்றியும் ஆராய்கிறார்.

விஞ்ஞான உலகக் கண்ணோட்டம் மற்றும் முறையியலின் அடிப்படை என்ற முறையில் இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தைப் பற்றிய அறிவு விஞ்ஞான அறிவின் தர்க்க ரீதியான ஒருங்கிணைந்த அமைப்பு என்ற முறையில் அதை சுவீகரித்துக் கொள்வதை உள்ளடக்கியிருக்கிறது. அடிப்படையான தத்துவக் கருதுகோள்களின் தர்க்க ரீதியான உள்ளடக்கம் எவ்வளவு சிறப்பாக சுவீகரித்துக் கொள்ளப்படுகிறது என்பது யதார்த்தத்துடன், சமூக வரலாற்று நடைமுறையுடன் அவற்றின் தொடர்பையே பெருமளவில் பொறுத்திருக்கிறது. தத்துவத்தைப் பற்றிய அறிவும் யதார்த்தமான நிகழ்வுப் போக்குகள் மற்றும் புலப்பாடுகளை ஆராய்வதற்கு அடிப்படையாக அதை உபயோகிக்கின்ற திறமையும் அறிதலின் தர்க்கவியல் மற்றும் வரலாற்று முறைகளின் ஒற்றுமையைச் சார்ந்திருக்க வேண்டும். இம்முறைகளை உணர்வு பூர்வமாக உபயோகிக்கின்ற அளவுக்கு அறிவைப் பெறுதலும் அதன் செய்முறை உபயோகமும் சிறப்பாக இருக்கும்.

பொருளை அதன் தொடர்புகள் மற்றும் உறவுகளின் வேற்றுமை மற்றும் முழுமையில் ஸ்தூலமாக மறுபதிப்புச் செய்வதற்கு முன்னேறுதல் சிக்கலான பகுப்பாய்வு மற்றும் கூட்டிணைப்பு நிகழ்வுப் போக்கு ஆகும்.

பகுப்பாய்வும் கூட்டிணைப்பும் அறிதலில் முக்கியமான முறைகள் ஆகும். பகுப்பாய்வு மற்றும் கூட்டிணைப்பு நடவடிக்கை பொதுவாக மொத்த அறிதல் நிகழ்வுப் போக்கிலும் இடம் பெற்றிருக்கிறது, சிந்தனையில் தலைமையான கூறாக இருக்கிறது. ''உறவு கொண்டுள்ள கூறு

களை ஒற்றுமையில் ஒன்று சேர்ப்பதைப் போலவே உணர்வின் பொருட்களை அவற்றின் தனிக் கூறுகளாகப் பிரிப்பதிலும் சிந்தனை அடங்கியிருக்கிறது'' என்று எங்கெல்ஸ் எழுதினார்.*

பகுப்பாய்வு என்பது மொத்தத்தை அதன் எளிமையான உட்பகுதிகள், அம்சங்கள், இயல்புகளாக மனோரீதியில் பிரிப்பதும் அவற்றின் குறிவழிப்பட்ட, முறைப்படியான ஆராய்ச்சியுமாகும். கூட்டிணைப்பு என்பது பகுத்தாராயப்பட்ட தனிப் பகுதிகள், அம்சங்கள் மற்றும் கூறுகளின் தொடர்புகளையும் உறவுகளையும் மனோரீதியில் ஒருங்கிணைப்பதும் மறுபதிப்புச் செய்வதும் மொத்தத்தை அதன் ஒருமையில் புரிந்து கொள்வதும் ஆகும்.

அறிதல் நிகழ்வுப் போக்கின் போது பொருள் அல்லது நிகழ்விலிருந்து அதன் பல்வேறு அம்சங்கள், இயல்புகள், தொடர்புகள் மற்றும் உறவுகள் சூக்குமப்படுத்தலின் மூலம் மனோரீதியில் பிரிக்கப்பட்டு முற்றாக ஆராயப்படுகின்றன. பொருளை அதன் உட்பகுதிகளாகப் பிரிப்பதும் ஆராய்வதும் ஆராய்ச்சியாளர் அவற்றின் அனைத்து வேற்றுமையிலிருந்தும் இன்றியமையாத, முக்கியமான, உள்ளீடானவற்றைப் பொறுக்கியெடுப்பதற்கும் இவற்றை இரண்டாம் நிலையான, தற்செயலான மற்றும் வெளிப்புறமானவற்றிலிருந்து பிரிப்பதற்கும் உதவுகின்றன. இத்தகைய மனோரீதியான நடவடிக்கைகள் வேறுபட்டிருக்கின்ற அனைத்துக் கூறுகளையும் பொருளின் பண்பு ரீதியான வரையறுப்பாக ஒன்று சேர்க்கின்ற இன்றியமையாத பொது அம்சத்தை வெளிக்கொணர்வதைச் சாத்தியமாக்குகின்றன.

எனினும் அறிதல் நிகழ்வுப் போக்கு பகுப்பாய்வுடன்

* Frederick Engels, *Anti-Dühring*, p. 56.

நின்று விடுவதில்லை; அது பொருளை மனோரீதியில் மறு பதிப்புச் செய்கிறது, ஸ்தூலமானவற்றை வேற்றுமையின் ஒருமையாக மறுபதிப்புச் செய்கிறது.

கூட்டிணைப்பு பகுப்பாய்வின் தர்க்க ரீதியான தொடர்ச்சி, அதன் மறு பக்கம் ஆகும். அது கீழ்ப்படுதலின் அடிப்படையில் சூக்குமமான கருத்தினங்களாக எடுத்துரைக்கப்பட்ட பகுத்தாராயப்பட்ட கூறுகளை மனோரீதியில் ஒன்று சேர்ப்பதற்கு உதவுகிறது.

அறிதலின் பொதுவான விஞ்ஞான முறைகள் என்ற முறையில் பகுப்பாய்வு மற்றும் கூட்டிணைப்பைப் பிரிக்க முடியாது. மொத்தத்தைப் புரிந்து கொள்வதற்குப் பகுப்பாய்வு முறையின் உதவியின் மூலம் பகுதிகளை ஆராய்வது அவசியம்; ஆனால் பகுதிகளின் பாத்திரமும் செயல்களும் கூட்டிணைப்பின் உதவியோடு மொத்தத்தை அறிதலின் மூலமாக மட்டுமே புரிந்து கொள்ளப்பட முடியும். ஆராய்ச்சியாளர் புலனுணர்ச்சி ஸ்தூலத்திலிருந்து சூக்குமத்தை நோக்கி முன்னேறுவதற்குப் பகுப்பாய்வு உதவுகிறது; சூக்குமத்திலிருந்து மனோரீதியில் ஸ்தூலத்துக்கு முன்னேறுவதற்கு கூட்டிணைப்பு உதவுகிறது. லெனின் பகுப்பாய்வு மற்றும் கூட்டிணைப்பின் ஒற்றுமையை வலியுறுத்தி பின்வருமாறு எழுதினார்: ''...பகுப்பாய்வு மற்றும் கூட்டிணைப்பு ஒன்று சேர்தல்—தனிப் பகுதிகள் பிரிதல் மற்றும் மொத்தம், இப்பகுதிகள் ஒன்றுபடுதல்.''*

பகுப்பாய்வும் கூட்டிணைப்பும் விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பயன்படுவது மட்டுமின்றி எவ்விதமான தத்துவார்த்த அல்லது செய்முறைப் பிரச்சினையின் தீர்வுக்கும் அவை உபயோகிக்கப்படுகின்றன. கல்வியில் கிடைத்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 38, p. 221.

துள்ள விவரங்களின் பகுப்பாய்வும் கூட்டிணைப்பும் முக்கியமான முறைகளாகப் பயன்படுகின்றன.

இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாத ஆராய்ச்சியில் பகுப்பாய்வு புதிய தகவலைப் பெறுவதற்கும், அதைப் பிரித்து விவரங்களைக் கொண்டு நிரப்புவதற்கும், அடிப்படையான கருதுகோள்கள், கருத்தினங்களின் தர்க்க ரீதியான அளவு மற்றும் உள்ளடக்கத்தை நிர்ணயிப்பதற்கும் உபயோகிக்கப்படுகிறது. கூட்டிணைப்பு பொதுமைப்படுத்தப்பட்ட கருதுகோள்களை வகுப்பதற்கும், கருத்துக்களுக்கு இடையிலுள்ள தர்க்க ரீதியான தொடர்பை வெளிக் கொண்டு வருவதற்கும், ஆராயப்படுகின்ற பொருள் அல்லது நிகழ்வின் இயன்ற அளவுக்கு முழுமையான சித்திரத்தை மறுபதிப்புச் செய்வதற்கும் உபயோகிக்கப்படுகிறது. விஞ்ஞானத் தகவலைப் பகுப்பாய்வு மற்றும் கூட்டிணைப்பு முறையில் ஒழுங்கமைத்தல் மொத்தமாக அந்தத் துறை, ஒவ்வொரு தனித் தலைப்பு ஆகிய இரண்டின் சுற்றுவட்டத்திற்குள்ளாகவும் நிறைவேற்றப்படுகிறது. ஒவ்வொரு தலைப்பிலும் நடைபெற்ற ஆராய்ச்சியின் விளைவுகள், அதன் முக்கியமான கருத்துக்களையும் கருதுகோள்களையும் கூட்டிணைத்தல் அறிதலின் கடைசி எல்லை அல்ல; ஏனென்றால் இவ்விதமாகக் கூட்டிணைக்கப்பட்ட முடிவுகள் மற்ற தலைப்புகளைப் பற்றிய ஆராய்ச்சியின் உயர்மட்டத்தில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படக் கூடும்.

ஆராய்ச்சித் தகவல்களைப் பகுப்பாய்வு மற்றும் கூட்டிணைப்பு முறையில் ஒழுங்கமைத்தல் படைப்புத் தன்மையுடன் அதை சுவீகரிப்பதற்கு ஒரு நிபந்தனையாகும். அத்தகவல்களைப் பகுத்தாராய்தல், புரிந்து கொள்ளுதல், முறைப்படுத்துதல் இயக்கவியல் சிந்தனையை வளர்க்கிறது; ஆனால் வெறுமனே மனப்பாடம் செய்தல்

பயனற்றதாகும். அது நினைவாற்றலை ஒரு முனை வரை வளப்படுத்தும், ஆனால் பிறகு அதைத் தடை செய்யும். மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தில் உயர்ந்த தகுதியைப் பெறுவதற்குப் பகுப்பாய்வு மற்றும் கூட்டிணைப்பைத் தகுந்த முறையில் உபயோகிக்கத் தவறினால் அதைச் சூத்திரமாகவும் வறட்டுக் கோட்பாடாகவும் உபயோகிக்கின்ற பாதகமான விளைவுகள் ஏற்படக் கூடும்.

இம்முறைகளில் ஏதாவதொன்றைத் தனிமுதலாக்கி அடுத்த முறையைக் குறைத்து மதிப்பிடுவது அதே அளவில் ஆபத்தாக இருக்கும். உண்மையான விஞ்ஞான அறிதலுக்குப் பகுப்பாய்வு மற்றும் கூட்டிணைப்பை அவற்றின் ஒற்றுமையில் உபயோகித்தல் அவசியம். பகுப்பாய்வை மட்டும் உபயோகித்தால் ஆராயப்படுகின்ற பொருள், நிகழ்வுப் போக்கு அல்லது புலப்பாட்டைப் பற்றிய ஒருங்கிணைந்த ஸ்தூலமான அறிவைப் பெற முடியாது, அதன் சாராம்சத்தைப் புரிந்து கொள்ள முடியாது. பகுப்பாய்வு இல்லாமல் கூட்டிணைப்பை மட்டும் கடைப்பிடித்தால் அது அறிதலைத் தெளிவற்ற, பெரும்பாலும் அர்த்தமற்ற முயற்சியாகச் செய்து விடும்.

மார்க்சிய-லெனினியத் தத்துவத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் பகுப்பாய்வு மற்றும் கூட்டிணைப்பைச் சரியான முறையில் உபயோகித்தல் விஞ்ஞான ரீதியான அறிவு முறை என்னும் அதன் தனித்தன்மையால் நிர்ணயிக்கப்படுகிறது. பகுப்பாய்வு மற்றும் கூட்டிணைப்புச் சிந்தனை மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் சிறப்பான முறையில் பொருள்முதல்வாத இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் உள்ளடக்கத்துடன் பொருந்துகிறது. இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாத ஆராய்ச்சியில் பகுப்பாய்வு மற்றும் கூட்டிணைப்புச் செயல்முறையை உணர்வு பூர்வமாகக் கடைப்பிடித்தல்

கல்விப் பிரச்சினைகளை மிகவும் வெற்றிகரமாகத் தீர்ப்பதை உறுதி செய்கிறது. பகுப்பாய்வு மற்றும் கூட்டிணைப்புச் சிந்தனைக்குரிய ஆற்றலையும் திறமைகளையும் வளர்த்துக் கொள்வதும் வலுப்படுத்துவதும் மிக முக்கியமானதாகும்; ஏனென்றால் சமூக வளர்ச்சியின் செய்முறைக் கடமைகளைப் படைப்பாற்றலுடன் நிறைவேற்றுவதற்கு அது உதவுகிறது.

அறிதலில் பகுப்பாய்வு, கூட்டிணைப்புடன் சேர்ந்து தொகுப்பும் பகுப்பும் தலைமையான பாத்திரத்தை வகிக்கின்றன.

தொகுப்பும் பகுப்பும் புதிய அறிவைப் பெறுகின்ற எதிர்நிலை வடிவங்களாகும். தொகுப்பு என்பது உதிரியான விவரங்களிலிருந்து பொதுவான கருதுகோளுக்கு, குறைந்த பொதுப்படையான அறிவிலிருந்து அதிகப் பொதுப்படையான அறிவுக்கு முன்னேறுகின்ற சிந்தனையாகும். பகுப்பு என்பது பொதுப்படையானவற்றிலிருந்து குறிப்பிட்டவற்றுக்குச் செல்கின்ற சிந்தனையாகும். தொகுப்பு ஆரம்பப் பிரமேயங்களிலிருந்து விரிவான, பொதுமைப்படுத்துகின்ற முடிவைப் பெறுவதைச் சாத்தியமாக்குகிறது; ஆனால் பகுப்பு முறைத் தீர்மானங்கள் ஆரம்பப் பிரமேயங்களுடன் ஒப்பிடுகின்ற பொழுது குறைவான அளவுக்கே பொதுப்படையாக இருக்கின்றன.

அறிதல் நிகழ்வுப் போக்கின் ஆரம்பக் கட்டங்களில், மனிதன் பரிசோதனை அனுபவத்தைப் புரிந்து கொண்டு, தகவல்களையும் விவரங்களையும் சேகரித்துப் பொதுமைப்படுத்தி, கருதுகோளை உருவாக்கி அதைச் சரிபார்க்கின்ற பொழுது தொகுப்பு முறை பயனுள்ளதாக இருக்கிறது. ஒரு தனி மெய்விவரத்தை ஆதாரமாகக் கொண்டு பகுப்பாய்வும் பொதுமைப்படுத்தலும் செய்வதற்கு இதை உபயோகிக்க முடியும் என்பது இந்த முறையின்

சிறப்பான அம்சங்களில் ஒன்றாகும். அது மிகவும் வெளிப் படையான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டது. தொகுப்பு முறையைத் தொடர்ச்சியாக உபயோகித்தல் ஸ்தூலமான நிலைமைகளைப் பகுத்தாராய்கின்ற, மெய் விவரங்களைப் பொதுமைப்படுத்துகின்ற, கருதுகோள் களை உருவாக்கிச் சரிபார்க்கின்ற திறமையை வளர்க் கிறது. அதே சமயத்தில் நாம் தொகுப்பு முறையின் வரை யறைகளை, அதன் மூலம் பெறுகின்ற அறிவின் மட்டான தன்மையைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆராயப் படுகின்ற பொருளின் வளர்ச்சியைக் கணக்கிலெடுத்துக் கொள்ள முடியாதது தொகுப்பு முறையின் பலவீனமா கும். ''தொகுப்பு முறை பயன்படுத்துகின்ற உயிரினம், வகையினம், வர்க்கம் ஆகிய கருத்துக்கள் பரிணாமத் தத்துவத்தினால் நெகிழ்ச்சி அடைந்து விட்டன, ஆகவே அவை சார்புநிலையானவை; சார்புநிலையான கருத்துக் களைத் தொகுப்பு முறைக்குப் பயன்படுத்த முடியாது'' என்று எங்கெல்ஸ் எழுதினார்.*

பகுப்பு முறையின் உதவியினால் பெறுகின்ற முடிவு கள் முற்றிலும் நிரூபிக்கப்படக் கூடியவை, அதனால் விளைகின்ற அறிவு உண்மையானது, ஆதார பூர்வமானது என்பது அந்த முறையின் சிறப்பான அம்சங்களில் ஒன்றா கும். உண்மையான பிரமேயங்களிலிருந்து நாம் தர்க்க ரீதியில் அவசியமான முடிவுகளைப் பெற முடியும். ''நம் முடைய பிரமேயங்கள் சரியாக இருக்குமானால், நாம் சிந்தனை விதிகளை அவற்றுக்குச் சரியாகப் பயன்படுத் தினால் முடிவு யதார்த்தத்துடன் சரியாகப் பொருந்தும்'' என்று எங்கெல்ஸ் எழுதினார்.** பகுப்பு முறை தத்து

* Frederick Engels, *Dialectics of Nature*, pp. 227—228.

** Frederick Engels, *Anti-Dühring*, p. 399.

வார்த்த விஷயத்துக்குத் தர்க்க ரீதியான ஒழுங்கையும் உறுதியையும் கொடுக்கிறது, அதை நிறுவுவதற்கும் முறைப்படுத்துவதற்கும் உதவுகிறது. கூட்டிணைப்பை உதவியாகக் கொண்ட பகுப்பு முறை பரிணாமத் தத்து வத்துடன், பொருளின் மாற்றத்தின் வரலாற்றுக் கட்டங் களுடன் பொருந்தி நிற்கிறது. ''ஒரு உயிரினம் மற்றொன் றிலிருந்து மெய்யாகவே பகுப்பு முறையில் வருவிக்கப்படுகிறது'' என்று எங்கெல்ஸ் எழுதினார்.* எனினும் பகுப்பு முறை யிலும் குறைகள் இருக்கின்றன. பகுப்பு முறையின் சா தியங்கள் அதன் அடிப்படையான பொதுப் பிரமேயங் களின் மொத்தத்தினாலும் இப்பிரமேயங்களைச் செல் லும்படிச் செய்வதற்கு அதன் இயலாமையினாலும் வரை யறுக்கப்படுகின்றன.

அறிதலின் மெய்யான நிகழ்வுப் போக்கில் தொகுப்பு முறையும் பகுப்பு முறையும் ஒற்றுமையில் இருக்கின்றன. இந்த ஒற்றுமை இரண்டு முறைகளின் சாதகமான அம்சங் களையும் உபயோகிப்பதைச் சாத்தியமாக்குகிறது; ஒரு முறையின் குறைகள் அடுத்த முறையின் சிறப்புக்களினால் அகற்றப்படுகின்றன. தொகுப்பு முறை பகுப்பு முறை யினால் அவசியமாகக் குறை நிரப்பப்படுகிறது; பகுப்பு முறையின் கூறுகள் அதில் அடங்கியிருக்கின்றன. அது பொருட்களில் உள்ள ஒத்த தன்மைகளைச் சுட்டிக் காட்டுவதுடன் நிற்பதில்லை; இவற்றில் இன்றியமையா வற்றைப் பிரித்தெடுத்து அவற்றின் பரஸ்பரத் தொடர்பு களையும் உறவுகளையும் காட்டுகிறது; பகுப்பு முறை யின் சில அம்சங்கள் இல்லாமல் இது நடைபெற முடி யாது. பகுப்பு முறையையும் ஆரம்பப் பிரமேயங்களின் உண்மைக்கும் செல்தகைமைக்கும் சம்பந்தமில்லாத

* Frederick Engels, *Dialectics of Nature*, p. 227.

விவாத முறையாக வகைப்படுத்த முடியாது, தொகுப்பு முறையின் சில அம்சங்களைச் சேர்த்துக் கொள்வதால் தான் இது உறுதி செய்யப்படுகிறது. அவற்றின் பரஸ் பரத் தொடர்பையும் பரஸ்பரச் சார்புநிலையையும், அறிதல் நிகழ்வுப் போக்கில் அவற்றின் ஒற்றுமையின் அவசியத்தையும் கருத்தில் கொண்டு எங்கெல்ஸ் பின் வருமாறு எழுதினார்: ''கூட்டிணைப்பும் பகுப்பாய்வும் சேர்ந்திருப்பது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவ சியம் தொகுப்பும் பகுப்பும் சேர்ந்திருத்தல். ஒரு சார் பாக, ஒன்றைக் குறைத்து மற்றொன்றை வானளாவ உயர்த்துவதற்குப் பதிலாக நாம் அவை ஒவ்வொன்றை யும் அவற்றுக்குரிய முறையில் பயன்படுத்துவதற்கு முயல வேண்டும். அவை சேர்ந்திருக்கின்றன, அவை ஒன்றுக் கொன்று குறை நிரப்புகின்றன என்பதை நினைவிலிறுத் தினால்தான் இதைச் செய்ய முடியும்.''*

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் விஞ்ஞான ரீதியான தொகுப்பையும் பகுப் பையும் பயன்படுத்துகிறோம்; அதில் அறிவு கிடைத்திருக் கின்ற தகவல் அடிப்படையில் உய்த்துணரப்படுகிறது. இம்முறைகளில் நிபுணத்துவம் பெறுவது ஒரு பக்கத்தில், யதார்த்தத்தின் மெய்விவரங்களையும் நிகழ்வுகளையும், அன்றாட செய்முறை நடவடிக்கையையும் பொதுமைப் படுத்துவதற்கும் மறு பக்கத்தில், பொதுவான கடமை கள் மற்றும் கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்டு செய்முறைப் பிரச்சினைகளுக்கு ஸ்தூலமான தீர்வுகளைக் காண்பதற்கும் உதவுகிறது.

கல்வியியல் தொகுப்பு மற்றும் பகுப்பு முறைகளைத்

---

* *Ibid*., p. 228.

திறமையுடன் பயன்படுத்துவது கல்வியிலும் தொழிலிலும் மாபெரும் செய்முறை உதவியாக இருக்கிறது. தொகுப்பையும் பகுப்பையும் கல்வித் துறையில் பயன்படுத்துதல் அறிவை உய்த்துணர்ந்து பெறுகின்ற மேற்கூறிய முறைகளிலிருந்து வேறுபடுகிறது. ஏனென்றால் அதன் நோக்கம் பிரமேயங்களிலிருந்து முடிவுகளைப் பெறுவது அல்ல, அறிவின் ஒரு அலகிலிருந்து மற்றொன்றுக்குச் செல்வது, வெவ்வேறு விதமான கருத்துக்களையும் கருதுகோள்களையும் விளக்குவதே. ஆராய்ச்சித் தகவலை முறைப்படுத்துகின்ற பொழுது தொகுப்பு முறை, பகுப்பு முறை ஆகிய இரண்டு முறைகளையும் அதற்குப் பயன்படுத்த முடியும். உதிரியான விவரங்களிலிருந்து பொதுவான கருதுகோள்களுக்கு முன்னேறுகின்ற முறையில் அத்தகவல் முறைப்படுத்தப்பட்டு முன்வைக்கப்படுமானால் அங்கே தொகுப்பு முறை பயன்படுத்தப்படுகிறது; பொதுவான கருதுகோள்களில் தொடங்கி பிறகு உதிரியான விவரங்களுக்கு வருகின்ற முறையில் பிரச்சினை முன்வைக்கப்படுமானால் அங்கே பகுப்பு முறை உபயோகிக்கப்படுகிறது.

அநேகமாக எந்தப் பிரச்சினையையும் பகுப்பு முறையிலும் தொகுப்பு முறையிலும் முன்வைக்க முடியும். முன்வைப்பு நோக்கங்கள், பிரச்சினையின் தனித்தன்மைகள், கேட்பவர்களின் பிரத்யேக குணாம்சங்கள் ஆகியவற்றுக்கு ஏற்பவே முறை வழக்கமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஒரு பிரச்சினையை எல்லோரும் சுலபமாகப் புரிந்து கொள்ளும்படி முன்வைப்பதற்கு தொகுப்பு முறை சிறப்பானதாக இருக்கும். சொல்லப்படுகின்ற கருதுகோள்களைக் கறாராக விளக்குவதற்குப் பகுப்பு முறை பயன்படுத்தப்படுகிறது. இயக்கவியல் பொருள்முதல்வாத ஆராய்ச்சியில் இரண்டு முறைகளையும் பயன்படுத்த வேண்டும்; ஒவ்வொரு தலைப்பிலும் பிரச்சினைகளின்

உள்ளடக்கத்தை மாணவர் நன்கு புரிந்து கொள்வதற்கு, அப்படிப் பெற்ற அறிவைச் செய்முறையில் பயன்படுத்து வதற்கு எந்த முறை தகுதியுடையதென்று தேர்ந்தெடுக்க வேண்டும்.

நாம் ஏற்கெனவே சுட்டிக் காட்டியதைப் போல அறிதலில் விஞ்ஞான சூக்குமப்படுத்துதல்கள் மிகவும் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. ஆனால் அறிதல் செயல்முறை இவற்றைத் தயாரிப்பதுடன் நின்று விடுவதில்லை; ஏனென்றால் இவை ஆராயப்படுகின்ற பொருளின் மொத்த சாராம்சத்தை வெளிக் கொணர முடியாது. சூக்குமச் சிந்தனை அரைகுறையானது, பொதுப்படையானது, இயக்கவியலுக்கு மாறானது; ஆனால் இயக்கவியல் சிந்தனை மிக ஆழமான அளவுக்கு விஞ்ஞான ரீதியானது, திட்டவட்டமானது, முரணற்றது, தீர்மானமானது, அதாவது ஸ்தூலமானது.

சிந்தனையை ஸ்தூலப்படுத்துவதில் (தொகுப்பு முறையையும் பகுப்பு முறையையும் போல) ஒப்புமை முக்கியமான கருவியாக இருக்கிறது. சிந்தனை ஒரு குறிப்பிட்ட விவரத்திலிருந்து மற்றொரு விவரத்துக்கு முன்னேறிச் செல்வது அதன் பிரத்யேகமான அம்சமாகும். ஒப்புமை தொகுப்பு முறைக்கும் பகுப்பு முறைக்கும் இடையில் இடைநிலையான, மாறும் இடத்தை வகிக்கிறது.

ஒப்புமை என்பது பொருட்களுக்கு இடையில் சில அம்சங்களில் ஒத்த தன்மை இருப்பதைக் கொண்டு மற்ற அம்சங்களில் அவற்றின் ஒத்த தன்மையைப் பற்றிய முடிவைப் பெறுகின்ற அறிவு முறையாகும். ஒப்புமைக்கு முன்பாக ஆராயப்படுகின்ற பொருளைப் பற்றி ஆரம்ப நடவடிக்கைகளின் தொகுதி இருக்க வேண்டும் என்பது இதன் அர்த்தமாகும். இவை பின்வருமாறு: முதலாவதாக, பொருளின் அம்சங்கள், இயல்புகள், தொடர்புகள்,

உறவுகளைப் பற்றி அனுபவ ரீதியான விவரங்களைச் சேகரித்தலும் முறைப்படுத்துதலும்; இரண்டாவதாக, தகுந்த மாதிரிப் படிவத்தைத் தேர்ந்தெடுத்தல், அதன் இயல்புகள் மிக முழுமையாக ஆராயப்பட்டிருக்க வேண்டும், அதைக் கொண்டு ஒப்புமை உருவாக்கப்படும்; மூன்றாவதாக, ஒப்பிடப்படுகின்ற பொருட்களின் பொதுவான அம்சங்களுக்கும் மாதிரிப் படிவத்தில் இருக்கின்ற, ஆராயப்படுகின்ற பொருளுக்கு மாற்றப்படுகின்ற அம்சத்துக்கும் இடையிலுள்ள இன்றியமையாத மற்றும் அவசியமான தொடர்பை நிறுவுதல்.

வெவ்வேறு பொருட்கள் மற்றும் நிகழ்வுகளின் பொதுவான அம்சங்களைச் சுட்டிக் காட்டுவது முதல் ஆராய்ச்சி நடவடிக்கை, ஆக எளிமையான நடவடிக்கை. இங்கே முக்கியமாகச் செய்ய வேண்டியது முதலாவதாக, இயன்ற அளவுக்கு அதிகமாகப் பொது அம்சங்களை நிறுவுதல்; இரண்டாவதாக, இப்பொருட்கள் அல்லது நிகழ்வுகளின் அவசியமான, உள்ளீடான அம்சங்களில் உள்ள ஒத்த தன்மைகளைப் பிரித்தெடுக்க வேண்டும், இரண்டாம் நிலையான, தற்செயலான எல்லா அம்சங்களையும் விலக்க வேண்டும். ஆராயப்படுகின்ற பொருட்கள், புலப்பாடுகள் அல்லது நிகழ்வுப் போக்குகளின் ஒத்த தன்மைகளும் வேறுபாடுகளும் எவ்வளவு முற்றாக ஆராயப்படுகின்றனவோ அந்த அளவுக்கு ஒப்புமையிலிருந்து பெறப்படுகின்ற முடிவு அழுத்தமாகவும் அதிகமாக நிகழக் கூடியதாகவும் இருக்கும்.

பொருட்கள் அல்லது நிகழ்வுகளின் சில இயல்புகள் அல்லது அம்சங்களின் ஒத்த தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு மற்ற இயல்புகள் அல்லது அம்சங்களின் ஒத்த தன்மையைப் பற்றிச் செய்யப்படுகின்ற முடிவு நிகழக் கூடியது மட்டுமே. ஒரே மாதிரியான பொருட்கள்

அல்லது நிகழ்வுகளைப் பற்றிய பரந்த, முற்றான, ஆழமான ஆராய்ச்சி ஒப்புமையிலிருந்து பெறுகின்ற முடிவுகளின் நிகழக் கூடிய தன்மை அதிகரிப்பதற்கு இன்றியமையாத நிபந்தனையாகும். ஆராயப்படுகின்ற பொருட்களைப் பற்றிய நமது அறிவு முழுமையாக இருக்கின்ற அளவுக்கு அவற்றின் எண்ணிக்கையின் முக்கியத்துவம் குறைந்து விடுகிறது. பொருட்கள் சரிவர ஆராயப்படாத பொழுது, அவற்றின் சாராம்சம் வெளிப்படுத்தப்படாத பொழுது, அவற்றின் வேறுபாடுகள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படாத பொழுது ஒப்புமையின் மூலம் நிகழக் கூடிய முடிவுகளைப் பெற இயலாது. ஒப்பிடப்படுகின்ற பொருட்கள் முற்றிலும் பொருந்தியிருக்க முடியாது என்பதையும் நினைவிலிறுத்த வேண்டும். ஒப்புமை சில குறிப்பிட்ட கூறுகளின் அடிப்படையில் அவற்றின் ஒத்த தன்மையை சில அம்சங்களில் மட்டுமே நிறுவுகிறது. ''எல்லா ஒப்பீடும் அரைகுறையானதே'' என்று லெனின் எழுதினார். ''ஒவ்வொரு ஒப்பீட்டிலும் ஒப்பிடப்படுகின்ற பொருட்கள் அல்லது கருத்துக்களின் ஒரேயொரு அம்சம் அல்லது சில அம்சங்களைப் பற்றி மட்டுமே ஒப்புமை உருவாக்கப்படுகிறது. ஏனைய அம்சங்கள் தற்காலிகமாக வும் நிபந்தனையின் பேரிலும் பிரித்து வைக்கப்படுகின்றன.''*

ஒப்புமையின் முடிவுகள் நிகழக் கூடியவை மட்டுமே என்பதால் அது தர்க்க ரீதியான நிரூபணத்துக்குக் கருவியாகப் பயன்பட முடியாது. எனினும் அது அறிதலில் அதிகப் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்ற முறைகளில் ஒன்றாக இருக்கிறது.

---

* வி. இ. லெனின், வெகுஜனங்களிடையே கட்சியின் பணி, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1980, பக்கம் 37.

ஒப்புமையை எப்படி உபயோகிப்பதென்ற அறிவும் அதைக் கையாளுவதில் தேர்ச்சியும் செய்முறையில் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்க முடியும். ஒரே மாதிரியான நிகழ்வுப் போக்குகள், புலப்பாடுகள் மற்றும் வாழ்க்கை நிலைமைகளைப் பகுத்தாராய்வது பல்வேறு பிரச்சினைகளுக்கு உசிதமான தீர்வுகளைக் கண்டுபிடிப்பதையும் ஸ்தூலமான நிலைமைகளில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்வதையும் சாத்தியமாக்குகிறது. தொழிலாளர் இயக்கத்தை எதிர் நோக்குகின்ற அவசரமான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் லெனின் ஒப்புமையை எப்படிக் கையாண்டார் என்பதை எடுத்துக் காட்டுகின்ற பொழுது நடேஷ்தா குரூப்ஸ்கயா பின்வருமாறு எழுதினார்: ''அதே போன்ற நிலைமைகளை ஆராய்கின்ற மார்க்சின் நூல்களை எடுத்துக் கொண்டு, முற்றாக ஆராய்ந்து நிகழ்காலத்துடன் ஒப்பிட்டு ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் வெளிக் கொணர்வது லெனினுடைய முறையாகும்.''* பொருந்துகின்ற குறியீடுகளின் தொகுதியின் அடிப்படையில் ஒரு நிகழ்வுப் போக்கு அல்லது புலப்பாட்டின் வளர்ச்சியின் திசைவழியை முன்னறிந்து கூற முடியும்; அதன் விரும்பத்தகாத விளைவுகளைத் தவிர்ப்பதற்கும் ஆக்கபூர்வமான அம்சங்களைப் பலப்படுத்துவதற்கும் ஏற்ற வழிகளையும் முறைகளையும் தீர்மானிக்க முடியும்.

சொல் மற்றும் காட்சி மாதிரிகளை அமைப்பதற்கு ஒப்புமை உபயோகிக்கப்படுகிறது; அவற்றில் ஆராயப்படுகின்ற துறை இன்னும் நன்கு அறியப்பட்டு, புரிந்து

---

* நடேஷ்தா குரூப்ஸ்கயா, லெனினைப் பற்றி. சொற்பொழிவுகளும் கட்டுரைகளும், மாஸ்கோ, 1971, பக்கம் 249 (ருஷ்ய மொழியில்).

கொள்வதற்கு சுலபமாக இருக்கின்ற மற்றொன்றின் உதவியினால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது. அதிகமான செல்தகைமையைக் கொண்ட முடிவுகளைப் பெறுவதற்கு மாதிரிப் படிவப் பரிசோதனைகள் உபயோகிக்கப்படுகின்றன. இந்த உதாரணத்தில் குறிப்பிட்ட பொருள், நிகழ்வுப் போக்கு அல்லது புலப்பாடு மெய்யாகவே இருக்கின்ற அல்லது கற்பனை செய்யப்படுகின்ற அமைப்பில் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது; அந்த மெய்யான அல்லது கற்பனையான அமைப்பு அறிதல் நிகழ்வுப் போக்கில் மூலத்துக்குப் பதிலாக இருக்கிறது, மூலத்தை ஒத்ததாக அல்லது அதே மாதிரியானதாக இருக்கிறது. மாதிரியமைத்தல் என்பது மூலத்தின் கட்டமைப்பு, நடத்தை மற்றும் இதர இயல்புகளின் தனித்தன்மைகளை மறுபதிப்புச் செய்கின்ற மாதிரியை அமைத்து அதைக் கொண்டு சோதனையைச் செய்தல் அல்லது மனோரீதியில் ஆராய்தலாகும். ஆராய்ச்சியாளர் நேரடியாகப் பார்க்க முடியாத நிகழ்வுப் போக்குகளை அளவில் பெரிய அல்லது அளவில் சிறிய மாதிரியின் உதவியைக் கொண்டு ''கலப்பற்ற'' வடிவத்தில் இன்னும் முற்றாக ஆராய்வதற்கு மாதிரிகள் உதவி புரிகின்றன. சோதனை முடிவுகள் மூலத்துக்கு அல்லது ஆராயப்பட்ட பொருளை ஒத்த பொருட்களின் மொத்தத் தொகுதிக்குப் பொதுமைப்படுத்தப்பட்டு மாற்றப்படுகின்றன. மாதிரிச் சோதனைகளின் முடிவுகள் மிகவும் ஆதார பூர்வமானவை. தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி மற்றும் மாபெரும் சமூக மாற்றங்களில் மாதிரிப் பரிசோதனைகள் மேன்மேலும் அதிகமான அளவில் இயற்கை மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானங்களில் மட்டுமின்றி சமூகவியல், பொருளாதாரம், இதரவற்றிலும் நடைபெறுகின்றன. சமூக நடைமுறையானது, சமூக அறிதல் முறை மற்றும் சமூக விஞ்ஞானத்தின் தலைமையான கடமை என்ற வகையில் மாதிரியமைத்தலை மேன்மேலும் அதிகமாக முன்வைக்கிறது.

முடிவுரை

பொருள்முதல்வாத இயக்கவியல் மார்க்சிய-லெனினியத்தின் தலைமையான தத்துவார்த்தச் சாதனையாகும். அதன் வரலாற்று முக்கியத்துவமும் மனிதகுலத்தின் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் நிரந்தர மதிப்பும் மிகைப்படுத்திக் கூறப்பட முடியாதவை. அது மனித நடவடிக்கையின் ஒவ்வொரு துறையிலும்—தத்துவஞானம் மற்றும் திட்டவட்டமான விஞ்ஞானங்கள், பொருளாயத மற்றும் ஆன்மீக உற்பத்தியின் அனைத்துத் துறைகளில்—விதிவிலக்கில்லாமல் விரவியிருக்கிறது.

பொருள்முதல்வாத இயக்கவியலின் அடிப்படைகளைச் சுருக்கமாகவும் எளிமையான முறையிலும் எடுத்துரைப்பது கூட உலகக் கண்ணோட்டம் என்ற வகையில் அதன் மாபெரும் முக்கியத்துவம், அதன் கோட்பாடுகள், விதிகள், கருத்தினங்களின் முறையியல் பாத்திரம், அவற்றின் செல்தகைமை மற்றும் கறாரான விஞ்ஞானத் தன்மை, ஆகவே விஞ்ஞான அறிதலுக்கும் அதை அடிப்படையாகக் கொண்ட நடைமுறைக்கும் அவற்றின் இன்றியமையாமை ஆகியவற்றை எடுத்துக் காட்டுகிறது.

விஞ்ஞான அறிதல், அதிலிருந்து விளைகின்ற நடைமுறையின் உலகக் கண்ணோட்டம் மற்றும் முறையியல் அடிப்படை என்ற வகையில் பொருள்முதல்வாத இயக்கவியல் எப்படி வாழ்க்கையுடன் பொருந்துகிறது என்பதற்கு மிகவும் தத்ரூபமான சில வெளிப்பாடுகளை இங்கே குறிப்பிடுகிறோம்.

முதலாவதாக, பொருள்முதல்வாத இயக்கவியல்

இயற்கை, சமூகம் மற்றும் சிந்தனையின் மிகப் பொதுப் படையான விதிகளின் விஞ்ஞானம்; இத்துறைகள் அனைத்திலும் உள்ள வளர்ச்சியின் புறநிலையான நியதிகளை அது விஞ்ஞான ரீதியில் பிரதிபலிக்கிறது. அது விஞ்ஞானத்துக்கும் நடைமுறைக்கும் உலகக் கண்ணோட்டத்தையும் முறையியலையும் தருகிறது, அவற்றைப் புதிய, முற்போக்கான, வளர்ச்சியுறுகின்ற அனைத்தையும் நோக்கித் திருப்புகிறது.

இரண்டாவதாக, வரலாற்றுணர்வுக் கோட்பாட்டை முரணில்லாமல் பயன்படுத்துவதன் மூலம் பொருள்முதல்வாத இயக்கவியல் மனிதகுல முன்னேற்றத்தின் எல்லையற்ற வாய்ப்புக்களை எடுத்துக் காட்டுகிறது; முற்போக்கான வர்க்கத்தின் நிலைகளிலிருந்து அனைத்து மக்களுடைய உணர்வையும் எதிர்காலத்தை நோக்கி, சமூக இருத்தலின் உலகப் பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்படுகின்ற சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நோக்கித் திருப்புகிறது.

மூன்றாவதாக, பொருள்முதல்வாத இயக்கவியல் விஞ்ஞான ரீதியாக நிறுவப்பட்ட, தர்க்க ரீதியில் பரஸ்பரத் தொடர்புடைய விதிகள் மற்றும் கருத்தினங்களின் ஒருங்கிணைந்த அமைப்பு, அது விஞ்ஞான மற்றும் நடைமுறை முன்னேற்றத்தின் அடிப்படையில் உருவாகியிருக்கிறது, அது வரலாற்று நிகழ்வுப் போக்கில் இடைவிடாமல் வளர்ச்சி அடைகிறது—இந்த வகையில் அது மற்ற எல்லாத் தத்துவஞானக் கருதுகோள்களிலிருந்தும் வேறுபடுகிறது. இயற்கை, சமூகம் மற்றும் சிந்தனையின் வளர்ச்சியை மிகவும் துல்லியமாகப் பிரதிபலிக்கின்ற உலகக் கண்ணோட்டம், முறை என்ற வகையில் பொருள்முதல்வாத இயக்கவியல் தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருக்கிறது, வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது, தன்னுடைய

கருத்தின அமைப்பைப் பூர்த்தி செய்து கொண்டு, புதிய கருதுகோள்களைப் பயன்படுத்தியும் பழைய கருதுகோள் களைச் சரிப்படுத்தியும் தன்னைச் செழுமைப்படுத்திக் கொள்கிறது.

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தைப் பொறுத் தமட்டில் பொருள்முதல்வாத இயக்கவியல் உலகக் கண் ணோட்ட மற்றும் முறையியல் கருவாக இருக்கிறது. அது உலக வளர்ச்சி மற்றும் அதைப் பற்றி மனிதனுடைய அறிதலின் சர்வப்பொது விதிகளை வெளியிடுகிறது. இங்கே அது தன்னை ஒரு பரிணாமத் தத்துவமாக, அதே சமயத்தில் அறிதலின் தத்துவமாகவும் தத்துவார்த்த சிந் தனையின் தர்க்கவியலாகவும் வெளிப்படுத்துகிறது.

திட்டவட்டமான விஞ்ஞானங்களில் பொதுவான தத்துவார்த்த மற்றும் தத்துவஞானப் பிரச்சினைகளின் தீர்வுக்கு அது உலகக் கண்ணோட்டமாகவும் முறையியல் அடிப்படையாகவும் உதவுகிறது. இந்த விஞ்ஞானங்கள் ஆராய்கின்ற நிகழ்வுகளை அணுகுவதற்குப் புறநிலை யான முறையை, அவற்றின் பிரச்சினைகளின் தத்து வார்த்த தீர்வுக்குத் தேவையான கவனித்தல், சோதனை செய்தல், மாதிரியமைத்தல் என்ற விஞ்ஞானக் கருவிகளை அவற்றுக்குத் தருகிறது. பொருள்முதல்வாத இயக்க வியல் முறையை உணர்வு பூர்வமாகப் புரிந்து கொண்டு உபயோகிப்பது திட்டவட்டமான இயற்கை மற்றும் சமூக விஞ்ஞானங்களின் முன்னேற்றத்தை விரைவுபடுத்துகிறது.

பொருள்முதல்வாத இயக்கவியல் மனிதர்களின் புரட் சிகர நடைமுறையிலும் மாற்றியமைக்கின்ற செயல்களி லும் குறிப்பிடத் தக்க முக்கியத்துவத்தைக் கொண்டிருக் கிறது. நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற வழி களையும் முறைகளையும் உருவாக்குவதில் அதை உணர்வு பூர்வமாகவும் திறமையாகவும் கையாள்வது வெற்றிக்கு

உத்தரவாதமாகும்; இயக்கவியலைக் கைவிடுவதும் அதன் விதிகளைப் புறக்கணிப்பதும் அறிதல், நடைமுறை ஆகிய இரண்டிலும் ஆபத்தான தவறுகளுக்கு, தப்புக் கணக்குப் போடுவதற்கு இட்டுச் செல்லும்.

பொருள்முதல்வாத இயக்கவியல் நவீன விஞ்ஞானம் மற்றும் கலாசாரத்தின் விஞ்ஞானப் பாணி மற்றும் தன்மையுடன் பொருந்தியிருக்கிறது. அது விஞ்ஞானத்திலும் நடைமுறையிலும் விஞ்ஞான ஆராய்ச்சியைத் தூண்டுகிறது; அறிதல் நிகழ்வுகளின் சாராம்சத்துக்குள் மேன்மேலும் ஆழமாக ஊடுருவிப் பார்ப்பதற்கு உதவுகின்ற கருத்துக்களின் போட்டியையும் தேர்வையும் ஊக்குவிக்கிறது. அது முற்றிலும் விஞ்ஞான முறைகளைக் கொண்டே இதைச் செய்கிறது; விஞ்ஞானத்திலுள்ள புறநிலையான நிகழ்வுப் போக்குகளையே பிரதானமாகப் பயன்படுத்துவதால் ஆராய்ச்சியாளர்கள் இயக்கவியல் ரீதியில் சிந்திக்கும்படி வற்புறுத்தப்படுகிறார்கள்.

பொருள்முதல்வாத இயக்கவியல் பிரச்சினைகள் விஞ்ஞானத்திலும் நடைமுறையிலும் அதிகமான கவனத்தை ஈர்த்துள்ளன. தத்துவஞானிகள் மட்டுமே அவற்றைக் கையாண்டு விரித்துக் கூற வேண்டும் என்று கூற முடியாது. அறிவின் எந்தத் துறையையும் சேர்ந்த ஒவ்வொரு நிபுணரும், சமாதானம், ஜனநாயகம், சமூக முன்னேற்றம், சோஷலிசம், கம்யூனிசத்துக்காகப் போராடுகின்ற ஒவ்வொரு போராட்டக்காரரும் இயக்கவியலின் அடிப்படையான கோட்பாடுகள், விதிகள் மற்றும் கருத்தினங்களைத் திறமையாகப் பயன்படுத்துவதுடன் நில்லாமல் அவற்றை மேலும் ஆழமாகப் புரிந்து கொண்டு வெவ்வேறுவிதமான குறிவழிப்பட்ட தத்துவ மற்றும் செய்முறை நடவடிக்கையில் அவற்றைப் பயன்படுத்துவதற்குரிய படைப்பாற்றல் மிக்க வழிகளைத் தேட வேண்டும்.

சொற்றொடர் விளக்கம்

அகநிலைவாதம்—இயற்கை மற்றும் சமூகத்தின் புறநிலையான விதிகளைப் புறக்கணிக்கின்ற உலகப் பார்வை; கருத்துமுதல்வாதத்தின் அறிவுத் துறைத் தோற்றுவாய்களில் ஒன்று; அரசியலில் திருத்தல்வாதம் மற்றும் தன்னிச்சைவாதத்தின் தத்துவஞான அடிப்படை.

அகப்பொருள்—பொருளாயத நடைமுறை மற்றும் அறிதலை இயக்குபவர் (தனிநபர் அல்லது சமூகக் குழு), புறப்பொருளை நோக்கித் திருப்பப்பட்டிருக்கின்ற நடவடிக்கையின் தோற்றுவாய். மார்க்சியம் அகப்பொருளின் சமூக வரலாற்றுத் தன்மையை எடுத்துக் காட்டியதன் மூலம் பெருந்திரளான மக்களே வரலாற்றைப் படைக்கிறார்கள் என்பதை நிறுவியது.

அமைப்பு—பரஸ்பர உறவும் பரஸ்பரத் தொடர்பும் உள்ள பல கூறுகள் ஒன்று சேர்ந்து அங்ககமான மொத்தத்தை உருவாக்குதல்.

அளவு—ஒரு பொருளின் வெளித் தோற்றத்தை, அளவு, எண்ணிக்கை, பரிமாணம், இயல்புகளின் வளர்ச்சியின் அளவு, இதரவற்றை எடுத்துரைக்கின்ற தத்துவஞானக் கருத்தினம்; அளவு மாற்றம் குறிப்பிட்ட

நிலையை அடைகின்ற பொழுது பண்பில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

அளவுகோல் — ஏதாவதொன்றை மதிப்பிடுகின்ற, வரையறுக்கின்ற அல்லது வகைப்படுத்துகின்ற கூறு அல்லது அம்சம்; மதிப்பீட்டின் ஆதார அளவு.

அறிதல்—யதார்த்தத்தை சிந்தனையில் பிரதிபலித்து மறுபதிப்புச் செய்கின்ற நிகழ்வுப் போக்கு, சமூக வரலாற்று நடைமுறையின் வளர்ச்சியினால் தகவமைக்கப் படுகிறது; அகப்பொருளுக்கும் புறப்பொருளுக்கும் இடையில் பரஸ்பரச் செயல் முறையினால் உலகத்தைப் பற்றிப் புதிய அறிவு விளைகிறது.

அறியொணாவாதம் — புறநிலையான உலகத்தை, அதன் சாராம்சத்தை, நியதிகளை அறியக் கூடிய சாத்தியத்தை மறுக்கின்ற தத்துவஞானக் கோட்பாடு; இது விஞ்ஞானத்தின் பாத்திரத்தை நிகழ்வுகளை அறிதலுடன் நிறுத்திவிடுகிறது.

அறிவு—யதார்த்தத்தைப் பற்றி மனிதன் அறிந்தவற்றைச் செய்முறையில் சோதித்த விளைவு; மனித சிந்தனையில் யதார்த்தத்தின் சரியான பிரதிபலிப்பு.

அறிவுத் தத்துவம்—அறிதலின் விதிகள் மற்றும் சாத்தியங்கள், அறிவுக்கும் புறநிலை யதார்த்தத்துக்கும் உள்ள உறவு, அறிதல் செயல்முறையின் கட்டங்களும் வடிவங்களும், அதன் மெய்மை மற்றும் ஆதார பூர்வமான தன்மையின் நிலைமைகள் மற்றும் அளவுகோல்கள் ஆகியவற்றை ஆராய்கின்ற தத்துவஞானப் பிரிவு. அறிவுத் தத்துவத்தின் இரண்டு முக்கியமான பிரிவுகள் கருத்து முதல்வாதமும் பொருள்முதல்வாதமும் ஆகும். இயக்க

வியல் பொருள்முதல்வாதத்தின் அறிவுத் தத்துவம் சமூக வரலாற்று நடைமுறையை அறிவின் அடிப்படையாகவும் உண்மையின் அளவுகோலாகவும் கருதுகிறது. நவீன விஞ்ஞானம் பயன்படுத்துகின்ற முறைகளைப் பொதுமைப் படுத்தி அறிவுத் தத்துவம் விஞ்ஞானத்தின் தத்துவஞான மற்றும் முறையியல் அடிப்படையாக இருக்கிறது.

அனுபவவாதம்—புலனுணர்ச்சி அனுபவமே உண்மையான அறிவின் தோற்றுவாய் என்று கருதுகின்ற தத்துவஞானப் போக்கு; பகுத்தறிவுவாதத்துக்கு மாறானது. அனுபவத்தை, புலனுணர்ச்சி அறிதலை இயக்க மறுப்பியலான முறையில் தனிமுதலாகச் செய்தல், பகுத்தாராயும் அறிதலின் (கருதுகோள்கள், தத்துவங்கள்) பாத்திரத்தைக் குறைத்து மதிப்பிடுதல் அதன் குறைகள் ஆகும்.

ஆய்வுரை—*1)* ஒரு தத்துவத்தை முன்வைப்பதில் அல்லது வாதத்தில் இடம் பெறுகின்ற வலியுறுத்தல். *2)* தர்க்கவியலில் நிரூபிக்கப்பட வேண்டிய கருதுகோள்.

ஆன்மாவாதம் — ஆன்மா, ஆவிகள் இருக்கின்றன என்னும் நம்பிக்கை; எவ்விதமான சமயத்திலும் இருக்கின்ற இன்றியமையாத பகுதி.

இடைச்செயல் — பொருட்கள் ஒன்றின் மீது ஒன்று செயல்படுவதையும் அவை பரஸ்பரம் சார்ந்திருப்பதையும் ஒரு பொருள் மற்றொரு பொருளைப் படைப்பதையும் பிரதிபலிக்கின்ற தத்துவஞானக் கருத்தினம். இடைச்செயல் இயக்கம் மற்றும் வளர்ச்சியின் புறநிலையான, சர்வப்பொதுவான வடிவம்.

இயக்க மறுப்பியல்—*1)* புலனுணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட (அனுபவத்தால் அறியப்பட முடியாத) இருத்தலின்

கோட்பாடுகளைப் பற்றிய தத்துவஞானக் கண்ணோட்டம். இன்றைய பூர்ஷ்வா தத்துவஞானத்தில் இச்சொல் தத்துவஞானத்துக்கு இணைபொருட்சொல்லாக உபயோகிக்கப்படுகிறது. 2) நிகழ்வுகளை ஒன்றுக்கொன்று தனியே பிரித்துப் பார்த்து உள்முரண்பாடுகளே அவற்றின் வளர்ச்சியின் தோற்றுவாய் என்பதை மறுக்கின்ற தத்துவஞான முறை; இயக்கவியலுக்கு எதிரானது.

இயக்கம்—பருப்பொருளின் இருத்தலின் முறை, அதன் தலைமையான குணாம்சம்; விரிவான அர்த்தத்தில் பொதுவாக மாற்றத்தை, பொருளாயத வஸ்துக்களின் எவ்விதமான பரஸ்பரச் செயல்முறையைக் குறிக்கும். பருப்பொருளும் இயக்கமும் ஒருமையில் இருக்கின்றன; பருப்பொருள் இல்லாமல் இயக்கம் இருக்க முடியாது என்பதைப் போல இயக்கம் இல்லாத பருப்பொருள் இல்லை என்று இயக்கவியல் பொருள்முதல்வாதம் கருதுகிறது.

இயக்கவியல்—யதார்த்தமான நிகழ்வுகளை அவற்றின் வளர்ச்சி மற்றும் சுய இயக்கத்தில் அறிகின்ற தத்துவம் மற்றும் முறை; இயற்கை, சமூகம், சிந்தனை ஆகியவற்றின் வளர்ச்சியின் அதிகப் பொதுப்படையான விதிகளின் விஞ்ஞானம்; இயக்க மறுப்பியலுக்கு எதிரானது. முந்திய தத்துவஞானப் போதனைகளை விமர்சன ரீதியில் ஆராய்ந்த அடிப்படையில் மார்க்சும் எங்கெல்சும் பொருள்முதல்வாத இயக்கவியலை விரித்துரைத்தார்கள், லெனின் அதை மேலும் வளர்த்துக் கூறினார்.

இருத்தல் (வாழ்நிலை)—புறநிலையான உலகம்; பருப்பொருள் மற்றும் இயற்கை மனித உணர்விலிருந்து சுயேச்சையான முறையில் இருப்பதை, சமூகத்தில் பொருளாயத வாழ்க்கையின் செயல்முறையைக் குறிக்கின்ற

தத்துவஞானக் கருத்தினம். இருத்தலுக்கும் உணர்வுக்கும் இடையிலுள்ள உறவுநிலை தத்துவஞானத்தின் அடிப்படையான பிரச்சினை ஆகும்.

இறைமைவாதம்—இறைவன் உலகத்தைப் படைத்து அதன் வெளியே அதை ஆட்சி செய்கின்றார் என்று கருதுகின்ற சமய உலகக் கண்ணோட்டம்.

இறையியல்—கடவுள் தனிப் பெரும் சக்தி, அவர் மனிதனிடம் தோன்றி அருள் புரிவார் என்று நம்புகின்ற மதக் கோட்பாடு.

உணர்வு—சிந்தனையில் யதார்த்தத்தை கருத்தியலாகப் பிரதிபலிப்பதற்குரிய மனிதனின் சக்தியைக் குறிப்பதற்குத் தத்துவஞானம், சமூகவியல் மற்றும் உளவியல் துறைகளின் முக்கியமான கருதுகோள்களில் ஒன்று. மார்க்சியத் தத்துவஞானத்தில் உணர்வு வாழ்நிலை உணர்ச்சியாக, உயர்ந்த அளவுக்கு அமைப்பு ரீதியாக்கப்பட்ட பருப்பொருளின் இயல்பாக, புறநிலையான உலகத்தின் அகநிலையான பிம்பமாக, பொருளாயதத்துக்கு மாறான மற்றும் அதனுடன் ஒற்றுமையில் இருக்கின்ற கருத்தியலாகவும் கருதப்படுகிறது. சமூக உணர்வு சமூக வாழ்நிலையின் பிரதிபலிப்பாகும். அதன் வடிவங்களில் விஞ்ஞானம், தத்துவஞானம், கலை, ஒழுக்கநெறி, சமயம், அரசியல், சட்டம் ஆகியவை அடங்கும்.

உண்மை— அறிதல் செயல்முறையில் ஈடுபட்டிருக்கின்ற அகப்பொருள் உணர்விலிருந்து சுயேச்சையான முறையில் யதார்த்தத்திலுள்ள பொருட்களையும் நிகழ்வுகளையும் போதுமான அளவுக்கு அப்படியே பிரதிபலித்தல்; மனித அறிவின் புறநிலையான உள்ளடக்கம். புறநிலையான உண்மையின் உள்ளடக்கம் மனிதனையோ

அல்லது மனிதகுலத்தையோ சார்ந்திருப்பதில்லை (உண்மை உள்ளடக்கத்தில் புறநிலையானது, வடிவத்தில் அகநிலையானது—இது மனித சிந்தனையின் விளைவே); சார்புநிலையான உண்மை ஒரு பொருளை வரலாற்று ரீதியான வரையறைகளுக்குள் பகுதியளவுக்கு மட்டுமே பிரதிபலிக்கிறது. தனிமுதலான உண்மை அறிதலின் புறப் பொருளை முழுமையாகப் பிரதிபலிக்கிறது; அது யதார்த் தத்தின் சில அம்சங்களின் முடிவான அறிவு. எந்த சார்பு நிலையான உண்மையும் தனிமுதலான அறிவின் ஒரு பகுதியைக் கொண்டிருக்கிறது. ஒரு உண்மை சார்புநிலை யான உண்மைகளின் கூட்டு மொத்தம். ஸ்தூலமான உண்மை பொருளின் வளர்ச்சியின் ஸ்தூலமான நிலைமை களைக் கணக்கிலெடுத்து புறப்பொருளின் இன்றியமை யாத சில கூறுகளை வெளிக்கொணர்கிறது. சூக்குமமான உண்மை என்பதே கிடையாது; உண்மை எப்பொழுதும் ஸ்தூலமாக இருக்கிறது. நடைமுறை உண்மையின் அளவு கோல் ஆகும்.

உண்மையின் அளவுகோல்—அறிவின் மெய்மையை நிறுவு கின்ற, உண்மையை பிரமையிலிருந்து வேறுபடுத்து கின்ற முறை. மனிதன் புறநிலையான உலகத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்கின்ற ஒரே வழி நடை முறைதான், அறிதலுக்கு அது ஒன்றே அடிப்படை, உண்மைக்கு அது ஒன்றே அளவுகோல் என்று இயக்க வியல் பொருள்முதல்வாதம் கருதுகிறது.

உருவாக்கம்—இயக்கவியல் கருத்தினம், ஏதாவதொரு பொருளாயத அல்லது கருத்தியலான பொருள் உரு வாக்கப்படுகின்ற செயல்முறையைக் குறிப்பது. எந்த உருவாக்கமும் வளர்ச்சியின் போக்கில் சாத்தியம் யதார்த்தமாக மாற்றமடைவதை முன்னூகிக்கிறது.

உலகக் கண்ணோட்டம்—புறவய உலகத்தைப் பற்றியும் அதில் மனிதனுடைய பாத்திரத்தைப் பற்றியும், சுற்றுப்புற யதார்த்தத்தைப் பற்றியும் தங்களைப் பற்றியும் மக்களுடைய பொதுமைப்படுத்தப்பட்ட கருத்துக்களின் அமைப்பு, அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலான அவர்களுடைய நம்பிக்கைகள், இலட்சியங்கள், அறிதல் மற்றும் நடவடிக்கையின் கோட்பாடுகள். வர்க்க சமூகத்தில் உலகக் கண்ணோட்டம் வர்க்கத் தன்மையைக் கொண்டிருக்கிறது, சமூக அந்தஸ்திலும் வாழ்க்கை நிலைமைகளிலும் உள்ள வேறுபாடுகளைப் பிரதிபலிக்கிறது. அதன் உள்ளடக்கமும் திசைவழியும் விஞ்ஞான ரீதியாக அல்லது விஞ்ஞானத்துக்கு எதிரானதாக, பொருள்முதல்வாதமாக அல்லது கருத்துமுதல்வாதமாக, நாத்திகமாக அல்லது கடவுள் நம்பிக்கை கொண்டதாக, புரட்சிகரமானதாக அல்லது பிற்போக்கானதாக இருக்க முடியும். இன்றைய உலகில் கம்யூனிஸ்ட் உலகக் கண்ணோட்டத்துக்கும் பூர்ஷ்வா உலகக் கண்ணோட்டத்துக்கும் இடையில் தீவிரமான போராட்டம் நடைபெறுகிறது. உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்கான கருவியாகிய மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தைக் கருவாகக் கொண்ட கம்யூனிஸ்ட் உலகக் கண்ணோட்டம் சோஷலிஸ்ட் சமூகத்தில் தலைமையானதாக இருக்கிறது.

எண்ணம்—முன்னர் புலனறியப்பட்ட பொருள் அல்லது நிகழ்வின் பிம்பம் (நினைவில் கொள்ளுதல், நினைவு கூர்தல்) அல்லது வளமான கற்பனையில் உருவாகின்ற பிம்பம்; புலனுணர்ச்சிப் பிரதிபலிப்பின் ஆக உயர்ந்த வடிவம்.

எதிர்நிலை—இயக்கவியல் முரண்பாட்டின் இரு

தரப்புக்களில் ஒன்றைப் பிரதிபலிக்கின்ற தத்துவஞானக் கருத்தினம்.

ஒப்புமை — பொருட்கள், புலப்பாடுகள் அல்லது நிகழ்வுப் போக்குகளின் சில அம்சங்களில் நிலவுகின்ற ஒத்த தன்மை. ஒப்புமையின் மூலம் உய்த்துணர்தல்— ஏதாவதொரு பொருளை ஆராய்ந்து பெற்ற அறிவை அதை ஒத்த முக்கியமான இயல்புகளையும் பண்புகளை யும் கொண்டிருக்கின்ற குறைவாகத் தெரிந்த பொரு ளுக்கு மாற்றுதல்; அத்தகைய உய்த்துணர்தல்கள் விஞ் ஞானக் கருதுகோள்களின் தோற்றுவாய்களில் ஒன்று.

ஒருமைவாதம் — பிரபஞ்சத்திலுள்ள பல்விதமான நிகழ்வுகளை ஒரே கூறாக (சாரப்பொருள்) வகைப்படுத்த முடியும் என்கின்ற கருத்து. ஒருமைவாதம் இரட்டை வாதத்துக்கும் (இரண்டு சுயேச்சையான கூறுகள் இருப்ப தாக அனுமானிக்கிறது), பன்மைவாதத்துக்கும் (பல கூறு கள் இருப்பதாக அனுமானிக்கிறது) மாறானது. ஒருமை வாதத்தின் ஆக உயர்ந்த, முரணில்லாத ஒரே வடிவம் இயக்கவியல் பொருள்முதல்வாதம். இயற்கை, சமூகம் மற்றும் மனித உணர்வின் பல்விதமான நிகழ்வுகள் அனைத் தும் வளர்ச்சியடைகின்ற பருப்பொருளின் உற்பத்திகளே என்று அது கூறுகிறது.

கட்டமைப்பு — ஒரு பொருள் பல்விதமான வெளிப் புற மற்றும் உட்புற மாற்றங்களை அடைகின்ற பொழுது அதன் முக்கியமான இயல்புகளைத் தக்கவைத்துக் கொள் கின்ற நிலையான தொடர்புகளின் மொத்தம்.

கருதுகோள் — பொருட்கள் மற்றும் நிகழ்வுகளின் இன்றியமையாத இயல்புகள், தொடர்புகள் மற்றும் உறவு களைப் பிரதிபலிக்கின்ற சிந்தனை வடிவம். கருதுகோள்

களின் பிரதான தர்க்க ரீதியான செயல்முறை ஒரு ரகத்தைச் சேர்ந்த பொருட்களின் பொதுவான, பொதுப் படையான அம்சங்களை அவற்றின் தனிப்பட்ட தனித் தன்மைகளிலிருந்து சூக்குமப்படுத்தலின் மூலம் பிரித் தெடுத்தல்.

கருத்தியல்—உணர்வில் பிரதிபலிக்கப்படுகின்ற பொரு ளின் இருத்தல் முறை (இந்த அர்த்தத்தில் கருத்தியல் பொருளாயதத்துடன் வழக்கமாக மாறுபடுத்தப்படு கிறது); இலட்சியப்படுத்துகின்ற நிகழ்வுப் போக்கின் விளைவு, அனுபவத்தில் பெற முடியாத சூக்குமமான பொருள்.

கருத்தினங்கள்—யதார்த்தம் மற்றும் அறிதலின் நிகழ்வு களின் இன்றியமையாத, சர்வப்பொதுவான இயல்பு கள், உறவுகளைப் பிரதிபலிக்கின்ற மிகப் பொதுப்படை யான, அடிப்படையான கருதுகோள்கள். அறிதல் மற்றும் சமூகச் செயல்முறையின் உண்மையான வளர்ச்சியைப் பொதுமைப்படுத்துதலின் விளைவாகக் கருத்தினங்கள் ஏற்படுகின்றன. இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் பிரதான கருத்தினங்களில் பருப்பொருள், இயக்கம், விசும் பும் காலமும், பண்பும் அளவும், முரண்பாடு, காரண காரியத் தன்மை, இன்றியமையாமையும் தற்செயலும், உள்ளடக்கமும் வடிவமும், சாத்தியமும் யதார்த்தமும், சாராம்சமும் தோற்றமும், இதரவை அடங்கும். புறநிலை யதார்த்தம் மற்றும் விஞ்ஞான அறிவின் வளர்ச்சியுடன் சேர்ந்து இயக்கவியல் கருத்தினங்களின் அமைப்பும் வளர்ச்சியடைகிறது, செழுமை அடைகிறது.

கருத்துமுதல்வாதம்—ஆன்மா, உணர்வு, சிந்தனை, மனம் முதன்மையானவை, பருப்பொருள், இயற்கை, பௌதிக அம்சங்கள் இரண்டாம் நிலையானவை என்று

வலியுறுத்துகின்ற எல்லாத் தத்துவஞானங்களும் இப்பிரிவில் அடங்கியுள்ளன. வாழ்நிலைக்கும் உணர்வுக்கும், பொருளாயதத்துக்கும் ஆன்மீகத்துக்கும் உள்ள உறவைப் பற்றிய தத்துவஞானத்தின் அடிப்படைக் கேள்விக்கு கருத்துமுதல்வாதம் பொருள்முதல்வாதத்துக்கு எதிரான பதிலைத் தருகிறது. கருத்துமுதல்வாதம் புறநிலை, அகநிலை ஆகிய இரண்டு பிரதான ரகங்களைக் கொண்டிருக்கிறது. முடிவுநிலையான ஆன்மீகக் கோட்பாடு மனித உணர்வுக்கு வெளியே அதிலிருந்து சுயேச்சையாக இருக்கிறது என்று புறநிலைக் கருத்துமுதல்வாதம் கூறுகிறது. அகநிலைக் கருத்துமுதல்வாதம் அகப்பொருளின் உணர்வுக்கு வெளியில் எவ்விதமான யதார்த்தமும் இருப்பதை மறுக்கிறது அல்லது அது அகப்பொருளின் நடவடிக்கையினால் முழுமையாக நிர்ணயிக்கப்படுவதாகக் கருதுகிறது. இயக்கவியல் பொருள்முதல்வாதத்தைத் தத்துவஞான அடிப்படையாகக் கொண்டிருக்கின்ற மார்க்சிய-லெனினியம் அனைத்துக் கருத்துமுதல்வாதப் போக்குகளையும் எதிர்த்துப் போராடி வளர்ச்சியடைந்து வருகிறது.

கலப்படவாதம்—வெவ்வேறு—பெரும்பாலும் எதிரெதிரான—கோட்பாடுகள், கருத்துக்கள், தத்துவங்கள், கலைக் கூறுகள், இதரவற்றை யாந்திரிகமாக ஒன்று சேர்த்தல்.

குணம்—ஒரு பொருளுக்கும் மற்ற பொருட்களுக்கும் வேற்றுமையை அல்லது ஒத்த தன்மையை நிர்ணயிக்கின்ற அம்சத்தை—அந்த அம்சம் பிந்தியவற்றுடன் அதன் உறவுகளில் வெளிப்படுகிறது—வெளியிடுகின்ற தத்துவ ஞானக் கருத்தினம்.

கூட்டிணைப்பு—பல்வேறு கூறுகளை ஒரு அமைப்பாக

மனோரீதியில் அல்லது மெய்யாகவே ஒருங்கிணைத்தல்; கூட்டிணைப்பு பகுப்பாய்விலிருந்து பிரிக்க முடியாதது.

சமயம்—ஒரு கடவுள் அல்லது பல கடவுளர் இருப்பதாகக் கருதுகின்ற நம்பிக்கையை, ''புனிதமான'', அதாவது இயற்கைக்கு மேற்பட்ட ஒரு சக்தியின் மீது நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட உலகக் கண்ணோட்டம், அதற்குரிய தனிரகமான நடவடிக்கை, வழிபாட்டு முறை ஆகியவை. பூர்விக மனிதன் இயற்கையை எதிர்த்துப் போராடும் பொழுது அனாதரவாக இருந்த நிலையில், அதன் பிறகு பகை முரணியல்பான வர்க்க சமூகம் தோன்றிய காலத்தில் தன்னியல்பான சமூக சக்திகள் மனித வாழ்க்கையை ஆட்டிப்படைத்த பொழுது மனிதனுடைய அனாதரவான நிலையில் சமயம் தோன்றியது. சோஷலிசம் வளர்ச்சியடைகின்ற பொழுது சமயம் படிப்படியாக மறைந்து விடும், கல்வி முக்கியமான பாத்திரம் வகிக்கின்ற சமூக வளர்ச்சி ஏற்படுகின்ற பொழுது சமயம் நிச்சயமாக மறையும் என்று மார்க்சியத்தின் மூலவர்கள் கருதினார்கள்.

சாரப்பொருள்—புறநிலை யதார்த்தம்; இயக்கத்தின் எல்லா வடிவங்களிலும் ஒற்றுமையில் இருக்கின்ற பருப்பொருள்; சார்புநிலையில் நிலையான ஒன்று; தன் சக்தியில் வாழ்கின்ற, மற்ற எந்தப் பொருளையும் சார்ந்திராத ஒன்று.

சார்புநிலை—திட்டவட்டமான வர்க்கங்கள் அல்லது சமூகப் பிரிவுகளின் நலன்களை வெளியிடுகின்ற, விஞ்ஞானம் மற்றும் கலையின் சமூக போக்குகள், தனிநபர்களின் அணுகுமுறைகள் ஆகிய இரண்டிலும் தன்னை வெளிப்படுத்துகின்ற உலகக் கண்ணோட்டம், தத்துவஞா

னம், சமூக விஞ்ஞானம், இலக்கியம், கலை ஆகியவற்றின் சித்தாந்தத் திசைவழி. விரிவான அர்த்தத்தில் மனித நடத்தை, ஸ்தாபனங்களின் நடவடிக்கை, அரசியல் மற்றும் சித்தாந்தப் போராட்டம் ஆகியவற்றின் கோட்பாடுகளைக் குறிக்கும். சார்புநிலை வளர்ச்சியடைந்த வர்க்க எதிர்நிலைகளின் விளைவு மற்றும் அரசியல் வெளிப்பாடு; அது அரசியல் கட்சிகளின் நடவடிக்கையுடன் நெருக்கமான தொடர்புள்ளது. சார்புநிலை என்பது மார்க்சிய-லெனினியம் பகிரங்கமாக அறிவிக்கின்ற கோட்பாடு; யதார்த்தத்தைப் பற்றிய விஞ்ஞானப் பகுப்பாய்வும் தொழிலாளி வர்க்க நலன்களை (இவை உழைக்கும் மக்கள் அனைவருடைய நலன்களுடன், வரலாற்றின் புறநிலையான போக்குடன் பொருந்தியிருக்கின்றன) தீவிரமாக ஆதரிப்பதும் இணைந்திருப்பது. கம்யூனிஸ்ட் கட்சி புறநிலைவாதத்தைப் பற்றிய பூர்ஷ்வா மற்றும் திருத்தல்வாதக் கருதுகோள்களை, கட்சி சார்பற்ற அணுகுமுறையை, ‘‘சித்தாந்தங்களைக் கைவிடுதலை'', சித்தாந்தங்களின் சமாதான சகவாழ்வை எதிர்க்கிறது; பூர்ஷ்வா சித்தாந்தத்தை உறுதியாக விமர்சித்தல், எல்லா நடவடிக்கைகளிலும் கட்சி, வர்க்க அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும் என்று வற்புறுத்துகிறது.

சார்புநிலைவாதம்—நம்முடைய அறிவு சார்புநிலையானது, தற்காலிகமானது என்பதை இயக்க மறுப்பியல் ரீதியில் தனிமுதலாக்குகின்ற முறையியல் கோட்பாடு; இது புறநிலையான உண்மையை அறிகின்ற சாத்தியத்தை மறுப்பதற்கு, அறியொணாவாதத்துக்கு இட்டுச் செல்கிறது இயக்கவியல் பொருள்முதல்வாதம் நம்முடைய அறிவின் சார்புநிலைத் தன்மையை அங்கீகரிக்கிறது; ஆனால் அது புறநிலையான உண்மையை மறுப்பதில்லை,

உண்மையை மனிதன் அறிதல் வரலாற்று ரீதியில் வரையறுக்கப்பட்டிருக்கிறது என்ற அர்த்தத்தில் மட்டுமே அதை அங்கீகரிக்கிறது.

சித்தாந்தம்—யதார்த்தத்தைப் பற்றி மனிதனுடைய அணுகுமுறையை வெளியிடுகின்ற, மதிப்பீடு செய்கின்ற அரசியல், சட்டவியல், அறவியல், சமய, அழகியல் மற்றும் தத்துவஞானக் கருத்துக்களின் அமைப்பு. வர்க்க சமூகங்களில் சித்தாந்தம் வர்க்கத் தன்மையைக் கொண்டிருக்கிறது; அது திட்டவட்டமான வர்க்கங்களின் நலன்களை வெளியிடுகிறது, அந்த வர்க்கங்களின் குறிக்கோள்களை வகுத்தளிக்கிறது. உண்மையான ஒரே விஞ்ஞான சித்தாந்தமாகிய மார்க்சிய-லெனினியம் சித்தாந்தங்கள் சமாதான முறையில் ஒத்து வாழ்தல், ''சித்தாந்தங்களைக் கைவிடுதல்'' ஆகிய கருதுகோள்களை நிராகரிக்கிறது.

சிந்தனை—மனித அறிதலில், புறநிலையான யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதில் ஆக உயர்ந்த கட்டம். அறிதலின் புலனுணர்ச்சிக் கட்டத்தில் உடனடியாக அறிய முடியாத யதார்த்தமான பொருட்கள், இயல்புகள் மற்றும் உறவுகளைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கு உதவுகிறது. மனித சிந்தனை சமூக வரலாற்றுத் தன்மையைக் கொண்டிருக்கிறது, செய்முறை நடவடிக்கையுடன் பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கிறது.

சுய இயக்கம்—ஒரு அமைப்புக்குள் ஏற்படுகின்ற அவசியமான, தன்னியல்பான மாற்றம்; அதன் முரண்பாடுகளால் நிர்ணயிக்கப்படுகிறது.

சூக்குமப்படுத்தல் — ஒரு பொருளின் முக்கியமான இயல்புகளையும் தொடர்புகளையும் மனோரீதியில் புரிந்து கொண்டு அதன் மற்ற குறிப்பிட்ட இயல்புகள், தொடர்பு

களிலிருந்து பிரித்தலை அடிப்படையாகக் கொண்ட அறிதல் முறை. சூக்குமம் ஸ்தூலத்துக்கு எதிரானது.

தத்துவஞானம்—சமூக உணர்வின் வடிவம், உலகக் கண்ணோட்டம், உலகத்தையும் அதில் மனிதனுடைய இடத்தையும் பற்றிய கருத்துக்களின் அமைப்பு. அது உலகத்தைப் பற்றி மனிதனுடைய அறிதல், மதிப்பு சார்ந்த, அறவியல் மற்றும் அழகியல் அணுகுமுறையை ஆராய்கிறது. மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் என்பது இயற்கை, சமூகம் மற்றும் சிந்தனையின் வளர்ச்சியின் சர்வப்பொது விதிகளைப் பற்றிய விஞ்ஞானம், விஞ்ஞான அறிதலின் பொதுவான முறையியல். உலகக் கண்ணோட்டம் என்ற முறையில் தத்துவஞானம் வர்க்க நலன்களுடன், அரசியல் மற்றும் சித்தாந்தப் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்திருக்கிறது. சமூக யதார்த்தத்தினால் தகவமைக்கப்படுகின்ற தத்துவஞானம் சமூக வாழ்நிலையின் மீது சுறுசுறுப்பான தாக்கத்தைச் செலுத்துகிறது; புதிய இலட்சியங்கள், அளவுகோல்கள் மற்றும் கலாசார மதிப்புக்களை உருவாக்குவதற்கு உதவுகிறது. பொருளுக்கும் ஆன்மாவுக்கும், வாழ்நிலைக்கும் உணர்வுக்கும் உள்ள உறவு என்ன? உலகம் அறியப்படக் கூடியதா என்னும் அடிப்படையான கேள்விகளை அது எழுப்புகிறது. பொருள்முதல்வாதத்திற்கும் கருத்துமுதல்வாதத்திற்கும் இடையேயுள்ள போராட்டம் வரலாற்றுத் தத்துவஞான நிகழ்வுப் போக்கின் உள்ளடக்கமாகும். மார்க்ஸ், எங்கெல்சினால் நிறுவப்பட்டு புதிய வரலாற்று நிலைமைகளில் லெனினால் வளர்க்கப்பட்ட மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதமாகும்.

தத்துவம்—ஏதாவது ஒரு அறிவுத் துறையின் ஆதாரக்

கருத்துக்களின் அமைப்பு; யதார்த்தத்தின் விதிகளையும் இன்றியமையாத தொடர்புகளையும் ஒருங்கிணைந்த சித்திரமாகத் தருகின்ற விஞ்ஞான அறிவின் வடிவம். நடைமுறை அதன் உண்மையின் அளவுகோல், அதன் வளர்ச்சியின் அடிப்படை.

தனிமுதல் கருத்து—*கருத்துமுதல்வாதத் தத்துவஞானத்தில் இயற்கைக்கு மேற்பட்ட, நிபந்தனைகளைக் கடந்த ஆன்மீகக் கோட்பாடு, இயற்கை தோன்றுவதற்கு முன்பே இருந்த சாராம்சம், இயற்கை, மனிதன், சமூகம் என்னும் மெய்யான பொருளாயத உலகத்தையும் மனித சிந்தனையையும் பேணி வளர்க்கின்ற, தனித்துவம் இல்லாத அறிவு.*

தன்னிச்சைவாதம்—*1) சுய விருப்பமே வாழ்நிலையின் தலைமையான கோட்பாடு என்று கருதுகின்ற கருத்து முதல்வாதப் போக்கு. 2) வரலாற்றின் புறநிலையான விதிகளைப் புறக்கணிக்கின்ற நடவடிக்கை; சம்பந்தப் பட்ட நபர்களின் தன்னிச்சையான முடிவுகள் இதன் குறி யடையாளம்.*

தீர்மானம்—*தனிப்பட்ட உணர்வுக்குப் பிரத்யேக மான வாத அளவுகோல்களின் அடிப்படையில் (இவை தர்க்கவியலின் சட்டங்கள் மற்றும் விதிகளுடன் பெருமள வுக்குப் பொருந்தியிருக்கின்றன) செய்யப்படுகின்ற அறிவு நடவடிக்கை.*

தெய்வவாதம் (டெயிசம்) — *கடவுள்தான் உலகப் பேர றிவு, இயற்கை என்னும் ''இயந்திரத்தைப்'' படைத்து, அதற்கு நோக்கத்தையும் இயக்கத்தையும் கொடுத்து, அதன் விதிகளை வகுத்தளித்தவர் என்று அங்கீகரிக்கின்ற சமயத் தத்துவஞானக் கோட்பாடு; கடவுள் இயற்கையைப்*

படைத்தவர் என்று அங்கீகரித்தாலும் அதன் சுய இயக்கத்தில் கடவுள் இன்னும் தலையிடக் கூடும் (கடவுள் அருட்செயல், அதிசயங்கள், இதரவை) என்பதை மறுக்கிறது; பகுத்தறிவைப் பயன்படுத்துவதே கடவுளை அறிவதற்கு ஒரே வழி என்று கருதுகிறது.

தொடர்பு—விசும்பிலும் காலத்திலும் பிரிக்கப்பட்டிருக்கின்ற நிகழ்வுகளின் இடைச் சார்புநிலை.

நடைமுறை—மனிதர்களின் குறிவழிப்பட்ட பொருளாயத நடவடிக்கை, புறநிலை யதார்த்தத்தைப் பழகிக் கொள்ளுதல் மற்றும் மாற்றியமைத்தல்; சமூக வளர்ச்சிக்கும் அறிதலின் வளர்ச்சிக்கும் சர்வப்பொது அடிப்படை. பொருளாயத மதிப்புக்களை உற்பத்தி செய்தலும் பெருந்திரளான மக்களின் சமூகத்தை மாற்றியமைக்கின்ற புரட்சிகரமான நடவடிக்கையும் (வர்க்கப் போராட்டம், சமூகப் புரட்சிகள், சமூக அரசியல் நடவடிக்கைகள்) நடைமுறையின் பிரதான ரகங்கள். நடைமுறையே உண்மையான அறிவின் அளவுகோலாகும். நடைமுறை தத்துவத்துடன் இயக்கவியல் ஒற்றுமையைக் கொண்டிருக்கிறது; அந்த ஒற்றுமைக்கு நடைமுறை அடிப்படையாக இருக்கிறது. தத்துவம் மற்றும் நடைமுறையின் இயக்கவியல் ரீதியான பரஸ்பரத் தொடர்பு மார்க்சிய-லெனினியத்தின் முக்கியமான கோட்பாடு ஆகும்.

நாத்திகம்—கடவுள் இருக்கிறார் என்பதை மறுத்தல், ஆகவே சமயத்தை நிராகரித்தல்; சோஷலிஸ்ட் நாடுகளில் நாத்திகப் பிரச்சாரம் உழைக்கும் மக்களின் கம்யூனிசப் பயிற்சியில் ஒரு அங்கமாகும்.

நியதிவாதம்—எல்லா நிகழ்வுகளின் புறநிலையான, விதிகளால் ஆளப்படுகின்ற பரஸ்பரத் தொடர்பையும்

காரணகாரியச் சார்புநிலையையும் பற்றிய தத்துவஞானக் கோட்பாடு.

பகுப்பாய்வு—மொத்தத்தை மனோரீதியில் அல்லது மெய்யாகவே தனிப்பகுதிகளாகப் பிரித்தல்; பகுப்பாய்வு கூட்டிணைப்புடன் நெருங்கிய தொடர்புடையது.

பகை முரணியல்பு—பகைமையான சக்திகள் அல்லது போக்குகளின் சமரசப்படுத்த முடியாத போராட்டத்தின் அடையாளமான முரண்பாடு; சமூகத்தில் எதிரிடையான வர்க்கங்களுக்கு இடையிலுள்ள பகை முரணியல்புகள் வர்க்கப் போராட்டம் மற்றும் புரட்சியின் மூலமாகத் தீர்க்கப்படுகின்றன.

படைப்பு நடவடிக்கை—பண்பு ரீதியில் புதியதான, சமூக வரலாற்றுத் தனித்துவம் உள்ள ஒன்றை உருவாக்குகின்ற நடவடிக்கை. அது பிரத்யேகமான மனித நடவடிக்கையே; ஏனென்றால் படைப்பு நடவடிக்கை ஒரு படைப்பவனை எப்பொழுதும் முன்னூகிக்கிறது; இயற்கையில் வளர்ச்சி இருக்கிறது—ஆனால் படைப்பு நடவடிக்கை கிடையாது.

பண்பு—ஒரு பொருளின் இன்றியமையாத வரையறுப்பை, அப்பொருளை அதுவாகச் செய்வது எதுவோ அதை எடுத்துரைக்கின்ற தத்துவஞானக் கருத்தினம். பண்பு பொருட்களின் புறநிலையான, சர்வப்பொதுவான குணாம்சம்; ஒரு பொருளின் இயல்புகளின் மொத்தத்தில் பண்பு வெளிப்படுகிறது.

பரிணாமம்—விரிவான அர்த்தத்தில் சமூகத்தில் அல்லது இயற்கையில் மாற்ற நிகழ்வுப் போக்கு, அதன் திசைவழி, வரிசைமுறை, விதிகளைப் பற்றிய கருதுகோள்;

முந்திய நிலையில் குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களின் விளைவாக ஏதாவதொரு திட்டவட்டமான நிலை ஏற்படுதல். குறுகிய அர்த்தத்தில், புரட்சிக்கு மாறாக மெதுவாகவும் படிப்படியாகவும் ஏற்படுகின்ற அளவு ரீதியான மாற்றங்கள். இயக்கவியல் பொருள்முதல்வாதம் பரிணாமம், புரட்சி ஆகிய இரண்டையும் வளர்ச்சியின் பரஸ்பரத் தொடர்புடைய இரண்டு அம்சங்கள் என்று கருதுகிறது, ஏதாவதொன்றைத் தனிமுதலாக்குவதை எதிர்க்கிறது.

பருப்பொருள் — ''நமது புலனுணர்ச்சிகளிலிருந்து சுயேச்சையாக இருந்து அவற்றினால் பிரதிபலிக்கப்படுகின்ற புறநிலையான யதார்த்தத்தைக் குறிக்கின்ற தத்துவஞானக் கருத்தினம்'' (வி.இ. லெனின்), சாரப்பொருள்; உலகத்தில் மெய்யாகவே இருக்கின்ற எல்லா இயல்புகள், தொடர்புகள் மற்றும் இயக்கத்தின் வடிவங்களின் அடிப்படை; உலகத்தில் இருக்கின்ற எல்லாப் பொருட்கள் மற்றும் அமைப்புக்களின் முடிவில்லாத எண்ணிக்கை. இயக்கவியல் பொருள்முதல்வாதம் உலகத்தின் பொருளாயத ஒருமை மற்றும் உணர்வைப் பொறுத்தமட்டில் பருப்பொருளின் முதன்மை என்னும் கோட்பாட்டிலிருந்து தொடங்குகிறது. பருப்பொருள் படைக்கப்பட முடியாதது, அழிக்கப்பட முடியாதது, முடிவில்லாதது, நிரந்தரமானது. இயக்கம் பருப்பொருளின் உள்ளுறையான குணாம்சம்; பருப்பொருளுக்கு சுய வளர்ச்சியும் நிலை மாற்றங்களும் உண்டு. விசும்பும் காலமும் பருப்பொருளின் வாழ்நிலையின் சர்வப்பொதுவான புறநிலை வடிவங்கள், பிரதிபலிப்பு அதன் சர்வப்பொதுவான இயல்பு.

பாய்ச்சல்—வளர்ச்சியில் தீவிரமான முன்னேற்றம், ஒரு பொருள் அல்லது நிகழ்வு அளவு ரீதியான மாற்றங்

களின் விளைவாகப் பண்பு ரீதியாக மாற்றமடைதல். பாய்ச்சலில் அநேகமாகத் திட்டவட்டமான இரண்டு ரகங்கள் இருக்கின்றன: திடீர் பாய்ச்சல், படிப்படியான பாய்ச்சல். சமூக வாழ்க்கையில் திடீர் பாய்ச்சல் பகை முரணியல்பான சமூகங்களில் காணப்படுகிறது (சமூகக் கொந்தளிப்புக்கள், புரட்சிகள்). படிப்படியான பாய்ச்சல் சோஷலிச சமூகத்தில் காணப்படுகிறது; அங்கே சமூக நலன்களின் ஒருமையின் காரணமாகப் பண்பு ரீதியான மாற்றங்கள் படிப்படியாக நடைபெறுகின்றன.

பிம்பம்—பொருளாயத உலகத்தின் பொருட்களும் நிகழ்வுகளும் மனித உணர்வில் பிரதிபலிக்கப்படுவதின் விளைவு, அதன் கருத்தியலான வடிவம். அறிதலின் புலனுணர்ச்சிக் கட்டத்தில் பிம்பங்கள் புலனுணர்ச்சிகள், புலனறிவு, எண்ணங்களுடன் ஒட்டியிருக்கின்றன; சிந்தனையில் கருதுகோள்கள், அபிப்பிராயங்கள், தீர்மானங்களை ஒட்டியிருக்கின்றன.

பிரதிபலிப்பு—மற்ற பொருட்களுடனான பரஸ்பரச் செயலாக்கத்தின் விளைவாய் அப்பொருட்களின் சிறப்பியல்புகளைத் தன் கட்டமைப்பில் வெளிப்படுத்தும் திறமை. உயிரினங்கள், உயிரற்ற இயற்கை மற்றும் சமுதாயத்தில் பிரதிபலிப்புக்கள் வெவ்வேறானவை. உணர்வுதான் பிரதிபலிப்பின் உயர் வடிவமாகும்.

பிரபஞ்சம்—பொருளாயத உலகம்; காலத்தில் நிரந்தரமானது, விசும்பில் முடிவில்லாதது, பருப்பொருள் தன் வளர்ச்சியில் மேற்கொள்ளும் கணக்கிட முடியாத வகைவேறான வடிவங்களின் மொத்தம். வானவியல் ஆராய்கின்ற பிரபஞ்சம் பொருளாயத உலகத்தின் பகுதி.

புலனறிவு—அங்கஜீவி தகவலைப் பெற்று அதை

ஒழுங்கமைக்கின்ற சிக்கலான செயல்முறை; ஒருவர் புறநிலை யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதற்கும் சுற்றுப்புற உலகத்தைப் புரிந்து செயல்படுவதற்கும் புலனறிவு உதவுகிறது.

புலனுணர்ச்சி—புறநிலை யதார்த்தத்தின் இயல்புகள் புலனுணர்ச்சி உறுப்புக்களிலும் மூளையின் மீதும் ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் பிரதிபலிப்பு; உலகத்தை மனிதன் அறிதலின் தொடக்கநிலை.

புறப்பொருள்—அகப்பொருள் தனது நடைமுறை மற்றும் அறிதல் நடவடிக்கையின் போது சந்திக்கின்ற ஒன்றைக் குறிப்பிடுகின்ற தத்துவஞானக் கருத்தினம்.

பொருள்முதல்வாதம்—உலகம் பொருளாயதமானது, அது உணர்வுக்கு வெளியே சுயேச்சையாக, புறநிலையாக இருக்கிறது, பருப்பொருள் முதன்மையானது, எவராலும் படைக்கப்படாதது, நிரந்தரமாக இருப்பது, உணர்வு, சிந்தனை ஆகியவை பருப்பொருளின் இயல்புகள், உலகமும் அதன் நியதிகளும் அறியப்படக் கூடியவை என்று வலியுறுத்துகின்ற தத்துவஞானப் போக்கு. பொருள்முதல்வாதம் கருத்துமுதல்வாதத்துக்கு எதிரானது, அவற்றுக்கு இடையில் நடைபெறும் போராட்டம் வரலாற்றுத் தத்துவஞான நிகழ்வுப் போக்கின் உள்ளடக்கமாக இருக்கிறது. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மார்க்சும் எங்கெல்சும் இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை உருவாக்கினார்கள். லெனின் அதைப் புதிய வரலாற்று நிலைமையில் வளர்த்தார். இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் தத்துவஞானப் பொருள்முதல்வாதத்தின் ஆக உயர்ந்த வடிவம் என்னும் உண்மையை விஞ்ஞான மற்றும் சமூக வளர்ச்சியின் மொத்தப் போக்கும் வலியுறுத்துகிறது.

கொச்சையான பொருள்முதல்வாதம்—பூர்ஷ்வா தத்துவ ஞானத்தில் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தோன்றிய போக்கு. அதன் பிரதிநிதிகள் பொருள்முதல்வாத உலகக் கண்ணோட்டத்தை மிகவும் அதிகமாகக் குறுக்கினார்கள்; அவர்கள் உணர்வின் தனித்தன்மைகளை மறுத்தார்கள், அதைப் பருப்பொருளுடன் இனங்கண்டார்கள். எங்கெல்ஸ் ''டூரிங்குக்கு மறுப்பு'' என்ற நூலில் கொச்சையான பொருள்முதல்வாதத்தை விமர்சனம் செய்தார்.

தன்னிச்சையான பொருள்முதல்வாதம்—இயற்கை விஞ்ஞானப் பொருள்முதல்வாதம், வரலாற்றுத் தத்துவஞானக் கருதுகோள். ''சுற்றியுள்ள உலகத்தின் புறநிலையான யதார்த்தத்தைப் பற்றி விஞ்ஞானிகளில் மிகப் பெரும்பான்மையினர் கொண்டிருக்கின்ற... தன்னியல்பான தத்துவஞான உணர்வற்ற நம்பிக்கை'' (லெனின்). தன்னியல்பான பொருள்முதல்வாதம் ஒரு தரப்பான, யாந்திரிகமான பொருள்முதல்வாதச் சுற்றுவட்டத்துக்கு அப்பால் போவதில்லை. அதே சமயத்தில் முன்னணியிலிருக்கின்ற பல இயற்கை விஞ்ஞானிகள் இக்கருத்துக்களைக் கூறிய போதிலும் அவர்களுடைய கண்டுபிடிப்புக்கள் இயக்கவியலின் முறையியலை வளப்படுத்தியிருக்கின்றன.

மார்க்சிய-லெனினியம் — தொழிலாளி வர்க்கத்தின் விஞ்ஞான ரீதியான சித்தாந்தம், தத்துவஞான, பொருளாதார மற்றும் சமூக அரசியல் கருத்துக்களின் ஒருங்கிணைந்த, வளர்ச்சியடைகின்ற அமைப்பு. மார்க்சிய-லெனினியம் இயற்கை, சமூகம் மற்றும் சிந்தனையின் சர்வப்பொது விதிகளை, சமூக உற்பத்தி வளர்ச்சியின் விதிகளை, சமூக மற்றும் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக பாட்டாளி வர்க்கமும் எல்லா உழைக்கும் மக்களும்

நடத்துகின்ற விடுதலைப் போராட்டத்தின் விதிகளை, சோஷலிஸ்ட் புரட்சி, சோஷலிச மற்றும் கம்யூனிச நிர்மாணத்தின் விதிகளைப் பற்றிய விஞ்ஞானம் என்பதால் அறிதலுக்கும் சமூகத்தின் புதிய, உயர்நிலை வடிவங்களைப் புரட்சிகரமான முறையில் நிறுவுவதற்குமான முறையியல் அடிப்படையாகவும் இருக்கிறது.

மார்க்சிய-லெனினியப் பதாகையின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள மாற்றங்கள் இன்றைய உலகத்தைத் தீவிரமான முறையில் மாற்றியுள்ளன. மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி, சோவியத் யூனியனில் வளர்ச்சியடைந்த சோஷலிஸ்ட் சமூகத்தை நிர்மாணித்தல், சோஷலிஸ்ட் முகாமின் உருவாக்கமும் வளர்ச்சியும், சமூக மற்றும் தேசிய விடுதலைப் போர்கள், பழைய சமூக அமைப்பை எதிர்த்து தொழிலாளி வர்க்கமும் உழைக்கும் மக்களும் அடைந்திருக்கின்ற வெற்றிகள் ஆகிய தலைசிறந்த புரட்சிகரமான சாதனைகளுடன் அது பிணைந்திருக்கிறது. மார்க்சிய-லெனினியம் மனிதகுலத்தின் வளர்ச்சியின் மீது மேன்மேலும் அதிகமான தாக்கத்தைச் செலுத்திவருகிறது.

முடிவில்லாதது மற்றும் முடிவுடையது—புறநிலையான உலகத்தின் இரண்டு எதிரிடையான மற்றும் பிரிக்க முடியாத அம்சங்களை வெளியிடுகின்ற தத்துவஞானக் கருத்தினங்கள். முடிவில்லாதது பருப்பொருளை மொத்தமாக—அதன் படைக்கப்பட முடியாத, அழிக்கப்பட முடியாத தன்மையை, அளவு ரீதியில் அதன் குறையாத் தன்மையை, அதன் இயல்புகள், தொடர்புகள், இருத்தலின் வடிவங்கள் மற்றும் வளர்ச்சியின் போக்குகளின் எல்லையற்ற வகைவேறு தன்மையை—குணாம்சப்படுத்துகிறது. முடிவுடையது சிற்சில விசும்பு மற்றும் கால எல்லைகளுக்குள்

இருக்கின்ற எந்த ஸ்தூலமான நிகழ்வுகள் அல்லது பொருட்களையும் குணாம்சப்படுத்துகிறது. முடிவுடையது என்பது முடிவில்லாததின் வெளிப்பாட்டின் ஒரு வடிவம்; முடிவில்லாதது முடிவுடைய பொருட்கள் மற்றும் நிகழ்வுகளின் முடிவில்லாத எண்ணிக்கையைக் கொண்டிருக்கிறது. விஞ்ஞானம் முடிவுடையவற்றை அறிவதன் மூலம் உலகத்தில் முடிவில்லாதவற்றைப் பற்றி மேன்மேலும் ஆழமான அறிவைப் பெறுகிறது.

முரண்பாடு:

இயக்கவியல் முரண்பாடு—ஒரு பொருள் அல்லது அமைப்பின் எதிரிடையான, ஒன்றையொன்று பரஸ்பரம் விலக்கிக் கொள்கின்ற அம்சங்களின் இடைச் செயல்; அவை அதே சமயத்தில் உள்ளீடான ஒற்றுமையிலும் இடை ஊடுருவிலும் இருக்கின்றன, புறநிலையான உலகம் மற்றும் அறிதலின் சுய இயக்கம் மற்றும் வளர்ச்சியின் தோற்றுவாயாக இருக்கின்றன. எதிர்நிலைகளின் ஒற்றுமை மற்றும் போராட்டத்தின் விதியின் சாராம்சத்தை வெளியிடுகின்ற இயக்கவியல் முரண்பாடு என்னும் கருத்தினம் பொருள்முதல்வாத இயக்கவியலில் கேந்திரமான இடத்தைப் பெற்றிருக்கிறது.

பகை முரண்பாடு — சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட வர்க்க சமூகங்களின் உற்பத்தி முறைகளுக்கும் சமூக உறவுகளுக்கும் உரித்தான முரண்பாடுகளின் வடிவங்களில் ஒன்று; சமூகப் புரட்சியின் மூலம் தீர்க்கப்படுகிறது. ஒடுக்குபவர்களுக்கும் ஒடுக்கப்படுபவர்களுக்கும், சுரண்டுபவர்களுக்கும் சுரண்டப்படுபவர்களுக்கும் இடையில் உள்ள சமரசப்படுத்த முடியாத நலன்களைப் பகை முரண்பாடு வெளியிடுகிறது.

முறை—ஏதாவது ஒரு நோக்கத்தை நிறைவேற்று வதற்கு அல்லது ஒரு ஸ்தூலமான பிரச்சினையைத் தீர்ப் பதற்குப் பின்பற்றப்படுகின்ற வழி. தத்துவஞானத்தில் முறை என்பது தத்துவஞான அறிவு வகுத்தளிக்கப்படு கின்ற, நிறுவப்படுகின்ற வழியைக் குறிக்கிறது. மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் பொருள்முதல்வாத இயக்க வியல் முறையைப் பின்பற்றுகிறது.

முறையியல்—நடவடிக்கையின் அமைப்பு, தர்க்க ரீதியான ஸ்தாபனம், முறைகள் மற்றும் வழிகளின் கோட் பாடு. விஞ்ஞான முறையியல்—விஞ்ஞான அறிதலின் கருத்துக்கள், வடிவங்கள், முறைகள் பற்றிய கோட்பாடு. மார்க்சிய-லெனினியத்தில் இயக்கவியல் மற்றும் வர லாற்றுப் பொருள்முதல்வாதம் விஞ்ஞான ஆராய்ச்சியின் பொதுவான முறையியல் ஆகும். மார்க்சிய-லெனினிய முறையியல் தத்துவார்த்த அறிவைப் பெறுவதற்கு மட்டு மின்றி யதார்த்தத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப் பதற்கும் கருவியாக இருக்கிறது.

மொழி—மனிதர்களுக்கு இடையில் முக்கியமான தொடர்புச் சாதனம். மொழி சிந்தனையிலிருந்து பிரிக் கப்பட முடியாதது, தகவலைச் சேமிப்பதற்கும் மாற்று வதற்கும் ஒரு சமூக ஊடகம், மனித நடத்தையைக் கட்டுப்படுத்துகின்ற சாதனங்களில் ஒன்று. அது பேச்சில் வாழ்கிறது.

யதார்த்தம்—மெய்யாக இருப்பது; இயக்கவியல் பொருள்முதல்வாதம் புறநிலை யதார்த்தத்தையும் (அதாவது பருப்பொருள்) அகநிலை யதார்த்தத்தையும் (அதாவது உணர்வின் நிகழ்வுகள்) வேறுபடுத்திக் காண் கிறது.

யாந்திரிகவாதம் — 17, 18ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய ஒரு தலைச் சார்பான உலகக் கண்ணோட்டம்; இது பருப்பொருளின் இயக்கத்தின் யாந்திரிக வடிவத்தின் விதிகளைக் கொண்டு இயற்கை மற்றும் சமூகத்தின் வளர்ச்சியை விளக்குகிறது. யாந்திரிகவாதம் இயந்திரவியல் விதிகளைத் தனிமுதலாக்குவதால் உலகத்தைப் பற்றிய இயக்க மறுப்பியல் சித்திரத்துக்கு இட்டுச் செல்கிறது. யாந்திரிகவாதம் (அதன் விரிவான அர்த்தத்தில்) இயக்கத்தின் ஏதாவதொரு சிக்கலான, பண்பு ரீதியில் தனி வகையான வடிவத்தை அதிக எளிமையான ஒன்றாக (உதாரணமாக, சமூக வளர்ச்சியை உயிரியல் வளர்ச்சியாகப் பார்த்தல்) குறுக்கிவிடுவதைக் குறிக்கிறது.

வளர்ச்சி — பருப்பொருள் மற்றும் உணர்வின் மாற்றப்பட முடியாத, திசைவழிப்பட்ட, விதியினால் ஆளப்படுகின்ற மாற்றம், அவற்றின் சர்வப்பொதுவான இயல்பு. வளர்ச்சி ஒரு பொருளில், அதன் கலவையிலும் கட்டமைப்பிலும் புதிய பண்பு ரீதியான நிலை தோன்றுவதற்கு வழி வகுக்கிறது. இயற்கை, சமூகம் மற்றும் அறிதலின் வரலாற்றை விளக்குகின்ற சர்வப்பொதுவான கோட்பாடு வளர்ச்சி. வளர்ச்சியில் இயக்கவியல் ரீதியில் பின்னிப் பிணைந்த இரண்டு வடிவங்கள் இருக்கின்றன: 1) பரிணாம வளர்ச்சி—பொருளில் அளவு ரீதியான மாற்றங்கள் படிப்படியாக ஏற்படுதல்; 2) புரட்சிகர வளர்ச்சி—பொருளின் கட்டமைப்பில் பண்பு ரீதியான மாற்றங்கள் ஏற்படுதல். வளர்ச்சியைப் பற்றிய இயக்கவியல் பொருள் முதல்வாதப் போதனை கம்யூனிசக் கோட்பாடுகளின்படி சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கின்ற தத்துவத்தின் தத்துவஞான மற்றும் முறையியல் அடிப்படையாக இருக்கிறது.

வறட்டுச் சூத்திரவாதம் — வறட்டுக் கோட்பாடு களைப் பயன்படுத்துகின்ற இயக்க மறுப்பியல் ரீதியில் ஒரு தரப்பான, சூத்திரவாத, கெட்டிப்பட்டுவிட்ட சிந்தனை. இது அதிகாரத்தின் மீது குருட்டுத்தனமான நம்பிக்கை வைக்கிறது, காலாவதியான கருதுகோள்களை ஆதரிக்கிறது. இதை மதச் சிந்தனையில் வழக்கமாகக் காண முடியும். தொழிலாளர் இயக்கத்தில் வறட்டுச் சூத்திரவாதம் மார்க்சியத்தைக் கொச்சைப்படுத்தி வலது சாரி மற்றும் ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதம், குறுங்குழுவாதம், அரசியல் துர்ச்சாகசம் ஆகியவற்றுக்கு இட்டுச் செல்கிறது. மார்க்சிய-லெனினியம் தத்துவத்தைப் படைப்பாற்றலுடன் வளர்ப்பதன் மூலமும் ஸ்தூலமான உண்மையைப் பற்றிய இயக்கவியல் கோட்பாட்டின் மூலமும் வறட்டுச் சூத்திரவாதத்தை எதிர்க்கிறது.

வாழ்வியல் — வாழ்நிலைத் தத்துவம் (அறிவுத் தத்துவத்திலிருந்து வேறுபட்டது). வாழ்நிலையின் சர்வப்பொதுவான அடிப்படைகள், கோட்பாடுகள், அதன் கட்டமைப்பு மற்றும் விதிகளை ஆராய்கின்ற துறை.

விசும்பும் காலமும் — பருப்பொருளின் வாழ்நிலையின் சர்வப்பொதுவான வடிவங்கள்; விசும்பு எனப்படுவது பொருளாயத வஸ்துக்கள் மற்றும் நிகழ்வுப் போக்குகளின் வாழ்நிலை வடிவமாகும்; அது பொருளாயத அமைப்புக்களின் கட்டமைப்பையும் விரிவாக்கத்தையும் குணாம்சப்படுத்துகிறது. காலம் என்பது நிகழ்வுகள் மற்றும் பருப்பொருளின் நிலைகளின் தொடர்வரிசையின் வடிவம்; அவற்றின் கால அளவை எடுத்துரைக்கிறது. விசும்பும் காலமும் புறநிலையானவை, பருப்பொருளிலிருந்து பிரிக்கப்பட முடியாதவை; அதன் இயக்கத்துடனும் ஒன்றுக்கொன்றும் நெருங்கிய தொடர்புடையவை;

அளவு மற்றும் பண்பு ரீதியில் முடிவில்லாதவை. காலத்தின் சர்வப்பொதுவான இயல்புகள் கால அளவு, மறுபடி ஏற்பட இயலாமை, மாற்றப்பட முடியாமை ஆகியவை. விசும்பின் சர்வப்பொதுவான இயல்புகள் விரிவாக்கம், தொடர்ச்சி மற்றும் தொடர்பின்மையின் ஒற்றுமை ஆகும்.

விஞ்ஞானம் — யதார்த்தத்தைப் பற்றிப் புறநிலையான அறிவைச் சேகரித்து அதைத் தத்துவார்த்த முறையில் முறைப்படுத்துகின்ற மனித நடவடிக்கைத் துறை; சமூக உணர்வின் வடிவங்களில் ஒன்று. விஞ்ஞானங்கள் இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், தொழில்நுட்ப விஞ்ஞானம் என்று பிரிக்கப்படுகின்றன. விஞ்ஞானம் தத்துவஞானம், சித்தாந்தம் மற்றும் அரசியலுடன் தொடர்பைக் கொண்டிருக்கிறது; இத்தொடர்பு சமூக விஞ்ஞானத்தின் சார்புநிலையான தன்மையையும் இயற்கை விஞ்ஞானத்தின் உலகக் கண்ணோட்டப் பாத்திரத்தின் முக்கியத்துவத்தையும் நிர்ணயிக்கிறது. முதலாளித்துவ அமைப்பில் விஞ்ஞான சாதனைகள் பெரும்பாலும் ஆட்சி செய்கின்ற ஏகபோக முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்கே உபயோகிக்கப்படுகின்றன. சோஷலிச அமைப்பில் விஞ்ஞானம் கம்யூனிசத்தின் பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடிப்படையை நிர்மாணிப்பதில், முழு நிறைவான சமூக உறவுகளை ஏற்படுத்துவதில், புதிய மனிதனைத் தோற்றுவிப்பதில் தலைமையான பாத்திரத்தை வகிக்கிறது; அங்கே விஞ்ஞான வளர்ச்சி நாடு தழுவிய அளவில் திட்டமிடப்பட்டு வளர்க்கப்படுகிறது.

விதி—இயற்கையிலும் சமூகத்திலும் நிகழ்வுகளுக்கு இடையில் அவசியமான, இன்றியமையாத, நிலையான, மறுபடியும் நிகழ்கின்ற உறவு. விதியைப் பற்றிய கருத்து சாராம்சத்தைப் பற்றிய கருத்தை ஒத்திருக்கிறது. விதி

''சர்வப்பொதுத் தன்மையின் ஒரு வடிவம்'' (எங்கெல்ஸ்); ஒரு குறிப்பிட்ட ரகம் அல்லது பிரிவைச் சேர்ந்த எல்லா நிகழ்வுகளுக்கும் உள்ளுறையான பொது உறவுகளையும் தொடர்புகளையும் வெளியிடுகிறது. விதிகள் புறநிலை யானவை, அவை மனித உணர்விலிருந்து சுயேச்சையான முறையில் இருக்கின்றன. விதிகளை அறிந்து கொள்ளுதல் விஞ்ஞானத்தின் கடமையாகும், மனிதன் இயற்கையை யும் சமூகத்தையும் மாற்றியமைப்பதற்கு அடிப்படையைத் தருகிறது.

வெளிப்புறமும் உட்புறமும்— தத்துவஞான கருத்தினங் கள். வெளிப்புறம் மொத்தமாகப் பொருளின் இயல்புகளை யும் சூழ்நிலையுடன் அதன் தொடர்பின் தன்மையையும் வெளியிடுகிறது. உட்புறம் பொருளின் கட்டமைப்பை யும் சாராம்சத்தையும் வெளியிடுகிறது. அறிதலில் வெளிப் புறத்துக்கும் உட்புறத்துக்கும் இடைத்தொடர்பு முன்னதி லிருந்து பின்னதுக்கு முன்னேற்றமாகும்.

ஸ்தூலமானது—ஒரு பொருளை அதன் வெவ்வேறான தொடர்புகள் மற்றும் உறவுகள் அனைத்திலும் அதன் ஒருமையையும் முழுமையையும் எடுத்துரைக்கின்ற தத்துவ ஞானக் கருத்தினம். இயக்கவியல் பொருள்முதல்வாதத் தில் இது, 1) உடனடியாக அறியப்பட்ட மொத்தம், 2) பொருட்களின் இன்றியமையாத தொடர்புகளையும் உறவுகளையும், நிகழ்வுகளின் வளர்ச்சியிலுள்ள நியதி களையும் போக்குகளையும் வெளிக்கொண்டு வருகின்ற விஞ்ஞான வரையறைகளின் அமைப்பு ஆகிய இரண்டு அர்த் தங்களிலும் உபயோகிக்கப்படுகிறது. ஸ்தூலம் சூக்குமத் துக்கு எதிரானது; தத்துவார்த்த அறிதல் என்பது சூக்கு மத்திலிருந்து ஸ்தூலத்துக்கு முன்னேறிச் செல்கிறது

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்
41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098

ஷோ-ரூம்
136, அண்ணாசாலை, சென்னை—600002

கிளைகள்
80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001
3-4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர்—641018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008
செர்ரி ரோடு, சேலம்—636001

விற்பனை நிலையங்கள்
3-22-75-D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்—627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம்—643001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல்—624001

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசையில் இடம்பெறும் புத்தகங்கள்

சமூக விஞ்ஞானம்—சுருக்க நூல்
மார்க்சிய-லெனினியம் என்றால் என்ன?
அரசியல் பொருளாதாரம் என்றால் என்ன?
தத்துவஞானம் என்றால் என்ன?
விஞ்ஞான கம்யூனிசம் என்றால் என்ன?
இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்றால் என்ன?
வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்றால் என்ன?
முதலாளித்துவம் என்றால் என்ன?
சோஷலிசம் என்றால் என்ன?
கம்யூனிசம் என்றால் என்ன?
உழைப்பு என்றால் என்ன?
உபரி மதிப்பு என்றால் என்ன?
சொத்துடைமை என்றால் என்ன?
வர்க்கங்கள், வர்க்கப் போராட்டம் என்றால் என்ன?
கட்சி என்றால் என்ன?
அரசு என்றால் என்ன?
புரட்சி என்றால் என்ன?
மாறு கால கட்டம் என்றால் என்ன?
உழைப்பாளிகளின் ஆட்சி என்றால் என்ன்?
உலக சோஷலிச அமைப்பு என்றால் என்ன?